# மணி மலர்



நீர்கொழும்பு

## இந்து இளைஞர் மன்றம்

நன்மைகள் விளைய, நன்மைகள் செய்வோம்.

3 - 7 - 1994

அறுபது ஆண்டுகளுக்கு மேல்

சைவத்திற்கும், தமிழுக்கும் பணியாற்றி வரும்

மன்றம் வாழ்க! வளர்க !

# *Pushpa Jewellers*

*and*

*Pawn Brokers*

*67, Green's Road, Negombo.*
*Tel: 031 - 2060*

*Branch:*
**AVERIWATTA - KATUNAYAKA**

---

இந்து இளைஞர் மன்ற

கலாச்சார மண்டப திறப்பு விழாவில்

மனநிறைவு காண்கிறோம்!

# *Bama Jewellers*

*61, Green's Road, Negombo.*
*Tel: 031 - 2060*

*Branch:*
*AVERIWATTA - KATUNAYAKA*

நீர்கொழும்பு

# இந்து இளைஞர் மன்றம்

தமது மணி விழாவையிட்டு

கட்டியெழுப்பிய

கலாசார மண்டப

திறப்பு விழா

அன்று வெளியிட்ட

# மணி மலர்

3 - 7 - 1994

உ

குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியில் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப்பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே.

⊗⊗⊗⊗⊗⊗⊗⊗⊗⊗⊗

போற்றி அருளுக நின்
ஆதியாம் பாதமலர்!
போற்றி அருளுக நின்
அந்தமாஞ் செந்தளிர்கள்!
போற்றி எல்லாவுயிர்க்கும்
தோற்றமாம் பொற்பாதம்!
போற்றி எல்லாவுயிர்க்கும்
போகமாம் பூங்கழல்கள்!

# வணங்குகின்றோம்!

மங்கல இசை எங்கும் பரவி நிற்கிறது. வீதியெல்லாம் வாழைகள், கமுகுகள், மாவிலை தோரணங்கள் மகிழ்வில் அசைந்தாடுகின்றன. வீட்டு வாசல்களில் வண்ணக் கோலங்கள், பூரணகும்பங்கள் – நீர்கொழும்பு மாநகரமே இன்று விழாக்கோலத்தில் திழைக்கின்றது!

நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம் தனது வைரவிழாவை யொட்டி, கட்டியெழுப்பிய கலாசார மணிமண்டபத்திறப்புவிழா எமது மக்கள் ஒவ்வொருவரினதும் மனதை நிறைவிக்கும் மணி விழா: மகிழ்ச்சித்திருவிழா, மறக்கமுடியாத பெருவிழா!

நாம் நடந்து வந்த நீண்ட பாதையை நினைத்துப் பார்க்கின்றேன்.......

மன்றம் எதிர்நோக்கிய சோதனைகள் பலப்பல.......ஆனாலும் நிலைநாட்டிய சாதனைகள் கொஞ்சநஞ்சமல்ல........

மொழி, சமயம், பண்பாடு, கல்வி, இலக்கியம், விளையாட்டு முதலிய துறைகளின் ஏற்றத்துக்காக மன்றம் புரிந்த பணிகள், இப்பகுதி இந்துத்தமிழ் மக்களின் உள்ளத்திலும் உணர்விலும் இரண்டறக் கலந்து விளங்கும் நிலையில், இந்த மக்களின் சொந்த விழாவாக கலாசார மண்டபத் திறப்பு விழா திகழுகின்றது!

மன்றத்தின் சென்ற காலப் பணிகளில் தம்மை இணைத்து அர்ப்பணிப்புடன் சேவை ஆற்றிய பெரியோர்களை நன்றியுடன் நினைவு கொள்ளுகின்றோம்.

மன்றத்தின் மணிவிழா நினைவாக கலாசார மணி மண்டபத்தை மிகக் குறுகிய காலத்தில் கட்டிஎழுப்பி நிறைவு செய்வதற்கு எனக்குத் தோள் கொடுத்து இலட்சிய உறுதியோடு பணிபுரிந்த எனது இனிய நண்பர்கள் திருவாளர்கள் பா. ஜெயராமன், எம். ஏகாம்பரம் (உப தலைவர்கள்) மிகப் பாராட்டப்பட வேண்டியவர்கள். எனது கரங்களாகச் செயலாற்றிய ஆட்சிமன்ற உறுப்பினர்களையும் மறக்கமுடியாது. பொருளுதவி புரிந்த வள்ளல்களைப் போற்றிப் பணிகின்றேன்.

இம்மகிழ்ச்சியான வேளையிலே மலரும் இம் மணிமலர் மிகக் குறுகிய காலத்தயாரிப்பு. இதற்கு மணமும் அழகும் சேர்த்த அருளாளர்கள், அறிஞர்கள், பெரியார்கள், அன்பர் களுக்கு இதயம் மலர நன்றி கூறி, எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வணங்கி, ஆடல் வல்லானின் திருப்பாதங்களில் இம் மலரைச் சமர்ப்பித்து வணங்குகின்றேன்.

**அ. மயில்வாகனன்**

**தலைவர்**

**நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம்**

3-7-1994

# தமிழ்த்தாய் வாழ்த்து

காதொளிருங் குண்டலத்தாள்
　　கனிமொழியாள் வாழ்க!
கைக்குவளை யாபதிகொள்
　　கன்னிகையாள் வாழ்க!

மேதகு மென் மார்பிடைச்சிந்
　　தாமணியாள் வாழ்க!
மின்னும் மணி மேகலை சூழ்
　　மெல்லிடையாள் வாழ்க!

சீத மலர்ப் பாதமொலிச்
　　சிலம்புடையாள் வாழ்க!
சேர சோழ பாண்டியர் தஞ்
　　செல்வமகள் வாழ்க!

நீதியுறுஞ் செங்கோலாய்த்
　　தூயகுறள் தாங்கும்
நிகரறிலாச் செந்தமிழ்த்தாய்
　　நீடூழி வாழ்க!

உ  போன் : 2115

ஸ்ரீ சந்த்ர மௌளீச்வராய நம:

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

# ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம்

காஞ்சிபுரம்.

தலைமை அலுவலகம்: 1, சாலைத்தெரு, பெரிய காஞ்சீபுரம்-631 502.

தேதி 22...2...1994

தெய்வச் சேக்கிழார் அடிப்படையில் அமைய
அநுபூதி வாய்ந்தவர் பெருமைகளை உணர்த்தும்
வெளியீடு. இதனை வாங்கிப் படித்து [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
60 ஆண்டுகளுக்கு மேலாகத் தெய்வப்பணி
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
வெளியிடுவது அறிந்து மகிழ்கிறோம்,

[illegible] [illegible] அவர்களும்
[illegible] அருள் பெருமையைப் பெற
வாய்ந்த அநுபூதிமான்களைப் பற்றி
[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] அருள்பெற
ஆசீர்வதிக்கிறோம்.

நாராயண ஸ்ம்ருதி:

இந்து இளைஞர் மன்ற
கலாச்சார மண்டபத் திறப்பு விழாவில்
மனநிறைவு காண்கின்றோம்.

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

# SANTHI PRINTERS

✡✡✡

Off Set & Letter Press

Specialist in

Calendar & Diaries

☆☆☆☆☆

**14 /C Fernando Avenue**

**Negombo.**

Telephone: 031-2143

*இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை*

உ

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகளின்

# ஆசிச் செய்தி

**அருளோங்கும் மெய்யன்பர்களே,**

நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம், மணிவிழா எடுக்கவிருப்பதும், இதற்குப் பாரிய செலவில் புதிய மண்டபம் ஒன்றினையும் அமைத்து திறப்புவிழா எடுக்கவிருப்பதையும் அறிந்து பேருவகை எய்துகிறோம். இம்மன்ற அன்பர்கள் சற்றேனும் சுயநலமிலாச் சிந்தனையோடு ஆற்றிவரும் அரும் பணிகளை யாம் அறிந்தோம். இறையருள் உந்தப்பெற்று இளைஞர்கள் உள்ளங்களில் இறுகிய சைவசமயப் பற்றும், நற்றமிழை வளர்க்கும் ஆர்வமும் கிளர்ந்தெழுவதைப் பாராட்டுகிறோம். இன்னல்களும், இடர்களும் நிறைந்த இக்கால கட்டத்திலும், மனத்தளர்வுறாது, இடையில் ஸ்தம்பிதம் ஏற்படாது, மன உறுதியோடு, அறுபது ஆண்டுகட்கு மேலாக பொதுநலசேவை புரிந்து வருவது ஒரு சாதனை. இது வெறும் புகழ்ச்சியல்ல. இவ்வூர் வாழ் மக்களின், ஒற்றுமை, ஒத்துழைப்பு சமயப்பற்று ஆதியனவற்றிற்கு ஓர் எடுத்துக்காட்டு. இம்மன்றம் நனிதே வளர வேண்டும் என்ற பொய்யிலா மக்களின் மன உறுதியே காரணம். யாமும் இம்மன்றத்க்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் அன்பர்களையும், இதில் பங்கு கொள்ளும் எல்லோருக்கும் இறைவன் திருவருளை உளமார வேண்டி எமது மனமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம். என்றும் வேண்டும் இன்ப அன்பு.

**ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்**

ஆலவிருட்சம் போன்று பரந்து நிழல்பரப்பி உயர்ந்து நிற்கின்ற
இந்து இளைஞர் மன்றம்
என்றும் வாழ்க!

!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!

# SEVEN STARS

## HARD WARE STORES

Dealers in
Copper, Brass
&
Zinc, Lead, Scrap Items

!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!

295, OLD MOOR STREET,
COLOMBO - 12
Telephone: 434289

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு

**இலங்கை இராமகிருஷ்ண மிசன்**

## சுவாமி ஆத்மகனாநந்தா அவர்களின்

# ஆசிச்செய்தி

நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றத்தினர் புதிய மண்டபமொன்றை நிர்மாணித்துள்ளனரென்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

சமயம் இல்லாத சமுதாயம் ஓநாய்களின் கூட்டம் ஆகிவிடும் என்று எச்சரிப்பார் சுவாமி விவேகானந்தர்.

இங்கு சமயம் என்று அவர் குறிப்பிடுவது வெறும் கேள்வி ஞானத்தையோ சடங்குகளையோ மட்டுமல்ல. அன்பு, தியாகம், உண்மை, ஒற்றுமை உணர்வு போன்ற உயர் பண்புகளை அடிப்படையாகக் கொண்ட உயர் வாழ்க்கை முறையையே அவர் வலியுறுத்திக் கூறுகிறார்.

சமய விழாக்கள் கலை நிகழ்ச்சிகள் சமய வகுப்புகள் சமய சொற்பொழிவுகள் முதலியன மக்களது சமய அறிவையும் பண்பையும் வளர்க்க உதவும்.

நீங்கள் அமைத்துள்ள புதிய மண்டபம் மேற்கூறிய வகையில் நீர்கொழும்பு வாழ் இந்துக்களின் சமய அறிவையும் பண்பையும் ஒற்றுமையையும் வளர்க்க மிகவும் உதவியாக இருக்குமென நம்புகிறேன். இளைய தலைமுறையினரை இத்தகைய நற்காரியங்களில் ஈடுபடுத்தினால்தான் எதிர்காலம் சீராக அமையும்.

உங்கள் மன்றத்தின் பணிகள் மேலோங்கிவளர எனது நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்
சுவாமி ஆத்மகனாநந்தா.

மணிவிழாக் காணும்
இந்து இளைஞர் மன்றத்தின் மணிமண்டபத் திறப்புவிழாவுக்கு
எமது இதயங்கனிந்த வாழ்த்துக்கள்!

#########################

# UDAYA JEWELLERS

(Pvt) LTD

*Guaranteed*
*Sovereign Gold*

############

53, 55, Sea Street
Colombo - 11

Telephone : 325745, 541339
Residence : 522219

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்

நுவரெலியா லங்காதீஸ்வரர் ஆலய ஸ்தாபகர்

## R. K. முருகேசு சுவாமிகள் அவர்களின்

## ஆசிச் செய்தி

நீர்கொழும்பிலே சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக சைவத்திற்கும், தமிழுக்கும் பணியாற்றி வரும் இந்து இளைஞர் மன்றம் புதிய மண்டபம் ஒன்றை கட்டியெழுப்பி திறப்பு விழா நடத்தும் செய்தி கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்து இளைஞர் மன்றம் சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றி வரும் பணி பாராட்டிற்கு உரியது. தங்கள் இந்த தெய்வீக பணி சீருற்ற நிலையில் சிறப்புப் பெற்று, ஆண்டவன் அருள் பெற்று, சைவமும் தமிழும் வளர்ந்து, இலங்கை வாழ் தமிழ் மக்கள் மாண்புற வேண்டி அகிலமனைத்தையும் ஆக்கி அமைத்து அழிக்கும் அகிலாண்டேசுவரி, ஆதி சக்தி அன்னை காயத்ரிதேவியை பிரார்த்திக்கின்றேன்.

**ஓம் சாந்தி!**

அன்புடன்,

**R. K. முருகேசு சுவாமிகள்**

ஆலவிருட்சம் போன்று
பரந்து நிழல்பரப்பி
உயர்ந்து நிற்கின்ற
இந்து இளைஞர் மன்றம்
என்றும் வாழ்க!

☆

☆

☆

சகல விதமான மளிகைச் சாமான்களுக்கும்
மற்றும்
நெஸ்லே தயாரிப்புகளும்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய நிறுவனம்

**E.NALLATHAMBY**

141, MAIN STREET
NEGOMBO
Phone: 031-2344

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு

**பிரதிஷ்டா பூஷணம் சிவாகமஞானபானு**

**பிரதிஷ்டா கலாநிதி**

**வேதாகமக் கிரியா சூடாமணி**

## சிவாசார்ய சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்

*ஆதீனகுரு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம் நயினாதீவு*

# ஆசிச்செய்தி

*சித்தி விநாயகப் பெருமான் திருவருளால் இந்து கலாச்சார மண்டபம் நிறைவு எய்தி திறப்புவிழா நடைபெறுவது மிக மகிழ்ச்சிக்குரியது. இந்து இளைஞர் சங்கம் அறுபத்து மூன்று வருடங்களாக தொடர்ந்து இயங்கி வருகிறது. அறுபத்து நான்காவது ஆண்டு கலாச்சார மண்டபம் நிறைவு எய்தி திறப்பு விழா காண்கிறது. இந்து காலாச்சாரம் யாவும் சிறப்புடன் வளைர்வதற்கு ஏதுவாகின்றது. கலை என்றால் அறுபத்துநான்கு கலைகளையும் குறிக்கும். இதனால் ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் வளர்ப்பதற்கு ஒரு மண்டபம் கலை, கலாச்சாரமண்டபமாகும். தொடர்ந்து யோகம், தியானம், அன்னதானம், திருமணம், சமயநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கும் பயன்படுமாறு அமைந்துள்ளது. இஃது நீர்கொழும்பு மக்கட்கு ஒரு வாய்ப்பாகவும், இலங்கை வாழ் அனைவர்க்கும் ஒரு முன்னோடியாகவும் அமைய சித்தி விநாயகப் பெருமான் நல்வாக்கையும், நல் மனத்தையும், லட்சுமி அருளையும் நல்க எனப் பிரார்த்தித்து மன்றம் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.*

- சுவாமி நாத பரமேஸ்வரக்குருக்கள்

அறுபது ஆண்டுகளுக்கு மேல்
சைவத்திற்கும், தமிழுக்கும்
பணியாற்றி வரும்
மன்றம் வாழ்க! வளர்க!
******************

☆

# KANETHERA'S

## கனித்திராஸ்

***Dealers
in
Textiles***

☆

4, Grand Street,
Negombo

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

## பிரதிஷ்டா சிரோமணி, வேதாகம கிரியா சூடாமணி
## சுவானுபூதி
## நவாலியூர் சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களின்

# ஆசிச்செய்தி

• • • • • • • •

அகில உலகம் எங்கணும் சைவம் தளைக்க தமிழ் மொழி வளர வேண்டும் என்ற பெரும் மனம் படைத்த பல அறிஞர்கள், பெரியார்கள் ஒவ்வொரு கிராமம் நகரங்களிலும் இந்து இளைஞர் மன்றம் சைவ முன்னேற்ற சங்கம் என ஒன்று கூடி மதத்தை வளர்ப்பதற்கும் சமய உணர்வுகளைப் பரப்புவதற்கும் தெய்வீகத்தை ஏற்படுத்தவும் முயற்சிகள் பல செய்து வருகின்றனர். எனவே நீர்கொழும்பு மாநகரிலும் இவ்விதமான நற்பணிகளை மேற்கொண்டு பணிபுரியும் இந்து இளைஞர் மன்றம் பல அரிய சமயப் பணிகளை மேற்கொண்டு சிறப்பாக சேவை செய்ய திருவருளைப் பணிந்து ஆசி கூறுகிறேன்.

**வாழ்க மன்றம் , வளர்க நற்பணிகள்!**

**ஸர்வேஜனா சுகினோபவந்து.**

**சுபம்.**

சைவமும், தமிழும் தழைத்தோங்க காலமெல்லாம் பணிபுரிந்த
இந்து இளைஞர் மன்றத்தின் பணிதொடர
எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்!

# NEW KALPANAS

## நியு கல்பனாஸ்

Dealers
in
Textiles
&
Fancy Goods

2, Grand Street
Negombo
TelePhone: 031 - 2761

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

# PARADOX - THE LANGUAGE OF WISE

**SWAMI TATWANANDA**

*That which is night to all beings; in that the wiseman keeps awake-where all beings are awake, that is night for the sage who sees."*

Day and Night is marked by light and darkness. Darkness has no capacity to destroy things, but it can hide things from your perception. Light does not produce a thing, but it can make it available for your perception, and on seeing, there is every chance that it can be the object of your pursuit! Ignorance and knowledge work in the same way. Ignorance keeps things away from your attention. while knowledge brings it open tp your awareness and thereby it can be the object of your desire.

Here what ignorance hides from you is Truth - indestructable by it, and what is brought out by knowledge is again the truth-uncreated yet now an object of reverence in your life. From that moment it makes you a lover of truth and a different journey in life is bugun. This simple act of knowledge deserves all glory!

Paradox is the language of wiseman-song of clarity because what he speaks, is:"Truth is ONE"! What is ONE and ONE alone, cannot be compared or contradicted! What cannot be compared or contradicted can be explained in a different scheme of thoughts and that is paradox!

What is revealed as Truth (ATMA) is that which mever leaves, even when one wishfully thinks so. Yet except a few all miss it. THAT alone is the 'basis'and invariably "Special" in every experience. But man when he is prepared to look at it, he goes for "Special Experience".!

You are the Truth-yet yoy set out a route to discover it. For me the ignorant, it is no wonder to declare that "I am not Atma" and for the Gnani it is no more a wonder to see the ever existing Truth in him, in me and everywhere. What is so clear, me the ignorant - does not see. And what is so clear and glaringly attractive-the name and form - the agents of my joy is stuffless for wisemen in their vision, pangless to their instrument of imagination!

What I see the other man does not see, and what he sees I do not see and we both call ourselves 'MAD'. Madness is marked by missing what is strikingly in front of me or seeing something what is actually not there. Both agnanis and gnanis satisfy these two conditions and each is called in this world as "mad". Truth is the only Reality for the Gnani, whereas for the Ignorant its existence alone is doubtful. For the ignorant, the world of names and forms is full of use and source of happiness, while for the wise-this name and form structure has no 'independent existence' and it cannot offer them anything more than a "wonderfully frameless picture" (Rachanaatmakam jagat!). For them the sense of satisfaction is causeless. It is JUST there.

In our day to day living we call a person mad because he lost sight of the order of Utility due to a fault in the mechanism of mind. The wiseman also rose above the urgency for utilising this world as agents of happiness (Saravaaramba Parityagi). So they are also in a way "mad-like" (the un-mattawat). In between these two denominations, are we, marching either to become a 'lunatic' by our strainful living or to mature into the state of an understanding person. The choice is left to us!

இந்து இளைஞர் மன்ற கலாச்சார மண்டபத் திறப்பு விழாவில்
மனநிறைவு காண்கின்றோம்.

# JANANI TEXTILE

**WHOLESALE, RETAIL DEALERS IN TEXTILES**

*T'Phone : 336596*

*133/18 KEYZER STREET.*
*FASHION SUPER MARKET.*
*COLOMBO -11*

ஆலவிருட்சம் போன்று பரந்து நிழல்பரப்பி உயர்ந்து நிற்கின்ற
இந்து இளைஞர் மன்றம்
என்றும் வாழ்க!

✆ 325866

# RADHEKA TEXTILES

**WHOLESALE DEALERS IN TEXTILES**

**NO 121, 2ND CROSS STREET,**
**COLOMBO-11, SRI LANKA.**

*அறன்கடைநின்றாருள் எல்லாம் பிறன்கடை*
*நின்றாரின் பேதையார் இல்*

சிவஞான சாகரம்

பிரதிஷ்டா கலாநிதி

# டாக்டர் ஸ்ரீ சோமாஸ் குருக்களின்

# வாழ்த்து

ஆலயம் அமைப்பது ஆண்டவன் உறைவதற்காக என்றால் ஆன்மாக்கள் நிம்மதி பெற அமைதி நிறைந்த மண்டபங்கள் அவசியம். அவற்றை மடம், சத்திரம் எனவும் பண்டைக்காலத்தில் அழைத்தார்கள்.

ஆங்காங்கே உணவு வழங்கியும் உறங்க வசதி செய்தும் கொடுப்பது பெரிய தர்மமாகப் போற்றப்பட்டது.

"சத்திரா போஜனம் மடா நித்திரை" என்று ஒரு பழமொழியும் உண்டு. அதாவது, அகதி என்று அழைக்கப்படும் கதி அற்றவர்களுக்கு மடங்களும் சத்திரங்களுமே ஆதரவு நல்குவது வழக்கம்.

நீர்கொழும்பு சித்திவிநாயகர் ஆலயத்தின் அருகில் இந்து இளைஞர் மன்றத்தினர் அழகாக நிர்மாணித்துள்ள கலாசார மண்டபம் அனைவருக்கும் உபயோகமானதாகவும் கலை கலாசார நிகழ்ச்சிகள், சமய போதனைகள் சிறந்து வளர பயனுள்ளதாகவும் விளங்கும் என்பதில் ஐயமில்லை. மன்றமும் மண்டபமும் சிறப்புற்று வளர வாழ்த்துகின்றேன்.

அறுபது ஆண்டுகளுக்கு மேல்
சைவத்திற்கும், தமிழுக்கும் பணியாற்றி வரும் மன்றம்

வாழ்க! வளர்க!

☆

# Soniyya Textile

DEALERS IN TEXTILES

**Fashion Super Market**
**No 133/ 20 A, Keyzer Street.**
**COLOBO.11**
**Tel : 430603**

---

சைவமும், தமிழும் தழைத்தோங்க காலமெல்லாம் பணிபுரிந்த
இந்து இளைஞர் மன்றத்தின் பணிதொடர எமது உளங்கனிந்த
வாழ்த்துக்கள்!

☆

# EMARALDS

Wholesale & Retail Dealers in Textile

*M.A .Kareem Market,*
*135- B3, Keyzer Street.*
*Colombo-11*

*T'phone: 438318*

விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்துஒழுகு வார்

# MESSAGE
# from
# Hon. WIJAYAPALA MENDIS
## MINISTER OF TRANSPORT & HIGHWAYS

Negombo Young Men's Hindu Association a cultural and religious organisation was formed sixty two years ago. Since it's inception the Association has organised several cultural and religious programmes. The Association also conducts regular musical and Daham Classes for the young Hindus in the area. I too had been present on several occasions when the Association organised programmes on Hindu Festivals.

The Association is opening a new Cultural Hall to expand it's activities. This Hall I believe will be a great asset for the future activities of the Association. I am extremely happy to send this message of goodwill and sincere wishes to all members of the Association in their future endeavours.

- Wijayapala Mendis

சைவமும், தமிழும் தழைத்தோங்க காலமெல்லாம் பணிபுரிந்த
இந்து இளைஞர் மன்றத்தின் பணிதொடர
எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்!

★
★
★
★
★
★
★
★
★
★

# ANTONY GARMENTS

**11, First Cross Street,
NEGOMBO.**

*தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப்படும்*

## தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்
## அறங்காவல் குழுத் தலைவர்

## செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

# வாழ்த்து

கடந்த பல ஆண்டுகளாக நீர்கொழும்புப் பதியில் இந்துக் கோயில்களின் பணியும், இளைஞர் மன்றப் பணியும் எழுச்சியும், வளர்ச்சியும் பெற்று வருவதை நான் நன்கு அறிவேன். ஒரு நாட்டுக்குப் பெருமை ஆன்மீக் வளத்தை வளர்த்தெடுப்பதிலும் தங்கியுள்ளது என்பதை ஆண்டாண்டு காலமாக எமது மக்கள் உணர்ந்து வந்திருக்கிறார்கள். அறிவு நெறியை எவ்வளவுக்கு வளர்க்க நாம் பாடுபடுகிறோமோ அதே அளவுக்கு அன்பு நெறியையும் வளர்க்க வேண்டும். இந்த நெறிதான் மண்ணையும், மக்களையும் மதத்தையும் நேசிக்கும் தூய நெறியாகும். நம் முன்னோர் கண்ட கடவுட் கொள்கையே இந்த நெறி. நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம் மேற்காட்டிய வகையில் பணிபுரிந்து வருவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இன்றைய காலகட்டத்தில் இம்மன்றம் ஆற்றும் பணியினை நிலைநாட்டிக் கொள்வதற்கு புதிய கட்டிடம் ஒன்று உருவாகி இருப்பது சைவமக்கள் அனைவருக்கும் பெருமை தருகின்றது. இளைஞர்கள் மத்தியில் தமக்கு வழிகாட்டிய சைவப் பெரியோர்களை மதிக்கின்ற பண்பு ஓங்கி நிற்பது மகிழ்ச்சிக்குரியது.

நாம் பிறப்பினால் மாத்திரம் சைவர்களாக இருந்தால் போதாது. வாழ்வினால் சைவர்களாக உயர வேண்டும். இதற்கு சைவ ஒழுக்கமும், தொண்டும் இன்றியமையாததாகும். இதனை உணர்ந்து எதிர்காலத்திலும் "அன்பே தெய்வம்" என்ற குறிக்கோளுக்கமைய வாழ்ந்து பெருமை அடைய வேண்டுமென்று மன்றத்துக்கு ஆசிகூறி அமைகின்றேன்.


– தங்கம்மா அப்பாக்குட்டி

சைவமும், தமிழும் தழைத்தோங்க காலமெல்லாம்
பணிபுரிந்த இந்து இளைஞர் மன்றத்தின் பணிதொடர
எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்!



*AMBIGA PHARMACY*
*&*
*MULTISHOP*

**No. 144, SEA STREET**
**NEGOMBO**


*தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால்*
*தன்னை அடல்வேண்டா தான்*



நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்க ஸ்தாபகத்தலைவர்
அமரர் திரு. எஸ். கே. விஜயரத்தினம், ஜே. பி.
முன்னாள் நீர்கொழும்பு மாநகரசபை முதல்வர் (காலம் 1932 - 1955)



நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தலைவர்
அமரர் திரு. இ. நல்லதம்பி, ஜே. பி. (காலம் 1955 - 1964)

## உல்லாசத்துறை, கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு எஸ். தொண்டமான் அவர்களின்

# நல்வாழ்த்து

பல்லாண்டு காலமாக தமிழுக்கும், சைவத்துக்கும் சீரிய நற்பணியாற்றி வரும் நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம், மன்றத்துக்கு என ஒரு புதிய பெரிய மண்டபத்தை அமைத்து, அதன் திறப்பு விழாவை வெகு விரைவில் நடத்தவும், அந்த விழாவையொட்டி ஒரு சிறப்பு மலர் வெளியிடவும் ஏற்பாடுகள் செய்து வருவதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறேன்.

முற்றாகத் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் தமிழ்ப் பணியும், சமயப் பணியும் செய்வதைவிட வேற்றின மக்கள் சூழ்ந்து வாழும் இடங்களில் இப்பணிகளை மேற்கொள்வது தான் மிகவும் பாராட்டுக்குரிய விஷயமாகும்.

இந்த வகையில், நமது பெரும்பான்மைச் சகோதரர்களான சிங்கள மக்கள் வாழும் நீர்கொழும்பில் நீண்டகாலமாக தமிழையும், சைவத்தையும் பேணிக்காத்து வளர்த்து வரும் இந்து இளைஞர் மன்றத்தின் சிறப்பான நற்பணி யாவராலும் ஏற்றிப் போற்றுவதற்கு உரியதாகும்.

மண்டபத் திறப்பு விழா கோலாகலமாக நடக்கவும், சிறப்பு மலர் பொலிவோடு வெளிவரவும், எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன். நீர்கொழும்பு இந்து இளைஞர்களுக்கு என் வாழ்த்துக்கள்.

**சௌ. தொண்டமான்**

நீர்கொழும்பு வாழ் தமிழ் மக்களிடம்
நீங்கா இடம்பெற்ற
இந்து இளைஞர் மன்றம்
பல்லாண்டு நீடூழி வாழ்க!

தரமான
* ஹிந்தி
* தமிழ்
* ஆங்கில
* சிங்கள

வீடியோ கெசட்டை பெற்றுக்கொள்ள
நாடுங்கள்

☆

RATHNAR'S VIDEO VISION
23 , ASARAPPA ROAD
NEGOMBO

☆☆☆

R.V.V.RATHNAR'S AUDIO VISION
ஆர்.வி.வி. ரத்தினாஸ் ஓடியோ விஷன்
23, ASARAPPA ROAD
NEGOMBO

☆


எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

# இந்து சமய இந்து கலாசார இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு பி.பி. தேவராஜ் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றத்தின் பெரும் முயற்சியில் நிறுவப்பட்டுள்ள மண்டபத் திறப்பு விழாவையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களை அளிப்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம் அறுபது வருடங்களுக்கு மேற்பட்ட சரித்திரத்தைக் கொண்டது. இப்பிரதேசத்து மன்றத்தினர் பல தசாப்தங்களாகச் சைவத்திற்கும் தமிழிற்கும் அரும்பணி ஆற்றி வந்துள்ளனர். இவர்களின் அயராத முயற்சியினால் மிகப்பெரும் பொருட்செலவில் மன்றத்திற்கு எனப் புதிய மண்டபம் ஒன்று எழுகின்றமை மிகுந்த பாராட்டிற்குரிய விடயமாகும்.

இந்த மண்டபத்தின் மூலம் இவர்கள் ஆற்றிவந்த பணிகளைத் தொடர்ந்தும் ஆற்றுவதற்குச் சிறந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. நீர்கொழும்பு வாழ் இந்துக்களின் கலை, கலாசாரப் பண்பாடுகளை வளர்க்கும் சின்னமாக இந்த மண்டபம் திகழவேண்டும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

இப்பணியை ஆற்றுவதில் தமது அயராத உழைப்பையும், பொருளையும் அளித்து ஊக்குவித்த அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். குறிப்பாக இந்து இளைஞர் மன்றத்தின் நிர்வாக உத்தியோகஸ்தர்கள் அனைவரது அர்ப்பணித்த சேவைக்காக அவர்களை மனமார வாழ்த்துகின்றேன்.

இந்த மண்டபத் திறப்புவிழா நீர்கொழும்பு பிரதேச இந்துசமய எழுச்சிக்கு வித்திடுமாக.

*பி . பி . தேவராஜ்*

நீர்கொழும்பு வாழ் தமிழ் மக்களின் மனதில் நீங்கா இடம்பெற்ற
இந்து இளைஞர் மன்றம்
பல்லாண்டு நீடூழி வாழ்க!

# *Jaya Stores*

Wholesale and Retail Dealers in
Provisions, Groceries, Oilman Goods
Coconut Oil & Treacle E.T.C

20, Market Street
Negombo
Phone: 031 - 3579

*உதவி வரைத்தன்று உதவி உதவி*
*செயப்பட்டார் சால்பின் வரைத்து*

# இந்து இளைஞர் மன்றம்
# நீர் கொழும்பு
# ஆட்சி மன்றம் 1994–95

## காப்பாளர்கள்

*மாண்புமிகு திரு. பி.பி தேவராஜ்,*

*இந்து சமய, இந்து கலாச்சார இராஜாங்க அமைச்சர்*

*திரு. ஜெயம் விஜயரத்தினம், சமாதான நீதவான்*

*திரு. மூ.அருணாசலம் பிள்ளை*

*திரு. அ.வே.தேவராசா*

*திரு. ந.குமாரச்சந்திரன்*

*வைத்தியகலாநிதி சோ.பாலசுப்பிரமணியம்*

## தலைவர்

*திரு. அ.மயில்வாகனன், சமாதான நீதவான்*

## துணைத்தலைவர்கள்

*திரு. இரா.சுப்பையா*

*திரு. மு.ஏகாம்பரம்*

*திரு. பொ.ஜெயராமன்*

*திரு. பெ.பாரத்குமார்*

## செயலாளர்

*திரு. மு.ஸ்ரீமுருகன்*

## நிதிச் செயலாளர்

*திரு. பொ.இராதாகிருஷ்ணன்*

## உதவிச் செயலாளர்

திரு. மு.சுந்தரச்செல்வன்

## உதவி நிதிச் செயலாளர்

திரு. மு.நேசமலர்ச்செல்வன்

## தாபனச் செயலாளர்

திரு. சு.நவரட்ணராஜா

## உதவி தாபனச் செயலாளர்

திரு. சி.கணநாதன்

## விளையாட்டுப் பகுதிச்செயலாளர்

திரு. ம.செந்தில்குமரன்

## துணைவிளையாட்டுப் பகுதிச்செயலாளர்

திரு. பெ.முருகானந்தன்

## நூல் நிலையச் செயலாளர்

திரு. பொன்.செல்லத்துரை

## ஆட்சி மன்ற உறுப்பினர்கள்

திரு கெ. தர்மராஜா

திரு.சோ.மனோகரன்
சமாதான நீதவான், மாநகரசபை உறுப்பினர்

திரு. கா.ஆனந்தசிவம்

திரு மு.சோமசுந்தரம்

திரு. பா.சந்திரசேகர்

திரு. தி.முருகபூபதி

திரு. ம.சாந்தகுமார்

திரு. இ.இரத்தினசிங்கம்

திரு. வை.நந்தகுமார்

திரு. ந.தருமலிங்கன்

திரு. செ.ரவிச்சந்திரன்

திரு. வ.யோகேந்திரன்

திரு. ச. ஜெயக்குமார்

திரு. கா. சசிதரன்

# மன்றப்

# பதிவேடுகளிலிருந்து ........,........

இற்றைக்கு அறுபத்து இரண்டு வருடங்களுக்கு முன் நீர்கொழும்பில் வாழ்ந்த சைவப் பெருமக்கள் தமிழையும், சைவநெறியையும் கலாச்சாரத்தையும் வளர்ப்பதற்காக அமைப்பு ஒன்றை நிறுவும் நோக்கமாக பிரசோற்பத்தி வருடம் மாசிமாதம் 2 ந் திகதி (14.2.1932) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் நீர்கொழும்பு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தனர். இந்த ஆரம்பக் கூட்டத்தில் நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

1921ல் நீர்கொழும்பு வாழ் சைவமக்களால் ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய உபயோகத்திற்காக வாங்கப்பெற்ற ஆலயத்தின் முன்னாலுள்ள காணியில் இருந்த ஓலை மண்டபத்தை 21.10.1932 முதல் தனது அலுவலகமாக மாற்றிக் கொண்டது. 1933 அக்டோபர் 2ம் திகதி மேலும் இரண்டு அறைகள் வாசிகசாலைக்கென அமைத்துக் கொள்ளப்பட்டன. பின்னர் இருபக்கத்திலுமுள்ள விறாந்தையை விஸ்தரித்து அத்திவாரம் போட்டதுடன் முகப்புக் கோபுரமும் கோபுர வாயிலிலுள்ள யன்னல் கதவுகளும் அமைக்கப்பெற்றன. 1948 டிசம்பர் 12 ல் முன் போடப்பட்டிருந்த அத்திவாரத்திற்கு மேல் சுவர் எழுப்பி யன்னல்கள் அமைத்தும் கூரையை ஓட்டால் வேய்ந்தும் பின்பக்கதில் சாமி சாஸ்திரியார் அவர்கள் வசிப்பதற்காக இரு அறைகள் கட்டியும் விஸ்தரிக்கப்பெற்றது. இதற்குரிய செலவுகளின் பெரும்பகுதி அப்போதைய சங்கத் தலைவர் திரு.ச.க.விஜயரத்தினம் அவர்களால் உபகரிக்கப்பட்டது.

சங்கம் 1932ல் அங்குரார்ப்பணத்தை அடுத்து குழந்தைப்பருவமாய் தவழ்ந்து கொண்டிருந்தாலும் தனக்கென சட்டதிட்ட, விதிகளை வரைந்து சங்க உறுப்பினர்கள் அதை அங்கீகரித்து ஜனநாயக ரீதியில் கட்டுக்கோப்புடன் இயங்கக் கூடிய தாபன ரீதியான செயற்பாடுகளைக் கொண்டிருந்தது. சங்கத்தின் முதலாவது விசேட பொதுக்கூட்டம் 20.8.1932 அன்று மாலை 5.30 மணியளவில் நீர்கொழும்பு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் திரு. வே.தாமோதரம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குறிப்பாக சங்கத்தின் அமைப்பு விதிப் பிரமாணங்கள் உறுப்பினர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. சங்கத்தின் ஆரம்பகால அமைப்பு விதிப் பிரமாணங்கள், சங்கத்தின் குறிக்கோள்கள், குறிக்கோள்களை எய்தும் வழிவகைகள், நிர்வாக சபையின் கடமைகள், பொறுப்புக்கள், சங்க உறுப்பினர்களது கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் இன்னோரன்ன விடயங்கள் யாவற்றையும் உள்ளடக்கியதாகும். சங்கத்தின் அமைப்பு விதிகளை வாசித்தறிந்து தங்களது அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கூறும்

வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்ததோடு சங்கத்தின் அமைப்பு விதிகளுக்குமுன் சங்க உறுப்பினர்கள் யாவரும் சமம் என்ற ஜனநாயகப் பண்புகளையும் கொண்டிருந்தது.

சங்கத்தின் ஆரம்பகால அங்கத்தவர்கள் சீர்திருத்தவாதக் கருத்துக்களை மனதிற் கொண்டு தீண்டாமை ஒழிப்பு போன்ற சீர்திருத்தங்களை சமுதாயத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கொள்கைகளைக் கொண்ட சங்க உறுப்பினர்கள் அங்கம் வகித்துள்ளனர். பழைமை பேணும் சங்கமாக இருந்து விடாமல் சீர்திருத்தங்களை வரவேற்கும் , நடைமுறைப்படுத்துகின்ற புதுமை, புரட்சிகரமான மாற்றங்களை மக்களிடையே பரப்பும் சங்கமாக உருவெடுக்க வேண்டும் என்ற அவா இருந்துள்ளதென்பதைக் காணக்கூடியதாயுள்ளது.

நீர்கொழும்பு சிறைச்சாலைக் கைதிகளுக்கு சமய அனுட்டானங்கள், வழிபாடுகள், செய்வதற்கும், உபநியாசங்கள் சொற்பொழிவுகளை நடாத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு சாமி சாஸ்திரியார் அவர்கள் இக்கைங்கரியத்தைப் பொறுப்பேற்றுச் செய்துள்ளார்.

1932ம் ஆண்டிலிருந்து இந்து வாலிபர் சங்கத் தலைவராக இருந்த திரு.ச.க.விஜயரத்தினம் அவர்கள் 1949 ம் ஆண்டு நடைபெற்ற நகரசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிவாகை சூடி நீர்கொழும்பு நகரமுதல்வர் பதவியையும் பொறுப்பேற்றார்.

நீர்கொழும்பில் சைவப் பிள்ளைகளின் சமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு 1949ம் ஆண்டு சமய பாட வகுப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

1949, 50 களில் சங்கம் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொண்டதோடு சங்கத்தின் பணியை மேலும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும் அறிவு மேம்பாட்டிற்காகவும் நூலகம் ஒன்றை ஆரம்பித்து செயற்படத்தொடங்கியது. குறிப்பாக மன்ற உறுப்பினர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கு அத்திவாரமிடப்பட்டது. வாசிப்பு ஒருவரை பூரண மனிதனாக்குகின்றது என்று சொல்வர். சங்கம் நூலகப் பணியை ஆரம்பித்து வெற்றியும் கண்டது. இதைவிட விளையாட்டுத் துறையிலும் கவனஞ் செலுத்தியது. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம் என்று கூறுவர். சங்கம் சங்க உறுப்பினர்களிடையே தேகாப்பியாசத்தை அறிமுகப்படுத்தி உடல் நலம் பேணுவதற்குரிய விளையாட்டுத்துறைக்கும் முக்கியத்துவம் அளித்தது. மன்ற உறுப்பினர்கள் உடல் நலப் பயிற்சிகளை மேற்கொள்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ததோடு கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டில் கவனம் செலுத்துவதற்கும் பயிற்சிகள் வழங்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்தது. சங்கத்தின சார்பில் கரப்பந்தாட்டக் குழுவினர் கரப்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களைப் பெற்றிருந்தனர். 1949ம் ஆண்டு கரப்பந்தாட்டப் போட்டியில் சங்கத்தின் இளைஞர்கள் பரிசில்கள் பெற்று பாராட்டையும் பெற்றனர்.

இக்காலகட்டத்தில் சங்கம் நீர்கொழும்பு ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தில்

வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப் பிரார்த்தனையை நடாத்திக் கொண்டு வந்தது. மன்ற உறுப்பினர்கள் இணைந்து இக்கூட்டுப்பிரார்த்தனை வழிபாட்டை நடாத்திக் கொண்டு வந்ததுடன் நீர்கொழும்பில் சைவமக்களிடையே கூட்டுப் பிரார்த்தனை வழிபாட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டதோடு கோவில் சந்நிதானத்தில் ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகவும் இது இருந்தது.

நீர்கொழும்பு வாழ் சைவச் சிறார்களுக்கு சமய அடிப்படையில் கல்வி பெற முடியாத பெருங்குறையினைப் போக்க வேண்டுமென்று கருதி 1953 செப்டம்பரில் நடைபெற்ற சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் நீர்கொழும்பில் தலைவர் திரு.ச.க.விஜயரத்தினம் அவர்களின் சிந்தனையில் உருவான சைவ சமயப் பாடசாலை ஒன்றினை நிறுவ வேண்டும் என்ற எண்ணக்கரு தீர்மானமாக ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்து வித்தியா விருத்திச் சங்கத்துடனும், கொழும்பு விவேகானந்தா சபையுடனும் தொடர்பு கொள்ளப்பட்டது. முடிவில் கொழும்பு விவேகானந்த சபையார் தங்களுக்கு (சபைக்கு) எந்தவிதச் செலவும் எற்படாத முறையில் நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்கம் சகல செலவுகளையும் ஏற்று வித்தியாலயத்தை நடத்துவதற்கு உதவுவதாகவிருந்தால் இந்து வாலிபர் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்வதாக அறிவித்தனர். அப்பெரும் பொறுப்பை சங்கம் ஏற்றுக்கொண்டது. 1954 அக்டோபர் 10ம் திகதி விஜயதசமியன்று 32 மாணவர்களுடனும் இரு ஆசிரியருடனும் நீர்கொழும்பு விவேகானந்த வித்தியாலயம் உதயமாகியது. இந்து வாலிபர் சங்கத்தின் கனவும் நனவாகியது. சங்க உபயோகத்திற்காகவிருந்த தளபாடங்கள் வித்தியாலய உபயோகத்திற்காக ஒப்படைக்கப்பட்டதுடன் மேலும் தளபாடங்கள் வாங்கவும் 550 சதுர அடிகள் கொண்ட மண்டபமொன்று அமைக்க உதவியும் வித்தியாலயத்தை அரசாங்கம் அங்கீகரிக்கும் வரை (1955 பெப்ரவரி) ஆசிரியர் சம்பளமும் இருப்பிலிருந்த சங்க நிதியிலிருந்து வழங்கப்பெற்றன. அத்துடன் வித்தியாலயத்தின் மாணவர் தொகை அதிகரிக்க ஆசிரியர் எண்ணிக்கை கூடியது. தளபாடங்கள் உபகரணங்கள் எது வேண்டுமோ அவையெல்லாம் காலந்தாழ்த்தாது உடனுக்குடன் வழங்கப் பெற்றன. இன்னும் பெற்றோர் தினவிழா, நவராத்திரி விழா, பாடசாலையில் நடைபெற்ற ஏனைய விழாக்கள் அத்தனைக்கும் ஏற்படும் செலவுகள் யாவும் இந்து வாலிபர் சங்கத்தால் ஏற்கப்பட்டன. அக்கால கட்டத்தில் வித்தியாலயத்தின் பராமரிப்பாளராக இந்து வாலிபர் சங்கமே செயற்பட்டது.

1955 பெப்ரவிர் மாதம் அங்கீகரிக்கப்பெற்ற வித்தியாலயத்தின் ஆசிரியர் சம்பளம் 1956 யூன் மாதம் வரை அரசாங்கத்தால் அனுப்பப்பட தாமதமாகியதால் 4100/= கடன் பெறப்பட்டு ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்டது. பாடசாலைக்குத் தேவைப்படும் அளவிற்குக் கட்டடம் அமைக்கப் போதிய நிலம் சங்கத்திடம் இல்லாதிருந்தமையால் சங்கத்தின் பின்புறம் இருந்த காணியில| 62 பர்ச்சஸ் நிலம் வாங்கப்பட்டது. குறிப்பிட்ட நிலம் திருத்தி அமைக்கப்பட்டு 11.9.1960ல் 900 சதுர அடி மண்டபம் நிறுவப்பட்டது. மேலும் மாணவர் தொகை பெருகிவரவே 800

சதுர அடியில் தற்காலிக மண்டபம் வித்தியாலயத்திற்காக அமைக்கப் பெற்றது. ஆனால் சிற்சில பிரச்சினைகளால் மேற் குறிப்பிட்ட தற்காலிக மண்டபம் தரைமட்டமாக்கப்பட்டது. 1960ம் ஆண்டு இந்தப் பாடசாலையை அரசு சுவீகரிக்கும் வரை பாடசாலையின் செலவுகளை இந்து வாலிபர் சங்கமும் பெற்றோர் ஆசிரியர் சங்கமும் பொறுப்பேற்றுச் செய்து வந்தன. இந்து வாலிபர் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட விவேகானந்தா வித்தியாலயம் 1964ம் ஆண்டு விஜயரத்தினம் மகாவித்தியாலயம் என்று பெயர் மாற்றப்பட்டது. இந்து வாலிபர் சங்கத்தின் ஸ்தாபகர்களுள் ஒருவரும் சங்கத்தின் முதற்தலைவருமான திரு.ச.க.விஜயரத்தினம் அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது பெயர் இவ்வித்தியாலயத்திற்கு சூட்டப்பட்டது. 1994.01.15ந்திகதி நீர்கொழும்பு விஜயரத்தினம் மகா வித்தியாலயம் நீர்கொழும்பு இந்து மத்திய கல்லூரியாக தர முயர்த்தப்பட்டுள்ளது. இன்று கோபுரம் போன்று உயர்ந்து நிற்கும் இந்த மத்திய கல்லூரியின் தாயும், தந்தையுமாக அமைந்திருந்தது இந்து வாலிபர் சங்கமே. எனவே தாயும் தந்தையுமாக இருக்கின்ற நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றத்திடமும் அதன் சேயாகிய நீர்கொழும்பு விஜயரத்தினம் மத்திய இந்துக் கல்லூரியிடமும் இருக்கின்ற உறவு பிரிக்கப்படமுடியாதது.

நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் ஸ்தாபகர்களில் முக்கிய உறுப்பினரும் 1932ம் ஆண்டு சங்கம் தாபிக்கப்பட்டு தலைவராக ஆக்கபூர்வமான பணிகளைச் செய்த திரு. ச.க.விஜயரத்தினம் அவர்கள் 1955 ம் ஆண்டு இறைவனடி எய்தினார் அன்னாரின் மறைவு சங்கத்திற்கு பேரிழப்பாக இருந்ததோடு ஈடுசெய்ய முடியாததாகவும் இருந்தது.

1955ம் ஆண்டின் புதிய நிர்வாக சபைத்தலைவராகிய திரு.இ.நல்லதம்பி அவர்கள் தலைமையில் சங்கம் நடன வகுப்பு ஒன்றை நடாத்துவதற்கேற்ற ஒழுங்குகளைச் செய்தது. மேலும் நடன வகுப்பு மாணவிகளுக்கு சங்கீதம் பயில்வதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டது. 1955ல் சங்க மண்டபத்தில் இட நெருக்கடி இருந்ததால் 988 சதுர அடிகளாக இருந்த மண்டபம் மேலும் 800 சதுர அடிகளால் விஸ்தரிக்கப் பெற்று 1788 சதுர அடிகளைக் கொண்ட மண்டபமாக விரிவு பெற்றது. இதற்குரிய செலவு அப்போதைய தலைவர். திரு.இ.நல்லதம்பி அவர்களால் உதவப்பட்டது.

1957ம் ஆண்டு சங்கத்தின் 25 வருட நிறைவிழாவை முன்னிட்டு வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவிலே வெள்ளி விழா நினைவு மலரும் வெளியி டப்பட்டது.

1955 இலிருந்து 1964 வரை சங்கத்தின் தலைவர் பதவியை அலங்கரித்த திரு.இ. நல்லதம்பி சமாதான நீதவான் அவர்கள் 1964ம் ஆண்டிலே இறைவனடி சேர்ந்தார். சங்கத்தின் முன்னேற்றத்திற்கு அரும் பெரும் தொண்டாற்றியும் சங்கத்திற்கு ஏற்படஇருந்த இன்னல்களையெல்லாம் தவிர்த்தும் சங்கம் நடாத்திய நீர்கொழும்பு விவேகானந்தா வித்தியாலய முகாமைக்காரராக இருந்தும் அளப்பரிய ஆக்கபூர்வமான சமுதாயப் பணியாற்றிய சமூக சேவையாளர் திரு.இ.நல்லதம்பி

அவர்களின் மறைவால் சங்கம் ஆற்றொணா துயரம் அடைந்தது.

1965ம் ஆண்டு மூன்ற தினங்கள் தமிழ் விழாவை சங்கம் நடத்தியது. சங்கத்திற்கு அரும்பெரும் தொண்டாற்றி இறைவனடி சேர்ந்த திரு.அருளம்பலம் திரு.ச.க.விஜயரத்தினம் திரு இ.நல்லதம்பி ஆகியோரை நினைவுகூர்ந்து கௌரவிக்கு முகமாக இவ்விழா அருளம்பலம் அரங்கு விஜயரத்தினம் அரங்கு நல்லதம்பி அரங்கு என மூன்றாக வகுக்கப்பட்டு மூன்று தினங்கள் சிறப்பாக நடந்தது.

1964ல் சங்கத்தலைவர் திரு.இ.நல்லதம்பி அவர்கள் காலமாகிய பின் 1932 ம் ஆண்டிலிருந்து பொதுச் செயலாளராகப் பணியாற்றிய திரு.வ.நடராசா அவர்களின் தலைமைத்துவத்தில் சங்கம் தனது பணியை தொடர்ந்தது. 1965ம் ஆண்டில் திருவெம்பாவை விழாக்காலங்களில் வீதிகள் தோறும் திருவெம்பாவை பாடலைப் பாடுவதற்கு மன்ற உறுப்பினர்களை ஒழுங்குசெய்து அவர் நற்பணி செய்தார். இதே ஆண்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் விழா நாடு பூராவும் கொண்டாடப்பட்ட வேளையில் நீர்கொழும்பிலும் இந்து வாலிபர் சங்கம் நாவலர் விழாவை விமரிசையாகக் கொண்டாடியது.

1966ம் ஆண்டு யூன் மாதம் 10ந் திகதி சங்கம் வள்ளுவர் விழாவை சிறப்பாகக் கொண்டாடியது. அத்துடன் மற்றும் வழமையான நிகழ்ச்சிகளையும் நடத்தி வந்தது. இதே ஆண்டில் நீர்கொழும்பு மாவட்ட மேசைப் பந்தாட்டக் குழு நடாத்திய மேசைப் பந்தாட்டப் போட்டியில் எமது சங்கம் கலந்து கொண்டு இரண்டாம் இடத்தைப் பெற்று அதற்காக வெள்ளிக் கிண்ணத்தை சுவீகரித்தது. அப்போது விளையாட்டுத் துறைச் செயலாளராக வைத்திய கலாநிதி திரு.எஸ். பாலசுப்ரமணியம் பணியாற்றினார்.

1967 ம் ஆண்டு சங்கத்தின் தலைவராக தா.சண்முகநாதன் பொறுப்பேற்றர். வழமையான நிகழ்ச்சிகளும், விழாக்களும் சிறப்பாக நடைபெற்றன. திரு.த.நீதிராசா அவர்கள் பாராளுமன்றத்தின் மூதவை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதையிட்டு சங்கம் அவர்க்கு வரவேற்பு உபசாரம் ஒன்ற வழங்கி கௌரவித்தது.

1970ம் ஆண்டு திரு.தா. சண்முகநாதன் அவர்கள் அனைத்திலங்கை இந்து இளைஞர் இயக்கப் பேரவையின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அவ்வாண்டில் காஞ்சீபுரம் தொண்டைமண்டல ஆதீனகுருமகா சந்நிதானம் சிவஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் நீர்கொழும்புக்கு விஜயம் செய்து அப்பர் திருவாக்கு எனும் பொருள் பற்றி அருளுரை வழங்கினார்.

3.5.72ல் ந...டபெற்ற ஆட்சிமன்றக் கூட்டத்திற்கு திரு.ஜெயம் விஜயரத்தினம் தலைமை வகித்தார். அகில இலங்கை இந்து இளைஞர் சங்கப் பேரவைக்கு சங்கத்தின் பேராளர் மூலமாக ஆக்கபூர்வமான இரு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

(1) திருக்கோணேஸ்வரர் ஆலயத்தையும் அதனைச் சார்ந்த பிரதேசத்தையும்

அரசு புனித பிரதேசமாக பிரகடனப்படுத்த வேண்டும்.

(2) 1972ம் ஆண்டு புதிய குடியரசு அரசியலமைப்பில் சைவத்திற்கும் தமிழிற்கும் நியாயமான இடத்தை வழங்க வேண்டும்.

மேற்படி பிரேரணைகள் திருக்கோணமலையில் நடைபெற்ற அகில இலங்கை இந்து இளைஞர் பேரவையின் கூட்டத்தில் ஏற்கப்பட்டு இலங்கை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. 10.9.1972ல் இந்து இளைஞர் கொடிநாள் சங்கத்தினால் கொண்டாடப்பட்டது.

இந்து இளைஞர் பேரவையின் 4ம் ஆண்டு பேராளர் மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்தின் பிரகாரம் இந்து இளைஞர் மன்றம் என 22.7.73ல் நடைபெற்ற 41ம் ஆண்டு பொதுக் கூட்டத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1976ல் இந்து இளைஞர் மன்றத்தில் நீர்கொழும்பு மகளிர் மன்றம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இந்த ஆண்டில் மன்ற நிதியுதவிக்காக பரதநாட்டிய நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. 12.11.76 அன்று மன்ற மண்டபத்தில் சமய தீட்சை வழங்கும் வைபவம் நடைபெற்றது.

எழுத்தாளர் திரு முருகபூபதி அவர்களின் சுமையின் பங்காளிகள் சிறுகதைத் தொகுப்பு சாகித்திய மண்டலப் பரிசு பெற்றமையையிட்டு 19.4.77ல்மன்ற மண்டபத்தில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைமையில் பாராட்டுவிழா நடாத்தப்பெற்றது. அத்துடன் 17.4.77 முதல் 19.4.77 வரை இராமாயணம் பற்றிய தொடர் பேருரை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்களால் நிகழ்த்தப்பெற்றது.

1977ல் இந்து இளைஞர் மன்றமும் இந்துமகளிர் மன்றமும் இணைந்து இந்து இளைஞர் பேரவை கொடிநாள் தினத்தைக் கொண்டாடஏற்பாடு செய்து கொடி விற்பனை நடத்தினர். 1977 ஆவணி அமளியின் காரணத்தால் மன்றம் ஸ்தம்பித நிலையை எய்தியது. எனினும் சுமூகமான நிலை ஏற்பட்டவுடன் மன்றத்தின் பணி தொடர்ந்தது.

1978ல் திரு.வ.சண்முகராசா அவர்களின் தலைமையில் மன்றம் தனது பணியை மேற்கொண்டது. ஆனால் சிறிது காலத்தில் அவர் பதவி விலகியதனால் துணைத்தலைவர்களின் தலைமையில் இயங்கியது. 1978ல் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட சூறாவளியினால் பாதிக்கப்பட்டோரின் நலன்கருதி மன்றம் சூறாவளி வெள்ள நிவாரண நிதி திரட்டி அந்நிதியை சரிசமமாகப் பங்கிட்டு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்திற்கும், இந்து மாமன்றத்திற்கும் அனுப்பி வைத்தது.

மன்றத்தின் முன்னைநாள் துணைத்தலைவர் திரு.சண்முகநாதன் அவர்களதும் நீர்கொழும்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், ஸ்ரீமுத்துமாரியம்மன் கதிர் வேலாயுத சுவாமி கோவில் ஆகியவற்றின் பிரதம குருவாக இருந்து சீரிய தொண்டாற்றிய வேத சிவாகம விற்பன்னர் சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் அவர்களதும் மறைவுகள் சங்கத்தை வேதனையில் ஆழ்த்தின.

29.7.79 அன்று நடைபெற்ற 47ம் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில்

திரு.ந.தெய்வேந்திரன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். 29.9.79. அன்று மன்றம் கலைமகள் விழாவைமுன்னிட்டு அகில இலங்கை ரீதியிலும் கொழும்பு வடக்கு சிலாபம் புத்தளம் கல்விப் பிராந்தியங்களிலும் திருமுறை,மனன நாவன்மைப் போட்டி களை விமரிசையாக நடாத்தியது. 28.10.79 முதல் 4.11.79 வரை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் குருமகா சந்நிதானம் சுவாமி நாத பராமாச்சாரிய சுவாமிகளின் இசைச் சொற்பொழிவுகள் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. 3.12.1979 ல் மன்ற மண்டபத்தில் நாவலர் நூற்றாண்டு விழா சிறப்பாக நடந்தது. 21.12.79 அன்று தமிழகத்திலிருந்து வருகை தந்த திருக்கோயில் ஆசிரியர் புலவரேறு ந.ரா.முருகவேள் அவர்களின் சொற்பொழிவு நடைபெற்றது.

1980ம் ஆண்டில் மன்றத்தலைவர் திரு.ந.தெய்வேந்திரன் தலைமையில் பொங்கல் தினத்தன்று நீர்கொழும்பு சிறைச்சாலை கண்ணன் கோயிலில் விசேட பூஜைகள் நடைபெற்று அதில் பங்கு கொண்ட சிறைக் கைதிகளுக்கு பொங்கல் பிரசாதம் வழங்கப்பட்டது.

தமிழ் சிங்கள புதுவருடத்தினத்தை முன்னிட்டு 3.5.80ல் நடைபெற்ற தேசிய தின விழா சைக்கிளோட்டப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு மன்றம் பரிசில்களை வழங்கி கௌரவித்தது. 27.7.1980ல் மன்ற உறப்பினர்கள் மன்றத்தின் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். இந்த ஆண்டிலும் நவராத்திரிப் பூஜைகள் சிறப்புற நடைபெற்றதுடன் கலைமகள் விழா திருமுறை மனன, நாவன்மைப் போட்டிகள் நடாத்தப்பட்டு தங்கப்பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. 23.10.1980ல் மன்ற மண்டபத்தில் உறுப்பினர் ஒன்று கூடல் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் திரு செல்லையா இராசதுரை, திரு.எஸ். தொண்டமான் ஆகியயோர் சமூகந்தந்து சிறப்பித்தார்கள்.

31.5.1981ல் நடைபெற்ற மன்றத்தின் 49ம் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் திரு.அ.மயில்வாகனன் அவர்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

3.7.81, 5.7.81 ஆகிய இரு தினங்களில் மன்றத்தின் சுற்றாடலை மன்ற உறுப்பினர்களும் விஜயரத்தினம் மகாவித்தியாலய மாணவர்களும் இணைந்து சிரமதானம் செய்து சுத்தப்படுத்தினர். மன்றத்தின் ஒரு பகுதி எல்லைக்கு கம்பி வேலி போடப்பட்டது. 30.09.81 அன்று மன்றம் நீர்கொழும்பு ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக த்தையொட்டிய சங்காபிஷேகத்தை பூரணமாக பொறுப்பேற்று நடத்தியது.

1981 ஆவணியில் நீர்கொழும்பில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் தமிழ் மக்களிடையே பீதியும் கலக்கமும் நிலவியதனால் சிறிது காலம் மன்றத்தின் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படாமலிருந்தது.

1982ம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று வழமைபோல் நீர்கொழும்பு சிறைச்சாலை நீர்கொழும்பு பள்ளஞ்சேனை சிறைச்சாலை ஆகியவற்றில் விசேட பூஜைகள் நடாத்தி சிறைக்கைதிகளுக்கு பொங்கல் பிரசாதமும் வழங்கப்பட்டது. 1982.04.21லிருந்து 82.04.25 வரை நடைபெற்ற அகில உலக இந்து மாநாட்டில் மன்றத்தலைவர் திரு.அ.மயில்வாகனன் அவர்கள் பிரதிநிதியாகக் கலந்து

கொண்டார். இந்த மாநாட்டுக்காக ரூபா 2517/− ஐ மன்றம் அன்பளிப்பாக வழங்கியது.

1982ல் யாழ் பொது நூலகம் சில விஷமிகளால் எரிக்கப்பட்டது. யாழ் பொது நூலகத்தை புனரமைப்பதற்காக 1982 மேமாதம் 15 லிருந்து 21ந்த திகதி வரை கொழும்பில் நூல் சேகரிப்பின் போது யாழ் பொது நூலகத்திற்கு எமது மன்றம் நீர்கொழும்பில் உள்ள தமிழ் மக்களிடையே நூல்கள் புத்தகங்கள் சஞ்சிகைகள் போன்றவற்றைச் சேகரித்து கொடுத்ததுடன் நூலக புனரமைப்புக்காக ரூ 3553/− க்கான காசோலையையும் வழங்கியது.

1982 மே 30ந் திகதி பாரதி நூற்றாண்டு விழா மன்ற மண்டபத்தில் வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு 3.07.82 அன்று ஆகம விதி முறைப்படி 1008 சங்குகள் வைத்து சங்காபிஷேகம் ஸ்ரீசித்தி விநாயகரின் பேரருளினால் சங்கத்தின் பொறுப்பில் நடத்தப்பெற்றது.

1982.10.17 தொடக்கம் 82.10.27 வரை மன்ற மண்டபத்தில் நவராத்திரி பூஜை நடைபெற்றதுடன் 82.10.24 ந் திகதியன்று புத்தளம், கம்பஹா மாவட்ட பாடசாலை களுக்கிடையே திருமுறை மனன, நாவன்மை போட்டிகள் நடாத்தப்பட்டன. 1982.12.26ந் திகதி நடைபெற்ற ஆட்சி மன்றக் கூட்டத்தில் யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப்பேராசிரியரான திரு.க. கைலாசபதி அவர்களின் மறைவுக்கு இரு நிமிட மௌனஅஞ்சலி செலுத்தப்பட்டது.

1983ம் ஆண்டின் தைப்பொங்கல் திருநாள் கொண்டாடப்பட்டதுடன் 12.03.83 அன்று மகா சிவராத்திரி தினத்தன்று நீர்கொழும்புக் கலைவட்டத்தின் இரு நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. 1984 ம் ஆண்டில் நீர்கொழும்பு சிறைச்சாலை திருமால் ஆலயம் எமது மன்றதின் ஆதரவில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டது. மன்றம் விநாயகர், கண்ணன் சிலைகள் இரண்டையும் ஆலயத்தில் பிரதிஸ்டை செய்து ஆலயத்தையும் பூரணமாக புனர் நிர்மாணம் செய்து கொடுத்தது.

1983 ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட வன்செயல்களினால் மன்றத்தின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்ததோடு மன்ற உறுப்பினர்கள் பெரும்பாலானோர் நீர்கொழும்பை விட்டு இடம்பெயர்ந்தனர். இதனால் 1983ம் ஆண்டு ஆவணி மாதத்திற்குப் பிறகு மன்றத்தின் நடவடிக்கைகளை குறைந்த எண்ணிக்கையான உறுப்பினர்களே மேற்கொள்ள வேண்டியிருந்தது.

1985ம் ஆண்டு தைமாதத்தில் மன்ற மண்டபத்தில் தலைவர் திரு அ. மயில்வாகனன் அவர்களின் தலைமையில் பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. தமிழ், சிங்கள, ஆங்கிலம் ஆகிய மூன்ற மொழிகளும் பிள்ளைகளுக்கு கற்பிக்கப்பட்டன. நீர்கொழும்பு வாழ் சிறார்களுக்கு இப்பாலர் பாடசாலை ஆக்கமும் ஊக்கமும் அளித்து பிள்ளைகளின் எதிர்கால கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டது.

1985 - 1989 ம் ஆண்டு காலப் பகுதிகளில் நாட்டில் நிலவிய ஸ்திரமற்ற நிலையினால் பாதிப்புற்ற மன்ற உறுப்பினர்களிற் பலர் இடம்பெயர்ந்தனர். மன்றம்

தனது வழமையான பணிகளை முன்னெடுத்துச் செல்ல சிரமத்தை எதிர்நோக்கியது. 1989ம் ஆண்டு ஆவணி 27 ந்திகதி 51ம் ஆண்டு பொதுக்கூட்டம் கூட்டப்பெற்றது. இந்த ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் திரு.அ.மயில்வாகனன் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். 1989ம் ஆண்டில் மன்றம் தனது வழமையான நடவடிக்கைகளையும், பூஜைகள், விழாக்கள் போன்றவைகளையும் நடாத்துவதில் ஈடுபட்டு வந்தது.

1990ம் ஆண்டு இந்து சமய கலாச்சார அலுவல்கள் இராஜாங்க திணைக்களத்தின் ஆலோசனையுடன் ஞாயிறுதோறும் அறநெறிப் பாடசாலைஒன்று மன்ற மண்டபத்தில் நடைபெற்றுவ ருகின்றது. 1990ம் ஆண்டு இந்து சமய கலாச்சாரத் திணைக்களம் கொழும்பில் முதன்முதலாக நடாத்திய அறநெறிப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் எமது மன்றத்தின் அறநெறிப் பாடசாலை மாணவ மாணவிகள் கம்பஹா மாவட்டரீதியில் கீழ்ப்பிரிவு, மத்திய, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளில் பேச்சு கட்டுரை பண்ணிசை ஆகிய துறைகளில் பரிசில்களைப் பெற்றுள்ளனர். அகில இலங்கை ரீதியல் நடாத்தப்பட்ட போட்டிகளிலும் எமது மாணவர்களுக்குப் பரிசில்கள் கிடைத்தன.

நீர்கொழும்பு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் மேற்படி ஆலயத்திற்குச் சொந்தமான 44 பேர்ச்சஸ் கொண்ட நிலப்பரப்பை எமது மன்றத்தின் புதிய கட்டட நிர்மாணத்திற்காக மனமுவந்து அன்பளிப்புச் செயதனர். மேற்படி நிலத்தில் புதிய கட்டிட ம் அமைப்பதற்கு நிதி சேகரிப்புக்காக நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றத்தின் சார்பில் நீர்கொழும்பு இந்துக்களின் ஒன்றுகூடல் நிகழ்ச்சியொன்று 16.11.1990 ல் நடைபெற்றது. பிரதம அதிதியாக இந்து கலாசார அமைச்சர் கௌரவ பி.பி. தேவராஜ் கலந்து கொண்டார்.

மன்றத்தின் புதிய கட்டிட நிதி சேகரிப்புக்காக 27.12.90ல் நீர்கொழும்பு மீன்பிடி பயிற்சி நிலைய மைதானத்தில் இன்னிசை வார்ப்பு இசை நிகழ்சசி நடாத்தப்பெற்றது. இந்நிகழ்ச்சியை அப்சராஸ் இசைக் குழுவினர் நடத்தினர்.

இந்து இளைஞர் மன்றத்திற்கென புதிய கட்டடிடம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்ற நோக்கில் தற்போது மன்றம் செயற்படும் மண்டபத்தில் இருமாடிக்கட்டிடம் ஒன்று அமைக்கத் திட்டமிட்டது. அவ்வேளையில் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு.ஜெயம்.விஜயரத்தினம் அவர்கள் ஆலயத்துக்குப் பின்னால் இருக்கும் காணியில் புதிய மண்டபம் அமைக்க காணி ஒதுக்கித் தருவதாக தெரிவித்தார். தொடர்ந்து கோவிலுக்குப் பின்பக்கமாக புதிய மண்டபம் அமைக்க ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

1992.06.14ந் திகதியன்ற காலையில் நீர்கொழும்பு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமான காணியில் இந்தியாவிலிருந்து விஜயம் செய்த பேராசிரியர் முலே அவர்களினால் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அடிக்கல் நாட்டு விழா வைபவத்தில் மன்றக் காப்பாளர்கள், மன்ற உறுப்பினர்கள், கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.சரச்சந்திர குணரத்தின கடற்றொழில் நீரியல்வள மாண்புமிகு அமைச்சர் திரு ஜோசப் மைக்கேல் பேரேரா

மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மன்றத்தின் புதிய கட்டிட நிதி உதவிக்காக 14.9.91 மாலை நீர்கொழும்பு சாந்தி கோல்ட் நகை மாளிகை ஆதரவில் சுப்பர் சன்ஸ் இசைக்குழுவினரின் வசந்த கீதங்கள் எனம் இன்னிசை நிகழ்ச்சி நீர்கொழும்பு மீன்பிடி பயிற்சி மைதானத்தில் நடாத்தப்பட்டது.

17.10.92 அன்று மனறத்தின் புதிய கட்டிட நிதிக்காக நீர்கொழும்பு சுதா ஜுவலர்ஸ் ஆதரவில் நீர்கொழும்பு மீன்பிடி பயிற்சி மைதானத்தில் தமிழகத் திரைப்பட இசையமைப்பாளர் திரு.எஸ்.ஏ.ராஜ்குமார் அவர்களின் இன்னிசையோடு தமிழகத்தின் திரைப்பட நடகர்களின் சுவையான நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

மன்றத்தலைவர் திரு. அ. மயில்வாகனன் அவர்களின் பொதுச் சேவையை கௌரவித்து, இலங்கை அரசு 1992ல் அவரை நீர்கொழும்பு பிரதேச சமாதான நீதவானாக நியமித்தது. இதனை யொட்டி " டொப்பாஸ் பீச் ஹோட்டலில் " மன்றம் பாராட்டு விழாவை நடத்தியது .

இந்து கலாச்சார இராஜாங்க அமைச்சின் அழைப்பிற்கு இணங்கி இந்தியாவிலிருந்து வருகை தந்த அருள் வாக்குச் சித்தர் பி.ரி.இராகவன் சுவாமிகளின் சொற்பொழிவு 20.10.92 மாலை மன்றத்தின் ஆதரவில் நீர்கொழும்பு ஸ்ரீசித்திவிநாயர் ஆலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

1993 ம் ஆண்டிலும் தலைவரும் ஆட்சி மன்ற உறுப்பினர்களும் புதிய கட்டிட நிர்மாணப்பணி அதற்கானநிதிச் சேகரிப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தனர். நவராத்திரி பூஜைகள் மன்ற மண்டபத்தில் வழமைபோல நடைபெற்றன. சிவராத்திரி தினத்தை முன்னிட்டு விசேட இசை நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

1994.01.21 ந் திகதியன்று நீர்கொழும்பு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையும் இந்து இளைஞர் மன்றமும் இணைந்து மகா சமாதியடைந்த ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி சந்திர சேகரேந்திர சுவாமிகளின் நினைவுக்கு அஞ்சலியும் விசேட பூஜையும் ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் நடத்தினர்.

1994.03.10 ந்திகதி மன்றத்தினால் மகா சிவராத்திரி தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அன்றைய தினம் இரவு அறநெறிப் பாடசாலை மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன. அறநெறிப் பாடசாலை மாணவர்களின் சிவநெறி தழைப்போம் என்ற நாடகமும் மேடையேற்றப்பட்டது. நீர்கொழும்பு பாரத் இசைக்குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

எமது மன்றத்திற்கு இரண்டரை இலட்ச ரூபா பெறுமதியான கதிரைகள், மேசைகள் அலுமாரிகள் வாங்குவதற்கு கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திரு.சரத்சந்திர குணரத்தின அவர்கள் தமக்கு பாராளுமன்றினால் ஒதுக்கப்பட்ட பன்முக நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்திருந்தார். இந்நிதியை பயன்படுத்தி நீர்கொழும்பு பிரதேசச் செயலகமும் இந்து சமய கலாச்சார இராஜாங்க அமைச்சும் இணைந்து மேற்கூறிய தளபாட ங்களை

பெற்றுத் தந்தன. 21.5.94 அன்ற மாலை நடைபெற்ற கூட்டத்தில் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திரு சரத் சந்திர குணரத்தின அவர்களால் இரண்டரை இலட்ச ரூபா பெறுமதியான தளபாடங்கள் மன்றத்திற்கு கையளிக்கப்பட்டது.

எமது தலைவர் திரு. அ. மயில்வாகனன் இந்துசமயத்துக்கு ஆற்றி வரும் அளப்பெருஞ்சேவைகளைப் பாராட்டி இந்து சமய கலாச்சார அமைச்சு கொழும்பில் 11. 6. 94ல் நடத்திய பக்திப் பெருவிழாவில் இறைபணிச் செம்மல் என்னும் பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது.

24.5.1994 அன்று மன்றத்தின் 62ம் அண்டு நிறைவு 53 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் மன்றத்தின் அமைப்பு விதிகளில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட்டன. " இம்மன்றம் இந்துஇளைஞர் மன்றம் நீர்கொழும்பு எனவும் மன்றக் கட்டிடம் இந்து இளைஞர்மன்ற கலாச்சார மண்டபம் எனவும் அழைக்கப்படுதல் வேண்டும்.இம்மன்றத்தின் அலுவலகம் நீர்கொழும்பு கடற்கரைத் தெரு 137ம் இலக்க ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்துக்குச் சொந்தமான காணியில் அமைக்கப்பட்டிருக்கும் அதன் சொந்தக் கட்டிடமாகிய இந்து இளைஞர் மன்ற கலாச்சார மண்டபத்தில் அமைந்திருக்கும் " எனத் திருத்தப் பிரேரணை பொதுச் சபையினால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அத்துடன் மன்றத்தின் இந்து மகளிர் அணி ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற திருத்தமும் பொதுச்சபையினால் அங்கீரிக்கப்பட்டது. 3.06.94 அன்று மன்ற மண்டபத்தில் திரு.அ.மயில்வாகனன் தலைமையில் இந்து மகளிர் அணி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள கலாச்சார மண்டபம்புத்தளம் தொடக்கம் நீர்கொழும்பு , வத்தளை ஈறாக உள்ள பிரதேசங்களில் வாழும் இந்துக்களுக்கென்று திருமண மண்டபத்தோடு அமைந்த கலாச்சார மண்டபம் ஒன்று இல்லையேயென்ற குறைபாட்டை நிவர்த்தி செய்கின்றது. மன்றத்தின் நீண்டகாலக் கனவு நனவாகிவிட்டதென்ற சொல்லவொண்ணாத பூரிப்பு எல்லோர் உள்ளங்களிலும் நிறைகின்றது. 6075 சதுர அடி விஸ்தீரணத்தைக் கொண்ட சகல வசதிகளுடனும் கூடிய விசாலமான மண்டபம் மன்றத்திற்கு கிடைக்கப்பெற்றது ஸ்ரீசித்திவிநாயகப் பெருமானின் திருவருளேயாகும்.

மன்றம் தொடர்ந்து சைவத்திற்கும் தமிழுக்கும் பணியாற்றுவதற்கு இக் கலாச்சார மண்டபம் உறுதுணையாய் அமைவதோடு எமது கலாச்சாரத்தின் மையமாக திகழும் என்பதில் ஐயமில்லை.

*மு. ஸ்ரீமுருகன்*

பொதுச்செயலாளர்

நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம்

# நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின்

# தலைவர்கள் வரிசையிலே ............

| | |
|---|---|
| அமரர் திரு .ச. க. விஜயரத்தினம் அவர்கள் | ( 14- 2 - 1932 - 1954) |
| அமரர் திரு.. இ . நல்லதம்பி அவர்கள் | ( 20 - 3 - 1955 - 1964) |
| திரு. க. சீவரத்தினம் அவர்கள் | ( 21 - 6 - 1964 - 26 - 9 - 1965) |
| திரு. வ. நடராசா அவர்கள் | ( 26 - 9 - 1965 - 25 - 6 - 1966) |
| திரு. தா . சண்முகநாதன் அவர்கள் | (25- 6- 1966 - 7 - 6 - 1969) |
| திரு. சி. சண்முகநாதன் அவர்கள் | ( 7- 6- 1969 - 23 - 8 -1970) |
| திரு. தா. சண்முகநாதன் அவர்கள் | ( 23- 8- 1970 - 2 3 - 4 - 1972) |
| திரு. ஜெயம் விஜயரத்தினம் அவர்கள் | ( 23 - 4 - 1972 - 22- 7 -1973) |
| திரு. ஜெயம் விஜயரத்தினம் அவர்கள் | ( 22 - 7 - 1973 - 29 - 6 -1975 ) |
| திரு. தா. சண்முக நாதன் அவர்கள் | ( 29- 6 - 1975 - 2 -7 -1978) |
| திரு. ந. தெய்வேந்திரன் அவர்கள் | ( 2 - 7- 1978- 31- 5 -1981) |
| திரு. அ. மயில்வாகனன் J P அவர்கள் | ( 31- 5 - 1981 இன்று வரை) |

* 22. 7. 1973 லிருந்து " இந்து இளைஞர் மன்றம் " எனப்பெயர் மாற்றம் செய்யப்பெற்றது.

மணிவிழாக் காணும்
இந்து இளைஞர் மன்றத்தின்
மணிமண்டபத் திறப்புவிழாவுக்கு
எமது இதயங்கனிந்த
வாழ்த்துக்கள்!

# தீபா டிரேடர்ஸ்

இல 225 மெயின் வீதி
நீர்கொழும்பு

# Deeba Traders

NO 225 Main Street
Negombo.

Telephone: 031-2182

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

அறுபது ஆண்டுகளுக்கு மேல்
சைவத்திற்கும், தமிழுக்கும்
பணியாற்றி வரும் மன்றம்
வாழ்க! வளர்க!

☆

# NANDHINI JEWELLERS

*manufactures*
*of*
*Guaranteed Sovereign*
*Gold Jewellery*

☆

72, Sea Street
Colombo 11
**Phone: 449547**

மோப்பக்குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

# இந்து இளைஞர் மன்றத்தில் அறநெறிப்பாடசாலையின் பங்களிப்பு

இன்றைய குழந்தைகளே நாளைய உலகை வழிநடத்தக் கூடியவர்கள். அவர்களை அன்பு , அடக்கம், பணிவு , நற்பண்பு , தியாக உணர்வு மூலம் வழிநடத்தி, அவர்களது எதிர்கால வாழ்வை நெறிப்படுத்த சமய போதனை அவசியமாகும். உள்ளத்தைப் புனிதப்படுத்துவதே சமயத்தின் நோக்கம்.

பிஞ்சு மனங்களைப் பண்படுத்தி அவர்களது உள்ளத்தில் நல்லெண்ணத்தை உதிக்கச் செய்து, உயர்ந்த பண்புகளைப் போதித்து, செயலில் நன்னடத்தையைப் பழக்கி அவர்களது பொறுப்பையும், கடமையையும் உணர்த்துவதே அறநெறிப் பாடசாலையின் நோக்கமாகும். பாடசாலைகளினால் புரிந்துணர்வுடன் செயற்படுத்த முடியாத சில பணிகளை அற நெறிப் பாடசாலை மூலம் செயற்படுத்த முடியும், என்ற நம்பிக்கையில் நாட்டின் பல பாகங்களிலும் இந்து கலாச்சார அலுவல்கள் அமைச்சு பல அற நெறிப்பாடசாலைகளை நிறுவிவருகின்றது.

இதற்கமைய எமது ஊரிலும் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சின் ஒத்துழைப்புடனும், இந்து இளைஞர் மன்றத்தின் பேராதரவுடனும் ஓர் அறநெறிப் பாடசாலை இயங்கிவருகின்றது. இப் பாடசாலையில் கல்விபயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் தமது சேவையினை ஊதியம் இன்றி சேவை மனப்பான்மையுடன் செய்து வருகின்றனர்.

பரீட்சைக்காக மாணவர்களைத் தயார்ப்படுத்துவது இப்பாடசாலைகளின் நோக்கமன்று.

அறநெறிப் பாடசாலைக்கென சிறந்த ஒரு பாடத்திட்டம் , சிறந்த பல கல்வியாளர்களாலும், சமய அறிஞர்களாலும் வகுக்கப்பட்டு, அதன் மூலம் அற நெறிப்பாடசாலை மாணவர்களுக்கு போதிக்கப்படுகின்றது. இப்பாடத்திட்டம் பல சிறப்பம்சங்களை உள்ளடக்கியதாக அமைந்திருக்கின்றது.

ஆண்டு 1,2,3, ஐச் சேர்ந்த சிறார்களை பாலர்பிரிவு எனப்பிரித்து, அன்பு நெறியை வளர்க்கும் பொருட்டும், தர்மம், வாய்மை என்பவற்றை உணர்த்தும் வகையிலும் கதைகள் கூறி மூத்தோருக்கு மதிப்பளிக்கவும் , இரக்க உணர்வை

வளர்க்கும் வகையிலும் சமயம் போதிக்கப்படுகின்றது.

அடுத்து ஆண்டு 4,5,6, ஐச் சேர்ந்த மாணவர்களை கீழ்ப்பிரிவு என வகுத்து ஆலய வழிபாட்டின் மேன்மையையும் , மனக்கட்டுப்பாடு, மன அமைதிமூலம் தெய்வீக நிலையை உணர வைத்தல், பிரசித்தி பெற்ற ஈழத்து , தமிழகத்து திருக்கோயில்களின் பெருமைகளை உணர்த்தல் ஆகியவை தெளிய வைக்கப்படுகின்றது.

7ம் 8ம், 9ம் ஆண்டு மாணவர்களை மத்திய பிரிவாகப்பிரித்து, மாணவர்களின் ஆளுமை விருத்தியடையவும், சேவை முயற்சியில் ஈடுபடவும், சமயகுரவர்கள் கடைப்பிடித்த நாற்பாதங்களின் பெருமையை உணர்த்தியும் , அறம் , அன்பு ,ஒழுக்கம் வாய்மை போன்ற நற்செயல்களை குறள் மூலம் விளக்கி மாணவர்களை நன்நடத்தைக்கு வழிகோலலாம்.

10ம், 11ம், ஆண்டு மாணவர்கள் மேற்பிரிவாகப் பிரித்து , வாழ்க்கைக்கு சமயம் எவ்வளவு முக்கியம் என்பதை விளக்குமுகமாக சமயத்தின் தொன்மையை அறிந்து பெரிய புரான நாயன்மார்கள் வரலாறு , திருமுறை திருவருட்பயன், குறள், நாலடியார், அத்தோடு 19ம் 20ம் நூற்றாண்டில் வாழ்ந்த சமயப் பெரியார்களின் சேவைகளை உணர்தல், பிற சமயங்களைப் பற்றியும் அறிந்து கொள்ளல் போன்ற நல்ல வழிமுறைகள் இப்பாடத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். இப்பாடத்திட்டத்திற் கேற்ப அற நெறிப்பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

" இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பதற்கமைய மாணவர்கள் இளம் வயதிலே அன்பு, அகிம்சை ,நற்குணம் போன்றவற்றைப் பெற்று விட்டால் , அவர்கள் , தனக்கும் , சமூகத்திற்கும். நாட்டிற்கும் பயனுள்ள பிரஜையாவார்கள். இத்தகைய சிறப்பான மனிதப்பண்புகளை வளர்க்க அற நெறிப்பாடசாலைகளே துணை புரிய முடியும்.

அற நெறிப் பாடசாலை மூலம் சிறுவர்களை நல்வழிப்படுத்த எடுக்கப்படும் முயற்சிகள் யாவும் வெற்றியளிக்க பெற்றோர்கள் யாவரும் தோளோடு தோள் நின்று ஒத்துழைக்கப்பணிவுடன் வேண்டி நிற்கின்றோம்.

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

# இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட இந்து சமயப்போட்டி

கம்பஹா மாவட்டம் (1993)

## நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்ற அறநெறிப்பாடசாலையின் பெறுபேறுகள்

### பேச்சுப்போட்டி

கீழ்ப்பிரிவு :

1ம் இடம் செல்வி B.ஜனுசியா
2ம் இடம் செல்வி R.நிரோசினி
3ம் இடம் செல்வி p. சர்மிளி

மத்தியபிரிவு :

1ம் இடம் S. சுதாகரன்
1ம் இடம் N. சதீஸ்குமார்

### கட்டுரைப்போட்டி

கீழ்ப்பிரிவு:

செல்வன் M.ரகுகாந்த் 1ம் இடம்
செல்வி T,கீதா 3ம் இடம்

மத்தியபிரிவு:

செல்வி S. தர்சினி 1ம் இடம்
செல்வன் M.கிரிஷாந்த 2ம் இடம்
செல்வன் S. ஸ்ரீதர்ஷன் 3ம் இடம்

மேற்பிரிவு:

வை. பகவதூரர் 1ம் இடம்

### பண்ணிசைப்போட்டி

| | | |
|---|---|---|
| கீழ்ப்பிரிவு : | செல்வி N.ஜெயபிரசன்னா | 1ம் இடம் |
| | செல்வி R.நிரோஷினி | 2ம் இடம் |
| மத்தியபிரிவு: | செல்வி S. தர்சினி | 1ம் இடம் |
| | செல்வி S.குமுதினி | 2ம் இடம் |
| | செல்வன் N.சதீஸ்குமார் | 3ம் இடம் |
| மேற்பிரிவு: | செல்வன் வை. பகவதூர் | 2ம் இடம் |

## தேசிய மாவட்டத்திலான போட்டி (1993)

### பேச்சுப்போட்டி

| | | |
|---|---|---|
| கீழ்ப்பிரிவு | செல்வி B.ஜனுசியா | 2ம் இடம் |

### பேச்சுப்போட்டி

| | | |
|---|---|---|
| மத்திய பிரிவு | செல்வன் S.சுதாகரன் | 1ம் இடம் |

### கட்டுரைப் போட்டி

| | | |
|---|---|---|
| மத்திய பிரிவு | செல்வி S.தர்சினி | 1ம் இடம். |

### பண்ணிசைப் போட்டி

| | | |
|---|---|---|
| மத்திய பிரிவு | செல்வி S.தர்சினி | 1 ம் இடம். |

### சுபகாரியங்கள் செய்யக்கூடாத மாதங்கள்

ஆடியில் இராவணன் மாண்டதும்,
மார்கழியில் பாரதப் போர் மூண்டதும்
புரட்டாசியில் இரணியன் இறந்ததும்
மாசியில் ஈசன் நஞ்சு அருந்தியதும்
பங்குனியில் காமன் வெந்ததாலே

*ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி, பங்குனி, ஆகிய ஐந்து மாதங்கள் சுப காரியங்கள் செய்ய ஏற்றதல்ல.*

# மலர் வெளியீட்டுக் குழு

## ஆசிரியர் குழு

திரு. அ.மயில்வாகனன் சமாதான நீதவான்

திரு. ந. தருமலிங்கன்

திரு. மு. சோமசுந்தரம்

திரு. சு. நவரட்ணராஜா

## விளம்பரம் சேகரிப்புக்குழு

திரு. வ. யோகேந்திரன்

திரு.ச. ஜெயக்குமார்

திரு. தி. முருகபூபதி

திரு. பா. சந்திரசேகர்

திரு. ம. சாந்தகுமார்

திரு. செ. ரவிச்சந்திரன்

## பதிப்பாசிரியர்

திரு. ம. செந்தில்குமரன்

## பதிப்பு

**சாந்தி அச்சகம்**

14/c, பெர்னாந்து அவெனியு

நீர்கொழும்பு

தொலைபேசி 031 - 2143

**********

மணிவிழாக் காணும்
இந்து இளைஞர் மன்றத்தின்
மணிமண்டபத் திறப்புவிழாவுக்கு
எமது இதயங்கனிந்த வாழ்த்துக்கள்!

************************

# ROMAX JEWELLERY

## ரொமெக்ஸ் ஜுவலரி

## රොමැක්ස් ජුවලරි

************************

Devi Complex, 1st Floor
177 1/9 SEA STREET
Colombo - 11
Telephone: 439967

**********

துறந்தாகைக்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

# இந்து இளைஞர் மன்ற மகளிர் அணி 1994

அங்குரார்ப்பணம் : 03 . 06. 94

தலைமை தாங்கியவர் : திரு அ. மயில்வாகன்

( தலைவர் , இந்து இளைஞர் மன்றம்)

| | |
|---|---|
| தலைவி : | திருமதி. கங்காதேவி ஸ்ரீமுருகன் |
| செயலாளர் : | திருமதி. பரிமள ஜெயந்தி நவரத்தினம் |
| உப செயலாளர் : | திருமதி. நித்யகலா கிருஷ்ணராம் |
| பொருளாளர் : | திருமதி. விஜயமணி கதிரவேல் |
| ஆட்சி மன்ற உறுப்பினர்கள்: | திருமதி. ஜெகதாம்பிகை ராதாகிருஷ்ணன் |
| | திருமதி. பூங்குழலி இராஜகுகன் |
| | திருமதி. கமலாம்பிகை காளிதாஸ் |
| | திருமதி. மகிழம்மா கணபதிப்பிள்ளை |
| | திருமதி. தெய்வநாயகி பாலசுந்தரம் |

## செயற்றிட்டங்கள்

(I) பஜனைகள் செய்தல்

(II) சத்சங்கம் அமைத்தல்

(III) தையற்பயிற்சி வகுப்புக்கள் நடாத்துதல்

(IV) மனையியல் வகுப்புக்கள் நடாத்துதல்

(V) செயற்கை மலர்கள் தயாரித்தல்

(VI) வாசிகசாலை நடாத்துதல்

(VII) இந்து இளைஞர் மன்றத்தினரால் கொடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களை நடை முறைப்படுத்துதல்.

அறுபது ஆண்டுகளுக்கு மேல்
சைவத்திற்கும், தமிழுக்கும் பணியாற்றி வரும்
மன்றம் வாழ்க! வளர்க!

★

★

★

JANANY
**Jewellery Marts**

ஜனனி ஜுவலரி மார்ட்ஸ்
ජනනි ජුවලරි මාර්ට්ස්

★

**Devi Complex, 1st floor,**
**177 1/12 SEA STREET,**
COLOMBO - 11
T' Phone : 334940

*மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்*
*வளத்தக்காள் வாழ்க்கைத் துணை*

# மன்றமும் மண்டமும்

# வாழும் ! வளரும் !!

**ந. தர்மலிங்கன்**
*நீர்கொழும்பு*

அலையாடும் கடலாடை
அழகோடு உறவாட
விலைகூடா எழிலெல்லாம்
விளையாடும் நீர்கொழும்பில்
கலைபாடும் கவின்கூடும்
கடற்கரையாம் வீதிதன்னில்
நிலைகூட்டி நிழல்கூட்டும்
நித்யவிநாயக சரணம் !

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள்
தெய்வத்துள் நிலையென்ற குறள்மொழியாய்
ஐயனவன் விஜயரத்னம் அகஞ்சிறந்தோன்
மெய்வழியாய் எதிர்காலம் மேன்மைகொள.

அன்றிருந்த தமிழர்களை ஒன்றிணைத்து
ஆலயங்கள் புனரமைத்து இந்திளைஞர்
மன்றமென ஒன்றமைத்து அதன்பணியாய்
மகுடமென பள்ளியொன்று ஆக்கிவைத்து

ஞாலம்புகழ் பேசிடவே அமரர்ஆன
நல்லோனின் நல்வழியில் நாடிநின்று
ஆலதனைத் தாங்கிநிற்கும் விழுதுகளாய்
அரும்பணிகள் பலவகுத்த பெருமனத்தோர்

கூடிநின்று பேசியதால் நாமெல்லோரும்
கூடியமர்ந் தனுபவிக்கப் பெரியகூடம்
கூடிவந்து வாய்த்ததுவே கூடக்கூட
கோடியின்பம் சேர்த்ததுவே பாடப்பாட

நீர்கொழும்பு நகர்வாழும் தமிழரெல்லாம்

நிலைகுலைந்து போய்விடாமல் சேவையாற்ற
சீர்கொண்டு தமிழணங்காள் சிரித்தாற்போல
சிங்கார மண்டபமும் நிலைத்ததம்மா!

அல்லதனை தூற்றுதல் ஆகாவானாலும்
நல்லதனைப் போற்றுதல் நம்கடன்
வல்லவராய்ப் பொருளீட்டி செயலுங்கூட்டி 65
நல்லதோரு பணிபடைத்தார் நாவாரப் போற்றுவோம்.

சான்றோர்கள் சைவநெறி ஆய்வாளர்கள்
சாற்றிடவே கலைஞர்எழுத் தாளர்கூட்டி
தேன்தமிழும் சைவநெறி கலைகள்வளர
செய்துபணி இந்துமன்றம் அறிந்தோர் அறிவர்

பிறையொன்று நிறைகண்டு நிலவானதே போல்
குறைகண்டு பேசுதற்கு கறையொன்று இல்லா
பொறைகொண்ட மயில்வாகனன் தலைமை இன்று
இறையருளால் வரலாறொன் றினிதே படைத்து

வருங்காலத் தலைமுறைகள் வழிதேர்ந்து கொள்ள
உறுங்காலம் உய்த்துணர்ந் துற்றதுணை சேர்த்து
பெறுங்காலம் பெற்றெடுத்த பிள்ளைகளைப்போன்று
பெருங்கோலத் திட்டம்பல வெற்றியெனக் கொண்டு

இந்திளைஞர் மன்றமது இனிதே வளர்ந்து
இந்திளைஞர் கலாச்சார மண்டபமாய் விரிந்து
சந்தமொடு யாப்பிணைத்த கவிதையினைப் போல
சந்ததமும் புகழுஞ்சேர நாள் தோறும் வளரும்

காலத்தின் சுவடுகளும்
கால்மாற்றிப் போகும்நாளில்
காலத்தை நிறுத்து வைத்த
கட்டுழைப்பின் சின்னம் இஃது
ஞாலத்தில் சைவமும் தமிழும்
நல்லோர்களும் வாழும்வரை
வாழும் இம் மன்றப்பெருமை !
இந்து மண்டபமும் வாழும்! வளரும் !!

உ

சிவமயம்

# மணிவிழா மணிமண்டபம் மணிமலர்

## வாழ்க !

"உடப்பூரன்"

நீலக்கட லோரம் நீர்கொழும்பூர் புகழ்நகர்முன்
சீலத்தால் காமாட்சி அன்னையாண்ட பெயர்பூமி
கோலத்தால் மிளிர்கின்ற கொள்கைமிகு இந்துமதக்
காலத்தால் அழியாத கடவுளர்தம் ஆலயங்கள்

முத்துத் தமிழ்வளர் கடற்கரை வீதிதன்னில்
முத்துமாரி அன்னையுடன் காளியன்னை ஆனைமுகன்
இத்தலம் சிறந்திட இந்துக்கள் இறைபணியை
நத்தினார் நாள்தொறும் நற்பணி பேணினார்

சைவமும் தமிழும்போல சமயத்தின் கலைகளுமாய்
நவமுடன் தத்துவத்தை நலமாகக் காட்டிடுமாம்
சிவநெறிச் சித்தாந்தம் தெய்வநல வேதாந்தம்
பவம் போக்கும் வாழ்க்கைநெறி பாரினிலே இந்துமதம்

இம்மைக்கும் வாழ்வளித்து மறுமைக்கும் உய்த்துவிடும்
நம்மதத் தத்துவத்தை நாடறியச் செய்துவிடும்
எம்மவர் எழுப்பிய இந்து இளைஞர் மன்றமிது
தம்மினச் சேவைக்கோர் தமிழர்தம் கோட்டமிது

ஆண்டுகள் அறுபதின்முன் அமைந்திட்ட இந்த மன்றம்
பூண்டதோர் பணிகளாலே புதுமைகள் பலவும்நாட்டித்
தூண்டிய செயலால்நம் தூயதமிழ் கலைகளோங்கி
ஈண்டிய பெருமையிலே இமயம்போல் இன்றிலங்கும்

வெள்ளிவிழா பொன்விழா வெற்றிநடை போட்டமன்றம்
அள்ளிவரு அழகுமிளிர் அறுபதாண்டு மணிவிழாவை
தெள்ளியதோர் நிலையினிலே இவ்வாண்டு காணும்வேளை
உள்ளமெலாம் மகிழ்கின்ற ஓர்அரிய நிலையும்கண்டோம்

மணிவிழா நினைவுகூரும் மணிமண் டபமொன்றை
அணியாக விளங்கிநிற்க அரியதோர் சின்னமாக
தணியாத முயற்சியிலே தந்திட்டார் மன்றத்தார்
மணிவிழா மணிமன் டபமே மலர்ந்ததாமே.

நீர்கொழும்பு மாநகரில் நிலைத்துவளர் தமிழுடனே
சீர்வளரும் சைவமுடன் செயற்கரிய பணிபுரியும்
பேர்விளங்க கலைகளுக்கு ஆசார மண்டபமாய்
ஏர்சிறக்க ஏற்றிவைத்த ஒளியாலே இலங்குந்திண்ணம்

மொழியும் கலைகளும் மோகனப் பண்பாடும்
வழிவழி மரபுகள் மாண்புடன் நின்றாடும்
கனிவளர் கலாசாரம் காலத்தால் மிதமாடும்
அணிவளர் ஆனைமுக அண்ணல் துணையாடும்

இந்துஇளை ஞர்மன்றம் இதுவரையுஞ் செய்தபணி
தந்துவிட்ட சாட்சிக்கோர் இமயத்தின் தீபமீது
சந்தமுடன் - இனிமேலும் - சைவநெறி கலைகளுமே
சிந்துபாடும் சத்தியமே வாழ்கமணி மண்டபமே.

**கடவுளும் மனிதனும்** : தனக்குள் கடவுளைக் காணப் பெறாதவன் வேறெங்கும் அவனைக் காணப்பெறான். பிரபஞ்சத்தின் எல்லாப் பொருள்களிலுமிருப்பதை விட கடவுள் மனிதனில் தான் நல்லசெயல் நிலையில், அறியப்படக்கூடிய நிலையில் இருக்கிறார்.

# இந்துமா கடலன்னை அருகே கலங்கரை விளக்கம்

***லெ. முருகபூபதி***
*அவுஸ்திரேலியா*

*அரைநூற்றாண்டுக்கும் மேலாக வளர்ந்து செழித்து கம்பீரமாக எழுந்த விருட்சத்தின் நிழலில் சமயமும், மொழியும், பண்பாடும், கலையும், இலக்கியமும், கலாசாரமும், அறிவியலும் கற்றறிந்த பலர் காலவெள்ளத்தால் மறைந்தும் ஊர்விட்டு ஊர் இடம்பெயர்ந்தும் - தேசம்விட்டு தேசம் புலம் பெயர்ந்தும் போனாலும் - அந்த விருட்சமோ - இன்றும் இனிவரும் காலத்திலும், எண்ணிலடங்கா பலரை தனது நிழலில் அரவணைத்து ஆதரவு காட்டி அறநெறியும் - அன்புவழியும் - போதித்து மனித மேம்பாட்டுக்கு உழைக்கும் மாமனிதர்களை உருவாக்கிக் கொண்டேயிருக்கும் என்பதற்கு எங்கள் - ஈழமணித் திருநாட்டின் மேற்குப் புறத்தே 'ஓவென' இரைந்துகொண்டிருக்கும் இந்துசமுத்திரத்தாயின் கரைதன்னில் வீற்றுள்ள இந்து இளைஞர் மன்றம் உன்னதமான சான்று!*

*வந்தோரை வாழவைக்கும் சிங்கார நீர்கொழும்பு அல்லவா இந்த மன்றத்தை ஈன்ற தாய். அதனால்தான் இம்மன்றத்தை உருவாக்கியவர்களும் உரமிட்டு வளர்த்தவர்களும் - விழுதுகளாய் தாங்கி நின்றவர்களும் - அங்கத்துவம் பெற்று உயர்ந்தவர்களும் எங்கெங்கு வாழ்ந்தாலும் - பூவுலகுவிட்டகன்றாலும் மானசீகமாக வாழ்த்திக்கொண்டேயிருப்பார்கள்.*

*இதே மன்றம் தவமிருந்து பெற்றது ஓர் கலாசாலையை சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு. இன்று- அதன் ஸ்தாபகர் அமரர் விஜயரத்தினம் அவர்களின் திருநாமம் தாங்கி - கம்பஹா மாவட்டத்திலேயே ஒரேயொரு இந்து மத்திய கல்லூரியாக காட்சி தருகிறது.*

*கல்வியும் - செல்வமும் வீரமும் விழாக்கோலம் பூண்டது - இம்மன்றத்தில். மாணாக்கர் பல் பாகமிருந்தும் வந்து தமது நாவன்மையை மேடையில் காட்டி பரிசில்கள் பெற்றனர். இன்று அவர்களில் பலரோ 'பேச்சாளராயினர்'.*

சமயம் வளர்த்த நான்கு குரவர்களும் - அறிவொளி பரப்பிய வள்ளுவரும் - பாக்களால் வையகத்தை பாலித்திட வந்த பாரதியும் - தமிழ் உரைநடைச் சிற்பி நாவலரும் - இன்னும் பல முன்னோரும் இங்கு விழாக்கள் பல கண்டனர்.

சமய வழிபாட்டுடன் - மொழி வளம் பெற்றது - கலையும், இலக்கியமும் வளர்ந்தன.

கருத்து முரண்கள் முளைவிட்டாலும் 'பொதுப்பணி' என வந்துற்றபோது தனித்துவம் பேணி ஒற்றுமை காத்து - தளராது நிமிர்ந்து நின்ற பெருமை பெற்றது எங்கள் மன்றம்.

எத்தனையோ அமளிகளை நீர்கொழும்பு சந்தித்தது. ஆனாலும் - சுய நம்பிக்கையோடு - அழியாமல் என்றென்றும் இங்கு வாழும் இந்து - தமிழ்ப் பெருங்குடி மக்களின் கலாசார சின்னமாக ஒளிபரப்பிக் கொண்டிருப்பதானது பெருமைக்குரியதுதான்.

புத்தம் புதிய மண்டபத்தில் - புகுவிழா நடத்தும் மன்றம் - இதனைத் தோற்றுவித்த கர்மவீரர்களின் நினைவுச் சின்னமாக திகழும்.

இந்துமா கடலன்னை மடிதன்னில்
முப்பெருங்கோயில் மணியோசை
இசை பொழிய
அன்பர்கள் தம் ஆதரவுடனே-
எங்கள் மன்றம் கலங்கரை விளக்கமாய்
ஒளிபரப்பும்.

<u>ஏன் உனக்கு இந்தக் கதி</u> : தலைவிதி, கடவுள் சித்தம் என்று யார் மீதோ பழி போடாதே. உன் கதிக்கு உன் நினைப்புத் தான் காரணம். நினைப்பைத் தெரிந்து கொண்டால் நற்கதி கிடைக்கும்.

# பாரதியே உன் 'பா'ரதியே!

**எஸ். மனோகரன்** .
நீர்கொழும்பு.

எட்டயபுரமதனில் அவதரித்த எமது பாரதியே
எட்டுத்திக்கும் புகழ் பெற்ற உன் பா ரதியே
பாட்டுக்கொரு புலவன் நீயாக இருந்த போதிலும்
கொட்டமோ, கர்வமோ என்றுமே கொண்டதில்லை
பாரதியே உன்
'பா'ரதியே!

தென்பொதிகை (தந்த) தோன்றிய செந்தமிழால்
தென்றலென நீ இயற்றிய பாடல்கள்
தென்னகம் மட்டுமல்ல இவ் வையகம் முழுதுமே
சான்று பகன்று இன்று சரித்திரங்கள் ஆகி விட்டது
பாரதியே உன்
'பா'ரதியே!

கண்ணபிரானைக் காதலியாக்கி உனது உள்ள
எண்ணங்களை எமக்கு எத்தனையோ பாக்களாக அருளி
மண்டலங்கள் போற்றி உனக்கு மகுடங்கள் சூட்டி
வண்ணக் கவிதைகள் தந்தோனே நீ என்றும் வாழி!
பாரதியே உன்
'பா'ரதியே!

பாப்பாவுக்காக நீ பாடிய பாடல்கள்
மூப்படைந்தவர்களுக்கும் முன் உதாரணங்களாக இருந்தது
எப்பாடல்கள் நீ எமக்கு அளித்த போதும்
அப்பாடல்களில் ஆங்காங்கு ஆபத்பாண்டவனை அழகு செய்தாய்
பாரதியே உன்
'பா'ரதியே!

'குயில்பாட்டின்'(ல்) கருத்துக்களை குவலயமே போற்றியது
கயல்விழி கன்னியர்கள் பட்ட சொல்லொணா கொடுமைகளை(த்)
துயர் துடைக்கவே தந்த கவிதைகள் ஏராளம் - பெண்கள்
சுய விருப்புடன் வாழ "பெண் விடுதலை" கீதங்கள் ஆதாரம்
பாரதியே உன்
'பா'ரதியே!

புதுமைப் பெண்களாக்கவே நீ புனைந்த பாக்கள்
பதுமை களாக இருந்த பாவைகளை மாற்றியது
பொதுவுடமைக் கொள்கைகள் கொண்டோனே - பாரில்
புதுப் பரிணாமத்தை பெண்கள் வாழ்வில் வித்திட்ட வனே!

பாரதியே உன்
*'பா'ரதியே!*

சாதி வெறியை சந்தங்களின் மூலம் தீர்க்க
நீதியான உன் சிந்தனைகள்(ளை) பாக்கள் மூலமாக பாருக்கு(ள்)
ஓதி ஆண், பெண் என்ற இருவரையும் விடுத்து
ஆதிமுதல் இற்றை வரை வேறு சாதி இல்லை என்றாயே!

பாரதியே உன்
*'பா'ரதியே!*

பொதிகைத் தமிழ்பால் நீ கொண்ட காதலால்
துதித்தாய் கம்பர், வள்ளுவர், இளங்கோ போன்றோர்களை -
அத்துடன்
மதிப்புடன் அவர் தம்மை உன் எழுத்தாலே உயர்த்தினாய்
கதிரவனொளி போல் உன் கவி 'ஒளி' என்றுமே பூவுலகில்
(பிரகாசித்துக் கொண்டே) இருக்கும்

பாரதியே உன்
*'பா'ரதியே!*

**விதியை வெல்லலாம்:** விதி, மனிதன் தனக்குத் தானே ஆக்கிக் கொண்டதுதான்; ஆக்கிய மனிதன் அதை அழிக்க முடியாதா? மனதைக் கட்டுப்படுத்தினால் விதியை வென்றுவிடலாம்.

ஆலவிருட்சம் போன்று
பரந்து நிழல்பரப்பி
உயர்ந்து நிற்கின்ற
இந்து இளைஞர் மன்றம்
என்றும் வாழ்க!

**Topaz**
Beach Hotel Ltd.

ETTUKALA
NEGOMBO
SRILANKA
Phone : 031-4265
Fax : 031-2387

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்

மணிவிழாக் காணும்
இந்து வாலிபர் மன்ற மணிமண்டபத்
திறப்புவிழாவுக்கு
எமது
இதயங்கனிந்த வாழ்த்துக்கள்!

# NEGOMBO CUSHIONS

*Specialist in :*
*Automobile Upholstering*
*Motor Bike Seat Covers,*
*Furniture Cushion*
*Vacum*
*&*
*Wet Carpet Cleaners*

Prop : S.Rajkumar

**No: 235, COLOMBO ROAD**
**NEGOMBO**

**Phone: 071 - 23446**


காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு.

சைவமும், தமிழும் தழைத்தோங்க காலமெல்லாம் பணிபுரிந்த
இந்து இளைஞர் மன்றத்தின் பணிதொடர
எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்!

# INDRA

## JEWELLERS

**46, SEA STREET**
**COLOMBO - 11**
**T' Phone : 447690**

*மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை*
*எனைமாட்சித் தாயினும் இல்*

சைவமும், தமிழும் தழைத்தோங்க காலமெல்லாம்
பணிபுரிந்த இந்து இளைஞர் மன்றத்தின் பணிதொடர
எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்!

# EMPIRE

Agent for
Pugoda Fabrics
Dealers in Textiles

89 A, 3rd Cross Street,
Colombo - 11
T'Phone: 431574

*இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை*

மன்றம் வித்திட்ட ஆக்கபூர்வ பணி தொடர

எங்கள் நல் வாழ்த்துக்கள்!

★

# R.N.SILUMINI STORES

*Dealers in all Varieties of Textiles*

★

128, 3rd CROSS STREET,
COLOMBO -11

T'Phone: 326716, 320220

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றலரிது

சைவமும், தமிழும் தழைத்தோங்க
காலமெல்லாம் பணிபுரிந்த
இந்து இளைஞர் மன்றத்தின்
பணிதொடர எமது
உளங்கனிந்த வாழ்த்துக்கள்!

✦
✦
✦
✦
✦

**SEYED MOHAMED & COMPANY**

Dealers
in
Gold & Silver
Bullions & Goldsmith Tools,
Electroplating and Polishing Materials,
Direct Importers of Goldsmith Tools
from
England, France, Switzerland, India, Japan,
West Germany & Spain.

**195, MAIN STREET**
**COLOMBO - 11**
Telephone: 29214

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு

மணிவிழாக் காணும்
இந்து இளைஞர் மன்றத்தின் மணிமண்டபத் திறப்புவிழாவுக்கு
எமது இதயங்கனிந்த வாழ்த்துக்கள்!

########################

# GLASS EMPORIUM

*WINDOW GLASS & PLYWOODS*
*&*
*ALUMINIUM SHOWCASES*

ග්ලාස් එම්පෝරියම්　　கிளாஸ் எம்போரியம்

*Specialist*
*in*
*Picture Framing*

############

44 , FERNANDO AVENUE
NEGOMBO

*பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்*
*திண்மையுண் டாகப் பெறின்*

சைவமும், தமிழும் தழைத்தோங்க காலமெல்லாம் பணிபுரிந்த
இந்து இளைஞர் மன்றத்தின் பணிதொடர
எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்!


# நியு மங்களா ஓட்டல்

இல 09 கிரீன்ஸ் ரோட்

நீர்கொழும்பு

# NEW MANGALA HOTEL

09, GREEN'S ROAD

Negombo

TelePhone: 031 - 2097


தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்

# சமயமும் சமுதாயமும்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

இன்றைய மானுடச் சாதியின் வாழ்க்கை நிலையினை எண்ணிப்பார்த்தால் நீக்கமுடியாத ஏக்கமே மேலிடுகிறது. மனிதன் கடந்த பல நூற்றாண்டுகளாகத் திறமையாகவே வாழ்ந்து வருகிறான்.; அவன் வாழ்க்கையில் அடிக்கடி நேர்ந்த இயற்கை இன்னல்களையும் வெற்றிபெற்றிருக்கிறான். அவனைச் சுழலச் சிதற அடித்த காலத்தை வென்றிருக்கிறான். பேருலகத்தை இணைத்து வெற்றி பெற்றிருக்கிறான். அம்மம்மா! அரிய சாதனை! அற்புதச் சாதனை!

என்பாட்டி இனிதாகச் காட்டிச் சோறூட்டிய அம்புலியைக் குடியேறிக் கூடாரமாக்கும் குரல் கேட்கிறது. அவனுடைய அறிவுச் சுவடுகள் பதியாத மண்டலங்கள் இல்லை. அண்டங்கள் இல்லை; நினைந்து நினைந்து மகிழத்தக்க சாதனை!

ஆனாலும் சாதனையின்மகிழ்ச்சியை முழுவதும் துய்க்க முடியவில்லை. காரணம் உட்பகை ஓய்ந்தபாடில்லை

நிலவுலகங்கள் இணைக்கப்பெற்றன. ஆனால் இணைக்கவேண்டிய சிறந்த நெஞ்சங்கள் இணைக்கப் பெறவில்லை.

செல்வங்கள் செழித்து வளர்ந்தன. ஆனால் அல்லல் தரும் வறுமை போய் விடவில்லை. கருத்துக்கள் வளர்ந்தன. ஆனால் மோதிக்கொள்ளும் விலங்குணர்ச்சி போனபாடில்லை.

உலாவும் மாளிகைககள் உயர்ந்தன. ஆனால் ஒழுக்கத்தில் உயர்வில்லை.

திருக்கோயில்கள் எழுந்தன. ஆனால் சிறைச்சாலைகள் மூடப்பெறவில்லை.

கடவுளின் கருணை பேசப் பெற்றது. ஆனால் இரக்கம் என்பதொன்று எள்ளளவும் சிந்தையில் உண்டாகவில்லை.

இஃதென்ன விந்தை! மாளிகை கட்டி முடிப்பது வாழ்ந்தின்புறவா? அல்லது வாழ்விழந்து துன்புற்று அல்லல்படவா? இந்த அவல நிலைக்குக் காரணம் உண்மையான சமயச் சீலம் உலகில் தோன்றி வளரவில்லை என்பதேயாம்!

சமயநெறி என்பது உடற்சார்புடையதன்று; நீங்கா உயிர்ச் சார்புடையது. ஆனால் இன்றேசமயம் பெரும்பாலும் உடற் சார்புடையதாக மட்டுமே விளங்குகிறது. சமயச் சின்னங்களை நெற்றிகள் தாங்கினாலும் நெஞ்சங்கள் தாங்கவில்லை. மைபொதி விளக்கனையார் மலிந்து வருகின்றனர். "பூசு நீறு போல் உள்ளம் புனிதர்கள்" என்ற சேக்கிழாரின் செந்நெறிக்கு ஏற்றவாறு நெஞ்சுணர்வில் தூய்மை படரவில்லை சமயமும் ஒரு வளர்ந்த அறிவியலேயாம். எப்படி விஞ்ஞானத்தின் விளைவு வீணாகப் போவதில்லையோ அது போலவே சமயச் செந்நெறியின் பயனும் வீண் போவதில்லை.

தண்ணீரில் கிடப்பது மீனுக்குப் பொழுது போக்கன்று: அஃது ஒரு பகுதி வாழ்க்கையுமன்று; தண்ணீரில் கிடப்பதேதான் மீனுக்கு வாழ்க்கை. அதுபோல நமக்கும் சமய வாழ்க்கை அமைய வேண்டும்.

ஆனால் சமயம் சிலருக்குப் பொழுது போக்கு; பலருக்குப் போலிப்

பாவக்கழுவாய்.

ஒரு சிலருக்கு அதுவே வாழ்க்கைத் தொழில். வேறு சிலருக்கு வளம்பல படைத்து வாழும் வகை

இதுவா சமயம்? நின்றும் இருந்தும் நடந்தும் கிடந்தும் எழுந்தும் என்ற திருஞான சம்பந்தர் திருமொழியை எண்ணுங்கள்

"என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு இயங்கினான்" என்ற அப்பரடிகளின் அருள் மொழியை எண்ணுங்கள்

சமய ஒழுக்கம் ஒரு மனிதனின் வாழ்க்கை முழுதும் கவர்ந்து கொண்டிருக்க வேண்டும். சிந்தனையும் செவ்விய சொல்லும் செயலும் சமயச் சீலம் நிறைந்ததாக இருக்க வேண்டும். அவனுடைய வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் சமயத்தின் மாறா முத்திரை பதிந்து விளங்க வேண்டும். அப்பொழுதுதான் மனிதன் முழுமனிதனாகிறான். அவன் கடவுள் விரும்பும் பொருளுமாகிறான்.

உலகம் விரிந்தது; பரந்துபட்ட பரப்புடையது; சிந்தனை வேறு பாடுகள் உடையது; மொழி வேறுபாடுகள் உடையது; சமயங்களின் வேறுபாடுகளும் உடையது. வேறுபாடுகள் உண்டாயினும் உயிர் ஈடேற்றம் என்ற இலட்சிய ஒருமைப்பாடு உலகத்திற்கு உண்டு. எல்லா மொழிகளுக்கும் எல்லாச் சமயங்களுக்கும் இலட்சியம் ஒன்றேயாகும். அதனை அணுகும் முறைகளிலேயேதான் வேறுபாடு. இந்த வேறுபாடுகள் தவிர்க்க முடியாதவை. இவை வேறுபாடுகளே தவிர மாறுபாடுகளல்ல. வளர்ச்சியின்படி முறைகளேயாம். இவைகளுக்கு சமரசம் வேண்டும்.

சமரசம் என்றால் கலப்படம் செய்வதென்றும் பொருளன்று. இன்று சிலர் சமயத் தத்துவக் கலப்படம் செய்கிறார்கள். உணவுக் கலப்படத்தை விடத் தத்துவ அறிவுக் கலப்படம் மிகவும் கொடுமையானது. கலப்படம் உயிர் விளக்கத்தைத் தடை செய்யும்.

தெளிவில் தோன்றுவது தத்துவ விளக்கம். தத்துவ விளக்கத்தில் தோன்றுவது இறையருளின் இன்பக் காட்சி. இதனை "சிந்தையுள் தெளிவுமாய் தெளிவினுள் சிவமுமாகிய" என்று அருள் நூல் எடுத்துக் காட்டுகிறது. வளர் நெறிகளின் மாட்டு வெறுப்பின்றி உயர் நெறியிடத்து விருப்பம் காட்டுவதே முறை. சிறந்த வாழ்க்கை நெறிகள் பலவுண்டு. காலத்திற்கு காலம் நெறிகள் வளர்ந்து வருகின்றன. இதனை நெறியெலாம் புலம் ஆக்கிய என்ற மணிவாசகர் மணிமொழியால் உணரலாம். உலகில் எல்லாச் சமயங்களும் சிறப்புடையனவேயாகும். அவற்றில் ஏதொன்றும் தாழ்ச்சியுடையதன்று. அவை மனித உலகத்திற்கு செய்திருக்கின்ற சேவைகள் நினைந்து நெகிழ்ந்து வாழ்த்துதற்குரியன. ஆயினும் தத்துவ வளர்ச்சியிலும் தத்துவப் பார்வையிலும் தமிழகச் சித்தாந்தச் சமய நெறி உயிர்ப்புடையதாக விளங்குகிறது. சித்தாந்தம் என்றாலே முடிந்த முடிபு என்று பொருள். இனிமேல் வினாக்கள் எழுப்ப முடியாத அளவுக்குத் தத்துவத் துறையிலும் வாழ்க்கை முறையிலும் முழுதுற வளர்ந்த நெறி சித்தாந்த சைவமே.

செந்தமிழ்க் குமரகுருபர அடிகளும் "ஓரும் வேதாந்தமென்ற உச்சியிற் பழுத்த" என்று இதனைப் பாடியுள்ளார்கள் இங்ஙனம் கூறுவது சார்பின் காரணமாக எழுந்த பற்றினால் அன்று. உண்மையிலேயே அறிவின் அடிப்படையிலும் வாழ்க்கை இயலிலும் வைத்து ஆராய்ந்தால் சிவநெறி சிறந்து விளங்குமுண்மை எல்லார்க்கும் நன்கு பெறப்படும்.

# சமயம் என்றால் என்ன?

பேராசிரியர் அ .ச. ஞானசம்பந்தன்

சமயம் என்றால் என்ன? சமைக்கப் பட்டது சமயம். மனிதன் தன் வாழ்வு வளம் பெறவும், மாக்கள் தன்மையிலிருந்து விடுதலை பெற்று மக்கள் தன்மை பெறவும் வழியாகச் செய்யப்பட்டது அல்லது சமைக்கப்பட்டதுதான் சமயமாகும். வேறு வகையாகக் கூறுமிடத்து, மனிதனைப் பண்பாடு உடையவனாக ஆக்குவது சமயம். பல்வேறு வகையான காட்சி நல்கும் இப்பரந்த உலகையும் இதில் உள்ள வற்றையும் காணும் ஒருவன், இவ் வேற்றுமையில் மயங்காமல், இவற்றிடையே ஓர் ஒற்றுமையைக் காணமுயல்கிறான்; அனைத்திற்கும் ஆணி வேராய் அமைந்த ஒன்றை அறிகிறான் அறிவுக்கு அப்பாற்பட்ட பொருள்கள் உண்டு என்பதையும், அவை அனைத்தும் ஒரு வரன் முறைக்கு உட்பட்டு இயங்குவதையும் காண்கிறான்.

விஞ்ஞானியும் இதே காட்சியைக் காண்கிறானெனினும் அவ் வரன் முறை பற்றிய ஆய்விலேயே தன் முழுக் காலத்தையும் செலவிட்டு விடுகிறான். மெய்ஞ்ஞானி வரன்முறையின் தோற்றத்திற்கு ஒரு கருத்தா இருத்தல் வேண்டும் என்ற முடிவில் ஒன்றிவிடுகிறான். இவ் வெண்ணமே சமய வாழ்வின் அடிப் படையாய் அமைந்து விடுகிறது. சமயம் வெறும் குறிகளும், அடையாளமும் அன்று. சமயம் என்பதுஇவற்றைக் கடந்து நிற்பது. குறிகள், அடையாளங்கள் ஆகியவை போற்றாமலே சிறந்த சமயவாதியாக வாழ முடியும். இவை அனைத்தையும் மேற் கொண்டும் சமய விரோதியாய் வாழ முடி யும்.மனித மனத்தின் மாசைஅகற்றி, பண்பு டையவனாய் ஒழுக்கம் உடையவனாய் பிறர்க்குப் பயன்படுபவனாய் வாழ முற்படு வதே சமய வாழ்க்கையாகும். இவற்றிற்கு அப்பால் அனைத்தையும் கடந்து நிற்கின்ற ஒன்றை– கடவுள் என்ற ஒன்றை – மனதில் ஏற்றுக் கொள்பவனாய் வாழ்பவனே சமயவாதியாவான்.

எனவே கடவுள் மனித வாழ்வு என்ற இவை இரண்டினிடையே உள்ள தொடர்பு இவ் வாழ்விலிருந்து கடவுளை அடையும் நெறி என்பவை பற்றிப் புகட்டுவதே சமயம் எனப்படும். இதுவே சமயம் எனில் பலவேறு சமயங்கள் தோன்ற வேண்டிய இன்றியமையாமை யாது என்ற வினா எழலாம். மக்கள் அனைவரும் ஒரு படியினராக இல்லையன்றோ? அவரவர் கள் வாழும் இடம், அதன் தட்ப வெப்பநிலை, சுற்றுச் சூழ்நிலை என்பவற்றால் பாதிக்கப்படுவது ஒரு புறம். மேலும் இவை அனைத்தும் ஒன்றாக உள்ள நிலையில் வாழும் பல்வேறு மனிதரை எடுத்துக் கொண்டாலும் அவர்கள் வளர்ச்சியும் பல்வேறு படிகளில் இருக்கக் காணலாம். எனவே, இவர்கள் அனை வருக்கும் ஒரே சமயம் பயன்படுமாறில்லை. ஆகவேதான் ஒவ்வொரு கருத்தை வலியுறுத்திக் கூறும் பல்வேறு சமயங்கள் அவ்வக் காலத்துக்கு ஏற்பவும் இடத்துக்கு ஏற்பவும் தோன்றலாயின.

இந்த அடிப்படையை மனத்துட் கொண்டு தமிழ் மொழியின் பரப்பைக் காண்டல் வேண்டும். பிற்காலத்தில் வேற்று நாடுகளில் தோன்றி இந்நாட்டில் குடிபுகுந்த கிறிஸ்தவம், இஸ்லாம், ஆகிய இரண்டும் தவிர ஏனைய சைவம் வைணவம், சைனம், பௌத்தம் ஆகிய நான்கும் இம்மொழியில் மிகுதியான இடம்பெற்றுள்ளன. இறிஸ்தவமும், இஸ்லாமும் பிற்காலத்தே இந்நாட்டில் பரவினமையின் அதற்கேற்ற முறையில் குறைந்த அளவு இம் மொழியில் இடம் பெற்றுள்ளன.

ஓர் இன மக்கள் பேசும் மொழிக்கு மட்டும் இலக்கணம் வகுக்காமல் அம்மக்கள்வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்த பெருமை உலகமொழிகளுள்ளே தமிழ் மொழி ஒன்றுக்கு மட்டுமே உண்டு. வாழ்வுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியம், வாழ்வு நடைபெறுவதற்கு நிலைக்களமாயுள்ள இவ்வுலகையே ஐந்து பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கடமைகளைக் கூறிச் செல்கிறது.

குறிப்பிட்ட ஒரு சமயத்தின் சாயல் பெறாமல் கடவுட் கொள்கை பற்றிப் பேசுதலின் தமிழரின் ஆதிநூல் என்று பேசப் பெறும் தொல்காப்பியத்தில் சமயம் இடம்பெறு கிறது எனக் காண்கி றோம்.இதனை அடுத்துத் தோன்றிய திருக் குறளிலும் தனியொரு சமயத்தின் சாயல் இன்றிக் கடவுட் கொள்கையும் சமயமும் பேசப் பெறுதலை அனைவரும் அறிவோம்.

# பஜனையின் தத்துவம்

**பஜனை செய்வதன் தத்துவம் என்ன? அதில் நாமே பாடிப் பங்குகொள்ளலாமா? ரேடியோவிலும் ரி.வியிலும் பக்திப் பாடல்களைக் கேட்பதால் அதே போன்ற பலன் கிடைக்குமா?** இசை என்பது நம்முடைய மனத்தில் உண்டாகும் உணர்ச்சிகளை மென்மையாக வெளிப்படுத்தும் முறையாகும். பெரும்பாலும் நமக்கு உற்சாகம் ஏற்படும் போது அதைப் பாடி வெளிப்படுத்து கிறோம். அது நம்முடைய இதயத்துக்கும் மனத்துக்கும் ஒரு டானிக் போல விளங்குகிறது. நாம் பாடுவது போல் அதுவும் நமக்கும் இசையின் மணத்தை எழுப்பி நம்மை மகிழ்விக்கிறது. மேலும் அது நாம் வாழும் இந்த உலக வாழ்க்கையின் நிலையிலிருந்து மேலே உயர்ந்த நிலை ஒன்றுக்கு நமது மனத்தை உயர்த்திவிடக்கூடியது.

நாம் பாடினாலும் ஓதினாலும் மெல்ல முணுமுணுத்து இசைத்தாலும் அதன் இனிமையை நாமே நமக்குள் உணர்ந்து அனுபவிக்க வேண்டும். அப்போது அது நம்முடைய வாழ்க்கைக்கே புத்துயிர் அளிப்பதை உணருவோம். அப்படி ஒரு சக்தி இருப்பதால்தான் நாதப்பிரம்மம் என்று சொல்லி தெய்விக சக்தியாகவே அதை வழிபடுகிறோம். இதைப் பிறர் பாடிக் கேட்டாலோ கருவிகள் மூலம் கேட்டாலோ நமக்கு இந்த அனுபவம் ஏற்படாது. அதனால் நாமே பாடினால்தான் முழுமையான இன்பம் கிடைக்கும். இதை நாம் தனியாகவும் பாடலாம். நாம் பாடப் பிறர் தொடர்ந்து பாடும் பஜனையிலும் ஈடுபடலாம்.

இதற்கென்று தனியிடம் தேவையில்லை. தனியான நேரம் தேவையில்லை. கூட மற்றவர் இருக்க வேண்டும் என்பது இல்லை. எங்கே வேண்டுமானாலும் எப்படி வேண்டு மானாலும் பாடலாம். கோயிலில்தான் என்பது இல்லாமல் வீட்டிலும் பாடலாம். பூஜை அறை மட்டும் இன்றி வேற எங்கும் அமர்ந்து பாடலாம். அப்போது நான் பாடவில்லை என்னுள் இருக்கும் இறைவனே பாட வைக்கிறார் என்று சொல்லிக் கோண்டோமானால் அது நம் உணர்வுகளை உயர்த்தும். நாதப் பிரம்மம் நமக்குள்ளே இருப்பதைப் புரிந்து கொள்ள வைக்கும். இதைக் காட்டிலும் எளிமையான உபாசனை இல்லை.

**- சுவாமி நிர்மலானந்தா**

1. வாயைத் திறந்து சப்தம் போட்டு ஜபிக்கும் ஜபம் அதமமானது.
2. உதடு மாத்திரம் அசைந்து கொண்டு ஜபம் செய்வது மத்திமமானது
3. உதடுகூட அசையாமல் மானசீகமாக ஜபம் செய்வது உத்தமமானது

# சைவ வாழ்வு

சிவத்தமிழ்ச்செல்வி, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி

சைவ வாழ்வின் ஆதாரமாக அமைந்தது பக்திக் கொள்கையாகும். இறைவனைப் பக்தி வலையிற் படுத்தலாம் என்ற கொள்கை பல நூற்றாண்டு காலமாகச் சைவ மக்களிடையே வளர்ந்து வந்துள்ளது. இதனாலேயே தமிழ் நாடெங்கும் திருக்கோயில்கள் பல எழுந்தன. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றை முறையாகக் கொண்ட பல ஆலயங்கள் மக்கள் வழிபாட்டுக் குரிய இடங்களாக நம் நாடெங்கும் காட்சி அளிக்கின்றன. சைவ வாழ்வின் முக்கிய குறிக்கோள் உள்ளொளி பெருக்கலாகும். புறவாழ்வின் தூய்மையே அகவாழ்வின் தூய்மைக்கு அடியிடுவதாகும். எனவே உள்ளும்புறமும் தூய உணர்ச்சியைப் பெருக்குவதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு மார்க்கங்களும் உதவுகின்றன.

திருவங்க மாலை என்ற பதிகம் அப்பர் சுவாமிகளால் அருளிச் செய்யப் பட்டது. அங்கே நான்கு மார்க்கங்களையும் சிறப்பாகக் காட்டிச் சைவ வாழ்வு மலர வேண்டிய முறைகளை விளக்கியுள்ளார். திருக்கோயிற்றரிசனம் எமது கண்களுக்குப் புனிதத்தையும் , வழிபாடு எமது உறுப்பு களுக்குப் புனிதத்தையும் , பாடல்கள் செவி க்குப் புனிதத்தையும் நல்குவன.

**கண்ணுதலாலயம் நோக்கும் கண்களே கண்கள்**
**கறைக்கண்டன் கோயில் புகும் கால்களே கால்கள்**
**பெண்ணொரு பாகனைப்பணியும் தலைகளே தலைகள்**
**பிஞ்ஞகனைப் பூசிக்கும் கைகளே கைகள்**
**பண்ணவன் தன் சீர்பாடும் நன்னாவேநன்னா**
**பரன் சரிதை கேட்கின்ற செவிகளே செவிகள்**
**அண்ணல் பொலன்கழல் நினைக்கும் நெஞ்சமே நெஞ்சம்.**
**அவனடிக்கீழ் அடிமைபுகும் அடிமையே அடிமை.**

திருவங்கமாலையில் அமைந்த முதற் பாடல்கள் சரியை வழிபாட்டை விளக்குவன. தலை, கண், மூக்கு , வாய் கை, கால் என்பன அவனை வழிபடுவதில் எவ்வாறு ஈடுபட வேண்டும் என்பதைக் காட்டி நெஞ்சை வழிப்படுத்துகிறார்.

**நெஞ்சே நீ நினையாய் - நிமிர்**
**புன் சடை நின்மலனை**
**மஞ்சாடும்மலைமங்கை மணாளனை**
**நெஞ்சே நீ நினையாய்**

அடுத்ததாகக் கிரியா மார்க்கம் விளக்கப்படுகிறது. பூக்கையாலட்டிப் போற்றி என்னாத இவ்வாக்கையாற் பயனென்? என வினவுகிறார். அதையடுத்து யோக நிலை சுட்டிக் காட்டப்படுகிறது.

**தேடிக் கண்டு கொண்டேன் - திரு**
**மாலொடு நான் முகனும்**
**தேடிக் காணொணாத் தேவனை என்னுள்ளே**
**தேடிக் கண்டு கொண்டேன்.**

இதுதான் யோகசாதனையாகும் .அடுத்து ஞானத்தின் பேற்றினைக் காட்டுகிறார்.

**இறுமாந் திருப்பன் கொலோ - ஈசன்**
**பல்கணத் தெண்ணப்பட்டு**
**சிறுமானேந்த தன் சேவடிக்கீழ்ச் சென்றங்**
**கிறுமாந் திருப்பன் கொலோ**

சைவ சமயத்தில் பசுபுண்ணியமும், சிவ புண்ணியமும் சிறப்பாக எடுத்துக் கூறுப்படுகிறது. பசு புண்ணியம் என்பது பிற உயிர்களிடத்திற் காட்டும் அன்பாகும். இவை ஏனைய மதக்கொள்கைகளாகவும் அமைந்துள்ளன. ஆனால் , சிவ புண்ணியங்களென்று சொல்லப்படுவன சரியை , கிரியை முதலியன. ஆன்மா ஈடேற்றத்துக்குச் சிவ புண்ணியமே அவசியமானதாகும். தன்முனைப்பற்றுச் செய்கின்ற செயல்களே பயன் தருவதாகும். ஆலயத்தை மையமாக வைத்து வாழும் வாழ்வு சிறப்படைந்து செம்மை தருவதாகும்.

மனிதன் தோன்றிய காலந்தொட்டே சமயமும் இருந்து வருகின்றது. அது அவன் வாழ்வோடு பிணைந்திருக்கிறது. அதை அவன் உணர்ந்துவிட்டால் உண்மை, அமைதி ஆனந்தம் மூன்றையும் அடைந்து பெருமையடைவான். அடியார்கள் எல்லோரும் சமயத்தை வாழ்வின் முழுமையாகக் கொண்டனர்.

இராமகிருஷ்ணர் இறைவனைக்காட்டுவேன் என்று விவேகாநந்தருக்குக் கூறினார். அடியார்கள் இறைவனோடு கூடிநின்று அனுபவித்தார்கள், பேசினார்கள், உறவாடினார்கள் . தந்தது உன்றன்னைக் கொண்டது என்றனை என்கிறார் மாணிக்க வாசகர். ஞான உணர்வு அற்றவர்களுக்கு இது கட்டுக்கதையாக இருக்கலாம். தனக்குத்தானே நற்சான்று பகர்வது சமய அனுபவம். ஒருவனுடைய சொல் எண்ணம், செயல் மூன்றையும் தூய்மை யாக்குவது சமயம் . சமயம் என்பது உண்மை வாழ்க்கை நெறியாகும். இதனாலேயே அடியார்கள் சீர்திருத்த வாதிகளாகத் திகழ்ந்தனர்.

சைவ சமயம் மக்களிடையே பரவ இலட்சியப் பிரசாரம் தேவை. சமயா சாரியர் வகுத்த முறை இது. நால்வரும் ஊர் ஊராகத் திரிந்தனர்.

**மனிதர்காள் இங்கே வம்மொன்று சொல்லுவேன்**
**கனி தந்தாற் கனி உண்ணவும் வல்லிரோ**
**புனிதன் பொற்கழல் ஈசன் எனுங்கனி**
**இனிது சாலவும் ஏசற்றவர் கட்கே.**

என்று கூவி அழைத்தார் அப்பரடிகள். நடையறாப் பெருந்துறவும் உழவாரத்தின் படையறாத் திருக்கரமும் கொண்டவர் அவர். நாளும் இன்னிசையாற்றமிழ் பரப்பியவர் ஞானசம்பந்தர். சமயம் மக்களிடையே மலராவிட்டால் மனம் பாலைவனமாய்விடும். மண் பாலை வனமானால் விஞ்ஞானம் திருந்தும். மனம் பாலைவனமானால் மெய்ஞ்ஞானமே திருந்த வேண்டும். மதத்தைப் போற்றி வாழாதவன் அநாகரீகமான வாழ்வுக்குரியவனாய் விடுவான்.

எனவே சைவத்தின் மகிமையை யுணர்ந்து மானிடப் பிறவியின் மகத்துவத்தைப் போற்றி வாழ்வது தான் சைவ வாழ்வு. அங்கே தான் அகிம்சை, அறம், சத்தியம், அமைதி தூய்மை யாவும் இலங்கும் என்பதற்கையமில்லை.

# சுந்தரர் காட்டிய நெறி

வித்துவான் க. ந. வேலன்

சுந்தரர் அருளிய பாமாலை, பன்னிரு திருமுறைகளுள் ஏழாவதாக அமைந்துள்ளது.

இத்திருமுறையில் "பித்தா பிறைசூடி" என்னும் திருப்பதிகம் முதலாகத் "தானெனை முன்படைத்தான்" என்னும் திருப்பதிகம் ஈறாக நூறு திருப்பதிகங்கள் உள்ளன.

இறைவன் சுந்தரரை வலிய வந்து தடுத்தாட்கொண்ட கருணைத் திறத்தை நினைந்து நெஞ்சுருகிப் பாடிய பாமாலை, "பித்தா பிறைசூடி" என்னும் திருப்பதிகமாதலினால் அது இத்திருமுறையின் முதற்கண் அமைவதாயிற்று. கயிலைப் பெருமான் ஆணையின் வண்ணம் வெள்ளை யானையில் வந்து திருக்கயிலாய்த்துக்குச் சென்றார் என்பது வரலாறு. அப்பொழுது பாடிய திருப்பதிகம் "தானெனை முன்படைத்தான்" என்பதாகலின் அப்பதிகம் இந்த ஏழாம் திருமுறையின் இறுதிக் கண் வைக்கப்பெற்றுள்ளது.

சுந்தரருக்கு முன் வாழ்ந்த சம்பந்தர் நாவுக்கரசர் காலத்தில் இருந்த சமயப் பூசல்கள் அப்பெருமக்களால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன. தமிழகத்தில் அமைதி நிலவியது.

அக்காலத்தில் வாழ்ந்த சுந்தரர் பாடல்களில் சமணம், பௌத்தம் முதலிய சமயங்களைப் பற்றிய கண்டனங்களுக்கு இடம் ஏற்படவில்லை.

சுந்தரர் பாடல்களில் சம்பந்தரைப் போல உளங் குளிர்ந்த போதெல்லாம் உகந்து பாடும் உவகைத் திறத்தையும் நாவரசர் பதிகங்கள் போன்று தன்பிழை நினைந்து ஏசறும் இரங்கலுணர்வையும் ஒருங்கே காணலாம்.

இறைவனைத் தம் உயிர்த் தோழனாக எண்ணி அப்பெருமானுடன் அன்பில் நயந்து விளையாடியும் வன்கண்மையுடன் ஊடி இடித்துக் கூறியும் தமக்கு இன்றியமையா அனைத்தையும் இறைவன்பால் வேண்டிப் பெறும் உரிமை உடையவராகச் சுந்தரர் விளங்கினார். இந்தத் தோழமை நெறி, அடியார்களுள் வேறெவரிடத்தும் காணப்பெறாத ஒன்றாகும்.

சுந்தரரிடம் காணப்பெறும் மற்றொரு சிறந்தநெறி, தத்துவம் என்று கூடச் சொல்லக்கூடிய நெறி, சரியை முதலிய நால்வகை நெறிகளுள் போகநெறியில்

நின்று, பெற்ற சிற்றின்பமே பேரின்பமதாக முற்று வரும் தன்மையில் போகத்தை யோகமாக மாற்றி முத்திநெறிக்கு வழிகாட்டி முத்தி பெற்றதாகும்.

போகத்தை நுகர்ந்து கொண்டே யோகியாக, சீவன் முத்தராக வாழும் நெறியைச் சைவ சித்தாந்த நூலாகிய திருஉந்தியார், சுருக்கமாக

"பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் அங்கே
முற்ற வரும்பரிசு உந்தீபற"

எனக் கூறுகின்றது. இதனை விரித்துக் கூறும் சிவஞான சித்தியாரிலுள்ள திருவருத்தம் படித்துப் புரிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்கள் உலகில்
சருவ சங்க நிவிர்த்தி வந்த தபோதனர்கள் இவர்கள்
பாக்கியத்தைப் பகர்வது என் இம்மையிலே உயிரின்
பற்று அறுத்துப் பரத்தை அடை பராவு சிவர் அன்றோ
ஆக்குமுடி கவித்து அரசு ஆண்டவர்கள் அரிவையரோடு
அனுபவித்து அங்கு இருந்திடினும் அகப்பற்றற்று இருப்பர்
நோக்கி இது புரியாதோர் புறப்பற்று அற்றாலும்
நுழைவர் பிறப்பினில் வினைகள் நுங்கி பரவே.

சமய நெறிநிற்போரில் பலர் புறத்தில் பற்று அற்றவர்போல் காட்டி உலகை ஏமாற்றி அகப்பற்றோடு வாழ்வர். இதற்குக் காரணம் கூற வந்த வள்ளுவர்.

"வலஇல் நிலைமையால் வல்லுருவின் பெற்றும்
புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று"

எனக் கூறுவார். சனகன், சுந்தரர் போன்றோர் அரசு ஆண்டவர்கள், அரிவையரோடு அனுபவித்து இருந்தவர்கள், புறத்தே பற்று அறாதவர்போல் தோற்றம் கொண்டிருந்தாலும் அகப்பற்று அற்று வாழ்ந்தவர்கள்.

"செயலில் செயலின்மையும் செயலின்மையில் செயலும்" எனக் கீதை கூறும் இருநிலைகளுள் இவர்கள் செயலில் செயலின்மை கொண்டு வாழ்ந்த சீவன்முத்தர்கள். இந்நெறியில் வாழ்ந்து காட்டிய அடியார்களுள் சுந்தரர் ஒருவராவர். எல்லாம் அவன் செயலெனத் தற்போது மற்ற இவர்கள், "பொருந்து அணைமேல் வரும் பயன்" கூட அவனே என நாவரசர் கூறுவதுபோல தெளிந்த ஞானமுடையவர்கள் சுந்தரர்.

"மாழை ஒண்கண் பரவையைத் தந்து ஆண்டினை" எனவும் "சங்கியோடு எனைப்புணர்த்த தத்துவனை" எனவும் பரவை, சங்கிலியார் இருவர் இணைப்பும் இறைவனால் ஏற்பட்டவையே. அவை என் செயலல்ல எனக் கூறுகின்றார்.

தோழமை நெறியும் போகத்தை யோகமாக்கிய நெறியும் சுந்தரர் காட்டிய நெறியாகும்.

# நன்றி ஓம் நமச்சிவாய

புலவர் ஈழத்துச் சிவானந்தன் (ஆசிரியர் ஆலயமணி)

மனிதப்பிறப்பின் பயன் வாழ்க்கையைப் பயனுள்ளதாக்குவதே குறைவுடைய வாழ்க்கையை இறைவன் துணையுடன் முறை செய்து முழுமைப்படுத்தி நிறைவுடையதாக்க வேண்டும். இவற்றிற்கு சில பழக்கங்க்ள் தேவை. பழக்கங்களை வழக்கமாக்கி வாழ்க்கையில் உயர வேண்டும். இளம் பிராயத்திலிருந்தே பல நெறிமுறைகளை நாம் பயிற்சிக்குக் கொண்டு வர வேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? தொட்டில் பழக்கம் சுடுகாட்டு மட்டும் என்ற முது மொழிகள் நாளும் பொழுதும் நமமிடையே கேட்கின்றன. மனித வளர்ச்சியில் வாழ்க்கை முறைமை என்பது முக்கியமானதோர் தேவையாகும்.

கடவுளை வணங்க வேண்டும் பெரியோரை மதிக்க வேண்டும். தந்தை தாயாரைப் போற்ற வேண்டும். குருவை வழிபடவேண்டும் . மாதா, பிதா, குரு ஆகியோர் தெய்வத்திற்கு சமமானவர்கள். உறவுகளையும் நட்புகளையும் இறுக்கி இன்பங்காணவேண்டும். அன்பும் தொண்டும் பக்தியும் ஆக்கத்திற்குரியவை, என்ற புத்திமதிகள் பல வழிகளிலும் மனிதர்களுக்குப் புகட்டப்படுகின்றன. உரையாடல் உறவாடல் ஆகியவற்றை ஒரு கலையாக வளர்க்கும்போது இன் முகத்தோடும் விருப்பத்தோடும் கொடுக்க வேண்டும். ஒன்றைப் பெறுகின்ற போது மகிழ்வோடும் நன்றியுணர்வோடும் பெற்றுக் கொள்ளவேண்டும்.

பெற்றுகொண்டமைக்கு நன்றி பாராட்டவேண்டும். நன்றி என்பது வெறும் சொல்லலல்ல. ஆழ்ந்த நிறைவின் வெளிப்பாடு. நன்றி உணர்ச்சியே வாழ்க்கையின் அளவு கோல்களில் மிக நீளமானது. ஆழமானது. நன்றியை மறப்பது நல்லதல்ல. "நன்றி மறப்பது நன்றன்று. நன்றல்லது அன்றே மறப்பது நன்று" என்னும் "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்றமகற்கு" என்னும் குறள்களால் திருவள்ளுவர் நன்றியுணர்வின் வீக்க தூக்கங்களை துலாம் பரமாக விளக்கினார்.

நன்றி உணர்வே வாழ்வின் அத்திபாரமும் உத்தரவாதமுமாகும். எல்லா இனமக்களும் மகான்களும் நன்றி குறித்துக் கூறிய உண்மைகள் உலகை உய்விப்பன. ஆங்கில மொழியில் நன்றிக்குரிய THANKS என்னும் சொல் எங்கும் வியாபித்து ஒலிக்கிறது. ஒரு நாளில் அதிகமாக உச்சரிக்கப்படும் சொல் THANKS என்றே சொல்ல வேண்டும். எல்லா இனமக்களும் THANKS என்ற சொல்லை தாராளமாக உபேயாகிப்பதைக் காண்கிறோம். சிறுவர்களுக்கு THANKS சொலலவேண்டிய அவசியத்தை உணரவைப்பதில் பெற்றோர்பெரு முயற்சி எடுப்பர்.

நன்றி பாராட்டும் பழக்கத்தை எல்லாநிலைகளிலும் பயிற்சியாகக் கொண்ட நாம் கடவுள் விடயத்தில் ஏனோ கவனமெடுக்காமல் விட்டு விட்டோம். கடவுளுக்கு நன்றி சொல்லும் பழக்கம் நம்மிடையே இல்லை என்றே கூற வேண்டும். போற்றி சொல்லும் நாக்கு நன்றி சொல்லவில்லையே. நன்மையாக ஏதாவது நடந்து விட்டால் பேச்சுவாக்கில் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டுமென்று சொல்லுகிறோம். ஆனால் ஆண்டவன் சந்நிதியில் நன்றி சொல்லும் எண்ணம் ஏனோ நமக்கு வருவதில்லை.

தேவையானதைக் கேட்டுக் கும்பிடுகின்றோம். அது கிடைத்ததும் நன்றிசொல்ல எண்ணுகிறோமா? நமது ஆன்மீகச் செல்வர்களும் போற்றி ஓம் நமச்சிவாய என்று சொன்னார்களே தவிர நன்றி ஓம் நமச்சிவாய என்று சொன்னதாகத் தெரியவில்லை. அவர்கள் சொன்னவை நமக்கு கிடைக்கவில்லையோ அல்லது அவை பதியப்படவில்லையோ தெரியவில்லை. வேண்டியது கிடைத்ததும் தேடியது கிடைத்ததும் ஆனந்தக் கூத்து ஆடிய அளவிற்கு நன்றிக் கூத்து ஆடவில்லை. நமது கோயில் வழிபாட்டிலோ நன்றிப்பிரார்த்தனைகள் பாடல்களாகவோ, பண்களாகவோ சேர்க்கப்படவில்லை. வாழ்த்துப் பிரார்த்தனையோடு நிறைவு செய்து விடுகின்றோம். சிலர் நினைக்கின்றோம். அதனைச் செயல் வடிவம் ஆக்க வில்லை. நைவேத்தியங்கள் இறைவன் தந்ததை அவனுக்குத் திருப்பி அர்ப்பணிப்பது என்ற அர்த்தத்திலும், குளிர்த்தி, வைரவர் மடை முதலியன காப்பாற்றியதற்குக் காணிக்கை என்ற அர்த்தத்திலும் நடைபெறுகிறதே தவிர அவை நன்றிப்பிரசாதங்கள் என்ற உணர்வில் நடைபெறுவதாக இல்லை.

வழிபாட்டில் போற்றிக்குரிய இடத்திலும் மேலாக நன்றிக் குரிய இடமும் நேரமும் ஒதுக்கப்பட வேண்டும். போற்றி, போற்றி, போற்றி என்று பாடும் நாக்கு நன்றி, நன்றி, நன்றி என்றும் பாடவும் வேண்டும் அன்பு நெறி, அறநெறி, பக்திநெறி, பாடல் நெறி, தொண்டு நெறி போன்று நம்மிடையே நன்றி நெறியும் வளரவழிபாட்டில் வாய்ப்பளிப்போம. சைவ நாற்பாதங்களாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம், போன்று நன்றியில் நினைத்தல், சொல்லுதல், செய்தல் என்னும் முப்பாதங்களை நடைமுறையாக்குவோம்.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவாபோற்றி.

என்று மாணிக்கவாசக சுவாமிகள் பாடியது போன்று, எங்கும் நிறைந்தவனே நன்றி எந்நாட்டவர்க்கும் இறைவா நன்றி போன்ற நன்றிக்குரல்கள் நாளும் நம்மிடையே எழவேண்டும். போற்றி ஓம் நமச்சிவாய என்று மாணிக்கவாசகப் பெருமான் சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவது போன்று நன்றி ஓம் நமச்சிவாய என்று பொருளுணர்ந்து சொல்லிச் சொல்லி வணங்கும் வழக்கம் வாழ்க்கைக்குரிய பிரசாதமாகும்.

நமது நாயன்மார்கள் இறைவனோடு இணைந்து இன்பங்கண்டவர்கள் வீடும் வேண்டாதவிறலினர். சிவபெருமானைப்பார்த்து கேள்விகள் கேட்டவர்கள். போட்டிபோட்டவர்கள்.அன்பின் மிகுதியால் திட்டியும் பார்த்தவர்கள் . அவர்கள் நிலைவேறு நமது நிலைவேறு. அவர்கள் நிலை பற்றி சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்திலே கூறியமை நினைக்கத்தக்கது.

**"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்**
**ஓடும்செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்**
**கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"**
– என்பர்.

வீடும் வேண்டா விறல் நமக்குச் சித்திக்காத ஒன்று நமக்கு வாழ்வும் வேண்டும். வளமும் வேண்டும் வீடும் வேண்டும் . இவை மட்டுமா? வேண்டும் பரிசில்களும் எத்தனையோ, ஆயின் நாம் நன்றிப்பிராத்தனைக்குரிய நரர்கள் மனிதர்கள் என்பது முக்காலும் உண்மையானதே.

திருக்கோயில்களில் வாழ்த்து வணக்கத்திற்குப் பின்பு நன்றி வணக்கம் இன்றியமையாத இன்னிசைத்தமிழாய் எழுந்து ஒலிக்க வேண்டும். பலர் கூடிவாயால் நன்றி கூறி வழிபடும் போது நன்றி உணர்வின் மகிமை இரட்டிப்பாகி வாழ்க்கைக்குப் பயன்படும். அந்தந்த தெய்வத்திற்குரிய நன்றிப் பாராயணங்களைச் செய்வோமாக.

# சேக்கிழார் போற்றும் சைவநெறி

## இலக்கிய மணி மாயூரம் V. தண்டபாணி

அன்பே சிவமாவது என்றார் திருமூலர் பெரிய புராணத்தை தெய்வ சேக்கிழார் அருளியபோது தில்லையிலுள்ள கூத்தபிரான் உலகெல்லாம் என்று அடியெடுத்துக் கொடுத்தார். தமிழனுக்கு எப்போதும் பரந்த உள்ளம். தமிழ்காப்பியங்களின் ஆரம்பம் உலகு என்றுதான் தொடங்கும். " உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்" என்றான் கம்பன் இராமாயணம் எழுதியபோது." உலகம் உவப்பவலன் ஏர்பு திரிதரு" என்றார் நக்கீரர் திருமுருகாற்றுப்படையில்.

தமிழர் சமயமான சைவசமயத்தின் அடிப்படை தத்துவம் அன்பே ஆகும். சைவசமயம் அன்பினை வளர்க்கும் சமயம் சைவசமய நெறி அன்பு நெறி. சாதிவேறுபாடு இல்லாத நெறி சைவசமய நெறி. சேக்கிழார் பெருமான் தன்பெரிய புராணத்தில் அறிமுகம் செய்யும் பாத்திரங்கள் அன்பினை பொழியும் தொண்டு உள்ளங் கொண்ட பாத்திரங்கள்.

பிறப்பினால் பிராமணராகவும், சத்திரியராகவும், வைசியராகவும், வேளாளராகவும், இடையராகவும், குயவராகவும், பாணராகவும், பரதவராகவும், வேடராகவும், சான்றாராகவும், சாலியராகவும், செக்கராகவும், ஏகலையராகவும், புலயராகவும் வேறுசிலர் என்ன மரபு என்று அறியாதவராகவும் இருந்தாலும் சேக்கிழார் அறிமுகம் செய்யும் அத்தனை அடியார்களும், (நாயன்மார்களும்) உள்ளத்தில் அனைவரும் ஒரே வகையினைச் சேர்ந்தவர்களே.

இதற்கு முந்திய பிறவிகளில் புழுவாய், பூச்சியாய், மரமாகி, பல்விருகமாகிப், பறவையாய், பாம்பாகிய இழிபிறவிகளிலும் செய்த புண்ணியத்தின் விளைவாக இறைவனால் அருளப்பட்ட மனிதவாழ்க்கையை சிவபெருமானுக்கும், சிவனடியார்களுக்கும் தொண்டு செய்து சிவனடியைச் சேர வேண்டும் என்ற சைவநெறியைக் கடைப் பிடிப்பவர்கள் அவர்கள் நிலையில்லா மண்ணுலக வாழ்விலுள்ள பொருட்களின் மேல் ஆசை கொள்ளமாட்டார்கள்.

நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும், சிவனையும், சிவனடியார்களையுமே நினைப் பவர்கள் அந்தச் சைநெறிபற்றி ஒழுகும் சான்றோர்கள்.

அவர்கள் ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்கள். சிவபெருமானைக் கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டாதவர்கள். அவர்கள் பான்மையை அழகாக விவரிக்கிறார் சேக்கிழார்.

" கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும்
வேண்டா விறலின் விளங்கினார்."

ஞானசம்பந்தரும் அப்பரும் சுந்தரரும் சைவநெறியை பரப்ப ஊர் ஊராகச் சென்று சிவபெருமானைத் துதித்து தேவார பாடல்களை அருளினார்கள்.

ஏனைய நாயன்மார்கள் சிவனடியார் களுக்குத் தொண்டு செய்வதே வாழ்க்கை நெறியாகக் கொண்டவர்கள்.

சைவநெறியாம் அன்புவழியில் தொண்டு செய்த அந்த நாயன்மார்களை சிவபெருமான் சோதனை செய்து ஆட்கொண்ட கதைகள்தான் பெரிய புராணக் கதைகள்.

மண்பானைகள் செய்யும் வேட்கோவர் குலமாம் குயவர் குலத்தில் தோன்றியவர் திருநீலகண்ட நாயனார். சிவபெருமான் திருவடிகளை வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கவர். அடியார்களுக்கு ஓடு அளித்து வாழும் சைவநெறியில் நின்ற பண்பாளர். அவருடைய மனைவி அருந்ததி போன்ற

கற்புடையவள்.

ஒருநாள் அவர் இன்பத்துறையில் ஆர்வமுற்று ஒரு பரத்தை இல்லம் சென்று மீண்டார். அது அறிந்து அவரது மனைவி அவர்பால் ஊடல் கொண்டு கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைக் குறைவறச் செய்து, உடலுறவினை மட்டும் தவிர்த்து வாழ்ந்தார். மனைவிக்குச் சமாதானங்கள் சொல்லித் தீண்ட முயன்ற போது "எமைத் தீண்டுவீராகில் திருநீலகண்டம்" என்றாள். அதுமுதற்கொண்டு ஊரார் கண்களுக்குக் கணவனும் மனைவியுமாக வாழ்ந்தாலும் இல்லற இன்ப உறவு இன்றி வாழ்ந்தார்கள். அவரைச் சோதிக்கவும், அவரின் சைவத் தொண்டினை உலகமறியச் செய்யவும் நடராசபெருமான் சிவயோகி வடிவில் அவர் முன் தோன்றி "அன்ப! இது என்னுடைய விலைமதிக்கவொண்ணாத திருவோடு. இதைப் பத்திரமாக ஓரிடத்தில் வைத்திரு. பிறகு ஒருநாள் உன்னிடமிருந்து இதை வாங்கிக் கொள்வேன்" என்று சொல்லிப் போனார்.

பல நாட்கள் கழித்து வந்து "அன்பனே! என் திருவோட்டைக் கொண்டுவா" என்றார். நீலகண்டர் வைத்திருந்த திருவோடு மாயமாய் மறைந்து விட்டது. எல்லாம் சிவ பெருமானின் லீலை "ஐயா! தங்கள் திருவோடு வைத்திருந்த இடத்தில் இப்போது காணவில்லை. அதைவிட சிறந்த திருவோடு தருகிறேன் என்றார் திருநீலகண்டர். அதற்கு என் திருவோடுதான் எனக்கு வேண்டும். நீ பொன்னோடு கொடுத்தாலும் ஒப்ப மாட்டேன் என்றார் சிவயோகி.

நீலகண்டர் செய்வதறியாது திகைத்தார். "ஐயா உங்கள் திருவோட்டைக் காணவில்லை வேறு கொடுத்தாலும் வாங்க மறுத்தால் யான் யாது செய்வேன் என்று வருந்தினார். கோபத்தோடு சிவயோகி " என்னுடைய திரு வோட்டை வெளவிக் கொண்டு நீ வாது செய்கிறாய். என் திருவோட்டை வாங்காமல் போகேன் " என்றார்.

" நான் உங்கள் திருவோட்டை வெளவி னேனில்லை இதை எப்படி உங்களுக்கு உணர்த்துவேன் " என்றார் நீல கண்டர்.

" நீ சொல்வது உண்மையானால் உன் மகனைப் பற்றி திருக்குளத்தில் மூழ்கி சத்தியம் செய்து தர வேண்டும்" என்றார் சிவயோகி. ஐயா எனக்குப் புதல்வன் இல்லையே" என்ற வருந்திச் சொன்னார் நீலகண்டர். " புதல்வன் இலையென்றால் உன் மனைவியின் கரம்பற்றிச் சத்தியம் செய்து கொடு." என்றார் சிவயோகி. அப்படிச் செய்வதற்கு எங்க ளிடையில் ஒரு சூள் உண்டு என்றார் நீலகண்டர்.

அத்தோடு விட்டாரா சிவயோகி. தில்லை வாழ் அந்தணர்கள் முன் தன் மனைவியின் கரம்பற்றி மூழ்க முடியாமைக்கு உரிய காரணத்தை ஊர் அறியச் சொல்ல வைத்து அவர்களுடைய முதுமை போக்கி இளமை அருளி ஐம்புலன்களை வென்றவர்களின் புகழை ஊரறியச் செய்தார் சிவப்பரம் பொருள்.

இதுபோன்று சிவனடியே சிந்தித்து சிவனடியார்களுக்குத் தொண்டு செய்து வாழ்ந்த சைவநெறிச் சான்றோர்களின் பெருமை யினை அழகுபடச் சொல்லுவார் சேக்கிழார்.

இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு என்ற இலக்கணத்திற்கு இலக் கியமாக வாழ்ந்தவர்கள் பெரிய புராணத்தில் நாம் காணும் சைவநெறிபோற்றும் சீலர்கள்.

கொட்டும் மழையில் நள்ளிரவில் வயலில் அன்று காலை விதைத்த நெல்லைப் பொறுக்கி வாரிக்கொண்டு வந்து சிவனடி யாருக்கு அமுது செய்து வித்த இளையான் குடிமாறனார்.

சிவனடியார் உருவில் வந்தவரிடம் யான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டபோது உன் மனைவி வேண்டும் என்று அவர் சொன்ன போது கலங்காமல் அனுப்பிவைத்த இயற்பகையார்.

சிவனடியார் உருவில் வந்து தன்னை வாளை உருவிக் கொலை செய்ய முயன்ற பகைவன் முத்தநாதனை " மெய்தவமே வேடமாய மெய்ப்பொருள் என்று தொழுத மெய்ப்பொருள் நாயனார்.

சிவனடியார்களுக்கு அமுதும் அளித்து கந்தை, உடை, கோவணம் அளித்த அமர்நீதியார்.

சிவனடியார்களுக்குத் தீங்கு செய்யும் கொடியவர்களைத் தண்டிக்கத் துடிக்கும் எறிபத்தர்.

பகையா வந்து தம் முன்நிற்பவன் நீறு பூசிய சைவன் என்றால் ஆயுதங்களைத் துறந்து சைவவடிவு கொண்ட பகைவனை நோக்கித் தொழும் ஏனாதிநாதர்.

வேடர்குலத்தில் தோன்றி வேட்டைக்குப் போன இடத்தில் காளத்தி ஈசுவரனைக் கண்டு, அனல்பட்ட மெழுகாக உருகி தன் கண்களைத் தோண்டி அப்ப வல்ல கண்ணப்பன்.

தன் மனைவியின் திருமாங்கல்யத்தையும் விற்று குங்கிலியத்தொண்டு செய்வதில் பெருமகிழ்வு கொள்ளும் குங்கிலியக் கலையர்.

மணக்கோலம் கொண்டிருந்த தன்மகளின் கூந்தலை மகிழ்வோடு கொய்து, கேட்பது சிவனடியார் என்பதால் வந்த சிவபெருமானிடம்கொடுத்த மானக்கஞ்சாறர்.

சிவனடியார்களுக்கு அமுது செய்விக்க முடியவில்லையென்றால் உயிரை விடுவது மேல் என்ற உள்ளம் கொண்ட அரிவொட்டாய நாயனார்.

வேய்ங்குழலில் ஐந்தெழுத்தை வாசித்து சிவப்பரம்பொருளை மகிழ்வித்த ஆனாய நாயனார்.

தூயநெறியாம் சைவநெறியில் வாழ்ந்த முருகநாயனார். உருத்திரபசுபதி நாயனார். திருநாளைப்போவார், திருக்குறிப்புத் தொண்டர். சண்டேசுரநாயனார், குலச் சிறையார், பெருமிழலைக் குறும்பர், காரைக்காலம்மையார், அப்பூதியடிகள், திருநீலநக்கர், நமிநந்தி அடிகள், ஏயர்கோன் கலிக்காமர், தண்டியடிகள், மூர்க்க நாயனார், சோமாசி மாறன், சாக்கிய நாயனார், சிறப்புலியார், சிறுத்தொண்டர், கழற்றறிவார், கணநாத நாயனார், கூற்றுவநாயனார், பொய்யடிமை இல்லாத புலவர், புகழ்ச்சோழர், நரசிங்க முனையர், அதிபத்ர், கலிக்கம்பர், கலியநாயனார், சக்திநாயனார், ஐயடிகள் காடவர்கோன், கணம்புல்லர், காரி நாயனார், நின்றசீர்நெடுமாறர், வாயிலார், முனையடுவார், கழற்சிங்கர், இடஞ்கழி நாயனார், செருத்துணை நாயனார், கோட்புலி நாயனார், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், பூசலார், மங்கையர்க்கரசியார், நேசநாயனார், கோச்செங்கட்சோழர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் இவர்களெல்லாம் சைவ நெறி போற்றி வாழ்ந்த உத்தமர்கள் என்பதை சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் அழகாக எடுத்து இயம்பியுள்ளார்.

# ஆனைமுகத்தானும் அறுபத்திநான்கு கலைகளும

ஆகம பிரவீணர்
சிவாச்சாரியமணி
*சிவஸ்ரீ. கு. குகேஸ்வரகுருக்கள்.*

திருவாக்கும் செய் கருமம் கைகூடும் செஞ்சொல் பெருவாக்கும் பீடும் பெரு க்கும் உருவாக்கும் ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக் காதலால் கூப்புவர் தம்கை"

என்பது திருமுறை பெருவாக்கு. இதை உணர்ந்து பன்னெடுங்காலமாக நீர் கொழும்பில் வாழ் அன்பும் அறிவும் சீலமும் மிக்க அன்பர்கள் சித்தி விநாயகர் பாதம் பணிந்து பல சமய கலாசார கலை, இசை நாடக சம்பந்தமான நிகழ்ச்சி களை கடந்த 64 வருடங்களாக இந்து இளைஞர் மன்றம் என்ற அமைப்பினூடாக நடத்திவருகின்றனர். இவ் வேளையிலே எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து 64 கலைகளின் சிறப்புக்களை ஆராய்வோம்.

1. (கீதம்) வாய்ப்பாட்டு
2. (வாத்தியம்) வீணை, புல்லாங்குழல், கோட்டு வாத்தியம் மிருதங்கம் முதலானவற்றை வாசித்தல்
3. (ந்ருத்யம்) பெண்களின் அபிநயம்
4. (நாட்டியம்) –ஆண்களின் அபிநயம்
5. (ஆலேக்யம்) தெய்வம் முதலிய உருவங்களை எழுதல்.
6. ( விஷேச கச்சேத்யம் ) யானை, மாடு முதலிய விலங்குகளின் கொம்புகளிலும் மரத்திலும் உருவங்களை செதுக்கி எடுத்தல் .
7. ( தண்டுல, குசும, பலி, விகார) அரிசி பூக்கள் இவைகளால் பலி பூசை செய்வதில் பல விதமான விநோத மான பல முறைகள் செய்தல்
8. ( புஸ்பாஸ், தரணம் ) பல நிறமுள்ள மலர்களைப் பலவிதமான முறைகளில் அமைத்து கோலமிடுதல்.
9. ( தசரு, வசநாங்க, ராகா) உதடுகளுக்கு பலவிதமான வர்ணக் குழம்புகளால் அழகு படுத்துதல்.
10. ( மணி, பூமிகா, கமம்) இரத்தினங்களை இழைத்து மாளிகையை நிர்மித்தல்.
11. (சயன ரஸ்நம்) எண்ணிறந்த முறைகளில் படுப்பதற்கான தந்தம், மரம் இழைகளாலான கட்டில்கள் கோரை முதலிய புற்களாலான பாய்வகைகள் இலவம் பஞ்சு அடைந்த திண்டு தலையணை மெத்தை மேல்விரிப்பு முதலியவற்றைச் செய்தல்.
12. (உலக, வாத்ய முதக காத) ஜலதரங்க வாத்தியம் வாசித்தல் உயர்ந்த இடத்தி லிருந்து ஆற்றிலோ குளத்திலோ குதித்து அங்குள்ள தண்ணீரை உயரே கிளம்பும் படி செய்தல்.
13. (சித்ரயோகா) பல வகையான பொருள் நிறைந்த கடல் , காடு மலை, நகரம் கடை வீதி சபை போன்ற நாடகத்திற்குத் தேவையான காட்சிகளை அது போலவே துணிகளில் சித்திரமாக வரைதல்
14. (மால்யக்ர , தணவிகல்பா) விதவிதமான நிறமும் மணமும் உள்ள மலர்களைக் கொண்டு எண்ணிறந்த வடிவமுள்ள மாலைகளைக் கட்டுதல்.

15. (சேகரா, பீட, ஜோஜகமும்) தலைக்கு அழகு செய்ய முடிகளையும் அதனில் சேர்க்ப்படும் ஆபரணங்களையும் மலர்களையும் பல்வேறான முறைகளில் அமைத்து அலங்கரித்தல்.

16. (நேபத்ய, யோகா) நாடகங்களில் அரசன், மந்திரி விதூஷகன் ராணி முனிவர் முதலிய பாத்திரங்களுக்குத் தகுந்த ஆடை, அணி முதலியவற்றால் வேஷங்களைப்போட்டு விடுதல்.

17. (கர்ண, பத்ர பங்கா) பலவிதமுள்ள அழகுள்ள ஆபரணங்களால் காதுகளை அழகு படுத்துதல்.

18. (சுகந்த, யுத்தி) பச்சை கற்பூரம், குங்குமப்பூ, அத்தர், ஜவ்வாது முதலிய வாசனைப் பொருட்களுடன் மணமுள்ள சந்தனத்தை தயாரித்தல்.

19. ( பூஷண, யோஜநம்) உடலுக்கும் உறுப்புக்களுக்கும் ஏற்றபடி நகைகளை அணிவித்து அழகு செய்தல் .

20. (ஐந்திர ஜாலம்) கட்டாந் தரையில் நொடிப் பொழுதில் மா மரத்தைப் பழங்களுடன் தோற்றுவித்தல் ஒரு மனிதனை பெட்டியில் பூட்டி வைத்துப் பின் வெளியிடத்தில் அவனைத் தருவித்தல் போன்ற உலக வழக்கில் பொருத்தமில்லாத சம்பவங்களை நிகழ்த்தி பார்ப்பவர்களை ஆச்சரியப் படும்படி செய்தல்.

21. (கௌ, துமார யோகா) மணந்து கொண்ட இளம் பெண்களுடன் இன்பமுற்று இருக்க கேளிக்கை புரியும் முறைகள்.

22. ( ஹஸ்த லாகவம்) கம்புச் சண்டை புரிவதில் நூற்றுக் கணக்கான எதிரி களையும் அணுக முடியாதபடி கையால் கம்பைச் சுழலும்படி செய்வதற்கான முறைகள் .

23. ( சித்ரசாகா, பூபஷ, விகாரக்ரியா) பலவிதமான நற்சுவையுள்ள காய்கறி பணியாரம் அன்னவகைகளைத் தயாரிக்கும் முறை.

24. ( பாகை, ரஸராக, சவயோஜனம்) சர்க்கரை எலுமிச்சம்பழம் , சுக்கு, தண்ணீர் இவைகளைச் சேர்ந்த பானம் பூக்களில் இருந்தும் சுவையும் நிறமும் உள்ள சுவை நீர்களைத் தயாரித்தல்.

25. (சூமசீ, வாயகர்ம ) அழகுள்ள மெல்லிய உடைகளை ஊசியால் தைக்கும் முறைகள்.

26. ( சூத்ர க்ரீபா ) உயர்ந்த இடத்தில் கட்டப்பட்ட கயிற்றின் மீது நடப்பது , ஓடுவது முதலிய கயிற்றோட்டம்

27. (வீணா, டமருக, வாத்யாணி) உடுக்கை முதலிய வாத்தியங்களை முறைப்படி வாசித்தல்.

28. ( பர ஹேலிகா ) முரண்பாடுள்ள ஒரு பொருளை முதலில் அவையினர் முன்னிலையில் தோற்று வித்து, பிறகு நன்கு ஆழ்ந்த சிந்தனையின் பயனாய் அதற்கு பொருத்தம் உள்ள பொருளையும் அறிவிக்கும் 16 விதமான இலக்கியங்களை அவையில் வெளியிடுதல்.

29. ( பிரதிமா, லாப) பதுமைகளைப் பேச வைப்பது

30. (துர்வசக , யோகா) வசை மொழிகளை பல முறைகளில் வசைப்படுத்தி அவையில் அடுக்கடுக்காக வழங்குதல்.

31. ( புஸ்தக வசரும்) தடையின்றி பிழையின்றி நடுத்தரமான குரலில் வேகமின்றி தாமதமின்றி அவையோர்கேட்டுபொருளை புரிந்து கொள்ளும்படி நூல்களைப் படித்தல்.

32. ( நாடக ஆக்யாயிகா தர்சனம்) கண்டு களிக்கத் தகுந்த நாடகங்கள் எனப்படும் பாடல் வகையினையும் கேட்டு ரசிக்கும் வகையிலுள்ள கடுமையான வார்த்தைகளிலும் உள்ள குறைகளை சுட்டிக்காண்பித்தல்.

33. ( காவ்ய , சமஸ்யா, பூரணம் ) கவிகளுடைய கூட்டத்தில் ஒருவர் ஒரு செய்யுளின் மூன்று அடிகளைப் பாட மற்றவர் அதற்குப் பொருத்தமான

நான்காவது அடியைப்பாடி செய்யுளை முழுமையாக்குதல் .

34. (பட்டிகா , வேத்ரா, பாண விகலைப்பா) பிரம்புகளாலே பீடங்கள் நான்கு கால் ஆறுகால் இருக்கைகள் கட்டில்கள், வில் அம்பு முதலியவற்றைச் செய்தல்.

35. (தர்க்க கர்மானி) ஒன்றினைப் பார்த்து யூகத்தால் வேறுபல காரியங்களைச் செய்தல்.

36. ( வாஸ்து ,வித்தியா) பல வகையான இல்லங்கள் மாளிகைகள் கோவில்களை நிர்மாணிக்கும் முறை அறிதல்.

37. ( தக்ஷணம்) மர வேலைகள் புரிதல்.

38. ( ரூப்ய ,ரத்ரூ ) வெள்ளி, தங்கம் ரத்தினங்களில் குறைகளை அறிதல்.

39. ( தாது , வாத ) இரும்பு முதலான லோஹங்களை தங்கம் ஆக்குதல்.

40. ( மணி,ராக ஞானம் ) ரத்தினங்களில் நீரோட்டத்தை உணர்ந்து நல்லது கெட்டது கூறல்.

41. (ஆகர ஞானம்) புதையல் இருக் குமிடத்தை கண்டு பிடித்தல்.

42. (விரக்ஷ, ஆயுர் வேதா) மரங்களில் இனோபதம் வயது வளர்ச்சிபற்றி அறிதல்.

43.(மேஷ, குக் கட லாவயுத்தவிதி) ஆடுகளையும் , கோழிகளையும் போர் புரியும் படி செய்வதும் அவைகளைப் கொல்வதற்கான முறை அறிதலும்0

44.( சுக லாலிகானம்) ஆண் பெண் மனிதர்களைப் போன்று வைக்கும் முறை.

45. ( உத் ஸாதனம் ) கிணறு , குளம் வெட்டுவதற்கு நீர் நிலைகளைக் கண்டறிதல்.

46. (கேச மார்ஜ்ஜ கௌசலம்) பெண்க ளுடைய தலை முடிகளை வளர்த்தல் , தைலம் தேய்த்தல் அதை ப்போக்க குளிப்பித்தல் வாசனைப் புகை போட்டு உலர்த்துதல் அழகாகப் பின்னல் முடியிடுதல் சம்பந்தமான அறிவு .

47. (அக்ஷர, முஷ்டிகா, கதனம்) ஏதேனும் ஒரு எழுத்தைக் கூறி கைப் பிடியில் உள்ளப் பொருளை கூறி அதனைக் கண்டு பிடித்துக் கூறல். கைப்பிடிக்குள் உள்ள தானிய மணிகளை எத்தனை என்று கண்டு பிடித்துக் கூறல்.

48.(மிலேச்சித, குயுக்தி, விகல்யா) பகுத்தறிவு பேசுகிறவர்களின் குதர்க்க மொழிகளின் பிரிவுகளை உணர்ந்து, தகுந்த பதில்களால் அவைகளை, திருப்பி உரைப்பது.

49. (தேச, பாஷா, ஞானம்) பல நாட்டு மொழிகளை உணர்தல்

50.(புஷ்ப, சகடிகா, நிர்மிதிஞானம்) மலர்களைக் கொண்டு சிறிய வண்டி கள், தொட்டிகள், ஊஞ்சல் பல்லக்கு குடைகள் ஆகியன அழகோடு அமைத்தல்.

51. (யந்திர, மாத்ருகா, தாரண மாத்ருகா) விவசாயத்திற்கும் குடிப்பதற்கும் வேண்டிய இரும்பாலான குழல்களை இயந்திரங்களை பல வகையில் படைத்தல்.

52. (சம்வாஸ்யம்) நொடிப் பொழுதில் தன்னைச் சுற்றி நடக்கின்ற வெவ்வேறு நிகழ்ச்சிகளைப் பாராமலே நினைவுபடுத்திக் கூறி அதிசய ப்படுத்துதல்.

53. (மானசி காவ்யக்ரியா ) நிமிஷத்திற்கும் குறைவான நேரத்தில் ஒரு இயந்திரப் பொறியை இயக்கும் ஆற்றல்.

54.(அபிதான, கோச) எண்ணிறந்த அகராதிகள் பற்றிய அறிவு.

55.(சந்தோ, ஞானம்) பல விதமான பாடல்களைப் பற்றிய அறிவு.

56. (கிரியா, விகல்பா) ஒரே நேரத்தில் உடல் மூலமாகவும் உள் மனம் மூலமா கவும் கடினமான காரியங்களைச் செய்து முடித்தல்.

57.(சலித்த, யோகா) ஒரே எழுத்தைப் பயன் படுத்தி இயற்றிய பாடல் தேர், பாம்பு, குடம் அரவிந்தம் முதலி யவற்றைக் குறிக்கும் பாடல்களில் உள்ள அதே கருத்தினை வேறு விஷயத்தைக் குறிக்கும்படி மாற்றிக் காட்டி அதிசயப்படுத்துதல

58. (வஸ்திர, கோபனுனி) மிகவும் பெரிய காட்சிகளையும் துணியினுல் நன்கு மறைத்து மக்களை வியப்பில் மூழ்கடித்தல்.

59.(த்யுத விஷேசம்) கொள்ளை மற்றும் சூது ஆடுவது பற்றிய அறிவு.

கொண்டு நகர்த்துவது.

61. (பால க்ரீடன் கானி) குழந்தைகளின் விளையாட்டு வகைகள் பற்றிய அறிவு.

62. (லவ, நாயகி,வித்யா) பகைவருடைய செய்கைகளை எதிர்த்து முறியடித்தல்.

63. (வை, ஜயகி, வித்யா) எதிரிகளால் ஏற்படுத்தப்படும் சகலவித இடையூறு களைக்களைந்து ஜயம் ஏற்படுத்தும் திறன்.

64.(வைதாயகீ வித்யா) அரசர்களைப் போற்றிப் பாடல் புனையும் ஆற்றல்.

இத்தகைய 64 கலைகளுக்கும் ஸ்ரீ விநாயகப்பெருமான் இருப்பிடமானவர். எனவே இக்கலாசார மண்டபமும் அவ ரருகில் அமைந்தமையால் அவர் தாள் பணிந்து அனைத்து மக்களும் கலை, கலாச்சாரங்களைப் பேணி வாழ்வில் வெற்றியீட்ட வேண்டுமென வாழ்த்து கின்றேன். fl

## வெள்ளமும் ஆண்டவனும்

ஆற்றுவெள்ளம் மழைத்தண்ணீர் இவைகளுக்கு இயல்பாக ஒரு குணமுண்டு பொதுவாக அவைகள் யாவும் பள்ளத்தில் தான் பாயும். மேடுகளில் ஏறுவது கடினம். பெரும் மேடுகளாக இருந்தால் கண்டிப்பாக ஏறவே ஏறாது. இறைவனும் இதைப் போலவே இயங்குகிறான். அறிவாலும் சாதி இனங்களாலும் குறைவுபட்டவர்களிடம் இறைவன் இயல்பாகவே செல்வான். என்னிடம் தேவைக்கு மேல் பணம் இருக்கிறது நான் பிறப்பால் உயர்ந்த ஜாதிக்காரன் என்பவைகள் மமதையின் பாற்பட்டவை. இது பெரும் மேடு. மேட்டில் தண்ணீர் ஏறாது. மார்பு நிமிர்ந்த மனிதர்களிடமும் தலைகனத்த பாறை மனத்தாரிடமும் இறைவன் எளிதில் செல்லமாட்டான்.

நீ படித்தவன் என்றால் அதை தெய்வம் முன்பு காட்டாதே. நீ பணக் காரன் என்றால் அதை ஆண்டவன் முன்பு நீட்டாதே. நீ உயர் ஜாதிக்காரன் என்றால் அதை ஆண்டவன் முன் ஜோடிக்காதே. இவைகளை மறந்து விடு. முன்பு செய்த புண்ணியத்தால் இவைகள் உனக்கு வந்தவை. இவைகளைத் தந்தவன் முன்பு இறுமாப்புக் கொண்டு சென்றால் மீண்டும் திரும்பும் போது இவைகள் உன்னிடம் இருக்காது. பணிவாக நட. பலன் உண்டு. பணிவு என்ற பள்ளமாக மனதை மாற்று. பண்பு என்ற குழியாக இதயத்தை ஏற்று. இறைவனின் அருள் வெள்ளம் பள்ளத்தின் வழியாக ஓடி குழியிலே தங்கும். ஆம் மனச் சிந்தனையில் ஸ்ரீ துர்க்கை சித்தர் கலந்து இறைவன் உன் இதயத்தில் தங்குவான்.

# கோயிற் கலைகள்

பேராசியர் அ. சண்முகதாஸ்.

தமிழருடைய வரலாற்றை நோக்குமிடத்து, அவர்கள் வாழ்விலே கோயில் ஒரு முக்கிய இடம் வகித்து வந்திருப்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது. இக் கோயில்கள் அவர்களுக்கு ஆன்மீக பலத்தையும் தெய்வீக உணர்வினையும் ஊட்டுவனவாக மட்டு மன்றி அவர்கள் பண்பாட்டினைப் புலப்படுத்துவதுடன் அதனைப்பேணிப் பாதுகாக்கும் நிறுவனங்களாகவும் அமைந்துள்ளன. சிற்பம், ஓவியம், கட்டிடம் ஆகிய கலைகளின் பயனாகவும், இசை, நடனம், நாடகம் ஆகிய கலைகளை வளர்ப்பனவாகவும் கோயில்கள் திகழ்ந்தன . கோயில்கள் வளர்த்த கலைகளையே இங்கு "கோயிற்கலைகள்" என்னுந் தொடர் மூலமாகக் குறிப்பிடுகின்றோம்.

தமிழ் நாட்டில் எவ்வாறு கோயில்கள் தமிழர் சமுதாயத்துடன் நெருங்கிய தொடர்புடையனவாக ஆயிற்றோ அதேபோன்று, ஈழநாட்டிலும் கோயில்கள் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. சோழப் பெருமன்னர் காலத்திலே கங்காநதியும் கடாரமும் மாத்திரமன்றி, ஈழநாடு உட்படப்பல நாடுகள் அப்பெருமன்னர்களின் பேரரசிற்குட்படலாயின. சோழர் ஈழநாட்டினை வெற்றி கொண்ட பொழுது, நாட்டின் தலைநகரம் அனுராதபுரத்தி லிருந்து பொலநறுவைக்கு மாற்றப்பட்டு அது "ஜநநாதமங்கலம் " எனப்பெயர் பெறலாயிற்று. தென்னகத்திலே "பெரிய கோயில்" உட்படப் பல கோயில்களைக் கட்டிப்புகழடைந்த சோழப் பெரு மன்னனாகிய முதலாம் இராஜராஜன் பொலநறுவையிலும் அழகிய சிறிய சிவாலயம் ஒன்றினைக் கட்டினான் என வரலாறு கூறுகின்றது. மாதோட்டம் என இன்று அழைக்கப்படும் மகாதித்தத்தில் சோழப்பேரரசின் அதிகாரிகளுள் ஒரு வனாகிய தாழிகுமரன் என்பவனால் இன்னொரு கோயில் கட்டப்பட்டதென அறிகிறோம். 2. தென்னகத்துக் கோயில்கள் பெற்றிருந்த சிறப்பு நிலைபற்றி வரலாற்றறிஞர் நீலகண்ட சாஸ்திரியார் குறிப்பிடும் கூற்றுக்கள் சிலவற்றைப் பலரும் உதாரணங்களாக எடுத்தா ளுவதுண்டு அத்தகைய கூற்றுக்களுள் ஒன்று :

> "As landholder, employer, and consumer of goods and services, as bank, school and museum , as hospital and theatre, in short, as a nucleus which gathered round itself all that was best in the arts of civilised existence and regulated them with the humaneness born of the spirit of Dharma the mediaeval Indian temple has few parallels in the annals of mankind.

சோழர்காலத்துத் தென்னகத்துக் கோயில்கள் பற்றி அவ்வரலாற்றுப் பேரறிஞர் கூறிய இக்கூற்று அக்காலத்து ஈழத்துக் கோயில்களுக்கும் பொருந்துவதாக அமைந்திருக்கலாம். ஆனால், பிற் காலத்திலே ஈழத்துக் கோயில்கள் நெருங்கிய சமூகத்தொடர்பு கொண்ட நிலையை இதே அடிப்படையிலே விளக்க முடியாது. அதற்கு வேறு பல காரணங்களைக் கூறலாம். சோழர்காலக் கோயில்கள் பண்பாட்டினை வளர்க்கும் இடங்களாக அமைய, ஈழத்துப்பிற்கால தமிழர் கோயில்கள் பண்பாட்டைப் பாதுகாக்கும் இடங்களாக அமைய வேண்டிய நிலை ஏற்பட்டது. போர்த்து

கேயருடைய வருகையுடன் ஈழத்துத் தமிழர் கோயில்களுக்குப் பேராபத்து நிகழ்ந்தது. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற பிரபலமான சைவக்கோயில்கள் தகர்க்கப்பட்டு கோட்டைகள் கட்டப்பட்டன. திரு.க. வேலப்பிள்ளை தனது நூலாகிய யாழ்ப்பாணவைபவ கௌமுதியில் இப்பண்பாட்டுச் சூறையாடல் பற்றிப் பல இடங்களிலே குறிப்பிட்டுள்ளார்.

"மன்னார்க் கோட்டைக்குத் திருக் கேதீச்சுரத்தினின்று கல்லெடுத்துக் கொண்டு வரப்பட்டது. அக்காலம் அக்கோயில் சீரணமடைந்து கிடந்தது."4

"சைவ ஆலயங்கள் சமய அலுவலிற் பறங்கியர் யாழ்ப்பாணத் தாரைத் தீமூரெனப் புண்படச் செய்த வேறொரு கருமத்தை இழைத்து விட்டார்கள். அது யாதெனில், இந்நாட்டில் ஆங்காங்கு விளங்கிய சைவசமய ஆலயங்களை ஒன்றும் விடாது இடிப் பித்தமையாம். ஒலிவேறா யாழ்ப் பாணத்தில் பெரிதும் சிறிதுமான 500 சைவஆலயங்களை இடிப்பித்தா னென்றதை அவனுக்கோர் புகழ்ச் செய்தியாகப் பறங்கியர் எழுதி வைத்திருக்கின்றனர்."5

இவ்வாறு போர்த்துக்கேயர் காலந்தொடக்கமாகச் சைவக்கோயில்களின் நிலை இக்கட்டான நிலையிலேயே இருந்தது. அழிவுறும் நிலையிலிருந்த தம் பண்பாட்டினைப் பாதுகாப்பதற்குத் தமிழ்ப் பெரியார்கள் வேறு பல உத்திகளைக் கையாண்ட போதிலும், கோயில் நிலைக்களனாகக் கொண்டு தம்போராட்டத்தினை நடத்தினர். அழிந்த கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன புதிய கோயில்கள் கட்டப்பட்டன. ஆனால் முன்னர் கோயில்களோடு தொடர்புற்றிருந்த சில கலைகள் மறக்கப்பட்டதும் கைவிடப் பட்டதும் தவிர்க்க முடியாதாகி விட்டது.

## 2. கோயில்கள் கலைவளர்க்கும் நிறுவனங்களாகிய வரலாறு

சமண, பௌத்த போதனைகள் ஒரு காலகட்டத்திலே தமிழ் மக்கள் மனத்தைக் கவர்ந்தன. ஆனால் அச்சமயங்கள் போதித்த தீவிர துறவறம், பெண் வெறுப்பு, கலைவெறுப்பு ஆகியன வெகுசனத்தொடர்பற்றனவாய மைந்தன. சாதாரண பொதுமக்கள் எல்லோருமே துறவறத்திலிடுபட முடியா திருந்தது. இறையனார் களவியலுரைகாரர் குறிப்பிட்டதுபோல் சாதாரணமக்கள் யாவரும் உலகியல் வாழ்வை விரும்புபவர்களாயிருந்தனர்.6 இத்தகைய சந்தர்ப்பத்திலேயே சாதாரண பொது மக்களோடொட்டாத போதனைகளுக் கெதிரான பக்தியியக்கம் சம்பந்தர், அப்பர் போன்றோருடைய தலைமையிலே நடைபெற்றது. தீவிர துறவறத்துக் கெதிராக சாதாரண பொதுமக்கள் யாவருமே மனதில் இறைவனை நினைப்பது மட்டுமன்றிக் கோயிலிலே சென்று இறைவனை வழிபட்டாற் போதுமென்றநிலை உருவாக்கப்பட்டது. அது மாத்திரமன்றி இறைவனே பெண்ணைப்பாகமாகக் கொண்டிருக்குங் காரணத்தாலே, தீவிர பெண்வெறுப்பு அவசியமற்றதெனச் சுட்டிக்காட்டப்பட்டது. இன்னும், இறைவனே கலைகளின் நாயகனாகவும், கோயில்கள் அத்தகைய கலைகளின் இருப்பிடமாகவும், பாடியும் ஆடியும் இறைவனை வழிபடலாமெனவும் கூறப்பட்டதாலே தமிழ் மக்கள் மத்தியிலே கோயிற் கலைகளுக்கு அளப்பிலா மதிப்பு ஏற்படவும் வாய்ப்பேற்பட்டது.

"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள் செய்வான் அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சி
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில் பார்க்குந் திருவையாறே"

என்னும் சம்பந்தருடைய பாடல் 7 அக்காலத்தில் கோயிலைச்சுற்றிப்

பெண்கள் நடனமாடும் மரபினை விளக்கி நிற்கின்றது. இவ்வாறு இசை, நடனம் போன்றகலைகள் முற்காலக் கோயில்கள் பேணிவளர்த்த கலைகளாக அமைந்தன. இவ்வாறு பொதுமக்களைக் கவர்கின்ற இசை, நடனம் போன்ற கலைகளைக் கவருங் கோயில்கள் பொதுமக்களைக் கவர்ந்தது வியப்பன்று. இதனாலே சைவ, வைணவ அடியார்கள் தமிழ் நாட்டிலுள்ள தலங்களனைத்தையும் பாட முற்பட்டனர். ஈழநாட்டிலிருந்த கோணேஸ்வரம், கேதீச்சரம் ஆகியனவும் இவ்வடியார் களாலே பாடப்பெற்றன. திருக் கோணேஸ்வரத்தைச் சம்பந்தர் பாடினார். அத் தலங்களையெல்லாம் ஈழநாட்டுக்கு வராமலே இவ்வடியார்கள் பாடியதாக வழக்குண்டு. விசா, பாஸ்போர்ட் என்ற சம்பிரதாயங்கள் இல்லாத காலத்திலே இவ்வடியார்கள் தமிழ் நாட்டுக்கு மிக அண்மையிலுள்ள ஈழநாட்டுக்கு அந்நாட்களிலே வந்து போவது அவ்வளவு கடினமான காரியமாயிருந்திருக்காது.

> " மாவின்கனி தூங்கும் பொழில்
> மாதோட்ட நன்னகரில்"

என்று சுந்தரர் பாடுவது 8 நேரிலே கண்டுபாடுவது போலத்தானமைகின்றது. இவ்வாறு அவ்வடியார்கள் பாடுவதை நோக்குமிடத்து ஈழத்துக் கோயில்களும்,

> " பண்பாட்டு நிலையங்களாகவும், இசை, நடனம், நாடகம், ஆகிய வற்றைப் போன்ற நுண்கலை நிலை யங்களாகவும் அமைந்திருந்தன "9

என்று கூறுதல் தவறாகாது. இக் கோயில்களும் சோழர்காலக் கோயில் களைப் போன்று பல நுண்கலைகளை வளர்ப்பனவாக அமைந்திருக்கலாம். ஆனால் காலஞ்செல்ல, தாம் ஏற்கனவே குறிப்பிட்ட காரணங்களுக்கு ஏற்ப நிலைமைகள் மாறியிருக்கலாம்.

### 3. ஈழ நாட்டுக் கோயில்களோடு தொடர்புடைய கலைகள்

1. ஈழநாட்டிலே வாழுந் தமிழரு டைய கோயில்களிலே இன்றும் பல கலைகள் பேணிவளர்க்கப்பட்டு வருகின்றன. சோழர்காலக் கோயில் களைப்போல அவை இயங்காவிடினும், இந்நாட்டு வரலாற்று மாற்றங்களுக் கேற்றபடி ஈடுகொடுத்துச் சிலகலைகளை யேனும் இந்நாள்வரை அக்கோயில களைப்பாதுகாத்தும், வளர்த்தும், வருவது கண்கூடு. இப்பகுதியில் அக்கலைகள் பற்றி விபரம் விளக்கமாக்க் கொடு க்கப்படுகின்றது.

#### 2. கூத்து

யாழ்ப்பாணத்திலே இன்றுஞ் சில கோயில்களிலே கூத்தாடும் வழக்கம் உண்டு. பருத்தித்துறையிலே நெல்லண்டை என்னுமிடத்திலேயுள்ள பத்திரகாளியம்மன் கோயில் முன்றிலே இன்றும் நேர்த்திக்கடனுக்காக கூத்து அல்லது நாடகம் ஆடும் வழக்கம் இருந்து வருகின்றது.சோழர்காலத்திலே கூத்து அல்லது நாடகம் கோயில்களுடன் தொடர்புடைய ஒரு கலையாக அக்காலச் சாசனங்கள் சான்று பகருகின்றன. அச் சாசனச் சான்றாதாரங்களை ஆராய்ந்த வரலாற்றாசிரியர் ஒருவருடைய கருத்து இவ்வாறமைகின்றது.

> " முதலாவது இக்கலையின் செயற்பாடு மிக நெருங்கிய முறையிலும், முழுமையாகவும் கோயில்களுடன் தொடர்புடை யதாயமைந்தது. இரண்டாவது இக்கோயில்களிலே கொண்டாடப் பட்ட விழாக்களிலே இவை மேடையேற்றப்பட்டன. மூன்றாவது, நாடகங்கள் பல வகைப்பட்டன வாயிருந்தன. அவற்றுட் பெரும் பாலன, ஆரியக்கூத்து, சாக்கைக் கூத்து, சாந்திக் கூத்து என்பன வற்றைச் சார்ந்தனவாகவே அமைந்தன. நான்காவது, இக் கூத்துக்களின் நடிகர்களுடைய உலகியல் தேவைகள் மானியங் களினாலே பூர்த்தி செய்யப்பட்டன. ஐந்தாவது, இந்நடிகர்கள் ஒரு குழுவாகவே செயற்பட்டனர். "10

ஈழ நாட்டிலே கூத்துக்கள் கோயில்களுடனே தொடர்புற்றிருந்து வருகின்றன என்பதற்குச் சில அறிஞர்களுடைய கூற்றுக்களை இங்கு உதாரணங்களாகக் காட்டலாம். நாட்டுக் கூத்துப் பற்றி எழுதிய பேராசிரியர் கணபதிப்பிள்ளை,

> இக் கூத்துக்கௌல்லாம் ஒரு கோயில் நேர்த்திக்கடனுக்காக ஆடுபவை. அதனால், அக் கூத்தில் முக்கியமான கூத்தராக வருபவர் தத்தம் கூத்துக்கு வேண்டிய கோலங்களை அணிந்து கொண்டு மத்தளகாரர், பிற்பாட்டுக் காரர், அண்ணாவியார் ஆகியோாருடன் அக்கோயிலுக்கு உள்ளே போவர். அங்கு சுவாமிக்குப் பூசை முடிந்ததும் அண்ணாவியார் தாளம் போட அக்கடவுளரின் தோத்திர மாயைமந்த பாடல்களைப் பாடி வழிபடுவர். 11

என்று குறிப்பிடுகின்றார். இவ்வாறு கோயிலிலே வழிபாடு முடிந்த பின்னரே அண்ணாவியார் கூத்தினைத் தொடக்கி வைப்பது வழக்கம். அதன் மூலம் கூத்து ஆடுவதற்கு வேண்டிய அரங்கம் அல்லது களரி அல்லது மேடை கோயில் வீதியிலே அமைக்கப்படும் என்பது பெறப்படு கின்றது. இப்பொழுது நாட்டுக் கூத்துக்களுக்குப் பெயர்போன இடங் களுள் முக்கியமாக விளங்கும் மட்டக்களப்பிலே கூத்து "அரங்கேற்றத் துக்கான உயர்ந்த மண்மேடை பெரும் பாலும் ஊர்கோயில் வீதியிலைமக் கப்படும்." 12 வடமராட்சிப் பகுதியில் நாகர்கோயில் என்னுமிடத்திலுள்ள நாகதம்பிரான் கோயிலில், அக்கோயி லோடு தொடர்புடைய வரலாற்றுக்கதை யொன்றினை ஆண்டு தோறும் புரட்டாதி மாதத்தில் அங்கு நடக்கும் திருவிழாவிலே கூத்தாக நடித்துக்காட்டுவது வழக்கம். கப்பற்றிருவிழா என்பது அங்கு நடக்குந் திருவிழாக்களில் ஒன்று. அன்று கப்பல் ஒன்றினைக் கட்டி, பறங்கிக்காரரைப் போலக் கோலமணிந்து , பறங்கியர் அவ்வூர் இளைஞரைப் பிடித்துத் தம் கப்பலில் ஏற்றிப் பின்னர் நாக தம்பிரான் அருளால் இறக்கி விட்ட வைபவத்தை மக்கள் முன்னிலையில் பாட்டுப்பாடி நடித்துக்காட்டுவது ஆண்டு தோறும் அக்கோயிலிலே நடக்கும் நிகழ்ச்சியாகும்.13

### 3. நடனம்

நடனக்கலை பண்டைக்காலந் தொட்டே ஒரு கோயிற் கலையாக விளங்கி வருகின்றது. கோயிலைச்சுற்றி நடன மாதர்கள் ஆடி வழிபட்டதாகச் சம்பந்தரின் பாடலொன்றின் மூலமாக அறிவதை முன்பு குறித்துள்ளோம். இந்நடன மாதர் தம்மைக் கோயிலில் வீற்றிருக்கும் இறைவனுக்கு அடிமைகளாக அர்ப்பணித்து அக்கோயிலண்டையிலே வாழுவது வழக்கமாயிருந்தது அதனால் இத்தகைய நடனமாதர்கள் பற்றிய பல சுவையான வரலாற்றுத் தகவல்களையும் விபரங்களையும் நீலகண்ட சாஸ்திரி போன்ற வரலாற்றாசிரியர்கள் தம் நூல்களிலே குறிப்பிட்டுள்ளனர்.14

ஈழநாட்டிலே, யாழ்ப்பாண மாவட்டத்தில் வண்ணார் பண்ணைச் சிவன் கோயில், நல்லூர்க் கந்த சுவாமி கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில் ஆகியவற்றிலே நடனமாதர்கள் தேவரடி யார்களாக இருந்தார்ளென அறிகிறோம். இன்று எந்தக் கோயில்களிலுமே காணமுடியாத இந் நிகழ்ச்சி இந்நூற் றாண்டின் தொடக்கத்திலே யாழ்ப்பா ணக்கோயில்களிலே நடைமுறைகளி லிருந்ததாக எம். டீ ராகவன் குறிப்பிடுவர். 15 வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலில் தேவ தாசிகள் இருந்தார்களென்றும், அவர்களுட் கனகி என்பவள் முறைகேடாக நடந்த காரணத்தால் (ஆரம்பத்திலே பக்தி சிரத்தையுடன் இறைத் தொண்டாக நடனமாடிக் கோயில்களிலே வாழ்ந்த பெண்கள், காலகதியில் ஒழுக்கக் கேடுடையரானார் என நீலகண்டசாஸ்திரி, 16 காட்மன் 17 போன்றவர்கள் குறிப்பிடுவர்.) அக்கோயிலைச் சார்ந்த

நட்டுவச் சுப்பையனார் அவளின் ஒழுக்கக்கேடுகளைப் பரிகசித்து கனகி புராணம் என்னும் நூலை எழுதினர் என அந் நூலைப் பதிப்பித்த வட்டுக் கோட்டை மு. இராமலிங்கம் குறிப்பிடுவர். 18

இன்று ஈழநாட்டிலே நடனக்கலை சிறுபான்மைக்கலையாக மாறியமைக்கு மேற்குறிப்பிட்ட சில தேவதாசிகளின் ஒழுக்கக் கேடே காரணமாயமைந்தது. இன்று நடனக்கலை ஒரு வகையிலே வசதியுள்ள குடும்பத்தில் பிறந்தவர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இந்நடன அரங்கேற்றங்களும் குறிப்பிட்ட ஒரு சிலரை அழைத்து வசதியான மண்டபங்களிலே நடத்தப்படுகின்றன. முற்காலத்தில் கோயில்கள் இக்கலையை வளர்த்தும் பேணியும் வருங்கால், சாதாரண பொதுமக்கள் யாவருமே இக்கலையைக் கண்டு களிக்கவும், இக்கலையின் நுணுக்கங்களை உணர்ந்து இரசிக்கவும் முடிந்தது. இக்கலையை மேற்கொண்ட பெண்களும் அது தேவகலை என்று மதித்தும், அழகியல் கலை உணர்வு கொண்டும் ஆடி மகிழ்ந்தனர். இக்கலையை மேற்கொண்ட பெண்களின் ஒழுக்கக் கேடுகளால் ஈழநாட்டுக்கோயில்களிலே பெண்கள் நடனமாடவது வெறுக்கப்பட்டது. ஆரம்பத்திலே "சின்னமேளம்" (நாதஸ்வரத்துக்குத் துணையாக வாசிக்கப்படும் தவில், பறை போன்ற மேளங்களைப்போலன்றி, மென்மையான ஒலி கொடுக்கும் மேள வகை இந்நடனங்களுக்கு வாசிக்கப்பட்டதால் இப்பெயர்பெற்றது போலும்) என்று அழைக்கப்பட்டு வந்தது இக்கலை. காலகதியில், "சின்னமேளம்" என்றாலே இழிவானகலையென்று கருதப்பட்டு வந்ததின் காரணம் நடனக்கலையின் குறைபாடல்ல, அதனை ஆடியவர்களின் குறைபாடேயாகும். ("The objection is not so much to the dancing as to the dancers themselves, for most of these women are reputed to be prostitutes ")19

### 4. இசைக்கருவிக் கலை

கோயில் வழிபாட்டிலே உபயோகிக்கப்படுங் கருவிகளுள்ளே நாதசுரம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஈழநாட்டின் எல்லாக் கோயில்களிலுமே நாதசுரம் வாசிப்பது வழக்கமாயுள்ளது. சில கோயில்களிலே ஆண்டு தோறும் நடைபெறும் விழாக்களிலே வாசிப்பதற்கென சில நாதஸ்வர வித்துவான்கள் விரதம் பூண்டுள்ளமையை நாம் அறிவோம். மங்கள வாத்தியம் எனப் புகழ்கொண்ட இக்கருவி பக்தியையும் இசையையும் ஒருங்கே சேர்க்க வல்லது. ஒரு நாள் முழுவதும் இறைவன் சந்நிதிதானத்திலே நாதசுரம் எவ்வாறு பயன்படுகின்றது என்று இசைப்பேரறிஞர் திரு.பி. எஸ். வீருசாமிப்பிள்ளை பின்வருமாறு கூறுவர்.

> "அனுதினமும் இரவு நான்காம் சாமத்தில் சங்கு முழங்க துயிலெழுப்பும் பணியில் நாதசுரம்மூன்று மணிநேரம் நடைபெறுவது முறை பூபாளம், பௌளி, புறநீர்மை, கோபிகா, வசந்தம் இராகங்களுடன் பலவித துதிப்பாடல்களும் வாசிக்க நேரும். இதைத் தொடர்ந்து நடைபெறும் காலை வழிபாட்டின்போது பிலகரி, கேதாரம் , ஆரபி, தன்யாசி ராகங்களின் ஆலத்தியும் பாட்டுக்களும் கேட்கலாம். நடுப்பகல் வழிபாட்டுக்கும் புறப்பாட்டுக்கும் ஸ்ரீராகம், சாவேரி, மத்திமாவதி, மணிரங்கு, மோகனம், வாசிப்பது முறை. அந்திநேரத்தில் மங்கள ஆரத்திக்கு சங்கராபரணம் , கல்யாணி நாட்டைக் குறிஞ்சி ராகங்கள் உகந்தவை. இரவில் நடைபெறும் வழிபாட்டில் காம்போஜி, தோடி, பைரவி ராகங்கள் ஒலிக்கும். இரவு நேரப்புறப்பாட்டில் வடக்குப் பிரகாரத்திலிருந்து சன்னதி வரை, ஊஞ்சல், லாலி முதலிய பாடல்களைத் தொடர்ந்து ஆண்டவன் பள்ளியறையை அடைந்ததும் நீலாம்பரியில் தாலாட்டு நடைபெறும்." 20

இவ்வாறு ஒரு நாளிலே இறைவன் வழிபாட்டிலே நாதசுரம் எவ்வித பணியைச் செய்கின்தென விளக்கும் அப்பேரறிஞர் ஆண்டவன்திரு வீதி உலாவின்போது அக்கருவியின் பணிபற்றி அழகுடனும் விளக்கத்துடனும் விபரிக்கின்றார். இவ்வாறு ஈழநாட்டிலுள்ள கோயில்கள் எல்லாவற்றிலும் எந்நாளும் நாதசுரம் வாசிக்கப்படுவதில்லை. ஆனால், திருவிழாக்காலங்களிலே ஈழத்தின் நாதசுர வித்துவான்கள் பங்கு பற்றி இந்த முறையிலே வாசிப்பதுண்டு. இவ் விடத்தில் , ஆண்டவன் திரு வீதி உலாவின்போது நாதசுரம் இசைக்கப் படும் முறையை இசைப்பேரறிஞர் வீருசாமிப்பிள்ளை வர்ணிப்பதில் ஒரு பகுதியைச் சுவைக்காக இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

> "ஆண்டவன் உலாப் புறப்படுமுன் மண்டகப்படி தீபாராதனை நேரத்தில் நாதசுரத்தில் தேவாரம் ஒலிக்கும். உடனே தவில் வீறிடும். தவிலில் அலாரிப்பு , கண்டநடையில் வாசித்தவுடன் அண்டைச் சுற்றுப்புறங்களில் உள்ளவரும் விமானத்தை ஏந்திச் சொல்லும் சேகவர்களும் அலறிக் கொண்டு ஓடோடி வருவார்கள். பிரகாரங்களைச்சுற்றி வலம் வரும் போது நாட்டை ராகம் கணீரென ஒலிக்கும். சதுத்ர கதி அமைத்துக் கொண்டு துரித காலத்தில் மல்லாரி வாசிக்க வேண்டும்.
>
> தேர்புறப்படும்போது வராளி ராகத்தில் தேர் மல்லாரி வாசிக்கும் ஒரு வழக்கமுண்டு . " ஆண்டவன் தீய கணங்களை மல்லுக்கு இழுத்துத் தீமையை அகற்றும் திருவிளையாடல் " என்று அறிஞர்கள் அதன் இலக்கணம் கூறுவதுண்டு. கண்கூடாக ஒரு நாதசுரவித்வான் மற்றொரு வித்வானுடன் மல்லாரி வாசிக்கும் போட்டியில் ஈடுபடுவதுண்டு. மூளையைக் குழப்பும் இசை நுணுக்கங்களும் இடக்கான தாளப் போக்கும் மல்லாரி வாசிப்பில் கேட்டு ரசிக மக்கள் பேரானந்தம் அடைவார்கள்." 21

இவ்விபரங்களை யெல்லாம் அறிந்து கொண்டு ஈழநாட்டுப்பிரபலம் வாய்ந்த தலங்களின் திருவிழாக்களிலே நாதசுர இசைக்கருவின் நாதத்தைக் கேட்கும் போது நாம் இரட்டிப்பு மகிழ்ச்சியடையலாம்.

உடுக்கு என்னும் இசைக்கருவி இன்று ஈழநாட்டிலே கிராமியப் பண்புவாய்ந்த இசைக்கருவியாகவே கருதப்படுகின்றது. இது போலவே "பறை" எனப்படுங் கருவியுங் கருதப்படுகின்றது. இக்கருவிகள் பெரும்பாலும் அம்மன் கோயில்களிலும், வைரவர், ஐயனார் போன்ற "சிறு" தெய்வங்களின் கோயில் களிலும் இசைப்பது வழக்கம். கிராமியப் பண்பு மலிந்த பாடல்களுக்குத் துணையாக உடுக்கு வாத்தியம் வாசிப்பதை நாம் அம்மன் கோயில்களிலே காணலாம். கரகம், காவடி போன்ற கிராமிய நடனங்களுக்கும், அம்மன் கோயில்களிலே ஆடப்படும் காத்தவராயன் கூத்துக்கும் இக்கருவி துணைவாத்தியமாகின்றது. அம்மன் கோயில்களிலே பறையொலி கேட்பது பற்றிப் பேராசிரியர் வித்தி யானந்தனின் கூற்றினை இங்கு காட்டுதல் பொருத்தமாகும்.

> "ஈழத்திலே தமிழர்வாழும் பகுதி களிலே வடமாகாணத்திற் பல இடங்களில் கண்ணகி அம்மன் கோயில்கள் இருக்கின்றன. எனினும் மட்டக்களப்பு பிரதேசத்திலோ எல்லா ஊர்களிலும் கண்ணகி கோயில்கள் காணப்படுகின்றன. வைகாசி மாதம் பிறந்து விட்டதென்றால் கிழக்கிலங்கையின் பட்டி தொட்டியெல்லாம் பறையொலி முழக்கமும் , குழல் நயஓசை யும் உருக் கொண்டு தெய்வமாடும் ஓங்காரக் கூச்சலுமான வொரு கலகலப்பான சூழல் நிலவுவதைக் காணலாம்."22

இக்கருவிகளை விட சங்கு, சேமக்கலம், பேரிகை, தப்பட்டை போன்ற இசைக்கருவிகளும் ஈழநாட்டுக் கோயில்களிலே பயன்படுத்தப்படுகின்றன.

#### 4. முடிவுரை

தமிழருடைய கோயில்கள் வளர்த்தகலைகள் பல. அக்கலைகளிலே பெரும்பாலானவை இன்று அருகிவிட்டன. பண்பாட்டுச் சூறையாடல் , எம்மிடையே ஏற்பட்ட பல வருத்தமுறத்தக்க நம்பிக்கைகள் , கொள்கைகள், ஒழுக்கங்கள் ஆகியன இக்கலைகள் மறைந்து போதவதற்கு காரணங்களாயின. எனினும் ஈழத்து ஒருசில கோயில்களேனும் பண்பாட்டுபாரம்பரியத்தைப் பேணுவன வாயமைந்துள்ளமை ஓரளவு ஆறுதல் நல்குகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. Nilakanta Sastri K.A The Cholas ,University of Madras 1955 P 173
2. Ibid.
3. Ibid.,p. 654.
4. வேலுப்பிள்ளை, க., யாழ்ப்பாண வைபவ கௌமுதி 1918.54
5. மேற்படி ப. 82
6. இறையகனார் அகப்பொருள் , கழக வெளியீடு 1953 ப 10 பெண்என்னுஞ் சொற்கேட்டுத் தலையாயினாரும் இடையாயினாரும் நீங்க , " கடையாயினார் எத்திறத்தானும் நீங்கார் என்னை, பல்பிறப்பிடை ஆணும் பெண்ணுமாய்ப் பயின்று போகந்துய்த்து வருகின்றமையின்" என்று உரைகாரர் கூறுவர்.
7 திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் பன்னிரு திருமுறைப்பதிப்பு வெளியீடு 1961 பக் 25-26
8. சுந்தர மூர்த்தி சுவாமிகள் தேவாரம் பன்னிரு திருமுறைப்பதிப்பு வெளியிடு, 1958 , ப 183
9. Krishnamurti ,S.R.,A Study on the Cultural Developments in the Chola Period. Annamalai University. 1966. p 132
10. Ibid. p79.
11. கணபதிப்பிள்ளை பேராசிரியர் க., ஈழத்துவாழ்வும் வளமும், பாரி நிலையம் 1962 ப 83
12. கந்தையா வீ.சீ மட்டக்களப்பு தமிழகம், ஈழகேசரிப்பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம் யாழ்ப்பாணம், 1964 ப, 52
13. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் க., முன் குறிப்பிட்ட நூல் ப 31- 34
14. Nilakanta Sastri. Ibid., p 554 Krishnamurti ,S.R., Ibid. pp 69-77.
15. Raghavan. M.D., Tamil Culture in Ceylon, Kalai Nilayam Limited . Undated. p 264
16. Nilakanta Sastri. Ibid., p 554
17. Cartman. Rev. James. Hinduism in Ceylon, M.D. Gunasena &Co. Ltd., Colombo. 1957 pp. 104-5
18. கனகி புராணம், வட்டுக்கோட்டை மு. இராமலிங்கத்தின் பதிப்புரையைப் பார்க்க.
19. Cartman , Ibid., p104.
20. வீருசாமிப்பிள்ளை, இசைப்பேரறிஞர் பி. எஸ்., " வழிபாட்டில் இசைக்கருவிகள் " தமிழிசை வெள்ளிவிழா சிறப்பு மலர், தமிழ் இசைச் சங்கம், சென்னை, 1967 ப, 179
21. மேற்படி ப. 181,
22. வித்தியானந்தன் , கலாநிதி சு. வீ. சீ கந்தையா பதிப்பித்த கண்ணகி வழக்குரை, (காரைதீவு இந்துசமய விருத்திச் சங்கம் 1968) நூலக்கு வழங்கிய அணிந்துரை ,ப XIX

# சைவ ஆசாரங்களும் சிராத்தமும்

- குமாரசாமி சோமசுந்தரம் -

பணிப்பாளர், தமிழ்ப்பிரிவு தேசியக் கல்வி நிறுவகம், மகரகமை.

சைவ அநுட்டானங்கள், ஆசாரங்கள் என்பன நம் முன்னோர்களால் வகுக்கப்பட்டும், கடைப்பிடிக்கப்பட்டும், வழிவழியாக உணர்த்தப்பெற்றும் வந்தவை, இவை வாழ்க்கையோடு இணைந்து விட்டவை. வாழ்க்கைக் கடமைகளாகக் கைக்கொள்ளப்பட்டு, பல நூற்றாண்டுக் காலம், மக்களின் வாழ்க்கையை வளம் படுத்தி வந்துள்ளன. மனித வாழ்க்கை என்பது உண்டி, உடை, உறையுள் ஆகிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப் படுவதில்லை. அதற்கப்பாலும், ஆத்மீகம், பண்பாடு, கலை, கலாசாரம், அறிவியல், தொழில்நுட்பம் எனப் பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கியதாகவே மனித வாழ்க்கை மிளிர்கிறது, மனிதர்கள் இவ் வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கும், வளமாக வாழ்வதற்கும் இவையனைத்தின் ஒன்றிணைந்த ஆற்றல் தேவை. இவற்றில் ஒன்று குறைந்தாலும், மனித வாழ்க்கை சத்து அற்றதாகவும் சக்தி இழந்ததாகவும், ஆகிவிடுகின்றது, இதனாலேயே, சைவ சமயம், உலகியலையும் ஆத்மீகத்தையும் ஒருங்கே வலியுறுத்துகின்றது, இல்லறம், துறவறம் ஆகிய இரண்டையுமே அறங்களாக ஏற்றுக் கொள்கின்றது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வானுறையும் தெய்வநிலையை மனிதர்கள் அடையப் பெறுவதற்கு வழியாகச் சைவ நெறி விளங்குகின்றது, நமது சமயத்தில், சமயமும் மெய்யறிவும் ஒன்று சேர்ந்துள்ளன. சமய அநுட்டானங்கள் சமய ஆசாரங்கள் ஆகியவற்றிற்குப் பின்னால் அறிவு பூர்வமான தத்துவங்கள் உள்ளன. சமூக உயர்வு, சமூக உறுதி, சமூகக் கட்டுக்கோப்பு, சமூக சமநிலை ஆகியவற்றை வளர்க்கவும், பேணவும் காலங்காலமாக உதவி வந்துள்ளன. பல்வேறு இடர்ப்பாடுகளையும், வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்கள் துயர்களையும், பயம், பீதி, குழப்பங்கள், அழிவுகள் என்பனவற்றையும் துணிச்சலுடன் எதிர்கொண்டு, அவற்றிலிருந்து மீண்டு; சாந்தி, சமாதானம் அமைதி பெற்று நல்வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய பலத்தையும், பண்பையும், ஆற்றலையும் ஆதாரத்தையும் சமய ஆசாரங்கள் மனித குலத்திற்குக் கொடுத்துத் துணை செய்து வந்துள்ளன. அவை மூடப்பழக்க வழக்கங்கள் என்றால், என்றோ மறைந்திருக்க வேண்டும், பயனற்றவை தொடர்ந்து இடம் பெற்று வர முடியாது. எனவே அவை பண்பும் பயனும் நிறைந்தவை.

அர்த்தமுள்ள, பயன் நிறைந்த சைவ ஆசாரங்களும் அநுட்டானங்களும் தற்காலங்களில் கைவிடப்பட்டும், நையாண்டி செய்யப்பட்டும் வருதல், நன்மைக்கு இட்டுச் செல்கின்றன என்று கூறுவதற்கில்லை. மாறாக, மனிதகுல நாசத்திற்கே இது வழிவகுக்கின்றது என்பது மக்களால் உணரப்பட வேண்டியது. இன்று மனித குலம் எதிர்நோக்குகின்ற அவலங்கள், துன்பங்கள், அல்லல்கள், தொல்லைகள், அழிவுகள் ஆகியவை, தற்கால மனிதர்கள் ஆண்டாண்டு காலமாகப் பேணப்பட்டு வந்த மனிதப்பண்புகள், விழுமியங்கள், சமய ஆசாரங்கள், சமய நெறிகள், ஆத்மீக செயற்பாடுகள் ஆகியவற்றின் பெறுமானத்தைக் குறைத்து மதித்து, அவற்றை மூட நம்பிக்கைகள் என விலக்கி வைத்ததன் விளைவேயாகும், தினை விதைத்தவன் தினையைத் தானே அறுவடை செய்ய முடியும். தினையை விதைத்து விட்டு நெல் விளையும் என எதிர்பார்ப்பது எத்துணை பேதமையோ, அதைவிடப் பன்மடங்கு பேதமை, சமயச் செயற்பாடுகள், ஆத்மீகச்

சிந்தனைகள், மனித விழுமியங்கள், நல்லொழுக்கப்பண்புகள் ஆகியவற்றை மனித வாழ்க்கையினின்றும் பிரித்து வெளியேற்றி விட்டு அமைதி வாழ்க்கை, சாந்தி, சமாதானம், நீதி, நியாயங்கள் ஆகியவற்றை வாழ்வில் எதிர்பார்ப்பது ஆகும்.

நல்ல வாழ்க்கை நெறிகளை சமயத்தோடு தொடர்புபடுத்தி மக்களிடையே பரப்புவது, அதனால் சமூக வாழ்க்கையை மேம்படுத்துவது என்பது சைவ சமய உத்தியாகப் பயன்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் சமயச் செயற்பாடுகள், ஆசாரங்கள், சடங்குகள், கிரியைகள், விழாக்கள், விரதங்கள் என்பன நிகழ்த்தப்பட்டு வந்தன. இவற்றிற்கு விதிகள், பிரமாணங்கள், முறைகள் ஆகியனவும் வகுக்கப்பட்டன. இவற்றினால், மனிதர்கள் அகப் புறத் தூய்மையராய், உலக ஈடேற்றமும் ஆன்ம ஈடேற்றமும் பெற்று உய்ந்தனர். அருஞ் செல்வங்களையும், காட்டிய வழிமுறைகளையும் அலட்சியம் செய்வது அறிவு ஆகாது, மடமையின் அதி உச்சம் எனலாம். அன்பும் அறனும் இணைந்து காணப்படும் மனித வாழ்க்கையே இன்பம் கொழிக்கும் வாழ்க்கை. இதுவே சமய வாழ்க்கையும் ஆகும் . அன்பையும், அறனையும், மனிதனிடம் சேர்த்து வைப்பது சமய நெறிகள், சமய ஆசாரங்கள், அனுட்டானங்கள் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுதல் அவசியம். இவை யனைத்தும் எமது சமயப் பண்பாட்டுக் கூறுகள். இத்தகைய சைவ சமயப் பண்பாடுகள் பல இன்றைய சந்ததியினரால் மறக்கப்பட்டும், மறுக்கப்பட்டும், மறைக்கப்பட்டும், மற்றையோர் பின்பற்றாது மறிக்கப்பட்டும் வருவது விசனிக்கத்தக்கது. இதனை விட இவற்றை மேற்கொள்ளும் சிலர் மனம் போன போக்கிலே, இவற்றின் விதிமுறைகளையும் தாற்பரியத்தையும் கருத்திற் கொள்ளாது, நவ நாகரிகத்திற்கேற்ப, சமய, பண்பாடுகளைத் திரித்தும், புதுக்கியும், பிற பண்பாடுகளிலிருந்து சேர்த்தும், அடிதலை மாற்றி, தம் வசதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து செயல்படுவது கவலைக்குரியதாக உள்ளது. இவர்கள் குளிக்கப்போய், சேறு பூசியவர்கள் ஆகின்றனர். மேலும் இவையனைத்தும் கண்டும் காணாதவர்களாக வாழாவிருக்கும் சிலரும், கண்டு அவற்றை ஏற்றுக் கொள்ளும் சிலரும்; பிழையென்று தெரிந்தும் நியாயப் படுத்துபவர்களும்; வழிகாட்டவேண்டிய அறிஞர்கள் மத்தியில் காணப்படுவது மேலும் விசனத்தைத் தருகின்றது. வழி வழி வந்த பண்பாடுகளையும், நடைமுறைகளையும் கற்றுப், பேணி, அடுத்த தலைமுறையினருக்குக் கையளிக்க வேண்டிய பொறுப்பு அறிஞர்கள், பெரியோர்களுடையது என்பது கருத்தில் கொள்ளப் படவேண்டியது.

நமது சமுதாயம் சமயப் பண்பாடுகளை அடியொற்றியே வளர்ந்து வருகின்றது. இதனை மாற்றியமைக்க வேண்டிய தேவையுமில்லை; அது எளிதான காரியமுமல்ல. சமய ஆசாரங்களும் அநுட்டானங்களும் வாழ்க்கையை வளம்படுத்துவன; சீர் குலைப்பன அல்ல; வாழ்வில் பிடிப்பினையும், நம்பிக்கை உணர்வையும் ஏற்படுத்துவன; ஒற்றுமையையும் உறுதியையும் நல்குவன. வேற்றுமையையும் வேண்டாதனவற்றையும் களைவன. மனிதர்களுக்கு மனிதத் தன்மையையும் , தெய்வீகத் தன்மையையும் தருவன; அவர்களுள் ஆழ்ந்து கிடக்கும் நல்லனவற்றையெல்லாம் வெளிக்கொணர உதவுவன. அவை மறைந்து போக விடாமல் காப்பாற்றப்பட வேண்டும். இந்த உலகம், மனிதர்கள் வாழத்தகுந்த இடமாக உருவாக்கப்படுவதற்கு சமயப் பண்பாடுகள் பேணப்படவேண்டியது அவசியமாகின்றது.

இந்த வகையில் சைவ சமய ஆசாரங்களில் ஒன்றான சிராத்தம் பற்றி நோக்குவோம். சிராத்தம் என்பது தந்தை தாயார் இறந்த பின் ஆண்டு தோறும் அவர்களின் தீவினைகள் நீக்குதற் பொருட்டும், அவர்களின் ஆத்ம சாந்திக்காகவும், அவர்களை நினைந்து சிரத்தையுடன் புத்திரர்களால் நிறைவேற்றப்படும் தான தருமங்கள் ஆகும்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது ஆன்றோர் வாக்கு. எனவே தந்தை தாய் ஆகிய இருமுதுகுரவரும் கண்கண்ட தெய்வங்களாக அவர்கள் உயிரோடு வாழுங்காலத்து அன்போடு அவர்களைப் பேணி, அவர்களின் தேவைகளை விருப்போடு நிறைவேற்றி அவர்களின் சொல்வழி நின்று நல்வழியில் ஓம்புதல் தான் அவர்களை வழிபடுதல் என்பது ஆகும். அவர்கள் இறந்த பின் அவர்களின் ஆத்மா சிவபதம் அடைவதற்கு ஏதுவாக, புத்திரர்களால் சிரத்தையோடு செய்யப் படுகின்ற கிரியைகள் அபரக் கிரியைகள் எனப்படுகின்றன. அபரம் என்பதன் பொருள் பிந்தியது ஆகும். இவ்வாறு இறந்த தாய் தந்தையரைக் குறித்து அபரக்கிரியைகளை முறைப்படி செய்து வழிபாடு செய்தல் புதல்வர்களின் கடன் ஆகக் கொள்ளப்படுகின்றது. தென் புலத்தார் வழிபாடு என்றும் பிதுர் வழிபாடு என்றும் இதனை நம் முன்னோர் குறிப்பிடுகின்றனர். சைவத்தமிழ்மக்களிடையே மிகப்பழைய காலந் தொட்டு இத்தகைய வழிபாட்டு முறை இருந்து வந்தமைக்குச் சான்றுகள் உண்டு.

**"தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"**
– என்பது வள்ளுவர் வாய்மொழி

தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐந்து வகையினரும் இல்வாழ்வானால் ஓம்பப்பட வேண்டிய வர்கள் என்பது பழந்தமிழர் கொள்கை. தென்புலத்தார் என்பது பிதுர்கள் – இறந்த ஆத்மாக்கள். இவை பூமண்டலத் திற்குத் தென்திசையில் உள்ள தென் புலத்தில் உறைவதால், பிதுர்கள், தென் புலத்தார், எனப்படுகின்றனர். திருவள்ளுவர் தென் புலத்தாரை முதன்மைப்படுத்துவதால், தென்புலத்தார் வழிபாட்டிற்குத் தமிழ் மக்கள் கொடுத்து வந்த முக்கியத்துவம் புலப்படுகிறது.

தந்தை தாயரைச் சிரத்தையுடன் சிந்தித்து, அவர்கள் நற்கதியடைய வேண்டு மென்று சிரத்தையுடன் அவர்களைக் குறித்து, அவர்கள் இறந்தபின் குறித்த கால வேளைகளில் புத்திரர்களால் செய்யப் படுகின்ற கருமங்கள், தான தருமங்கள் என்பன சிராத்தம் எனப்படும். சிரத்தை யோடு செய்யப்படுவது சிராத்தம். அப்பொழுதுதான் பலன் உண்டு. சிரத்தை யின்றி, ஊர் ஒப்புதலுக்காக அல்லது மனத்தை வேறு இடங்களில் அலைய விட்டுச் செய்யப்படுவது சிராத்தம் ஆகாது.

ஆண்டு தோறும் இறந்த மாதமும் திதியும் சேர்ந்த நன்நாளில் சிராத்தம் செய்யப்பட வேண்டும். திவசம் ,திதி என்றும் சிராத்தம் அழைக்கப்படுகிறது. இத்தினத்தில் இறந்த தந்தை தாயரை நினைந்து சிரத்தையோடு ஓமாதிகள் செய்தும், பிண்டதானம், தர்ப்பணம் ஆகிய வற்றைச் செய்தும் வழிபட்டு, சற்பாத்திரப் பிராமணர்களுக்குப் போசனம் முதலிய தானங்களைக் கொடுப்பது சிராத்தமாகும். இத்தினத்தில் வறியவர்கள், சுற்றத்தவர்கள், ஆதரவற்றவர்களுக்கு அன்னம் , வஸ்திரம், முதலிய பொருள்களை அவரவர் இயல்புக் கேற்ப வழங்கும் வழக்கமும் இருந்து வருகிறது. சிராத்தம், தன்னுடைய வீட்டிலோ, திருக்கோயிலிலோ, தீர்த்தக் கரையிலோ செய்யலாம். செய்யப்படும் இடம் கோமயத் தினால் மெழுகிச் சுத்தம் செய்யப்படல் வேண்டும்.

சிராத்தமானது நித்திய சிராத்தம் முதலாகப் பலவகையாக உள்ளது. சிராத்த வகை தொண்ணூற்றாறு ஆகும். இத் தினங்களில் பிதிர்களுக்கு சிராத்த தருப்பணங்கள் செய்தல் முறையாகும். புண்ணிய காலங்களிலே பிதிர்களைக் குறித்துத் தருப்பணம் முதலியன செய்யப்படுவதால், அவை திருப்தியும் நற்கதியும் அடைகின்றன. நம்மையும் காத்தருளுகின்றன. இவையனைத்தையும் செய்ய முடியாவிட்டாலும், தந்தை தாயார் இறந்த மாதமும் , திதியும் ஆண்டு தோறும் வரும் தினத்திலாவது சிராத்தம் செய்வது நன்று. நைமித்திய சிராத்தம் என்றும் ஆண்டுத்திவசம் அல்லது ஆண்டுத்திதி என்றும் அதனைக் கூறுவர். தாய் தந்தை என்போர் இறந்த மாதம், பட்சம், திதி

ஆகியவை தெரிந்திராத நிலையில், தாயாருக்குச் சித்திரை மாதப்பூரணையிலும், தந்தைக்கு ஆடி அமாவாசையன்றும் சிராத்தம் செய்யும் வழக்கம் உள்ளது. மேலும், எந்த வம்சத்தில் பிறந்தோமோ அந்த வம்சத்தைச் சேர்ந்த எல்லாப் பிதுர்களும் இச்சிராத்தம் மூலம் பிரீதி செய்யப்படுகின்றன. வம்சம் தழைக்க மக்கட்பேறு வேண்டுமென்பது இங்கு கவனிக்கற்பாலது. சந்ததியைத் தொடர வைக்கப் பிள்ளைகள் இல்லாதவிடத்து, சிராத்தம் செய்ய உரித்தாளர் இல்லாமல் போய்விடுவர். அதனால் தாய் தந்தைக்கு மட்டுமல்ல அவர்களுக்கு முந்திய பிதுர்களுக்கும் பிரீதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டு விடுகின்றது. இவ்வாறு இருக்க, சந்ததியில் பிள்ளைகள் இருக்கும் போது தந்தை தாயருக்கு திவசம் செய்யாது விடுதல் எத்துணை பிழையானது என்பது உய்த்துணர்தற்பாலது.

பிதுரர் குறித்து சிராத்தம் , தர்ப்பணம் செய்யக்கூடிய புத்திரனையுடையவனே சுவர்க்கத்தை அடைவான் என்று மத்தியந்த முனிவர் தமது புத்திரராகிய வியாக்கிர பாத முனிவருக்குக் கூறியதாக உமாபதி சிவாசாரியர் கோயிற்புராணத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"புத்" என்ற பெரு நரகத்திலிருந்து தந்தை, தாயர், பிதுர்கள் ஆகியோரை காப்பாற்றுபவன் என்பதினால் புத்திரன் என்று மகன் அழைக்கப்படுகிறான். சிராத்தம் செய்வதன் மூலம் இது சாத்தியமாகின்றது. ஈமக் கடன், நீர்க் கடன், பிதுர்கடன் என்பன செய்தே தீர வேண்டிய கருமங்கள் என்பதால் கடன் என்று கூறப்படுகின்றன. இவை தட்டிக்கழிக்கக் கூடியவையல்ல. திருவள்ளுவப் பெருந்தகையும்

" எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்" என்கிறார்.

எனவே, பிதுர்களுக்கு சிராத்தம் செய்பவர்கள் இம்மையில் பூரண ஆயுளையும், சகல சம்பத்துக்களையும், நற்சுகத்தையும், நன்மக்கட் பேற்றையும் தெய்வ அனுக்கிரகத்தையும் அடைவார்கள். எண்ணியவை எண்ணியாங்கு எய்தப் பெறுவர். பிதுர்கள் காவல் தெய்வங்கள். அகால மரணங்கள், விபத்துக்கள், வறுமை, கொடிய நோய்கள் என்பன அணுகாமல் எம்மைச் சதா நேரமும் காவல் ' காத்து வருபவை தென்புலத்தெய்வங்கள். மேலும், பெற்றோர் பிள்ளைகள் பாசம் , பிணைப்பு என்பன ஏற்படவும், காலமான பெற்றோர் களுக்கு அன்புக் காணிக்கையைச் செலுத் தவும் இத்தகைய பிதுர் வழிபாடு உதவுகின்றது. இதனைப் பார்த்துக் கொண்டிருக்கும் பிள்ளைகளும் தாமும் தம் பெற்றோர்களுக்கு இவ்வாறு வழிபாடுகளை ஒரு காலத்தில் செய்ய வேண்டும் என்ற உணர்வை பெறுகின்றனர்.

பிதுர்களுக்கு ஒரு நாள் எம்முடைய ஒரு வருடகாலத்திற்குச் சமமானது. சிராத்தம் செய்வதன் மூலம் அவர்களுக்குத் தினம் உணவு கொடுப்பது போன்று ஆகி விடுகின்றது. எள்ளும் தண்ணீரும் இறைத்தல், தர்ப்பணம் செய்தல் மூலம் பிதுர்களுக்கு தாகம் தணிக்க தண்ணீர் வழங்குவது போன்று ஆகிவிடுகின்றது.

மாளய சிராத்தமும் பிதுர்களின் பொருட்டுச் செய்யப்பட வேண்டியது. புரட்டாதி மாதத்துக் கிருஷ்ண பக்கப் பிரதமைத் திதியிலிருந்து அமாவாசை வரை உள்ள தினங்கள் மகாளய தினங்கள் எனப்படுகின்றன. இத் தினங்களில் பிதுர் தேவதைகள் தென்புலத்திலிருந்து பெயர்ந்து வந்து தத்தம் குடும்பத்தினருடன் தங்குவதாக நம்பிக்கை இருந்து வருகின்றது. மகா + லயம் என்பது எல்லாப் பிதுர்களும் ஒன்று கூடுதல் என்ற பொருள் ஆகும். எனவே மாளய சிராத்தம் சிறப்பாகக் கொள்ளப் படுகின்றது. ஆண்டுத்திதியில் சிராத்தம் செய்யாதவர்கள் கூட மாளய சிராத்தத்தை விடாது செய்வதைப் பார்க்கின்றோம். மாளய சிராத்தம் பிதிர்களுக்கு இரவு போசனம் கொடுப்பது போன்று அமைகின்றது.

பண்டைய தமிழ்மக்கள் இறந்தவர் களைப் பெரிய தாழியில் வைத்து நிலத்தின்

குண்டுக்கற்களை அவற்றிற்கு எவ்வித உறுப்புக்களும் கற்பிக்காது, தெய்வமாக வழிபட்டனர் எனக் கூறப்படுகின்றது. குண்டுக்கல் வழிபாடு இருந்த காலத்தில், பிண்டத்தைச் சமாதியில் வைத்து வழிபாடு செய்தனர். இதனைப் பிண்ட தானம் என்னும் கிரியையுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

சைவ நெறிப்படி இல்வாழ்வான் என்பான் ஐந்து பெரும் வேள்விகளைச் செய்ய வேண்டியுள்ளது. பஞ்ச மகாயக்ஞம், என நூல்கள் கூறுகின்றன. பிரம்மயக்ஞம், தேவயக்ஞம், பிதிர்யக்ஞம், பூதயக்ஞம், மனித யக்ஞம் என்பனவே இவ்வைந்தும் ஆகும். பிரமயக்ஞம் என்பது வேத மோதுதல். இதன்மூலம் முனிவர்கள் மகிழ் கின்றனர். தேவயக்ஞம் என்பது அக்கினி வளர்த்து ஓமஞ் செய்தல். இதனால் தேவர்கள் திருப்பதியடைகின்றனர். பிதிர் யக்ஞம் என்பது பிதிர் சிராத்தம், தருப்பணம் ஆகியவற்றைக் குறிக்கின்றது. இதனால் பிதிர்கள் திருப்தியாகின்றனர். பூதயக்ஞம் மூலம் பசு, காக்கை முதலியவைகளுக்கு உணவளித்தல். மனித யக்ஞம் என்பது விருந்தினர், சுற்றத்தார், ஏழைகள், துறவிகள் என்போர்க்கு உணவளித்து உபசரித்தல்.

இவற்றுள் தென்புலத்தார் வழிபாடு ஆக பிதிர்யக்ஞம் பழந்தமிழ் மக்களால் கொள்ளப்பட்டது என்பது திருக்குறள், கந்த புராணம், திருவிளையாடற்புராணம், முதலிய நூல்களிலிருந்து அறிய முடிகின்றது. இறந்தோர்க்கு நடுகல் நட்டு வழிபடுதல் பண்டைத்தமிழர் முறை இம்முறை இன்றும் கருமாதியிற் காணப் படுகின்றது. எள்ளின் பிறப்பிடம் தமிழ் நாடு. எள்ளும் தண்ணீரும் பிதுர் வழிபாட்டில் பயன்படுத்தும் பிண்டதானம் செய்வதும் பழங்காலத்திலிருந்து நடை முறையில் இருந்து வருகிறது.

தெய்வ வழிபாட்டைப் பக்தியுடனும், பிதுர் வழிபாட்டைச் சிரத்தையுடனும் செய்து வரவேண்டும். என்று கூறுவர். எனினும் இரண்டிற்குமே பக்தி சிரத்தை இரண்டும் தேவை என்பதை மறுப்பதற் கில்லை. சிராத்தம் முதலிய பிதுர் காரியங்களை நாங்கள் செய்வது பிதுர்களைத் திருப்திப் படுத்துவதோடு, அவர்களின் நற்கதிக்கு வழி செய்வதுடன், நம்முடைய நன்மைக்கும். மனத்திருப்திக்காகவும் தான் என்பதை மனதில் நிறுத்திப் பிதுர்க் கடன்களை நிறை வேற்றி உய்வு பெற்று வாழ்வோமாக.F

## நவரத்தினங்கள்

(அசல் - போலி எது என்ற காண)

| | |
|---|---|
| முத்து | என்றால் நுரை கலந்த பாலில் மிதக்க வேண்டும். |
| மரகதம் | குதிரையின் முகத்ருகே அதனைக் கொண்டு சென்றால் தும்ம வேண்டும். |
| பச்சை | குத்துவிளக்கின் ஒளியின் முன் பிடித்தால் சிவப்பாகத் தெரியும் |
| வைரம் | இதன்மேல் வைர ஊசியை பலமாக வைத்து அழுத்தினால் வைரக்கல் உடையாது. |
| கோமேதகம் | பசுவின் நெய்யில் போட்டால் குங்குமப்பூ வாசனை வரும் |
| பவளம் | சோதனை ஊசி மையத்தில் தவிர வேறு இடத்தில் இறங்காது |
| புஸ்பராகம் | சந்தனக்கல்லின் மீது வைத்தால் தாமரை புஸ்பத்தின் வாசனை வரும் |
| வைடூரியம் | பச்சிலை சாற்றில் போட்டால் வெள்ளை நிறமாக மாறும் |
| நீலம் | பச்சிலை சாற்றில் போட்டால் மெதுவாக ஒலி கிளம்பும் |

# இலங்கையும் பெரிய புராணமும்

நா. சோமகாந்தன்

பக்திச் சுவை சொட்டும் பெரிய புராணம் சைவத்தமிழர்களின் அரிய பொக்கிஷம். சிவபக்தியையும் சிவனடியார் பக்தியையும் எடுத்தியம்பும் இந்நூல் காவியத்திறன்மிக்க செழுந்தமிழ்ப் புதை யலாகவும் திகழ்வது,

திருவைந்தெழுத்து, சிவசின்னங்கள், சிவாலய வழிபாடு முதலியவற்றின் பெருமையையும், சைவசித்தாந்தக் கருத்துக் களையும் மட்டுமே புகழ்ந்தேத்தும் சமய நூலாக மட்டுமல்லாமல் பெரிய புராணம் கி.பி.4ம் நூற்றாண்டு முதல் 12ம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியில் தமிழ் நாட்டு வரலாற்றை, மக்களின் வாழ்க்கை முறையை, பண்பாட்டை, சமய நிலையை, கலை வளர்ச்சியை எடுத்துக்கூறும் வரலாற்றுக் காவியமாகவும் திகழ்கின்றது.

பெரியபுராணம் சுந்தரமூர்த்தி சுவாமி களைக் காவியத் தலைவனாகக் கொண்டு அமைந்து இருக்கின்ற போதிலும், இப் புராணத்திலே 63 நாயன்மார்களின் வரலாறுகளையும், சிவபெருமான் மீது அவர்களுக்கிருந்த பேரவாவையும், எந்தச் சோதனை, இடுக்கண் வந்தபோதிலும் சிவன் மீது கொண்ட இலட்சியத்தைக் கைவிடாமை யையும், சிவபிரானுக்காக சிவனடி யார்களுக்காக எதையும் அடியவர்கள் அர்ப்பணிப்புச் செய்வதற்குப் பின்னிற்கா மையையும் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்திலே விளக்கி யுள்ளார்.

முழுமுதற் கடவுளாகிய இறைவனை எய்தி உயிர்கள் இன்புறுவதற்கு, சாதி, தொழில், வழிபாட்டுமுறை, உணவு, ஆசாரம், கல்வி அறிவு அந்தஸ்து முதலியவை தடையாக இருக்கமாட்டாது.

உலகத்தைத் துறந்து, காட்டுக்குச் சென்று கடுந்தவம் இயற்ற வேண்டும் என்பதுவுமில்லை. இல்வாழ்க்கையில் இருந்தபடி, தமக்குரிய கடமைகளை நிறைவேற்றிக் கொண்டு, இறைவன் மீது உண்மையான அன்பு செலுத்தினால், அவ்வடியவர்களை இறைவன் உரிய வேளையில் ஆட்கொண்டு அருளுவார் என்பதனை பெரியபுராணம் காட்டும் நாயன்மார்களுடைய வரலாறுகள் உணர்த்து கின்றன.

நமது சைவசமயத்திலே தத்துவம் வேறு, சமயம் வேறு என்ற நிலையில்லை. இரண்டுமே ஒன்றாகக் கலந்தவை. அதேபோல சமயம் வேறு, வாழ்க்கை வேறு என இரண்டு நிலையைச் சான்றோர் ஏற்கவில்லை. வாழ்க்கையில் எத்தகைய இடுக்கண் ஏற்பட்ட போதிலும், சமய ஒழுக்கம் தவறாது இலட்சிய வாழ்க்கை வாழ்ந்த பெரியோரின் பெருமையைப் பேசும் பெரியபுராணம், செயற்கரிய செய்வர் பெரியர் என்ற வள்ளுவரின் கூற்றுக்கு இலக்கியமாக வாழ்ந்து சிவகதி சேர்ந்த நாயன்மார்களின் வரலாற்றை விளக்கும் சிறப்பைக் கொண்டது.

சமணமும் பௌத்தமும் தென் னிந்தியாவில் வெகுவாகப் பரவி, சைவ சமயத்தை நலிவடையச் செய்த காலத்திலே 6ம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தரும், அப்பரும், தேவாரங்களைப் பாடி, சைவத்தலங்கள் தோறும் சென்று, தமது தமிழோடிசைப் பாடல்களால் சைவர் களைத் தட்டியெழுப்பினர். 8ம் நூற் றாண்டைச் சேர்ந்த சுந்தரர் பாடிய தேவாரங்களும் சைவத்துக்குச் செழிப்புச் சேர்த்தன. தேவாரங்களும் மற்றும் திருமுறைகளும் சைவ சித்தாந்த சாத்திரங்களின் செழும்புதையல்களாகத் திகழ்பவை. தேவாரம் பாடிய சமய குரவர்களும், திருப்புகழ் பாடிய

அருணகிரிநாதரும் இலங்கையில் புகழ்மிக்க தலங்கள் மீதும் பதிகம் பாடினர். தேவார திருமுறை, சைவசித்தாந்த சாத்திரங்களுக்கு விளக்கமாகத் திகழும் பெருமை பெரிய புராணத்துக்குத் தானுண்டு. தனி மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதை தேவார திருமுறைகள் உணர்த்துகின்றன. ஒரு சமுதாயம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதனைப் பெரிய புராணம் காட்டு கின்றது.

தேவாரத் திருமுறைகள் தோற்றம் பெற்ற காலத்தைத் தொடர்ந்து ஈழத்திரு நாட்டிலும் அவை வெகுவாகப் பரவத் தொடங்கியிருந்தன. ஈழத் திருநாடு என்ற இலங்கை தென்னிந்திய மண் ணிலிருந்து கடலாற் சிறிது பிரிக்கப் பட்டிருக்கின்ற போதிலும், அதன் அருகாமை காரணமாகப் பண்பாட்டு இணைப்பைக் கொண்டு விளங்குகின்றது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே குடியேற்றம், மொழி, சமூக அமைப்பு, நம்பிக்கைகள், சமயம், பழக்க வழக்கங்களால் இரு நாடுகளுக்குமிடையே மிகுந்த தொடர்புண்டு.

இலங்கைத் தமிழர்களின் பிரதான சமயம் சைவமாகும். திருமுறைகள், ஆகமங்கள், சைவசித்தாந்த சாத்திரங்கள் முதலியவற்றின் தத்துவ அடிப்படையில் சைவபாரம்பரியம் இங்கு நிலை பெற்றிருக்கிறது. குறிப்பாக வட இலங்கையில் பல நூற்றாண்டுகளாக சைவ பாரம்பரியம் மிக இறுக்கமாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. மக்கள் வாழ்வில் அருள் பெருக்கும் சிவத்தலங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே விளங்கியுள்ளன.

இலங்கையில் சிங்கள அரசர்களின் வரலாற்றை தொடர்பு முறிவுறாமல் கூறியுள்ள நூல் "மகாவமிசம்" எனப் படுவது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையை ஆட்சிபுரிந்த அரசர்கள், செல்வாக்குச் செலுத்திய பிரதானிகள் மூத்தசிவன், ஐயாசிவன், மகாசிவன், சிவன், ஸ்ரீகண்டசிவன், சண்டசிவன், சண்டமுகசிவன், தனசிவன் என்னும் சிவநாமம் தரித்தவர்களாக விளங்கி யிருப்பதை "மகாவமிசநூல்" மூலம் அறிய முடிகின்றது. இப்பெயர்கள் இலங்கை நாடு சிவ வழிபாட்டிலும், சைவ வாழ்விலும் ஊறியிருந்தது என்பதனை எடுத்துக் காட்டுகின்றது.

4ம் நூற்றாண்டில் வாழ்ந்து சைவ நான்மறை யோகியாக விளங்கிய திருமூல நாயனார் இலங்கை நாட்டைச் சிறந்த சிவபூமி எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தி லிருந்தே அருளும் புகழும் மிக்க இரு சிவத்தலங்கள் ஈழத்திரு நாட்டில் இருக் கின்றன. அவை தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்களாகும்.

6ம் நூற்றாண்டினராகிய திருஞான சம்பந்தப் பெருமான் சைவ எழுச்சியூட்ட, தமிழ்நாடு முழுவதும் தலயாத்திரை மேற்கொண்டு தலங்களின் மீது பதிகம் பாடியவர். இராமேஸ்வரம் சென்றடைந்த அவர் ஈழத்திருநாட்டில் நிலவிய சைவ வாழ்வையும், சிவநெறியையும் அங்கு அருள்சுரந்து விளங்கும் இரு சிவத் தலங்களின் பெருமையையும் நன்கு அறிந்தவர். அவர் நேரில் சென்று தரிசிக்க முடியாதபடி கடல் தடுத்து நின்றது. கடற்கரையின் கரையில் நின்றே அகக் கண்ணால் திருக்கேதீச்சரத்தையும், திருக்கோணேஸ்வரத்தையும் துதித்துப் பாடல்களைப் பாடினார்.

"இத்தலத்துக்கு இணையான புண்ணியத்தலம் முன்னுண்டானும் இனி யுண்டாவதுமில்லை" என திருக்கேதீஸ் வரத்தின் பெருமையை "தெட்சண கைலாச மான்மியம்" சிறப்பித்து உரைக்கிறது.

கிழக்குத் தேசங்களின் ரோமாபுரி எனப் போர்த்துக்கேயப் பாதிரி கோணேஸ் வரத்தின் கோயிற்சிறப்பையும் அங்கு வந்து குழுமும் யாத்திரீகர்களின் தொகை யையும் பார்த்துப் பிரமித்துக் கூறினான்.

ஞானசம்பந்தப் பெருமான் பதிகம் பாடும்பொழுது சில தலங்களில் அவற்றின்

திருவிழாப் பொலிவினைப் புகழ்ந்து பாடுவார். வேறு சிலவற்றில் அங்கு நிலவும் வேத ஒலிக்கும் கீத ஒலிக்கும் முதன்மை கொடுத்துப் பாடுவார். மற்றும் சிலவற்றில் அபிஷேக ஆராதனைகளையும் அவற்றைப் புரியும் அந்தணர்களின் ஒழுக்க சிறப்பையும் எடுத்துப்பாடுவார். இறை வனைத் துதித்த அடியார்களின் ஆரவாரிப் பையும் பாடுவார். ஆனால் இலங்கைத் தலங்களைப் பாடும்போது அது சிவபூமி என்பதனைக் கருதி பூமியின் பெருமைக்கு முதன்மை கொடுத்துப் பாடினார்.

**விருதுகுன்ற மாமேருவின் நாண் அரவு**
**ஆவன லெரியம்பாப்**
**பொருது மூஎயில் செற்றவன் பற்றிநின்று**
**உறைபதி எந்நாளும்**
**கருதுகின்ற ஊர் கனைகடற் கடிகமழ்**
**பொழில் அணி மாதோட்டங்**
**கருத நின்ற கேதீச்சரங் கைதொழக்**
**கடுவினை அடையாவே**

திருக்கேதீச்சரப் பதியை மனதால் நினைந்து கைதொழுதாலே தீய வினைகள் நம்மைத் தீண்டமாட்டாது என அந்தப் புண்ணிய மண்ணின் புகழைப் போற்றினார் ஞானசம்பந்தப் பெருமான். அவரின் மற்றொரு பதிகம் :

**நிரைகழல் அரவம் சிலம்பொலி யலம்பும்**
**நிமலர் நீறு அணி திருமேனி**
**வரைகெழு மகள் ஓர் பாகமாப் புணர்ந்த**
**வடிவினர் கொடியணி விடையர்**
**கரைகெழுசந்தும் கார் அகிற்பிழவும்**
**அளப்பருங் கனமணி வரன்றிக்**
**குரைகடல் ஓத நித்திலங் கொழிக்கும்**
**கோணமாமலை யமர்ந்தாரே**

கோணேஸ்வரம் மீது பாடியுள்ள இப்பதிகத்தில் ஞானசம்பந்தப் பெருமான் "குரைகடல் ஓத நித்திலங் கொழிக்கும்" கோணமாமலை என அந்தப் பதியின் மகத்துவத்தை முன்னிறுத்துவது மனங் கொள்ளத்தக்கது.

ஞானசம்பந்தர் காலத்தில் இலங்கைச் சைவத் தமிழ் மக்களிடம் நிலவிய 'அறிவு நிலை, அன்புநிலை, தொண்டு நிலை முதலியவற்றை அவர் பாடிய பதிகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

ஞானசம்பந்தப் பெருமானின் தமிழ்ப் புலமை மிகப் பெரிது.

**"மெல்லென முழங்கும் மந்திரத் தமிழ்"**

**"தன்னிகரில்லாத் தனித்தமிழ்"**

"அன்புத்தமிழ்" என அறிஞர்கள் அவரின் பாடல்களைப் புகழ்ந்து போற்றுவர். அத்தகைய மந்திரத் தமிழ் மழையை ஞானசம்பந்தப் பெருமான் என்ற பெரு முகில் இராமேஸ்வரம் கடற்கரையில் நின்று, புண்ணிய பூமியாகிய ஈழத் திருநாட்டின் மீது பொழிந்த காட்சியை சேக்கிழார் சுவாமிகள் சிறப்பாகச் சித்திரித்திருக்கிறார்.

**அந்நகரில் அமர்ந்து அங்கண் இனிதுமேவி**
**ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்**
**மன்னு திருக்கோணமலை மகிழ்ந்து செங்கண்**
**மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப்பாடிச்**
**சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்**
**திருக்கேதீச்சரத்து அண்ணல் செய்யபாத**
**உன்னி மிகப் பணிந்து அன்பரோடும்**
**உலவாதகிளி பெற்றார் உவகையுற்றார்**

8ம் நூற்றாண்டைச் சேர்ந்த சிவ ஞானச் செந்தமிழ்க் கொழுந்தாகிய –திருத் தொண்டர்புராணமென்ற சேக்கிழார் பெரிய புராணத்தின் காவியத் தலைவராகிய சுந்தரமூர்த்தி நாயனாரும் இலங்கைத் திருத்தலங்களின் மீது பதிகங்கள் பாடியுள்ளார்.

தமக்கு முற்பட்ட அப்பர், சம்பந்தர் வழியைப் பின்பற்றி சுந்தரரும் தல யாத்திரைகளை மேற்கொண்டவர்.

இராமேச்சரத்தை அடைந்து அத்தலத்தைச் சிறப்பித்துப் பதிகம் பாடிய அவர், அங்கிருந்து பாலாவிக் கரையில் எழுந் தருளியிருக்கும் கேதீச்சரநாதனை துதித்துப் பாடினார்.

*மூவர்என இருவர்என*
*முக்கண் உடைமூர்த்தி*
*மாவின்கனி தூங்கும் பொழில்*
*மாதோட்ட நன்னகரில்*
*பாவம் வினையறுப்பார் பயில்*
*பாலாவியின் கரைமேல்*
*தேவன் எனையாள் வான்*
*திருக்கேதீச்சரத்தானே.*

என்பது இப்பதிகம்.

இதனை சேக்கிழார் சுவாமிகள்,

*மன்னுமிரா மேச் சரத்து*
*மாமணியை முன்வணங்கி*
*பன்னுதமிழ்த் தொடை சாத்திப்*
*பயில்கின்றார் பாம்பணிந்த*
*சென்னியர் மாதோட்டத்துத்*
*திருக்கேதீச்சரஞ் சார்ந்த*
*சொன்மலர் மாலைகள் சாத்தித்*
*தூரத்தேதொழுதுஅமர்ந்தார்.*

எனப் பெரிய புராணத்தில் சித்தரிக்கிறார்.

புராண இதிகாச, தேவார திருமுறை முதலிய கால கட்டங்களில் சிவநெறியும் சைவமும் புகழோடு விளங்கிய இலங்கைத் திருநாட்டில் அந்நியப் படையெடுப்பாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் பல கோவில்கள் அழிந்தன. புகழ் பெற்ற திருக்கேதீச்சரம் கடற்கோளினால் அழிந்தது. கோணேச்சரம் 400 ஆண்டுகளுக்கு முன் ஒரு சித்திரைப் புத்தாண்டு அன்று போர்த்துக் கீசரால் இடித்து அழிக்கப்பட்டது.

தமிழரசர் ஆட்சி மறைவுற்று அந்நிய ரான போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோரின் ஆட்சி நிலவிய காலத்தில் சைவசமயம் இலங்கையில் அரசியல் ஆதரவற்ற நிலையை அடைந்தது. போர்த்துக்கீசர் தமது ஆதிபத்தியத்தை நிலைநாட்டுவதற்காக கரையோரங்களில் இருந்த சைவக் கோயில்களைத் தரை மட்டமாக்கினர். அதன்பின் ஒல்லாந்தர் பொது வழிபாட்டுக்கு சைவமத வழிபாட்டுக்கு தடையாகப் பல சட்டங்களை இட்டனர்.

சைவத் திருமுறைகள், பெரிய புராணம் முதலியன காட்டிய அனுஷ்டானங்கள், ஆசாரங்களை பாரம்பரியமாக கடைப்பிடித்து வந்த இலங்கைச் சைவர்கள் மிலேச்ச ஆட்சியில் சொல்லொணா கஷ்டமெய்தினார்கள். எந்நிலையிலும் அறந்தவறல் ஆகாது எனும் பெரிய புராணத்தின் விழுமியத்தை ஏற்று வாழ்ந்த ஈழத்துச் சைவச்சான்றோர் அறந்தவறுமாறு அந்நியரால் நிர்ப்பந்திக்கப்பட்ட போது இலங்கையை விட்டு இரவோடு இரவாகத் தென்னிந்தியாவில் தஞ்சங்கோரிய வரலாறும் உண்டு.

பறங்கியர் காலத்தில் அவர்களுக்கு உணவாக முறைவைத்து வீட்டுக்கொரு பசுமாடு அனுப்ப வேண்டும் என்ற சட்டம் இருந்தது. நாவலர் பெருமானின் மூதாதையர்களில் ஒருவரான யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த ஞானப்பிரகாசரின் முறைவந்தபோது பசுவதைக்கு அஞ்சி இரவோடிரவாக அச்சைவஞானி கடல் கடந்து சிதம்பரம் சென்றுவிட்டார். இது கற்பனைக் கதையல்ல. இலங்கை நாட்டில் 17ம் நூற்றாண்டில் நிகழ்ந்த வரலாற்றுச் சம்பவம். இந்த ஞானியின் இலட்சியப் பற்றுக்கு உந்துசக்தியாக விளங்கியது. அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பெரிதும் பரவியிருந்த பெரிய புராணமே. சிதம்பரம் சென்றடைந்த அவர் அங்கு வாழ்ந்து திருக்குளம் ஒன்றினை அமைத்தார். அக்குளம் ஞானப்பிரகாசர் குளம் என இப்போதும் வழங்கப்படுகிறது. ஆலயவழிபாடு செய்தல், திருமுறை ஓதல், விபூதி முதலிய சிவசின்னங்களைத் தரித்தல், சைவஆசாரங்களை அனுஷ்டித்தல், சைவக்கல்வி பயிலுதல் முதலியவற்றை சுதேசமக்கள் கைக்கொண்டு

ஒழுகாதவாறு போர்த்துக்கீசரும் ஒல்லாந் தரும் பலவித நிர்ப்பந்தங்களைக் கொண்டு வந்தனர்.

ஒரு கையில் வாளும், மறுகையில் பைபிளுமாக ஆரம்பநாட்களில் போர்த்துக் கீசக் கத்தோலிக்க குருமார்கள் உலா வந்தனர். கோயில்களைக் கொள்ளையிட்டு இடித்துச் சரித்தனர். வாழையிலையில் உணவைச் சாப்பிடும் சைவமக்கள் எச்சில் இலையை வெளியே வீசாது தமது வீட்டுக் கூரைகளில் மறைத்துச் சொருகினார்கள். சைவர்கள் எனக் காட்டிக் கொண்டால் அன்றிருந்த அரசு தம்மைத் தண்டித்து விடும் என்ற அச்சம் அவர்களுக்கு இருந்தது.

போர்த்துக்கீசர் கொள்ளையடித்து இடித்துத் தரைமட்டமாக்கி விட்டுச்சென்ற கோயில்களின் கற்களைக் கொண்டு ஒல்லாந்தர் கோட்டைகளும் கொத்தளங் களும், தமது பாதுகாப்புக்காக அமைத் தார்கள். கிறீஸ்தவ தேவாலயங்களை எழுப்பினார்கள்.

இலங்கையில் சைவசமயம் என்ற பயிர் தலைதூக்க முடியாமல் வாடி வதங்கி சோர்ந்து போயிருந்தது.

1796ம் ஆண்டு ஒல்லாந்தரை விரட்டி விட்டு ஆங்கிலேயர் ஆட்சிபீடம் ஏறிய பின் சைவசமயப் பிரதேசங்களில் கிறிஸ் தவசமயத்தைப் பரப்புவதற்காக சுதேசிய அஞ்ஞானிகளுக்கு மெஞ்ஞானம் ஏற் படுத்துவதற்கெனக் கூறிக்கொண்டு புரட்டஸ்தாந்து கிறீஸ்தவமதப் பாதிரி மார்கள் இலங்கை வந்தனர். சாதிக்கு ஒரு கோயில்; அக்கோவில்களில் சைவ நெறிக்கு ஒவ்வாத கொண்டாட்டங்கள்; கோவிலின் புனிதத்தைக் கெடுக்கும் கேளிக்கை நிகழ்ச்சிகள் போன்ற சைவாலயங்களில் அக்காலத்தில் நிலவிய குறைபாடுகளை பாதிரிமார்கள் பெரிதாகப் பிரச்சாரப்படுத்தி மக்களை மதமாற்றஞ் செய்தனர். நீண்டகால அந்நிய ஆட்சியின் காரணமாக அன்றைய மக்கள் சைவாகம உணர்ச்சி இல்லாதவர்களாக இருந் தமையால் மக்களிட்ம் உண்மைப் பொருள் பரவாது ஒழிந்தது.

ஆங்கிலம் படித்தவர்க்கே உத்தி யோகம் என்பதனால் ஊரெங்கிலும் தமிழ் ஆங்கிலப் பாடசாலைகளை மிஷனரிமார் நிறுவி அங்கு பயில விரும்புபவர்களையும் அவர்களின் பெற்றோரையும் இலகுவில் மதமாற்றம் செய்தனர்.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை சைவப் பயிர் இலங்கையில் தலை நிமிர்வதற்கு வாய்ப்பே ஏற்படாமல் சோர்ந்து போய் இருந்தது.

**மாறுபடு பரசமய வழியனைத்தும்**
**அற மாற்றி**
**ஆறுபடு செஞ்சடிலத்து அண்ணலார்**
**அருள்நெறியே**
**தேறுபடும் படிவளர்த்துத்திகழும்**
**மாதவம் உடையோன்**
**வீறுபடுசிவனடியார் மேன்மை**
**முழுமையும் உணர்ந்தோன்.**

என மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களால் புகழ்ந்துரை க்கப் பெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இலங்கையில் சைவ மறுமலர்ச்சிக்கென 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். அக்காலச் சைவர்களின் சமயநிலை அவருக்கு அருவருப்பையும், கோபத்தையும் மூட்டியது.

**"சிவன் கடவுளல்லர் என்றும், அவர் பிசாசென்றும், வேதாகமங்கள் பொய் நூலென்றும், சைவசமயம் துர்மார்க்கம் என்றும், பாதிரிமார்கள் பிரசுரங்களை வெளியிட்டுப் பரப்பினார்கள்"**

"இத்தேசத்திலுள்ள வறியவர்கள் அநேகர். சைவ சமயமே மெய்ச்சமய மென்று அறிந்தும் அன்னம், வஸ்திரம் முதலியவை பெற்றுப் படிக்கும் பொருட்டும் உபாத்தியாயர் உத்தியோகம் பிரசங்கி உத்தியோகம் முதலிய உத்தியோகங்களைச் செய்து சம்பளம் வாங்கும் பொருட்டும் கவர்ண்மெண்டு

உத்தியோகங்களினிமித்தம் துரைமார் களிடத்தே சிபார்சு செய்விக்கும் பொருட்டும் கிறிஸ்து சமயப் பெண் களுள்ளே சீதனமுடையவர்களையும் அழகுடையவர் களையும் விவாகஞ் செய்யும் பொருட்டும் கிறீஸ்துசமயத்திலே பிரவேசிப்பாரா யினார்கள்."

– (யாழ்ப்பாணச் சமய நிலை)

இந்நிலையைத் தடுத்து சைவசமயக் கோட்பாடுகளை மீண்டும் நிலை நிறுத்து வதற்கான பணியில் ஆறுமுகநாவலர் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்.

ஆறுமுகநாவலர் அவர்களின் உயிரோட்டமாக பெரிய புராணம் ஊறிக் கிடந்தது. சிவப்பணி ஆற்றிய சிவனடி யார்களின் வரலாறுகள் அவரை வெகுவாக கவர்ந்திருந்தன. இலங்கையில் சைவ மறுமலர்ச்சிக்கு நாவலர் ஆற்றிய பணி களுக்கும் அவரின் இலட்சிய அர்ப்பணிப் புக்கும் உந்து சக்தியாக அமைந்தது பெரியபுராண நாயன்மார்களின் வரலாறு களே. பெரியபுராணம் சைவ வளர்ச்சியின் ஸ்தாபித நிலையை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தமையால் இலங்கையில் சைவ மறுமலர்ச்சிக்கு ஆறுமுகநாவலர் நாயன் மார்களால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறை களைப் பயன்படுத்தினார்.

புற சமயங்கள் காரணமாக தமிழ் நாட்டில் சைவசமயம் குன்றியிருந்த போது சேக்கிழார் காட்டும் நாயன்மார்கள் வெறு மனே ஓரிடத்தில் உட்கார்ந்திருந்து தத்துவம் சொல்லிக் கொண்டிருக்கவில்லை. ஊர்கள் தோறும் சென்று ஞானசம்பந்தரும் நாவுக் கரசரும் மக்களோடு மக்களாகத் தாமும் கலந்து சிவன் பெருமையைக் கூறித் தமிழோடிசை பாடினார்கள். பெரிய புராணங் காட்டிய அந்த வழியிலே ஆறுமுக நாவலர் கிராமங்கள் தோறும் சென்று கோவில்களில் மக்களைத் கூட்டி சைவப் பிரசங்கங்களை நிகழ்த்தினார். பெரிய புராண நாயன்மார்கள் பற்றிய வரலாறுகளை எடுத்துப் பிரசங்கத்தித்தார். சைவத்தின் மாண்பை மக்களிடம் பரப்பினார். பெரிய புராணத்தில் விபரிக்கப்பட்டிருக்கிற சிவவேடப் பொலிவோடு திரிபுண்டரம், கௌரி சங்கம், தரித்து பிரசங்கங்களை நிகழ்த்தியதுடன் சிவசின்னங்கள், பஞ்சாட்சர மந்திரம் திருநீறு முதலியவற்றின் மாண்புகளை எடுத்து விளக்கினார்.

நாயன்மார்கள் யாத்திரை செய்த போது பொருத்தமான இடங்களிலே சைவத் தையும், தமிழையும் வளர்ப்பதற்காக அக் காலவழக்கப்படி மடங்களை அமைத் தார்கள். ஆறுமுகநாவலர் சைவச் சூழலில் சைவசமயம் உட்பட மாணவர் கல்வி கற்பதற்குப் பாடசாலைகளை நிறுவும் பணியைத் துவக்கி வைத்தார். நாவலர் ஏற்படுத்திய முதலாவது சைவப் பாடசாலை 1848 இல் "சைவப் பிரகாச வித்தியாசாலை" என்னும் பெயரில் வண்ணார்பண்ணையில் ஏற்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து நாவலரின் முயற்சியாலும் அவரது அக்கால நண்பர்களினாலும் இணுவில் கந்தர்மடம், கோப்பாய், புலோலி போன்ற இடங்களில் சைவத் தமிழ்ப் பாடசாலைகள் தோன்றின. இப்பாடசாலைகலிலே பயிலும் மாணவரிடம் நாயன்மார் பற்றிய பெருமையை விளக்கும் வகையில் நாயன்மார் குருபூசைகள் அவர் களின் நினைவு நட்சத்திரத்தில் நடத்தப் பட்டன.

சைவப் பாடசாலைகளிலே பயிலு கின்ற மாணவர்களுக்கு சைவசமயத்தைப் போதிக்கின்ற பாடநூல்களையும் எழுத வேண்டிய தேவை நாவலருக்கு ஏற்பட்டது. சிவன், சிவனடியார், சைவசித்தாந்தம், பதி, பசு, பாசம், மும்மலங்கள், நாற் பாதங்கள் ஆலய வழிபாட்டு முறைகள், சிவசின்னங்கள் சைவத்தின் சிறப்பு போன்றவற்றை இளம் உள்ளங்களில் பதியச் செய்வதற்காக பாலபாடம் சைவ வினாவிடை முதலிய நூல்களை ஆறுமுக நாவலர் எழுதுவதற்குப் பெரிய புராணத் திலிருந்தும் அவர் பெற்ற விளக்கங்கள் பெரிதும் துணையாக இருந்தன. வினாவும் விடையுமாக அமைந்த நூல்கள் பட்டென்று மனதில் பதிந்து கொள்ளும் தன்மை கொண்டவை. பாதிரிமார்களிடமிருந்து நாவலர் இந்த நுட்பத்தைத் தெரிந்து கொண்டார்.

ஆங்கிலேயர் காலத்தோடு அச்சியந்திர மும் வழக்கத்துக்கு வந்துவிட்டது. அதனை மததூஷணப் பிரசுரங்களை வெளியிடவும், சிவநிந்தனையான விடயங்களை வெளியிட்டு மதம் மாற்றுவதற்கும் பாதிரிமார்கள் சிறப்பாகப் பயன்படுத்தினர். அவர்களின் பிரசுரங்களுக்கு மறுப்புத் தெரிவிக்கவும் சைவ நூல்களை அச்சியற்றவும் சைவ பாடநூல்களை மாணவர்களிடம் பரப்பு வதற்கும் யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத் திலும் அச்சுக்கூடங்களை நிறுவிய ஆறுமுக நாவலர் கந்த புராணம், பெரிய புராணம், கோயிற்புராணம் உட்படப் பல நூல்களைப் பதிப்பித்தார். நாவலரின் பதிப்புப் பணியை 'அவர் செய்த அருஞ்செயல்களுக்கு அடையா ளங்களாக அவர் பதிப்பித்த நூல்கள் விளங்குகின்றன. அவருடைய பதிப்பு முறை தமிழ் நாட்டாரால் பெரிதும் மதிக்கப்படுவது" என்று ஏட்டு வடிவிலிருந்த பல அரிய நூல்களை திருந்திய முறையில் அச்சிட்டு தமிழ் உலகுக்கு அளித்த தமிழ்த்தாயின் அருந்தவப் புதல்வரான டாக்டர் உ.வே.சாமிநாதையர் பாராட்டிப் புகழ்ந்தார்.

பெரியபுராணத்தில் குறிக்கப்படுகின்ற பதிகம் பாடிய நாயன்மார்களும், பெரிய புராணம் பாடியருளிய சேக்கிழார் பெருமானும் வாழ்ந்த காலத்தில் செய்யுள் நடையே சிறப்பிடம் பெற்றிருந்தது. சிவநெறியின் விளக்கமாகத் திகழ்ந்த மற்றும் நூல்களும் செய்யுளாகவே அமைந்து இருந்தன. இதன் காரணமாக புலமையும் கல்வி ஞானமும் உள்ளவர்களினால் மட்டுமே இவற்றையும் இவற்றில் பொதிந்துள்ள தத்துவங்களையும் அறிந்து கொள்ள முடிந்தது.

தோத்திரங்களிலும், சாத்திரங்களிலும் புராணங்களிலும் பொதிந்து இருக்கும் சைவதத்துவங்கள் சாதாரண சைவ மக்களிடம் பரவுவதின் மூலம் அவர்களை உயர்ந்த சைவவாழ்வுக்கு இட்டுச் செல்ல முடியும் எனக் கருதிய ஆறுமுகநாவலர் புராண படனம் செய்யும் வழக்கத்தை ஏற்படுத்தினார்.

கந்த புராணமும், பெரியபுராணமும் சைவமரபின் தூண்களாக விளங்குபவை. கந்தபுராணம் சித்தாந்தக் கொள்கையின் விளக்கம், பெரியபுராணம் அத்தத்து வத்தினை வாழ்ந்து காட்டிய அடிய்வர்களின் விளக்கமாகத் திகழ்வது. ஆறுமுகநாவலர் தாமும் மற்றும் கற்றுவல்லாருமாகச் சேர்ந்து கோயில்களிலும் மடங்களிலும் இப்புராணங் களின் படனங்களை சிறப்பாகச் செய்து வந்தனர். பக்தி பூர்வமாகப் படிக்கப்பட்ட இப் புராணபடனங்கள் வெகுவாக மக்களை ஈர்த்தன. செய்யுள் செய்யுளாக இனிய குரலில் ஒருவர் படிக்க அச்செய்யுள் களுக்குரிய விளக்கத்தையும் அதில் பொதிந்துள்ள தத்துவத்தையும் எடுத்து மற்றவர் விளக்குகின்ற போது பொருத்தமான திருமுறைகளையும் அவர் பண்ணோடு பாடுவார். சேக்கிழார் செழுந்தமிழின் உச்ச நிலைகள் வரும் இடங்களில் படிப்பை நிறுத்தி பெரிய புராண நூலுக்கு கற்பூரம் காட்டி "நமப்பார்பதிபதயே" என ஓசை எழுப்ப புராணங் கேட்டுக் கொண்டிருக்கும் அடியார்கள் பக்திப்பரவசராகி "அரஹர மகாதேவ" என ஒலி எழுப்புவர். புராண படனமரபு இன்றும் இலங்கையில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இலங்கை யில் திருத்தொண்டர்களின் சரிதம், அவர்கள் புரிந்த அரிய பெரிய செயல்கள் முதலியவை எல்லா மக்களிடம் சென்று செறிவதற்கும், பக்திவளர்வதற்கும் நாவலர் தோற்றுவித்த புராணபடன முறை அடிப் படையாக அமைந்தது.

மக்களின் அறிவு வளர்ச்சிக்கு தமிழ் உரை நடை ஒரு சாதனமாக அமைதல் வேண்டும் என்ற கருத்து 19ம் நூற் றாண்டின் மத்தியில் வெகுவாக உணரப் பட்டது. செய்யுள் நடையில் அமைந்து கற்றோர் மத்தியில் மட்டுமே படிக்கப்பட்டு வந்த கந்தபுராணம், பெரியபுராணம் முதலியவற்றையும் சமயநூல்களையும் பொதுமக்களிடம் பரப்பி அவர்களை சமய அறிவுள்ளவர்களாக ஆக்கும் பொருட்டு இவற்றை இலங்கையரான நல்லூர் ஆறுமுகநாவலர் உரைநடையில் எழுதிப் பதிப்பித்தார். அதனைப் பெரிய

புராண வசனத்துக்கு அவர் எழுதிய முகவுரை தெளிவுபடுத்துகின்றது.

"நிறைந்த கல்வியுடைய வித்துவான்களும் குறைந்த கல்வியுடைய பிறரும் ஆகிய யாவரும் எக்காலத்திலும் எளிதில் வாசித்து உணரும் பொருட்டும் கல்வியில்லாத ஆடவரும் பெண்களும் பிறரைக் கொண்டு வாசிப்பித்து உணரும் பொருட்டும் வாசிப்பவர்களுக்கு எளிதிலே பொருள் விளங்கும்படி பெரும்பான்மையும் சந்தி விகாரங்களின்றி அச்சிற் பதித்தேன்". இவ்வாறு கூறும் ஆறுமுகநாவலரின் பெரிய புராண வசனம் 1852 ஆம் ஆண்டு பரிதாபி வருடம் சித்திரை மாசம் அவரின் வித்தியானு பாலன யந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டதாகும். தமிழ் வசன நடையில் குறியீடுகளிட்டும் சந்திபிரித்தும் முதன்முதலில் ஆறுமுகநாவலரே எழுதினார். மூலநூலை மறப்பதற்கும் மறைப்பதற்கும் மாசுபடுத்துவதற்கும் பல வழிநூல்கள் தோன்றி விடுவதுண்டு. ஆனால் நாவலர் எழுதிய பெரியபுராண வசனம் இத்தகைய குற்றங்கள் ஏதுமில்லாமல் சேக்கிழார் பெருமான் ஆக்கிய மாக்கதையான பெரிய புராணத்தை தேடிக்கற்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுவதாகவும் மேன்மை கொள் சைவநீதியை மக்களிடம் பரப்புவதாயும் அமைந்தது என்பது அறிஞர்களின் கருத்து. நாவலர் காலத்திலும் அவருக்குப் பின்னும் வாழ்ந்தவர்கள் பெரியபுராணத்தை ஏற்றிப் போற்றுவதற்கு தூண்டுதலாக யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் எழுதிய பெரியபுராண வசனம் அமைந்திருந்தது. சேக்கிழார் பெருமானின் பெரியபுராணமும் இதற்கு நாவலர் எழுதிய வசனமும் இலங்கை அறிஞர்களின் பெரிய புராண ஆளுமையை வளர்த்தன. ஆலய வழிபாட்டு முறைகள் பின்பற்றப்படுவதற்கு வழியமைத்தன. திருக்கோயில் வழிபாட்டு முறைகள் இலங்கையில் இன்றும் நிலவுவதற்குக் காரணம் பெரியபுராணமே. இலங்கையில் சிவனடியார்களைத் தோற்றுவித்ததிலும் சிவனடியார்களைப் போற்றுகின்ற உணர்வை மக்களிடம் ஏற்படுத்தியதிலும் பெரிய புராணத்துக்கு பிரதானமான பங்கு உண்டு.

பெரிய புராணங் காட்டும் சமய குரவர்களான அப்பரும், ஞானசம்பந்தரும், சுந்தரரும் தாம் தலயாத்திரை மேற்கொண்ட ஊர்களிலேயுள்ள அழிந்த ஆலயங்களை புனருத்தாரணம் செய்வதில் அக்கறைகாட்டினர். இலங்கையில் பாடல் பெற்ற திருத்தலங்களான திருக்கேதீசரமும் திருக்கோணேச்சரமும் அழிந்து அநேக காலமாக அங்கு கோயிலின்றி பூஜையின்றி பெயரளவில் நாயன்மார்களின் திருப் பதிகங்களில் மட்டுமே வாழ்ந்து கொண்டிருந்தன. "சைவசமயிகளே தேவாரம் பெற்ற சிவத்தலங்களில் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளில் ஒன்றாகிய திருக்கோணமலைக்குச் சம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகம் ஒன்றிருக்கிறது. மற்றொன்றாகிய திருக் கேதீச்சரத்துக்கு திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றும் சுந்தர மூர்த்தி நாயனார் திருப்பதிக மொன்றும் இருக்கின்றன. (இவை) அழிந்து காடாகக் கிடக்கிறதே இவைபற்றி நீங்கள் சிறிதும் நினையாதது என்னையோ? இதை நீங்கள் எல்லீரும் சிந்தித்து திருப்பணியை நிறைவேற்றுவீர்களேயாயின் அருட் கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வா". பெரிய புராணங் காட்டிய சமய குரவர்கள் வழியிலே நின்று இவ்வாறு ஆறுமுகநாவலர் சென்ற நூற்றாண்டில் எழுப்பிய குரல் சேக்கிழார் பெருமான் காட்டும் சீரடியார்கள் அன்று எழுப்பிய குரலின் எதிரொலியாகத் தொனித்தது. பல ஆண்டுகளுக்குப் பின் இவ்வாலயங்கள் சீர் பெறுவதற்கு ஈழத்தவர்களின் பெரிய புராண ஈடுபாடே மூலகாரணமாக அமைந்தது.

பெரிய புராணத்துக்கு இலங்கையரான ஆறுமுகநாவலர் எழுதிய சூசனம் சைவசித்தாந்த நெறி சார்ந்தவர்களால் பெரிதும் மதித்துப் போற்றப்படுவது.

திருத்தொண்டர் புராணத்தில் திருமலைச் சுருக்கம் முதல் காரைக்காலம்மையார் வரை மட்டுமே ஆறுமுகநாவலர் சூசனம் எழுதியுள்ளார். ஒவ்வொரு நாயன்மாரினது வரலாற்றிலும் பணிகளிலும் நாவலர் தரிசித்த தத்துவத்தின் விளக்கமாக பெரிய புராண சூசனம் அமைந்திருந்திருக்கின்றது. பெரிய புராணத்தின் மீது யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலருக்கு முன் எவருமே இவ்வாறான கண்ணோட்டத்தினைச் செலுத்தவில்லை.

"இப்பெரிய புராணமானது தன்னை உணர்ந்தவர்களுக்கன்றி மற்றவர்களுக்குத் தமிழ் வேதமாகிய தேவாரத்தின் வரலாறும் மகிமையும் ஒரோவிடங்களில் அதன் பொருளும் விளங்குதல் கூடாமையானும், தன்னை அத்தியந்த ஆசையுடன் ஓது வோர்க்கும் கேட்போருக்கும் பக்தி வைராக்கிய ஞானங்களைப் பயக்கும் கருவி யாயிருந்தலானும் (எனத் தொடங்கி) சைவர்கள் யாவரும் ஒரு தலையாகக் கற்றுணர வேண்டும் நூலாம்" எனப் பெரிய புராணத்தின் பெருமையை பெரிய புராண சூசனத்துக்கு எழுதிய உபோற் காதத்திலே ஆறுமுகநாவலர் வலியுறுத் தினார். யாழ்ப்பாணத்தில் நாவலர் காலத்தில் மட்டமல்லாது அவர் வழிவந்த அறிஞர்களையும் பெரிய புராணம் பெரிதும் ஈர்த்தது. அதில் பொதிந்துள்ள சமய தத்துவத்தையும், இலக்கியச் சுவை யையும் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், புன்னாலைக்கட்டுவன் கணேசையர், அச்சுவேலிக் குமாரசாமிக் குருக்கள், நல்லூர் கைலாசபிள்ளை, மட்டக்களப்பு பூபாலபிள்ளை, உடுவில் வ.மு.இரத்தி னேஸ்வரஐயர், பண்டிதமணி கணபதிப் பிள்ளை, புலவர்மணி பெரியதம்பி, விபுலானந்த அடிகள் நவாலியூர் சோம சுந்தரப்புலவர், புங்குடுதீவு வைத்தியர் கணபதிப்பிள்ளை முதலிய ஈழநாட்டு அறிஞர்கள் நாவாலும் பேனாவாலும் பெரியபுராணத்தின் பெருமையை முன் னெடுத்துப் பரப்பினார்கள். வாழ்வியல் பெறுமானங்களையும் உண்மைகளையும் நடைமுறை வாழ்க்கைக்குப் பொருந்தும் வண்ணம் எடுத்துக்காட்டிய பெருமையைக் கொண்ட பெரிய புராணத்தின் கருத்துக்கள் புராண படன வாயிலாக மக்கள் மனதில் பதிய வைக்கப்பட்டன. சைவப் பாடசாலை களில் குருபூசைகளும், நாயன்மார் வரலாறு களின் விளக்கமும் சிறப்பிடம் பெற்றன. காவிய பாடசாலைகளில் ஆசிரிய கலாசாலைகளில் இலக்கியச் செழுமை மிக்க நூலாக இது விதந்து போற்றப் பட்டது. பெரியபுராண சிந்தனைகள் மக்கள் எண்ணத்திலும், வாழ்விலும் கலந்து விட்டதனால் சைவப் பிரதேசங்களில் நிறுவப்பட்ட பாடசாலைகளுக்கு நாயன் மார்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

இலங்கையில் பெரிதாக அமைக்கப் பட்டுள்ள சிவன்கோயில்களில் 63 நாயன் மார்களின் திருவுருவச் சிலைகள் பிரதிட்டை செய்யப்பெற்று அவற்றுக்கு பூஜை நடை பெறுகிறது. அவர்களின் நட்சத்திரத்தன்று உற்சவம் நடைபெறுகின்ற முன்னேஸ்வரம் போன்ற கோயில்களும் இருக்கின்றன. திருக்கேதீஸ்வரம் கோயில் புனரமைப்புச் செய்யப்பட்டபோது அங்கு சேக்கிழார் பெருமானின் திருவுருவச் சிலையும் பிரதிட்டை செய்யப்பட்டது. இலங்கையின் சைவமக்களுக்கு பெரியபுராணத்தின் மீதுள்ள மிகுந்த ஈடுபாடு காரணமாக 10 ஆண்டுகளுக்கு முன்பு வரை யாழ்ப் பாணத்தில் பெரிய புராண மகாநாடுகளும் சேக்கிழார் விழாக்களும் ஆண்டுதோறும் சிறப்பாக நிகழ்ந்தன. இதனை நிறை வேற்றுவதற்காக அங்கு பல ஆண்டுகளாக சேக்கிழார் பெயரில் மன்றமே அமைத்து செயலாற்றினர். காலத்துக்குக் காலம் ஈழத்து அறிஞர்களோடு தமிழகத்திலிருந்து வருகைபுரிந்த அறிஞர்களும் இங்கு சேக்கிழார் பெருமானின் செந்தமிழ் அமுதத்தை மக்கள் மனங்கொள்ளு மளவுக்கு மாந்தும்படி செய்த சொற் பொழிவுகள் இலங்கையின் வடபகுதியில் மிகப்பெரும் எழுச்சியை ஏற்படுத்தின. இப்போது அவ்வாறான விழாக்கள் யுத்தச் சூழ்நிலைகளால் அங்கு நடைபெற முடியாதுள்ளது. கோயில்களைக்

குறிவைத்து விமானக் குண்டுகள் சீறி விழுகின்றன. புகழ் பெற்ற திருக்கேதீச் சரத்தில் பூஜையின்றி கோவிற்கதவு பூட்டிக் கிடக்கிறது. கோணேச்சரத்தில் பல காலத் துக்குப் பின் சென்ற ஆண்டு கும்பாபிடேகம் நடைபெற்று பூஜைகளைத் துவக்கியுள்ள போதிலும் இராணுவக் கெடுபிடிகளால் பக்தர்கள் அங்கு போகப் பயப்படு கின்றார்கள்.

இன்று இலங்கையில் சில பகுதிகளில் இந்த நிலமை நிலவுகின்ற போதிலும் ஏனைய பகுதிகளில் சிறப்பாக கொழும்பிலும் மலையகத்திலும் பெரியபுராணத்தின் பெருமையும் சைவத்தின் மகிமையும் மறக்காமல் பரப்பப்பட்டு வருகின்றன. மாணவர்கள் மத்தியில் தேவார திரு முறைகள், சைவசாத்திரங்கள், பெரிய புராண விழுமியங்கள் தொடர்பான சமய அறிவுப் போட்டிகளை கொழும்பு விவேகானந்தசபை, யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை, இந்து சமய கலாச்சாரத் திணைக்களம் முதலிய அமைப்புக்கள் ஆண்டு தோறும் நடத்தி வருகின்றன. இலங்கையிலுள்ள அனைத்து தமிழ்ப் பாடசாலைகளிலும் சைவசமயம் மாணவர் களுக்கு ஒரு பாடமாக போதிக்கப் படுவதனால் அரசாங்கம் வெளியிடும் சைவ பாடப் புத்தகங்களில் பெரிய புராணத்தைப் பற்றி நாயன்மார்களைப் பற்றி பாடங்கள் இடம் பெற்றுள்ளன. சைவாலயங்களிலே முறைப்படி திருமுறைகள் ஓதப்படுகின்றன. திருமுறைப் போட்டிகளை நடத்திப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. ஆலயங் களில் அறிஞர்களின் சமயச் சொற் பொழிவுகள் அடிக்கடி நிகழுகின்றன. சிவநெறி பரப்பும் இப்புண்ணிய செந்தமிழ்ப் பணியிலே ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிர மணியசுவாமி கோயில், கொட்டாஞ்சேனை ஸ்ரீவரதராஜ விநாயகர் கோயில், கொம்பனித் தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், மாத்தளை ஸ்ரீமுத்து மாரியம்மன் கோயில் ஆகிய ஆலயங்களின் அறங்காவலர் கள் முன்னின்று அளப்பரிய சேவைபுரிந்து வருகின்றார்கள்.

## கடவுள் எங்கே?

**உங்களது சகோதர மக்களின் மீது உங்களுக்கு அன்பு உள்ளதா? கடவுளைத் தேட நீங்கள் எங்கே செல்ல வேண்டும் எல்லா ஏழைகளும் துயரப் படுவோரும் பலவீனரும் தெய்வங்க ளல்லவா? முதலில் அவரை வழி பட்டால் என்ன? கங்கைக் கரையிலும் கிணறு தோண்டச் செல்வதேன்? அன்பின் எல்லாம் வல்லசக்தியில் நம்பிக்கை கொள்ளுங்கள். குப் என்று கிளம்பும் புகை போன்ற பகட்டான புகழ் மொழி களைப் பொருட்படுத்துவார் யார்? உம்மிடம் அன்பு உள்ளதா? பின் நீர் எல்லாம் வல்லீர் ஆவீர்; நீர் முற்றவும் தன்னயமற்ற தன்மையுடைமீரா? உடைமீ ராயின் நீர் எதிர்க்கவொண்ணாத வராவீர். ஒழுக்கமே எவ்விடத்தும் பயன்தருவது. பொறாமை யையும் செருக்கையும் விட்டுவிடும். பிறர்க்காக ஒன்று சேர்ந்து உழைக்கக் கற்றுக் கொள்ளும். நமது நாட்டுக்குப் பெருந் தேவையாயுள்ளது இதுவே. பொறுமை யாயிரும். மரணம் வரை நன்றியோடிரும் உங்கட்குள்ளே சண்டை போடதீர். பண விஷயங்களில் முற்றும் தூய்மையாயிரும். நம்பிக்கையும்- நேர்மையும் பக்தியும் உம்மிடம் உள்ள வரை எல்லாம் முன் னேற்றமடையும். உங்கட்குள் பிளவு ணர்ச்சி ஏற்படாதவரை இறைவனருளால் உமக்கு அபாயமில்லை என்று நான் உறுதி கூறுவேன். நிச்சயமாக நன்மை விளையும் என்று உணர்ந்தா லன்றி உமது மனதில் உள்ளதை வெளியிட வேண்டாம். மிகப் பெரும் வைரியாயினும் அவனிடத்தும் பிரிய மான இதமான மொழிகளையே பேசுங்கள்.**

பல ஆலயங்களில் சிவநெறி போதிக்கும் அறநெறிப் பாடசாலை வகுப்புக்கள் வார இறுதிநாட்களில் அண்மைக் காலத்திலிருந்து நடைபெற்று வருகின்றன. சமய போதனையோடு மாணவர்களுக்கு சரியைத் தொண்டுகளாகிய ஆலயச் சூழலைத் துப்புரவு செய்தல் பூமாலை கட்டுதல் முதலியவற்றிலும் அறநெறிப் பாடசாலைகளினூடாக பயிற்சி அளிக்கப்படுகின்றது.

தெல்லிப்பளை துர்க்கா தேவஸ்தான அறங்காவலர்கள் ஆலயம் என்பது சமுதாய மையம் என்பதற்குச் சான்றாக அவ் ஆலயத்தை நடத்தி வருகின்றனர் போர்ச் சூழ்நிலைகளால் பெற்றோரை இழந்து கதியற்று நிற்கும் பெண் குழந்தைகளின் புகலிடமாக தொண்டு இல்லம் அமைத்து அவர்கள் புரிந்து வரும் சேவை மிக உன்னதமானது. அறங்காவலர் குழுவின் தலைவராக விளங்கும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிவநெறி பரப்புஞ் செல்வியாக அவர் ஆற்றி வரும் சமயச் சொற்பொழிவுகளின் மூலம் இலங்கையில் மட்டுமல்லாது தமிழ்நாட்டிலும் மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் லண்டனிலும் மிகவும்நன்கறியப்பட்டவர். சைவசித்தாந்தத்திலும், தேவார திருமுறைகளிலும் பெரிய புராணத்திலும் மூழ்கித் திளைத்து இவற்றின் பெருமையை உலகெல்லாம் பரப்பி வருபவர்.

பெரிய புராணத்தின் தத்துவத்தைப் பரப்புவதில் இலங்கையிலுள்ள ஒரே ஒரு ஆதீனமாகிய நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம் புரிந்து வரும் பணி குறிப்பிடக் கூடியது. யாழ்ப்பாணத்தில் நிலவுகின்ற சாதகமற்ற இன்றைய சூழ்நிலையிலும் உயிராபத்தான பல இன்னல்களுக்கு மத்தியில் சைவமரபை முன்னெடுத்துச் செல்வதற்காக பெரியபுராண வகுப்புக்கள், சைவசித்தாந்த வகுப்புக்கள், திருமுறைப் பயிற்சிகள், நாயன்மார் குருபூஜைகள் அடக்கமான முறையிலேனும் அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாதீனத்தின் குரு முதல்வராக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் பெரிய புராணத்திலே மிகுந்த பற்றும், புலமையும் கொண்டவராக விளங்கியவர். இனிய குரல்வளம் மிக்கவர். சங்கீத கதாப்பிரசங்கத்தின் மூலம் நாயன்மார்களின் பெருமையை நாள்தோறும் ஊர்கள் தோறும் சென்று கம்பீரமான குரலில் கூறி இசையோடு பாடி மக்கள் மனதில் இலகுவாகப் பதியச் செய்தவர். தமிழ்நாடு, சிங்கப்பூர் மலேசியா போன்ற நாடுகளிலும் - சுவாமிகள் மகா சமாதி எய்தும் வரை – பல நிகழ்ச்சி களை நடத்தி சைவ எழுச்சியையும் தமிழ் உணர்வையும் ஏற்படுத்தியவர்.

சொற்பொழிவுகள், பிரசுரங்கள் மூலமான கருத்துக்கள் ஓர் எல்லைக்கு உட்பட்ட மக்களிடம் மட்டுமே சென்றடையக் கூடியவை. வானொலியும் தொலைக் காட்சியும் ஒரே நேரத்தில் மிகப் பெரும் தொகையான மக்களிடம் கருத்துக்களைப் பரப்பும் சாதனங்களாகியுள்ளன. இலங்கை வானொலியில் தினமும் சைவக் கருத்துக்கள், உரைகளாக,, திருமுறைகளாக நாயன்மார்களின் வரலாறுகளாக மட்டுப் படுத்தப்பட்ட நேரத்திற் கேனும் ஒலி பரப்பப்படுகின்றன.

பெரிய புராணத்தில் புலமையும் அதன் சிறப்புக்களை எடுத்துச் சொல்லும் ஆற்றலும் மிக்க பெரிய புராண உணர்வு கொண்ட இளம் தலைமுறையொன்று இலங்கையில் இன்று வெகுவேகமாக வளர்ந்து வருகின்ற காரணத்தினால் சேக்கிழார் செழுந்தமிழ் இலங்கையில் மேலும் ஓங்கிப்பரவும்.

1994 பெப்ருவரி 11, 12, 13 ஆம் நாட்களில் காஞ்சீபுரம் அண்ணா கலையரங்கில் நடைபெற்ற உலகச் சேக்கிழார் பெருவாழ்வின் இரண்டாம் நாளன்று இடம் பெற்ற பெரிய புராணக் கருத்தரங்க நிகழ்ச்சியில் திரு.நா. சோமகாந்தன் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.

# இலங்கைப் பூர்வ குடிகளும் சிவவழிபாடும்

- பேராசிரியர் அ. வேலுப்பிள்ளை -

திருமூலர் திருமந்திரம் 2701 ஆம் பாடலிலே இலங்கையைச் சிவ பூமிக்குள் அடக்கியுள்ளார்.

மேரு நடுநாடி மிக்கிடைபிங்கலை
கூருமிவ் வானின் இலங்கைக் குறியுறுஞ்
சாருந் திலைவனத் தன்மா மலயத்தூ
டேறுஞ் சுமுனை இவை சிவ பூமியே.

தில்லைச்சிதம்பரத்துக்கும் பொதிகை மலைக்கும் இடைப்பட்ட தமிழகம் சிவபூமி என்றும் மேருமலைக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட பகுதி சிவபூமியென்றும் பெயருக்கு ஓரளவு உரிமையுடைய தென்றும் கூறப்பட்டுள்ளது. பௌராணிக இலக்கியங் களுள்ளே பயின்று வரும் மேருமலை பூமியிலுள்ள எந்த மலையையும் குறிக்கின்றதா என்பது இன்னும் தெளிவாக வில்லை. சிவ புராணங்களிலே கைலாய மலைபற்றிப் பரவலான குறிப்புகள் இடம் பெறுகின்றன. இமயமலைக்கு வடக்கிலே திபெத்திலே கயிலாயமலை அடையாளங் காணப்பட்டுள்ளது வங்காளத்துக்கு வட திசையிலே கயிலாயம் அமைந்துள்ளது. ஆகம வழிபாடு வங்காளத்தின் வட பகுதியிலேயே தோற்றம் பெற்றதாக இன்றைய ஆய்வாளர் கருதுகின்றனர்.

இலங்கையின் வரலாறு கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலே பௌத்தமத வருகையுடன் தெளிவடைகின்றது. பௌத்த மதம் இன்றைய பீகார் மாநிலத்திலிருந்து இலங்கைக்கு வந்தது. அசோகப்பேரரசன் அனுப்பிய மகிந்தன் தலைமையிலான பௌத்த குருமார் ஆகாய மார்க்கமாக மிகுந்தலைக்கு வந்ததாக மகாவம்சம் கூறுகின்றது ஆகாய மார்க்கமாக வந்தன ரென்பதை ஏற்க மறுக்கும் இன்றைய அறிஞர், தென்னிந்தியாவினூடாக அன்றி, ஒரீஸ்ஸா, வங்காளம் என்னும் மாநிலங் களிலுள்ள துறைமுகங்களூடாக வந்திருக்க வேண்டும் என்று கொள்வர்.

மகா வம்மிசம் இலங்கைக்குச் சிங்களவர் வருகையை முந்நூறு ஆண்டுகள் முன்னெடுத்து செல்கின்றது. வங்காளம், ஒரிஸ்ஸா என்னும் மாநிலங்களிலுள்ள பகுதிகளிலேயே சிங்களவர்களின் முன்னோர் வாழ்ந்தாகவும் விஜயனும் தோழர்களும் அப்பிரதேசத்திலிருந்து கடல்மார்க்கமாக இலங்கை வந்ததாகவும் கூறப்படுகின்றது. மகாவம்சத்தின்படி, விஜயன் இங்கு வந்த போது, இலங்கையிலே நாகர்களும், இயக்கர்களும் வசித்தனர். கௌதம புத்தர் தம்முடைய மதத்தை இலங்கையிலே நிலை நிறுத்துவதற்காக மூன்று முறை ஆகாய மார்க்கமாக நேரிலே வந்தாரென்றும் இலங்கையின் மேற்குத் திசையிலுள்ளதும் இன்று களனி என்று சொல்லப்படுவதுமான கல்யாணிக்கு வந்த அவர் அண்மையிலிருந்த மலைச்சிகரத்திலே தம்முடைய திருவடியின் அடையாளத்தைப் பொறித்துச் சென்றா ரென்றும் கூறப்படுகின்றது. இலங்கையின் வடதிசையிலுள்ள நாகதீபத்துக்கு வந்த புத்தர் ஓர் இரத்தினச் சிம்மாசனம் தொடர்பாக, நாக அரசர்களுக்கடையே ஏற்பட்ட தகராறைத் தீர்த்து வைத்து அந்தச் சிம்மாசனத்தைத் தமக்குரிய புனித சின்னமாக்கினார். இலங்கையிலே மேற்குத்திசையிலும் வடமேற்குத்திசையிலும் நாகர் ஆதிக்கம் செலத்தி வந்ததனால் , நாகத்திசை என்ற பெயர் அத்திசைகளைக் குறிக்க வழங்கியதைச் சென்னைத்தமிழ்ப் பேரகராதி, யாழ்ப்பாணத்திலே தொகுக்கப் பட்ட அகராதிகளிலிருந்து எடுத்துக் காட்டுகின்றது.

கௌதம புத்தர் இயக்கர்கள் வாழ்ந்த மகியங்கனைப்பகுதிக்கும் வந்திருந்தார். இயக்கர்களிடம் எதிர்ப்பைக்கண்ட அவர்,

இயக்கர்களை அவ்விடத்திலிருந்து விரட்டி, தம்முடைய மதத்தை அவ்விடத்திலே நிலைநிறுத்தினாரென்று கூறப்படுகிறது. சிவவழிபாட்டுக்காரர்களாக இருந்த இயக்கர்கள் பௌத்தத்தை ஏற்க மறுத்திருக்கக் கூடும் என்று நம்ப இடமிருக்கிறது.

நாகர்கள், இயக்கர்கள் என்பவர் யார் என்பது பற்றி அறிஞர்களிடையே ஒருமைப்பாடு இன்னும் ஏற்படவில்லை. தென்னிந்தியாவிலே திராவிட இனப் பண்பாட்டோடு தொடர்புடைய பெருங்கற் பண்பாட்டுச் சின்னங்கள் இலங்கையில் பல பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. நாகர்களும் இயக்கர்களும் திராவிடர்களாக தமிழர்களாக இருக்க வேண்டும் என்ற கருதுகோள் சிலரால் முன்வைக்கப்படுகிறது.

இந்தியாவின் வட கீழ் எல்லைப் புறத்திலே நாகர்கள் என்ற மங்கோலியத் தொடர்புள்ள இனத்துக்கு நாகலாந்து என்று தனி மாநிலம் காணப்படுகின்றது. வரலாற்றுக் காலத்திற்கு முன்பும் வரலாற்றுக் காலத்திலும் நாகர்களைப் பற்றிய பல குறிப்புகள் இந்தியாவின் பல்வேறு பாகங்களிலிருந்தும் கிடைக்கின்றன. நாகமன்னர்கள் ஆரிய மன்னர்களோடும், திராவிட மன்னர்களோடும் வேறுபாடு காட்டாது கலப்புக்களை ஏற்படுத்தி வந்துள்ளனர். சங்ககாலப் புலவர்களுள்ளே நாகர் என்று பெயருள்ளவர் சிலர் காணப்படுகின்றனர்.

பண்டைக்காலத் தமிழகத்திலே சேர நாடு என்று பெயர் பெற்றிருந்த பிரதேசத்தின் பெரும்பகுதியாக அமைந்து, இன்றும் தமிழோடு ஒப்புமைகள் பலவற்றைக் கொண்டு விளங்கும் மலையாள மொழி வழங்கும் கேரளாமாநிலத்திலே நாயர் என்னும் சமூகத்தினர் வாழ்கின்றர். நாகபாம்பு வழிபாட்டின் எச்சசொச்சங்கள் அவர்களிடையே இன்றும் காணப்படுகின்றன. நாகர் என்ற சொல் நாயர் என்று திரிந்து வழங்குகின்றதெனக் கொள்ளலாம். கேரளமும் தமிழ்நாட்டுக்கு மேற்குத்திசையில் அமைந்திருக்கிறது. நாகர் வடகீழ் இந்தியாவிலிருந்து வந்தவர்களானால், பண்டைக்காலத் தமிழகத்திலும் பண்டைக்கால இலங்கையிலும் மேற்குத் திசையிலே குடியேறியது ஏன்? எப்படி? என்ற வினாக்கள் எழுகின்றன.

தமிழகத்தின் தென்மேற்கிலே நாகர் கோயில் என்ற துறைமுகமும் தென் கிழக்கிலே நாகபட்டினம் என்ற துறைமுகமும் காணப்படுகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்குக் கரையிலே நாகர் கோயில் என்றொரு துறை உண்டு. நாகதம்பிரான் வழிபாட்டுச் சின்னங்கள் வட இலங்கையிலே ஆங்காங்கு காணப்படுகின்றன. இலங்கையின் வட மேற்குத் திசையிலே பாடல்பெற்ற சிவத்தலமான திருக்கேதீச்சரம் காணப் படுகிறது. கேதுவழிபட்ட தலமாதலால் திருக்கேதீஸ்வரமென்ற பெயரேற்பட்டதாகக் கூறப்படுவது நாகர்கள் வழிபட்ட சிவத்தலம் என்பதையே குறிப்பதாக இருக்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர் கோவிலும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நாக பட்டினமும் இலங்கைக்கு நாகர்கள்; வந்த வழிகளா அல்லது இலங்கையிலிருந்த நாகர்கள் தமிழகத்துக்குச் சென்ற வழிகளா என்பது ஆராய்ச்சிக்கு உரியது.

கௌதமபுத்தர் காலத்திலேயே பௌத்த சமயத்தை விரும்பி ஏற்று விட்டார்களாகக் கூறப்படும் நாகர்கள் அநுராதபுரத்திலிருந்த சிங்கள மன்னர்கள் பௌத்தசமயத்தை ஏற்றுக் கொண்டதும் அவர்களுடன் நெருங்கிக் கலந்தனர். மகாவம்மிசம் குறிப்பிடும் சிங்கள மன்னர் வரிசையிலே, தேவநம்பிய தீசனின் தம்பியாக ஒரு நாகன் குறிப்பிடப் படுகின்றான். அவனுடைய தாய் நாகர் குலத்தவளாக இருந்திருக்க வேண்டும். கி.பி. இரண்டாம் நூற்றாண்டு நடுப் பகுதியிலிருந்து மூன்றாம் நூற்றாண்டு நடுப்பகுதி வரையிலே, மன்னர்கள் பலர் நாகர்களாக விளங்குவதைக் காணலாம். திருமணத் தொடர்புகள் மூலமாக, நாகர்குலத்தவர்கள் அநுராதபுரச் சிம்மாசனத்தைக் கைப்பற்றியிருந்தனர்

என்றே இந்த நிலைமைக்கு விளக்கம் கொடுக்க வேண்டும்.

மகாவம்மிசம் முதலிய பாளி நூல்களும் மணிமேகலை முதலிய தமிழ் நூல்களும் குறிப்பிடும் நாகத்தீவு அல்லது மணிபல்லவம் எது என்பது ஒரு காலத்திலே ஆராய்ச்சிக்குரிய விடயமாக இருந்தது. இன்றைய நயினாதீவே அந்த இடம் என்று ஒரு காலத்திலே கருதப் பட்டது. அதனால், அங்கே நாகதீவு விகாரைகட்டியெழுப்பப்பட்டு, அது சிங்கள பௌத்தர்களின் யாத்திரைத் தலமாக மாறியுள்ளது. 1936 இல் வல்லிபுரத்திலே கண்டெடுக்கப்பட்ட பொன்னேட்டுச் சாசனம் யாழ்ப்பாணக் குடா நாடு முழுவதும் நாகத்தீவெனப் பெயர் பெற்றிருக்க வேண்டும் என்ற விளக்கத்தைத் தந்துள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணக் குடா நாடு வரை, மாதோட்டம் உட்பட, இலங்கையின் வட மேற்குப் பிரதேசம் நாகர்கள் குடியிருப்பாக ஒரு காலத்திலே விளங்கியிருக்க வேண்டும். வரலாற்றுக் காலத்திலே, இலங்கையின் ஏனைய சில பகுதிகளிலும் தென்கீழ்த்திசையிலுள்ள மகாகமம், வட கீழ்த்திசையிலுள்ள கொட்டியாரம், மத்தியிலுள்ள மாத்தளை முதலிய இடங்களும் நாகர் குடியிருப்புக் களாக மாறின.

வரலாற்று ஆய்வுக்கு, இலக்கியச் சான்றுகளிலும் பார்க்க, சாதனச்சான்றுகள் வலுமிக்கனவாகக் கொள்ளப்படுகின்றன. தமிழகத்துச் சங்ககாலத்துக்குச் சமமான காலத்தைச் சேர்ந்தவனவா ஆதிப்பிரமிச் சாசனங்களிலே நாகர் அரசுகள் குறிப் பிடப்படும் இடங்களை நோக்க வேண்டும். நாகர்கள் நாடு முழுவதும் பரவி வாழ்ந்தமை அச்சாசனங்களிலே வரும் ஆட்பெயர்களிலிருந்து புலப்படுகிறது. வடமாகாணத்தின் தென்னெல்லையிலுள்ள வவுனியாவுக்கு அண்மையிலுள்ள பெரிய புளியங்குளத்துக் குகைச்சாசனங்களிலே நாகமன்னன் குறிப்பிடப்படுகிறான். நாகத்தீவிலிருந்த மக்கள் வவுனியாவரை பரவி, அப்பிரதேசத்தில் அரச உரிமையும் பெற்றிருந்திருக்கின்றனர்.

வடமேற்கு மாகாணத்திலே, நாக மன்னர்கள் பற்றி இரண்டு சாசனங்கள் குறிப்பிடுகின்றன. அவற்றுள் ஒன்று பழைய பிராமிச்சாசனகாலத்தையும் மற்றது சிறிது பிந்திய காலத்தையும் சேர்ந்தது. இலங்கையிலுள்ள மிகப்பழைய சிவன் கோவில்களுள் ஒன்றாகக் கருதப்படும் முன்னேசுவரம் வடமேற்கு மாகாணத்தைச் சேர்ந்தது. அனுராதபுர மாவட்டத்திலும் ஒரு சாசனம் நாகமன்னனைக் குறிப் பிடுகிறது. அந்தச்சாசனம் காணப்படும் இடம் வடமாகாண எல்லைக்கு அண்மை யிலே, மேற்குத் திசையிலே அமைந் துள்ளது.

மத்திய மலைநாட்டிலே, கண்டி மாவட்டத்திலே, இருவேறு இடங்களிலள்ள சாசனங்கள் ஒவ்வொன்று நாகமன்னரைக் குறிப்பிடுவது வியப்பாக உள்ளது. நாகமன்னர் ஆட்சி கண்டி மாவட்டத்திலே பரவியிருந்தமைக்கு இலக்கியச்சான்று கிடைக்கவில்லை. இச்சாசனங்கள் மட்டுமே சான்று பகருகின்றன.

வடக்குமாகாணம், வடமேற்கு மாகாணம், மத்தியமாகாணம் முதலிய பிரதேசங்களிலே நாக அரசு ஒன்றா பலவா, பலவானால் எத்தனை இருந்தன என்பதைத் தீர்மானிக்கத் தேவையான சான்று இதுவரை கிடைக்கவில்லை. நாக அரசு கிழக்கு இலங்கையிலும் தன்னுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ள மைக்குச் சான்று கிடைத்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள குசலங் கந்தக் குகைச்சாசனத்திலும் அம்பாறை மாவட்டத்திலுள்ள மொட்டைக்கல்லுக் குகைச்சாசனத்திலும் நாக உபராசர்கள் குறிப்பிடுகின்றனர். யுவராசா என்ற வட சொல்லே உபராசா என்று பாகத்திரிபு பெற்றுள்ளது. கிழக்கிலே இளமைப் பருவத்திலே இளவரசராக முடிசூடி அனுபவம் பெற்ற பின் வடக்கிலே முழு அரசராகப் பதவி உயர்வு பெற்றுப்போகும் வழக்கம், நாக மன்னர்களுக்குள்

இருந்திருக்குமாவென்பது ஆராயத்தக்கது.

நாகர்கள் இலங்கையின் வடகரையிலிருந்தும் மேற்குக்கரையிலிருந்தும் சிறிது சிறிதாக இலங்கை முழுவதும் பரவியிருக்கின்றனரென்பது தெளிவாகத் தெரிகிறது. தமிழ் நாட்டுக் கடற்கரைக்கு எதிர்க்கடற்கரையிலே நாகர் குடியிருப்புகள் இலங்கையிலே அமைந்திருந்ததனால், இலங்கை நாகர்கள் தமிழர்களாக அல்லது தமிழர்களோடு உறவுகளை வளர்த்துக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். இயக்கர்கள் என்போர் யார் என்பது இன்னும் சிக்கலான வினாவாகக் காணப்படுகிறது. மகாவம்மிசத்தின்படி, இயக்கப்பெண்ணான குவேனியை மணம் முடித்த விஜயன், அவளின் உதவியுடன் இயக்கர்களைக் கொன்றொழித்து, இலங்கை மன்னன் ஆகின்றான். பின்பு குவேனியையும் இரண்டு பிள்ளைகளையும் காட்டுக்கு விரட்டி விடுகிறான். அப்பிள்ளைகளின் பரம்பரையே இன்றுள்ள வேடர்கள் என்று கூறப்படுகிறது. இது எவ்வாறாயினும் இயக்கர்களின் பரம்பரையில் வந்தவர்களே வேடர்கள் என்ற கருத்து இன்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது வேடர்களின் முன்னோர் நாகர்களுக்கும் முன்பு இலங்கைக்கு வந்தவர்களாக இருக்க வேண்டும். நாகர்கள் காலப்போக்கிலே தமது தனித்துவத்தை இழந்து, தமிழர் சிங்களவர் என்போருடன் இரண்டறக்க கலந்துவிட்டனர். இயக்கரும் பெரும் பகுதியினர் இவ்வாறே மாறிவிட்டனர், இயக்கருள் ஒரு பகுதியினர் இன்றும் தமது தனித்துவத்தைப் பேணும் வேடராக வாழ்ந்துவருகின்றனர்.

" ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்"என்னும் முன்னோடித் தமிழர் வரலாற்று நூலை எழுதிப்புகழ் கொண்ட கனகசபைப்பிள்ளை,இயக்கர்களும் மத்தியஆசியாவிலிருந்து இமயமலையூடாக இந்தியாவுக்குட் புகுந்த மங்கோலியத் தொடர்புள்ள இனத்தவரேயென்பர். இவர்கள் ஒரு காலத்திலே ஆரிய மயமாக்கு தலைத் தீவிரமாக எதிர்த்து நின்றவர்களாக இருந்திருக்க வேண்டும். இராமாயணப்புகழ் பெற்ற இராவணன், இலங்கை இயக்கர் குலமன்னர் ஆவான். ஆரிய திராவிடப்பூசல் கூர்மையடைந்துள்ள நிலையிலே, தமிழ்நாட்டிலே, வட இந்தியஇராமனை எதிர்த்துப் போராடிய இராவணன் திராவிட மன்னனாகவும் தமிழ்மன்னனாகவும் போற்றப்படுவதைக் காணலாம். தமிழ் நாட்டு மக்கள் இராவணன் மேல் உரிமை பாராட்டுவது இருபதாம் நூற்றண்டு நிகழ்ச்சியாகும்.

இயக்கர்களைக் கயிலாயமலையோடு தொடர்புபடுத்தும் மரபு, அவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வங்காளம் ஊடாக வந்தவர்களாகலாம் என்ற நம்பிக்கைக்கு ஆதாரமாகக்கூடும். இராவணனுடைய உறவினனும் மூத்தவனுமான குபேரன் இலங்கயரசை இராவணனுக்கு விட்டு விட்டுக் கயிலைக்குச் சென்றான் என்று கூறப்படுகின்றது. கயிலாயநாதன் என்ற பெயர் சிவபெருமானை மட்டுமல்லாது குபேரனையும் குறிக்கின்றது. குபேரசைலம் என்பது கயிலாமலையே என்று அகராதி கூறும். இராவணன் கயிலாயமலையைத் தூக்கிக்கொண்டு இலங்கைக்கு வர முயன்றான் எனப்படுகிறது. தன் இனத்தவர்களான இயக்கர்களுக்குக் கயிலாய மலைமேல் இருந்த உரிமையையே அவன் நிலைநாட்ட முயன்றான் போலும்.

வங்காளத்தின் வடபகுதியே தாந்திரீக வழிபாடு அல்லது ஆகம வழிபாட்டு வளர்ப்புப்பண்ணை என்று கூறப்படுகிறது. கயிலாயத்தைத் தலைமைத்தானமாகக் கொண்ட சைவாகம முறையிலான வழிபாடு வங்காளத்திலே காலத்தால் மிகப்பழையது. இராவணன் முதலிய இயக்கர் சிவவழிபாட்டுக்காரார் என்பது இராமாயணத்திலே அழுத்திக் கூறப்பட்டுள்ளது. சைவசமய குரவர்களுள் முதல் இருவரான திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் தங்களுடைய தேவாரப்பதிகங்களிலே இராவணனுக்குப் பெருமுக்கியத்துவம் வழங்கியுள்ளனர். சிவசின்னமான திருநீற்றின் சிறப்புகளை வரிசைப்படுத்தும் சம்பந்தர்" இராவணன் மேலது நீறு" என்று கூறும் போது, மானிடப்பிறவியெடுத்தவர் எவருமே

இவ்வாறு உயர்த்திக் கூறப்படவில்லை என்பது உற்றுக் கவனிக்கப்பட வேண்டும்.

சைவசமய குரவர்களுள் நான்காமவரான மாணிக்கவாசகர் சிவபெருமான் மண்டோதரிக்கு அருள் செய்தமையைப் பாடியுள்ளார். இராவணன் தேவியான மண்டோதரி தேவதச்சன் மயனின் புதல்வியெனப்படுகிறாள். மாதோட்டமே மண்டோதரியின் சொந்த இடம் என்றொரு கருத்து நிலவுகிறது. மகாதுவட்டா என்பவன் சிவபிரானை வழிபட்ட இடமே மாதோட்டமாக மருவியதென்ற கருத்து சிலராலே முன் வைக்கப்படுகிறது. கம்மாளர்களுடைய குடியேற்ற நகராக மாதோட்டம் விளங்கியதென்ற கருத்தினை முதலியார் இராசநாயகம் முன்வைத்துள்ளார். நாகர்களும் ஒரு பிரிவினரே இந்தக் கம்மாளர் என்று அவர் கருதுகிறார். நாகர்களும் ஒரு காலத்திலே சிவ வழிபாட்டுக்காரராக இருந்துள்ளனர்.

வங்காளத்திலே சிவவழிபாட்டோடு குமார வழிபாடும் ஒரு காலத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்கியது. குமார வழிபாடு தமிழகத்து முருக வழிபாட்டோடு இணைந்து நிற்பது வேடர்கள் இலங்கையில் முருக வழிபாட்டை "குமர"க் கடவுளுக்கே நிகழ்த்து கின்றனர். கதிர்காமத்திலிருந்து முல்லைத்தீவு வரை , " குமார" வழிபாட்டுச் சான்றுகள் காணப்படுகின்றன. கிழக்கிலங்கையிலுள்ள படைக் கோவில்கள் பல வேடராலேயே தொடக்கி வைக்கப்பட்டவையாக கூறப் படுகின்றன.

இலங்கையிலுள்ள ஆதிப் பிராமிச் சாசனங்கள் மக்கள் பௌத்தத்துக்கு மதம் மாறிய நிலையிலே தோன்றியவை. அச் சாசனங்களிலும் பெரும்பாலானவை பௌத்த குருமாரின் பெயர்களையும் அக்குருமாருக்கான குகைகளை ஏற்படுத்தியவரின் பெயர்களையும் கூறுகின்றன. பௌத்தம் பரவுதற்கு முன்பு, மக்களிடையே வழங்கிய ஆட்பெயர்கள் அற்றுப் போகாத நிலை அது. "சிவா" என்ற பெயர் இலங்கை முழுவதும் பயின்று காணப்படுகின்றது. பௌத்தம் இலங்கைக்கு வரமுன்பு இலங்கை சிவ பூமியாக விளங்கியிருக்க வேண்டும்.

இலங்கையெங்கும் சிவா என்ற பெயர் பயின்று காணப்பட்ட போதும் மிகவும் அதிகமாகப் பயின்று காணப்பட்ட பிரதேசம் இலங்கையின் தென்கீழ்த் திசையாகும். அம்பாந்தோட்டை மாவட்டத்திலே கதிர்காமத்தைச் சுற்றியுள்ள மகாகமப்பற்றிலேயே" சிவா" குமார" முதலிய பெயர்கள் செறிந்து காணப்படுகின்றன. தென்கீழ் இலங்கையிலுள்ள திருக்கோவிலுக்கு எதிரிலே கடலுக்குள் இராவணன் கோட்டை இருந்து அழிந்ததாக வரும் செவிவழிச் செய்தி இவ்விடம் நினைவு கூரத்தக்கது.

இலங்கையின் வடகிழக்குத் திசையில் அமைந்துள்ள திருகோணமலை மாவட்டமும் இராவணனோடு தொடர்புபடுத்தப்படுகின்றது. கோணமலைக்குன்றை வாளால் வெட்டியவனெனவும் கன்னியா வெந்நீர் ஊற்றுகளை அமைத்தவனெனவும் கோணேசுவரத்தை வழிபட்டவனெனவும் இராவணன் கூறப்படுகிறான்.

திருகோணமலை முதல் திருகோவில் வரை இயக்கர் பூர்வகுடிகளாக வாழ்ந்த தென்கீழ்த்திசையிலே கிழக்குப் பகுதியில் அமைந்திருத்தல் கவனிக்கத்தக்கது. கொக்கட்டிச்சோலை தான் தோன்றீசுவரர் கோவிலெனப் பெயர் பெற்ற மட்டக்களப்புப் பிரதேசத்திலே பிரசித்தி பெற்ற சிவன்கோவிலிலே சிவன் கோவில் வழிபாடும் வேடர்களாலேயே தொடக்கி வைக்கப்பட்டதாக வித்துவான் வி.சீ. கந்தையா கூறுவர்.

இராவணன் முதலியோர் புலஸ்தியமுனிவர் பரம்பரையிலே வந்தவரென இராமாயணம் கூறும். சைவசமயத்தவரான சோழப்பெருமன்னர் இலங்கையைக் கைப்பற்றிய போது, இராவணனை நினைவுகூரும் வகையிலே, புலஸ்திய நகர் என்ற புதிய தலைநகரை அமைத்தனர். அதுவே பொலனறுவை என்று மருவியது.

# கிறீஸ்த்தாப்தத்திற்கு முந்திய கதிர்காமம்

**பேராசிரியர் கலாநிதி சி.க.சிற்றம்பலம்**

வரலாற்றுத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

கதிர்காமம் இன்று இந்துக்கள் பௌத்தர்கள், இஸ்லாமியர் ஆகியோரின் புனித ஸ்தலமாக விளங்கினாலும் இப்பகுதியில் கீறீஸ்தாப்தத்திற்கு முன் பிருந்தே இந்துக்களின் வழிபாடு தழைத்திருந்ததற்குப் பல சான்றுகள் உள. இச்சான்றுகளில் இப் பகுதியில் ஆட்சி செய்த கதிர்காமச் சத்திரியர்கள்( கதிர்காம அரசர்கள்) பற்றி மகாவம்சத்தில் காணப் படும் குறிப்பு பிரதானமானது. (M.V.xix. 54) இவர்கள் பற்றிய செய்தி இலங்கையின் வரலாற்றுக்காலத்து முதல் மன்னனாகிய தேவநம்பியதீஸன் ஆட்சியின் சமகாலத் திலேயே காணப்படுகின்றது. இத்தகைய வரலாற்றுக்கால நாகரீக வளர்ச்சிக்கு வித்திட்ட மையமாக வடக்கே தேவ நம்பியதீஸன் ஆட்சி செய்த அநுராதபுரம் இருந்தது போன்று தென்கிழக்கே மாகம (திஸ்ஸமகாராம) இருந்தது. திஸ்ஸ மகாராமவிலிருந்து 12 மைலுக்கு அப்பால் உள்ளதே கதிர்காமமாகும். அநுராதபுர, மாகம கலாசார வளர்ச்சிக்கு வித்திட்ட கலாசாரம் பெருங்கற்காலக் கலாசாரம் என்பதும் இத்தகைய கலாசாரமே தென் னிந்திய திராவிட கலாசாரத்திற்கு வித்திட்ட தென்பதை அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகள் எடுத்தியம்புகின்றன. (Sittampalam.S.K 1980) இதனால் பெருங் கற்காலக்கலாசாரப்பின்னணியில் வளர்ச்சி பெற்ற தமிழக நாகரிகத்தைப் போன்றே ஈழத்து வரலாற்றுக் கால நாகரிகமும் காணப்பட்டதென்றால் மிகையாகாது. எனினும் தமிழகத்தைப் போன்றல்லாது ஈழம் தனித்தீவாக அமைந்திருந்ததும், பௌத்தத்தின் வருகையால் இப்பகுதியில் கலாசார ரீதியில் பெருமாற்றம் ஏற்பட்டது எனலாம்இருந்தும் பௌத்தத்திற்கு முந்திய நம்பிக்கைகள் பல பௌத்தத்தின் வருகை யால், தமிழகத்தில் வட இந்தியச் செல்வாக் கால்உருமாறியது போன்று உருமாறாமல் பழையநிலையில் அப்படியே இலங்கையில் பேணப்படவும் வாய்ப்பிருந்தது. இத்தகைய நம்பிக்கைகளில் ஒன்றாகிய முருக வழிபாடு பண்டு தொட்டுத் திளைத்திருந்த இட மாகவே கதிர்காமம் விளங்கியதற்குப் பல் வகையான சான்றுகள் காணப்படுகின்றன.

கதிர்காமம் பற்றி முதல் முதலாகக் கிடைக்கும் செய்தி பௌத்த மதத்தின் வருகையோடே காணப்படுவது பௌத்தம் பரவ முன்னர் இங்குள்ள அரசர்கள் இந்துக்களாகவே விளங்கினர் என்பதை உறுதி செய்வதாக அமைகின்றது. இச்செய்தியில் பௌத்தர்களின் வழிபாட்டுச் சின்னமாகிய அரசமரக் கிளையை வைபவ ரீதியாக நாட்டப்படும் வைபவம் நடைபெற்றபோது அதிற் கலந்து கொண்ட பிரமுகர்களாக சத்திரிய மன்னர்களான கதிர்காமச்சத்திரியர், சண்ட னாகமச்சத்திரியர்கள் குறிக்கப்படுகின்றனர். இம்மன்னர்களுக்குரிய சத்திரியர்கள் என்ற ஆரிய வர்ணப் பெயர் கூட மகாவம்சம் எழுதப்பட்ட காலத்திற் புகுத்தப்பட்ட ஒரு பெயராகவும் இருந்திருக்கலாம். இச் சத்திரியர்களோடு பிராமணனான " திவக" குறிக்கப்படுவதும் பொதுவாகப் பிராமணர் இந்துக்களாக இக்காலத்தில் விளங்கியதால் இச்சத்திரிய மன்னர்களும் பிராமண ரைப்போல் இந்துக்களாகவே விளங்கினர் என்பதையும் உணர்த்து கின்றது எனலாம். இவற்றோடு இச்சத் திரியர்கள் வாழ்ந்த கதிர்காமம், சண டனாகம, பிராமணத்திவக ஆகியோர் வாழ்ந்த இடங்களில் பௌத்தர் களின் வழிபாட்டுச் சின்னமாகிய அரச மரக்கிளை நடப்பட்டதாக மகா வம்சம்

குறிக்கும் செய்தியும் இன்னோர் வரலாற்று உண்மையை எடுத்துக்காட்டுகின்றது. பொது வாகவே பிரசாரமதங்களின் வரிசையில் சேர்ந்துள்ள பௌத்தமதம் தமது மதம் பரப்பும் நடவடிக்கைகளில் ஒன்றாகப் பிறவழிபாட்டிடங்களை அமைத்தல் அல்லது அவை இருக்கும் இடத்திற்கருகில் தமது வழிபாட்டிடங்களை அமைத்தல் மரபாகக் காணப்பட்டது. மகா வம்சத்தில் கூட ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட பௌத்த வழிபாட்டிடங்கள் பல பழைய யக்ஷ வழிபாட்டிடங்களில் அமைக்கப்பட்டதற்கான சான்றுகள் இருப்பதால் அரசமரக் கிளையும் செல்வாக்குள்ள இந்துக்களின் வழிபாட்டிடத்திற்கு அருகில் நடப்பட்டமை பௌத்தம் இங்கு பரவியமையை எடுத்துக்காட்டுகின்றது எனலாம்.

பௌத்தத்தின வழிபாட்டுச் சின்னமாகிய அரசமரக்கிளை நாட்டப்படுவதைக் கூறும் மகாவம்சம் கதிர்காமச் சத்திரியர் இதற்களித்த ஆதரவு பற்றியோ அன்றி இவர்கள் பற்றிய மேலதிக விவரத்தையோ வேறெவ்விடத்திலும் குறிக்கவில்லை. இவர்களின் ஆதரவு பௌத்தத்திற்கு ஆரம்பத்திலிருந்து கிடைத்திருந்தால் பௌத்த மத வரலாற்றை எழுதுவதையே தமது நோக்கமாகக் கொண்டிருந்த மகாவம்ச ஆசிரியர் அது பற்றி நிச்சயமாகக் குறித்திருப்பார். இது பற்றிய செய்திகள் மகாவம்சத்தில் காணப்படாமை இவர்கள் இந்துக்களாக விளங்கியமையை எடுத்துக் காட்டுகின்றது எனலாம். மகா வம்ச ஆசிரியர் பொதுவாகவே பௌத்த சமய நம்பிக்கையில்லாத இந்துசமய நம்பிக்கைகள்" தவறான நம்பிக்கைகள்" என்ற கோட்பாட்டில் இவை பற்றித் தமது நூலில் குறிப்பிடுவதையும் , இவை பற்றிய விவரத்தைத் தவிர்த்திருந்ததையும் இந்நூலினை நன்கு ஆராயும் போது தெளியலாம்.

பௌத்தத்தின் பரவல் அரச மரக் கிளை நாட்டு வைபவத்தோடு மட்டும் நிற்கவில்லை. கதிர்காமத்திற்குக் கிட்ட1/2 மைல் தொலைவில் பௌத்தர்களின் வழிபாட்டுச் சின்னம் " கிரி" விகாரை" என்ற பெயரில் கட்டப்பட்டது. தேவநம்பிய தீஸனின் தம்பியாகிய மகாநாக மாகமத்தில் தனது அரசிருக்கையை அமைத்திருந்த போதே இத்தகைய வழிபாட்டிடம் கட்டப்பட்டதென்ற ஐதீகம் நிலவினாலும் கூட இக் கட்டிடத்தில் கற்களிற் பொறிக்கப்பட்ட பிராமி எழுத்துக்களை ஆராய்ந்த பரணவித்தானா இதன் காலம் கி.மு. 1 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று கூறியுள்ளார். ( Paranavitana , S 1928-33 )

பௌத்த மதத்தின் பரம்பலின் அடுத்த கட்டம் மகாநாமவின் பேரனாராகிய கோத்தபயாவின் காலத்ததாகும். கி மு. 2 ஆம் நூற்றாண்டில் முற்பகுதியில் மாகமவில் ஆட்சி செய்த இவன் கதிர்காமச் சத்திரியர்களை அழித்து அப்பாவத்திற்குப் பிராயச்சித்தமாக இப்பிரதேசத்தில் 500 விகாரைகளைக் கட்டியதாக ஒர் ஐதிகத்தை இன்னோர் நூலாகிய தாதுவம்சம் குறிப்பிடுகிறது. (D.V.33-34) இதிலிருந்து துட்டகைமுனுவின் பேரனாராகிய இவன் காலத்தில் றோகணைப் பிரதேசத்தில் பௌத்தம் மேலோங்கியது தெளிவாகின்றது. பௌத்தத்தின் மேலோங்கலை எடுத்தியம்புவதாகவே கௌதம புத்தர் தரிசித்த இடங்களாக ஈழத்தில் பதினாறு இடங்கள் குறிக்கப்படுகின்றன. இப்பதினாறுஇடங்களில் அட்டவணையைப் பார்க்கும் போது பௌத்தம் இவ்விடங்களிற் செழிப்புற்ற காலத்தில் அதற்கு ஒரு பழைமையான பாரம்பரியத்தை எடுத்துக் காட்டவே இத்தகைய ஐதீகம் புகுத்தப்பட்டது போல் தெரிகிறது. இவ்வரிசையில் கதிர்காமம், திஸ்ஸமகாராம , கிழக்கே தீகவாபி ஆகிய பகுதிகள் குறிக்கப்படுகின்றன. அண்மைக்காலத்தில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுச் சான்றுகள் கதிர்காம அரசர்கள் ஆட்சி தீகவாபி வரை சென்றிருந்ததை எடுத்தியம்புவதும் ஈண்டு நினைவு கூரற்பாலது. (Gunawardana, R.A.L.H: 1982)

கதிர்காமத்தோடு தொடர்புடைய மன்னர்களை அழித்ததாகத் தாதுவம்சம் கூறினாலும் இவர்களின் மூன்றாம், நான்காம் தலைமுறையினர் பௌத்த

மதத்திற்கு அளித்த தானம் பற்றிக் கிடைக்கும் செய்தியை உற்று நோக்கும்போது தொடர்ந்து இவர்கள் இப்பகுதியில் வாழ்ந்ததும் இவர்களில் பலர் பௌத்தர்களாக மாறியதும் தெளிவாகிறது. எனினும் இவர்களிற் சிலரது ஆதரவு தொடர்ந்தும் கதிர்காமத்திலுள்ள இந்து ஆலயத்துக்குக் கிடைத்திருக்கலாம். காரணம் " கந்த உபத" என்ற சிங்கள நூலில் துட்டகைமுனு எல்லாளனுடன் சண்டைக்குச் செல்ல முன்னர் கதிர்காமக் கடவுளை வழிபட்டு ஆசிர்வாதம் பெற்றுக் சண்டைக்குச் சென்றதாகவும் எல்லாளனுடன் அடைந்த பெருவெற்றிக்குப் பின்னர் இங்கே கோயில் அமைத்தான் எனவும் குறிப்புண்டு . இத்தகைய குறிப்பு ராஜவலியா என்ற சிங்கள நூலிலும் உண்டு. பௌத்த குருமார் பொதுவாகவே தாமெழுதிய பாளி நூல்களாகிய மகாவம்சம், சூளவம்சம் ஆகியவற்றுள் பிறமத அநுஷ்டானங்களை மறைப்பது வழக்கம். ஆனால் சிங்கள மொழியில் அமைந்த நூல்களில் இவை குறிக்கப்படும் மரபை நோக்கும் போது கிறீஸ்தாப்தத்திற்குமுன்னர் இங்கே முருகன் ஆலயம் ஒன்றிருந்ததையே இத்தகைய ஐதீகம் எடுத்துக்காட்டுகின்றது. என்று எண்ணுவதிற் தவறில்லை. துரதிஷ்ட வசமாக இந்துக்கள் இக்காலத்தில் கருங்கற்களை உபயோகித்துக் கட்டிடங்களை ஆக்குவதற்குப்பதிலாக அழியும் பொருட்களால் இவற்றை ஆக்கியதால் இவ்வாலயம் பற்றி விரிவான தகவல் நமக்கு கிடைக்கவில்லை எனலாம்.

மேற்கூறிய யூகம் சரியானதே என்பதன்ன உறுதி செய்வதற்கு பல சான்றுகள் உள. ஈழத்திலும் முருக வணக்கம் தமிழகத்தைப் போன்று தொன்மையானதே. ஆதிச்சநல்லூரில் முருகனது வேல் , காவடிச் சின்னங்கள் காணப்படுவது போன்று இத்தாழிக்காட்டிற்கு நேரெதிரே உள்ள இலங்கையிலுள்ள தாழிக்காடாகிய பொம்பரிப்பிலும் வேல் கிடைத்துள்ளது. ( Sittampalam S.K.1980) இதே போன்று அண்மைக்காலத்திற் கதிர்காமத்திற்குக் கிட்ட தாழிக் காடொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதுவும் பல புதிய செய்திகளைத் தரலாம். இவவாறே தான் கீறிஸ்தாப்தத்திற்கு முந்திய ஈழத்துப்பிராமிக்கல்வெட்டுக்களில் முருக் வணக்கத்தினைக் குறிக்கும் " குமார" "விசாக" வேல் போன்ற பெயர்களும் காணப்படுகின்றன.(சிற்றம் பலம் சி.க, 1976 ) கதிர்காமச் சத்திரியர்களின் பரம்பரையில் ஒருவர் "குமார" என்ற பெயரைத் தாங்கி நின்றதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. (Paranavitana S. 1970)

மேற்கூறிய செய்திகளோடு கதிர்காமத்தில் காணப்படும் வழிபாட்டு முறைகள் கூடக் கிறிஸ்தாப்தத்திற்கு முன்னரே இங்கு புகுந்த வழிபாட்டு முறை என்பதனை ஐதீகங்களும் பிற ஆதாரங்களும் எடுத்துக்காட்டுகின்றன. ( வேலுப்பிள்ளை, ஆ 1977 ) காரணம் இக் காலத்திற்குப் பின் பௌத்தம் இங்கு நன்கு வேருன்றி விட்டதால் இவை இங்கே புகுவதற்கான வாய்ப்பிருக்க வில்லை. அத்துடன் கதிர்காமத்தில் கிறீஸ்தாப்தத்திற்கு முன்னர் தமிழகத்தில் நிலவிய வழிபாட்டு முறையினை ஒத்துக் காணப்படுவதும் தன் பழமைக்குச் சிறந்த சான்றாகும். தமிழகத்திலும் சங்க காலத்திலே தான் முருக வணக்கம் மேன்மை பெற்றிருந்தது முருகன் பற்றிய ஐதீகங்களில் தமிழகத்தில் முருகன் சூரனைக் கொல்லத் திருச்செந்தூரில் பாசறை அமைத்துப் பின்னர் திருப்பரங்குன்றத்தில் மணாளனாகக் காட்சி கொடுத்த செய்தி இருப்பது போல , ஈழத்து ஐதீகங்களும் சூரனைக் கொல்ல முருகன் கதிர்காமத்தில் பாசறை அமைத்துப்பின்னர் வள்ளியை மணந்த இடமாகவும் அதனைக் குறிப்பதிலிருந்து இரு பிராந்தியங்களிலும் முருகனது போர் , திருமணம் ஆகியன பற்றிய ஐதீகங்களைத் தத்தம் பிரதேசத்துடன் இணைத்த மரபு பழைய மரபாகவே காணப்படுவது புலனாகின்றது. தமிழ் நாட்டிற் தோன்றிய முருகனின் போர் , திருமணம் பற்றிய ஐதீகம் பின்னர்

கிறிஸ்தாப்பத்திற்கு முன்னரே ஈழத்திற்கு எடுத்து வரப்பட்டு ஈழத்துக்குரிய மரபாகவும் பேணப்பட்டஒரு நிலையைக் கூட இவ்வைதீக மரபு எடுத்துக் காட்டு கின்றதெனலாம். சங்கஇலக்கியங்களில் முருகன் பற்றிய வர்ணனைகளில் குறிஞ்சிக் குமரனாக அவனை வர்ணிக்கும் தன்மையை நோக்கும்போது இத்தகைய குறிஞ்சி நிலப்பிரதேசமாகிய கதிர்காமப் பிரதேசத்தில் இவ்வைதீகம் வளர்வதற்கு நல்ல வாய்ப்பும் இருந்தது எனலாம். படை வீடுகளின் வாடை கதிர்காமத்திற்கும் உண்டு என்றால் மிகையாகாகது. இத் தகைய மரபோடு கதிர்காமச் சத்திரியர்கள் பற்றிக் கூறும் பிராமிக் கல்வெட்டுக்கள் தமிழகத்திலிருந்தே இவ் ஐதீகங்கள் பரவி இருக்கலாம் என்பதை உணர்த்துகின்றன.

இப் பிராமிக் கல்வெட்டுக்களில் இச்சத்திரியர் சந்ததியில் ஒருவன் " மஜ்ஜி மகாராஜ" எனக் குறிக்கப்படுகின்றான் இக்கல்வெட்டு மட்டக்களப்பு மாவட்ட த்திலுள்ள கென்னலரில் உளது.

(Paranavitana, S.1970) இதனைப் பரணவித்தானா "மற்சய" வம்சத்தினர் வட இந்தியாவிலிருந்து சிங்கள மக்களோடு கூடி வந்த 'மற்சய மகாராஜன்' என வாசித்து இம் "மற்சய" வம்சத்தினர் வட இந்தியாவிலிருந்து சிங்கள மக்களோடு கூடிவந்த மற்சய வம்சத்தினர் எனக் கொள்கிறார்கள். உண்மையிலே அதே கல்வெட்டில் கதிர்காமச் சத்திரியர்களில் கல்வெட்டுக்கள் எல்லாவற்றிலும் காணப்படுவது மீன் வடிவம் காண ப்படுவது மீன் சின்னத்தையுடைய மகா ராஜன்,மீனவர்" எனப்பட்ட பாண்டியா ஆண்ட பிரதேசத்தினரே என்பதை உணர்த்துகின்றது. கதிர்காமச் சத்திரியாகள் கல்வெட்டுக்களில் 10 சகோதரர்கள் கூட்டாட்சி பற்றி வரும் குறிப்புக் கூட பாண்டி நாட்டில் 5 சேகாதரர்கள் கூடி ஆட்சி செய்த " பஞ்சவர்" "ஐவர்" ஆட்சி முறையையே எடுத்துக் காட்டுகின்றது. எனலாம். ( குணசிங்கம் செ.1970) இக் கல்வெட்டுக்கள் குறிக்கும் "அய" என்ற பதமும் பாண்டி நாட்டிலே குறுநில மன்னர்களாக விளங்கிய ஆயரைக் குறித்து நிற்கின்றதெனலாம். இதனால் இக்கா லத்தில் பாண்டிய பிரதேசத்தில் மேலோ ங்கியிருந்த முருக வழிபாடு ஈழத்து முருக வழிபாட்டு முறைகளோடு சங்க மித்தது எனக் கொண்டாலும் பிழையாகாது.

கதிர்காம வழிபாட்டு முறை மிகப்பழைய ஒரு பாரம்பரியத்தைக் கொண்டிருந்ததைச் சங்க இலக்கிய ங்களில் வரும் குறிப்புகளிலிருந்தும் அறியலாம். சங்க இலக்கியங்களிற் தலைவிக்குக் காதல் நோயால் மெய்ப்பர்டு தோன்றும் போது தாயும் செவிலியும் அந்நோய் பற்றி அறியமுருக வணக்கத்தின் பூசாரியாகிய வேலனை அழைப்பதும் வேலன் வேல்தாங்கி, பலியிட்டு, வெறி யாட்டமாடி அந்நோயைத் தீர்ப்பதும் பற்றிய குறிப்பு வருகின்றது. இத்தகைய வழிபாட்டில் வேலன் , கடம்பமரங்களின் கீழோ அன்றி ஆற்றோரங்களிலோ களம் அமைத்து மூங்கில் கீற்றுக்களால் அதனைப் பல பிரிவுகளாகப் பிரித்தல் கூறப் படுகின்றது. இப்பிரிவுகள் " பல் பிரம்பு" என்று சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றன. ஏறத்தாள 64 பிரிவுகள் களத்தில் இருந்தன. இக்களத்தில் தான் ஆட்டுக்கடாவின் பலியிற் பெற்ற குருதி ஊற்றப்பட்டு பிற நிவேதனப் பொருட்களும் படைக்கப்பட்டன. இவ்வெறியாட்டத்தில் வேலன் மீது ஏறி அவனை இயக்கும் தெய்வமே முருகன் என்பதைச் சங்க இலக்கியங்கள் பகருகின்றன. குறுந்தொகையில் 362 ஆம் பாடலிலுள்ள " முருகையர் வந்த முதுவாய் வேல" என்ற குறிப்பு அதனையே உணர்த்துகின்றது. இதன் பொருள் முருகென்ற தெய்வம் உன் உடலில் ஏறப் பெற்று வெறியாடி வந்த வேலனே என்பது பொருளாகும். இது மட்டுமன்றி முருகன் உறையும் இடங்களாக " வேல் ஏந்தி ஆடும் வேலன் இழைத்த வெறியாடும் களத்திலும் அவன் உறைதற்குரியவன்" என்ற குறிப்பும் கூட "களம்" முருகன் உறையும் இடம் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. அது பற்றி ஆராய்ந்த

அறிஞர் பிற்காலத்தில் யந்திரம் மூலம தெய்வத்தை யாசிக்கும் மரபின் மூலத்தை வேலன்களம் வரையும் பழக்கத்திலிருந்தும் பழைய வழிபாட்டையொட்டிய வேலன் பூசாரிகளின் வழிபாடு களிலிருந்தும் கண்டறியலாம் என்கின்றனர். ( சாமி, பி. ல. 1971) கதிர்காமத்திலும் யந்திர பூசையே முக்கியம் பெறுவதை நோக்கும் போதும் , இதனை இயற்றும் " கப்புறாளை" என அழைக்கப்படும் பிராமணரல்லாத பூசாரிகள் "வேலன்" வழிவந்த பூசாரியினரே எனக் கொள்ளலாம் . வேலன் பூசாரிகள் களத்திற்கு மந்திரமுரைத்து முருகனைத் தம்முள் வரவழைத்து வழிபாடு செய்தது போன்று கப்புறாளையினரும் செய் கின்றார் எனலாம். இத்தகைய பழைய வழிபாட்டு முறையைத்தான் தொல் காப்பியரும்"கந்தழி வழிபாடு" என அழை த்தார் எனலாம். கந்தழி என்பதன் முதற் பொருள் ஒரு மரத்தறி என அமைந் தாலும் முருகனை ஒரு குறிப்பிட்ட பொருளில் தோன்றி அருள் செய்யுமாறு வேண்டும் பணடைய வழிபாட்டு முறையையே கந்துடைநிலை எனக் கொள்ளப்படுகின்றது. ஆயுதங்கள் தனியான வழிபாட்டுச் சின்னங்களாகவே பண்டைய வழிபாட்டில் இயங்கின. வேல், சூலம் ஆகியன தெய்வமுறை வழிபாட்டுச் சின்னங்களே. காலக்கிரமத்தில் இவற்றின் தனியான முக்கியத்துவம் குறைந்து தெய்வங்களின் ஆயுதங்களாக இவை மாறின.

வள்ளிதான் முருகனின் முதல் மனைவி. தேவசேனை பின் வந்த மனைவி. கதிர்காமத்திற் கூட வட நாட்டுக் கலி யாணகிரி பற்றிக் கூறும் மரபு – தேவ சேனையிடம் கந்தனை அழைத்துச் செல்ல இவர் வந்ததாகக் கூறப்படும் மரபு - ஒரு வகையில் தெய்வசேனை வழிபாடு கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே தான் இங்கு புகுந்தது என்பதை எடுத் துக்காட்டுகிறது எனலாம்.( சபாநாதன் குல. 1947) இக்காலத்தில் வாழ்ந்த முஸ் லீம்களின் பெரியாரன கர்மநபிக்கு அமைக்கப்பட்ட மசூதியுடன் முஸ்லீம் களுக்கும் இவ்விடம் புனித இடமாகியது. **(Navaratnam Ratna 1973)**

இதனால் கதிர்காமத்தில் பௌத்த விகாரையும் அரச மரமும் முக்கியம் பெற்றாலும் கூட ஆதியில் முருக வழிபாடு தழைத்திருந்ததை போர்க் கடவுளாகிய முருகன் பற்றிய ஐதீகங்கள், துட்ட காமினியை அவன் வணங்கிய தன்மை, வழிபாட்டு முறைகள் ஆகியன எடுத்துக்காட்டுகின்றன எனலாம். துரதிஷ்ட வசமாக ஈழத்து இந்து மதம் பற்றிய தகவல்களைத் தரும் இந்துமத நூல்கள்காணப்படாததால் இவை பற்றிய தொடர்ச்சியான வரலாற்றை நாம் அறிய முடியவில்லை. இக்கால இந்து மதம்பற்றிய தகவல்களைக் கூட பௌத்தமத வரலாறு பற்றிக் கூறும் நூல்களில் இருந்து தான் பெற வேண்டியுள்ளது. பௌத்தம் கிறீஸ்தாப்தத்திற்கு முன்னரே கதிர்காமப் பகுதியிற் கால் கொண்டாலுங் கூட கிறீஸ்தாப்தத்திற்கு முந்திய காலத்தில் இப்பகுதியில் இந்து மத நம்பிக்கைகள் நன்கு வேரூன்றியிருந்தன. இந் நம்பிக்கைகளில் வட இந்திய ஆரிய நம்பிக்கைகளும் சேர்ந்து பரவியிருந்தன. தமிழகத்திலும் சங்ககாலத்திலேயே சுதேச திராவிட சமய நம்பிக்கைகளுடன் வட இந்திய வேதநெறிச் சமய நம்பிக்கைகளும் சங்கமாகிய நிலையை ஈழத்திலும் காண லாம். கதிர்காமத்திலும் வேதநெறிக் கலாசார நம்பிக்கைகள் பரவியிருந்தமை க்கும் சான்றுகள் உள. கதிர்காமத்திற்கு 5 மைல் தொலைவிலுள்ள சித்துல் பவுலவில் ( செல்லக் கதிர்காமம்) கிடைத்துள்ள பிராமிக் கல்வெட்டுக்கள் பல சான்று களைத்தருகின்றன. இங்குள்ள கல் வெட்டொன்றில் 'பமணவச 'என்ற குறிப்பு வருகின்றது. இங்கே வரும்'வச'என்பது 'வற்சய' கோத்திரத்தினைச் சேர்ந்த பிரா மணர்களைக் குறிக்கும் எனலாம். இதே இடத்திலுள்ள இன்னோர் கல்வெட்டில் " பமண மருகுட கௌதமி" என வரும் குறிப்பு கௌத்தமி கோத்திரத்தை சேர்ந்த பிராமணரைக் குறிக்கிறது எனலாம்.

பிறிதோர் கல்வெட்டில் காணப்படும் 'ஆசாரிய பராசரி சலேன ' என வரும் குறிப்பும் பராசர கோத்திரப் பிராமணரையே குறிக்கிறது எனலாம். Paranavitana,S. 1970: 601: 656) கி.மு 1ஆம் நூற்றாண்டில் ஆட்சிசெய்த வட்ட காமினி மன்னனுக்கெதிரான கிளர்ச்சியை ஆரம்பித்த பிராமண 'திஸவும்' இப்பகுதியைச் சேர்ந்திருந்ததை நோக்கும் போதும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் சுதேச திராவிட இந்துமத நம்பிக்கைகளோடு இக்காலத்தில் ஆரிய நம்பிக்கைகளும் இப்பிரதேசத்தில் பரந்திருந்தமை புலனாகின்றது.

எப்படித்தான் பௌத்த மதப் படர்ச்சி இங்கே காணப்பட்டாலுங் கூட கிறீஸ்தவ சகாப்த காலத்திலும் இந்துமத நம்பிக்கைகள் இங்கே வேரூன்றியிருந்ததை இருபிராமிக் கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன.இவை முறையே திஸ்ஸமகாராம, கிரிண்டஆகிய இடங்களில் உள. திஸ்ஸமகாராம கதிர்காமத்திலிருந்து 12 மைல் தொலைவிலும் கிரிண்ட திஸ்ஸமகாராமாவுக்குத் தென் கிழக்கே 8 மைல் தொலைவிலும் உள்ளன. இதனால் இவைகூறும் செய்திகள் கதிர்காமச்சுற்றாடலைப் பிரதிபலிப்பனவாக அமையுமாதலால் அவை பற்றி ஆராய்தல் பொருத்த முடையதாகும். முதலில் கிருண்டக் கல் வெட்டை நோக்குவோம். அது பின்வருமாறு அமைந்துள்ளது.

'இந்த எல்லையற்ற பிரபஞ்சத்தில் புத்தருக்குச் சமமாக ஒருவருமில்லை. எல்லாப் பொருள்களிலும் அவரது நிலையை அடைதல் மிகவும் எளிதன்று. சர்வஞ்ஞரான அவருக்கு மேலான ஆசிரியர் எவருமிலர். அவரே மேலான புகலிடமாவார்; அவரே உலகத்தின் கண்; அ வரே உண்மையாகவே சுயம்பு ஆகவும் உள்ளவர். இப்பாறையிலுள்ள விகாரையில் ' நாக ' என்ற பெயருள்ள உபராஜா புத்த பெருமானிடம் சரண் அடைந்தார். (இதனால்) தவறான சமய நம்பிக்கைகளைக் கைவிட்டு நல்ல வழியில் ஈடுபட்டார்.

திஸ்ஸமகாராமக் கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது.

'சித்தம்!

பேராசையே பயத்தின் மூலமாகும். பற்று அதிகரித்தல் உண்மையாகவே ஒரு தவறான நம்பிக்கையில்லையா? பற்று, ஆசை ஆகியவற்றிலிருந்து மக்களைத் திசைதிருப்ப முடியாதா? இவ்வாறு சிந்தித்துக் கொண்டும் அரசருக்குரிய கிராமத்தில் தவறான நம்பிக்கைகளை நீக்கும் நோக்கத்துடனும் மதி நுட்பம் வாய்ந்தவனும் நாக என்ற பெயர் உடையவனுமாகிய உபராஜ பதவியை வகித்தநான் புத்த பெருமானைச் சரணடைந்து இதைச் செய்தேன்.

மேற்கூறிய இரு கல்வெட்டுக்களும் 1945இல் பேராசிரியர் பரணவித்தானாவினால் வெளியிடப்பட்டவை.(Paranavitana ,S .1945) இக்கல்வெட்டுக்கள் இரண்டும் தவறான சமய நம்பிக்கைகள் பற்றிக் பொதுவாகவே பாளி நூல்களில் இந்துமத நம்பிக்கைகளைக் கூறும்போதெல்லாம் இவை தவறான சமய நம்பிக்கைகள் என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படுவதை நோக்கும் போது இவை கூறும் தவறான சமய நம்பிக்கைகள் இந்துமத நம்பிக்கைகளே என்பதில் ஐயமில்லை. கிருண்டிக் கல்வெட்டு " தவறான சமய நம்பிக்கைகள் " என்று வெறுமனே கூற, திஸ்ஸமகாராமக் கல்வெட்டு " அரசனுக்குரிய கிராமத்திலுள்ள தவறான சமய நம்பிக்கைகள்" எனக் கூறுகிறது. திஸ்ஸமகராம ரோகண இராட்சியத்தின் தலைநகர். புத்தர் கால்பட்ட இடங்களில் ஒன்று என்ற ஐதீகமுடைய இடம் . இக் கிராமத்தில் இந்து மத நம்பிக்கைகள் தளைத்திருந்தன என்றால் நீண்ட ஒரு வழிகாட்டு மரபை உடைய கதிர்காமத்தில் இவை தழைத்திருக்க வில்லை என்று கூற முடியுமா? கந்தன் சிங்கள மக்களின் நாற்திசைக் கடவுளரில் ஒருவன் அத்துடன் முருகன் பற்றிக் கூறும் போது எந்த இடத்திலுள்ள முருகனென்றாலும் அவனை " கதிர்காமத் தெய்யோ" என அவர்கள் அழைப்பது

முருகனென்றாலும் அவனை " கதிர்காமத் தெய்யோ" என அவர்கள் அழைப்பது கூடஇக் கடவுளின் பழமைக்கும். பாரம் பரியத்துக்கும் சிறந்த உரைக் கல்லாகும். இத்தகைய வழிபாட்டுடன் ஆரிய சமய நம்பிக்கைகளும். இப்பகுதியில் கிறீஸ் தாப்தத்திற்கு முன்னர் பரவி யிருந்ததைப் பிராமிக் கல்வெட்டுகளும் எடுத்தியம்பு கின்றன எனலாம்.

இத்தகைய பின்னணி தமிழகத்தில் குறிப்பாகத் திருப்பரம் குன்றம் போன்ற முருகனது படை வீடுகளில் அருகருகே நடைபெற்ற வேதநெறி வழிவந்த வழிபாட் டையும்.சுதேசவேலன் வழிபாட்டு முறை யையும் நமக்கு எடுத்துக்காட்டுகிறது எனலாம். இதனால் கதிர்காமம் என்ற சொற்பிரயோகம் வடமொழி வழியான சொற்பிறப்பைக் கொடுத்தாலும் தவறன்று கார்த்திகேய கிராமம் கதிர்காமமாகவும் மருவியிருக்கலாம். அல்லது ஒளியும் (கதிர்) அன்பும் (காமமும்) கலந்து விளங்குமிட மாகவும் இஃது விளங்கலாம். சிலர் இதற்கு யானை (கஜா) வாழ் கிராமம் என வும் பொருள் கொள்வர். இன்னும் சிலர் கதிருமரங்கள் நிறைந்து காணப்பட்டதால் இது இவ்வாறு பெயர் பெற்றதென்பார். எவ்வாறாயினும் செவ்வேளான முருகன் ஒளிபடர் மேனியனாக உறையும் பகுதியே இஃதென்பதில் ஐயமில்லை. இம்மலையி லிருந்து காலையிலும் மாலையிலும் செவ் வொளியைக் காணும் வாய்ப்பி ருந்ததால் வனமாகக் காட்சி தரும் இப்பகுதி கதிர்+காமன்(வனம்)எனவும் பெயர் பெற் றிருக்கலாம். காரணம் கொண்டி போன்ற திராவிட மொழிகளில் கமன், கம்ம என்பவை வனத்தைக் குறிக்கும் சொற் களே. காலகதியில் கம, என மருவிக் கதிர்கம, கதிர்காமமாகவும் விரிவு பெற்றிருக்கலாம். அதனால் ஒளிக் காடே பின்னர் ஒளிக்கிராமம் எனவும் மருவி யிருக்கலாம். F

# ஆத்மா எங்கே?

**ஆத்மா என்பது எங்கே இருக்கிறது? ஆத்மா அழிவில்லாதது என்று கூறு கிறார்கள். அப்படியானால் அழியக்கூடிய உடம்பில் அது எங்கே இருக்கிறது? உடல் அழிந்தபின் அது எங்கே போகிறது?**

ஆத்மா பிறப்பதோ உடம்பில் இறப்பதோ இல்லை. அதனால் அது அழிவு இல்லாதது. ஒரு பூ தோன்றுகிறது. பிறகு அது மலர்ச்சி பெறுகிறது. பிறகு வாடுகிறது. கடைசியில் உதிருகிறது. இதுவே நமது உடலுக்கும் பொருந்தும். அதிலும் தோற்றம், வளர்ச்சி, வாட்டம், முடிவு எல்லாமே உண்டு. ஆகவே பிறப்பு, இறப்பு என்ற இரண்டு எல்லை களுக்கிடையே மாற்றம் உண்டாகக் கூடிய எதுவும்அழியக்கூடியதுதான். இந்த இரண்டு எல்லைகளுமே இல்லை என்றால் மாற்றமும் கிடையாது; அது அழிவில்லாதது; இந்த அடிப்படையில் உடல் அழியக்கூடியது; ஆத்மா அழிவில்லாதது.

குயவன் பானையைச் செய்கிறான் அப்போது பானை உருவெடுக்கிறது. உள்ளே காற்றும் நிறைந்து இருக்கிறது. பானைக்கு வெளியேயும் காற்று இருக்கிறது. பானை உண்டான பிறகு காற்று உள்ளே நிறைந்தது. ஆனால் அதைக் குயவன் உண்டாக்கவில்லை. பானை உடையலாம். ஆனால் உள்ளே உள்ள காற்று அழிவதில்லை. பானைக் குள்ளே இருந்த காற்று பானைக்கு வெளியில் உள்ள காற்று வெளியுடன் கலந்து விடுகிறது. பானை உருவாகி மறைகிறது. ஆனால் அதனுள்ளே இருக்கும் காற்று உருவாவதும் இல்லை; மறைவதும் இல்லை.

ஆத்மா நமது அழியக்கூடிய உடம்பி னுள் இருக்கும் அழியாத உண்மை. அது நம்முடைய உடம்புக்கு உள்ளேயும் வெளி யேயும் முன்னும் பின்னும் தொடர்ந்து இருக்கிறது. பானைக்கு உள்ளேயும் வெளி யேயும் அது தோன்றுவதற்கு முன்பும் பின்பும் தொடர்ந்து இருக்கும் காற்றைப் போல.

சுவாமி சின்மயானந்தா
(கீத ஞானயக்ஞ உரையிலிருந்து)

# திருத்தொண்டர் வரலாறு

**சிவநெறிச் செல்வர் ஈரோடு த. விசுவநாதன்**

உலகத்திலே மூத்த இனம் தமிழ் இனம். கல்தோன்றி மண்தோண்றாக்காலத்தே முன் தோன்றிய மூத்த குடி இது. இந்திய துணைக் கண்டம் முழுவதும் தமிழர் தம் நாகரிகமும் பண்பாடும் மொழியும் பரவி இருந்ததை மொகஞ்சதாரோ ஹரப்பா என்ற புதையுண்ட சிந்து வெளி நாகரீக வெளிப்பாடு இதை வலியுறுத்தும். இது உலகத்து வரலாற்று பேராசிரியர்கள் ஏற்றுக் கொண்ட பேருண்மை. சுமார் 6000 ஆண்டுக்கு முன்பு இலக்கணம் கொண்ட மொழி நம் தாய் மொழியாம் தமிழ். இத் தமிழ் மொழியை வளம்படுத்தவும் பலப்படுத்தவும் தோன்றிய கவிஞர்கள் எண்ணிலாதவர்கள். அப்படி தமிழில் தோன்றிய இலக்கண இலக்கிய காவிய நூல்களை உருவாக்கியவர்கள் மிகச் சிலரே. எழுதிய கவிதை எல்லாம் எல்லாராலும் எக்காலத்தும் ஏற்றுக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்க முடியாது. கால வெள்ளத்திலே அடித்துச் சென்ற கவிதைகள் கணக்கில் அடங்கா. ஆனால் சில கவிதைகள் சில காவியங்கள் காலத்தை வென்று வாழ்வது. அப்படிப் பட்ட காவியங்களை தமிழன்னைக்கு ஊட்டி மகிழ்ந்த புலவர்கள் எத்தனை எத்தனை யோ பேர். ஆனால் அவர்களில் எல்லாம் தெய்வப்புலவர் என்று அழைக்கப்படுபவர்கள் இருவரே ஆவர். ஒருவர் வான்மறை தந்த வள்ளுவ பேராசன். மற்றொருவர் நாம் சிந்திக்க இருக்கும் தீந்தமிழ் காவியமான திருத்தொண்டர் வரலாறு என்னும் மாபெரும் காவியத்தை நமக்கு அளித்த தெய்வச் சேக்கிழார் ஆவார். தெய்வத் தன்மை என்பது என்னவென்றால் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் கொள்வது. அதுபோல் புலவர்பெருமக்கள் உலகத்தின் நிகழ்ச்சிகள் அனைத்தையும் தம்முள் அடக்கி தம் நூலில் பெய்துள்ளனர். இதனை உணர்ந்து உலகம் வியக்கின்றது. இப்படி பல்வேறு துறைப்பட்ட புலமையை இவர்கள் எப்படி பெற்றார்கள். யாரிடம் கற்றார்கள்? எது துணை செய்தது? என்ற சிந்தனையின் தெளிவாக தெய்வமே துணை செய்தது என்று உணர்ந்தார்கள். எனவே இவ்விருவரையும் தெய்வப்புலவர்கள் என்று அழைத்தார்கள். தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருக்குறள் என்ற அமர நூலை வழங்கினார். திருக்குறள் இலக்கணம் என்றால் இத்திருத் தொண்டர்வரலாறு அதற்கு இலக்கியமாக விளங்குகிறது. திருத்தொண்டர்வரலாறு என்ற இந்த நூல் குறள் தந்த வாழ்வாக குறள் ஓவியமாக துலங்குவதை காணலாம். இனி இந்த மாபெரும் காவியம் தந்த சேக்கிழார் பெருமானின் வரலாற்றை காண்போம்.

தமிழ் நாடு பண்டை நாளில் சேர சோழ பாண்டிய, பல்லவ, கொங்கு தொண்டை நாடுகள் என பல்வேறு மன்னர்களின் ஆட்சியில் திகழ்ந்தது. ஒவ்வொரு நாடும் ஒவ்வொன்றில் சிறப்புடையது. பாண்டிய நாடு பைந்தமிழின் தாயகம். சேர நாடு யானை தந்தத்திற்கு பேர் பெற்றது. அதனால் தான் நம் கவி பாரதி சேரத்து தந்தங்கள் பரிசளிப்போம் என்றார். சோழநாடு சோறுடைத்து. நம் தமிழகத்தின் நெற்களஞ்சியம் அல்லவா? நம் தஞ்சை

மாவட்டம். தொண்டை நாடு சான்றோருடைத்து இந்த தொண்டை நாட்டை குறிப்பிட வந்த சேக்கிழார் பெருமான் தீய என்பன கனவிலும் நினையா சிந்தைவாழ் மாந்தர் வாழ் நாடு என்றார் என்றால் அந்த நாட்டின் சிறப்பை எப்படிச் சொல்லுவது. இப்படிப்பட்ட தொண்டை நாட்டிலே புலியூர் கோட்டம் என்பது ஒரு பகுதி. அதன் தலை சிறந்த ஊர்களிலே ஒன்று குன்றத்தூர். தற்போது சென்னைக்கு அண்மையில் உள்ள குன்றத்தூர் இவ்வூரே. இந்நூலில் சேக்கிழார் என்ற குடியில் சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றியவர்தான் நம் வரலாற்று தொடரைத் தந்த தெய்வப்புலவர்.

இவருக்கு பெற்றோர்கள்வைத்த பெயர் தெரியவில்லை. எனவே இவர் குடும்பப்பெயரான சேக்கிழார் என்ற பெயர் இவருக்கு உரியதாயிற்று. இவர் கல்வி கேள்வி முதலிய 64 கலைகளிலும் பெரும் புலமை பெற்று இருந்தார். இவரது புலமை அறிந்த சோழ மாமன்னன் குலோத்துங்க சோழன் அவருடைய அறிவு ஆற்றலை வியந்து அவருக்கு உத்தம சோழன் என்ற பட்டத்தினை வழங்கி தன் சோழ பேரரசில் முதல் அமைச்சராக ஆக்கினார். அமைச்சர் தொழிலில் தன் நிகரில்லா வகையில் தனி முத்திரை பதித்தார். நாடாளும் மன்னனான குலோத்துங்க சோழனுக்கு அவ்வப்போது தமிழகத்தில் வாழ்ந்த திருத்தொண்டர் வரலாற்றினை எடுத்துக் கூறினார். அடியார்வரலாறு கேட்டு ஆனந்த பரவசமுற்றார் . தன் முதல் அமைச்சரை பார்த்து இந்த அடியார்களின் வரலாறை நீங்கள் ஒரு மாபெரும் காவியமாக அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று வேண்டினான். என்னுடைய சோழபேரரசு முடிந்து போனாலும் அழிந்து போனாலும் என் ஆட்சியின் மணி முடியாக தங்கள் காவியம் திகழும். தாங்கள் இந்த காவியத்தை எழுத வேண்டும் என்று வேண்டினான். சேக்கிழர் பெருமான் அளவில்லாத பெருமைமிக்க அடியவர்களின் புகழை சொல்வதற்கு எனக்கு என்ன தகுதி இருக்கின்றது. இந்த அடியவர்களுடைய வரலாற்றை திருவாருர் புற்றிடம் கொண்ட பெருமான் அடியெடுத்துக் கொடுக்க நம்பியாருரர் திருத் தொண்டத்தொகை என்று அற்புதமாகிய பாடல்களை பாடியுள்ளார். நம்பியாரூரர் பாடிய அந்த அடியவர் வரலாற்றை எளியவனாகிய என்னால் எப்படி பாட முடியும். தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே அல்லவா? நம்பியாருரருக்கே திருவாருர் பெருமான் அடியெடுத்து கொடுத்ததால் தானே அவரே திருத்தொண்டத்தொகை பாடினார். இறைவன் திருவருள் இல்லாமல் அடியவர் பெருமையை யாருமே சொல்ல முடியாது என்றார். அதற்கு மன்னன் உங்கள் தெய்வ நலத்தை நான் முழுதும் உணர்ந்தவன். தாங்கள் தான் இந்த காவியத்தை செய்யவேண்டும். அதற்கு தில்லை கூத்த பெருமான் திருவருள் செய்வான் என்று எடுத்துரைத்து வேண்டினான். சேக்கிழாரும் தில்லை சென்று கூத்தபெருமான் திருமுன் நின்று வேண்டி அவன் திருவருள் குறிப்பை உணர்ந்து செயல்படு வோம் என்று தெரிவித்தார்.

சேக்கிழார் காவியம் பாட நினைத்தவுடன் செய்த முதல் வேலை தம் முதல் அமைச்சர் பதவியை துறந்ததுதான். இந்த காவியத்தில் பேசப்படுகின்ற அடியவர்கள் அத்தனைபேரும் ஈசன் அடியவராக வேறு யாதொன்றிலும் பற்று இன்றி வாழ்ந்தவர்கள். உலகத்தின் ஆசைகள் துறந்த வர்கள். பெரும் தவ சீலர்கள் மிகச் சிறந்த ஞானியர்கள். ஓட்டையும் பொன்னையும் ஒன்றாக நோக்குபவர்கள். பட்டம் பதவியை துறந்தவர்கள். ஆண்டவன் பால் அன்பு செலுத்துவதே அன்றி முக்தி வீட்டையும் நாடாதவர்கள். அந்த அடியவர்கள் வரலாற்றை எழுதப்போகின்ற தெய்வப்புலவர் தன்னை தயார் படுத்திக் கொண்டார். முதல் அமைச்சர் பதவியையும் உத்தம சோழன்என்ற பட்டத்தையும்

துறந்து அன்பே வடிவமானார். அடியவர்க்கு அடியவர் ஆனார். பொன்னம்பல கூத்தன் திருவடியே எல்லாம் என்ற உணர்வு பெற்றார். பட்டம் பதவியை துறந்து நின்றார். பைந்தமிழை துணை கொண்டார். அமைச்சர் பொறுப்பை துறந்தார். அம்பலவாணனுக்கு அடியவர் ஆனார். தில்லையை நோக்கி சென்றார். அங்கே கூத்த பெருமான் எழுந்தருளியுள்ள தில்லை சிற்றம்பலத்தின் முன் சென்று கைகளை தலைமேல் தூக்கி கண்களில் நீர் சொரிய மெய் நடுங்குற உரை தடுமாற பெருமானே சொல்லற்கரிய அடியவர் பெருமையை சொல்ல வேண்டுவது மன்னர் விருப்பம். காலத்தின் கட்டாயம் போல் இருக்கிறது. என்ன செய்வேன் எளியேனுக்கும் அடியவர் பெருமையை சொல்லி துதிக்க ஆசை இருக்கிறது. ஆனால் அதற்கான தகுதி எனக்கு இல்லை. தாங்கள் தான் அந்த தகுதியை எனக்கு அளிக்க வேண்டும். தங்கள் திருவுள குறிப்பை எளியேன் எவ்வாறு அறிவது? தாங்கள் தான் நான் உணர தங்கள் திருவுள குறிப்பை புலப்படுத்தி என்னுள் இரண்டற கலந்து இந்த அடியவர்களின் வரலாற்றை சொல் வேண்டும். என்னை ஒரு கருவியாக கொண்டு அடியவர் வரலாற்றை தாங்கள் தான் அருள் செய்து உருவாக்க வேண்டும் என்று பொன்னம்பலத்தை பன்முறை வலம் வந்து கூத்த பெருமான் நடம் புரியும் முன்றலில் வீழ்ந்து வணங்கினார். அப்போது வானிலே ஒரு பேர் ஒளி எழுந்தது. சேக்கிழாரே உம்முடைய திருத்தொண்டர் வரலாற்றை நாமே உம் உள்ளிருந்து முற்றிவைப்போம். உலகெலாம் என்ற அடியை முதலாகக் கொண்டு காவியம் பாடு அ ந்த காவியம் கார் உள்ளளவும் கடல் நீர் உள்ளளவும் கன்னித்தமிழ் உள்ளளவும் தொண்டர்கள் உள்ளளவும் நின்று நிலவும் என்று கூறினார் கூத்த பெருமான். இனி திருத் தொண்டர் வரலாற்றை காண்போம்.

திருக்கயிலாய மலையில் உபமன்யு முனிவர் என்ற ஒரு முனிவர் தன்னுடைய சீடர்களோடு அமர்ந்து அவர்களுக்கு அறிவுரை சொல்லிக் கொண்டிருந்தார். அந்த உபமன்யு முனிவர் சிவபெரு மானைத் தவிர வேறு எந்த தெய்வத்தையும் கை எடுத்து வணங்காத கொள்கையைக் கொண்டவர். மாணவர்களோடு அவர் உரையாடிக் கொண்டிருந்த போது வான் வெளியிலே 1000 ஞாயிறு ஒரு சேர்ந்தது போல ஒரு பேரொளி தோன்றியது. அந்த பேரொளியினை பார்த்து தேவர் உலகம் எல்லாம் வியந்தது. முனிவர்கள் எல்லாம் இது என்ன அதிசயம் என்று கூடிக்கூடிக் பேசினர். உபமன்யு முனிவரோ தான் இருந்த இடத்தில் இருந்து எழுந்து நின்று தலைக்கு மேல் கை கூப்பி வணங்கினார். சிவபெரு மானைத் தவிர யாரையும் வணங்காத தாங்கள் இந்த சுடரைப்பார்த்து வணங்குவதுஎன்ன என்று கேட்டார்கள். இதிலே மாணவர்களுடைய தெளிந்த அறிவு நுட்பம் புலப்படுகின்றது. மாணவர்கள் ஆசிரியரை பார்த்து சிவ பெருமானைத் தவிர வேறு யாரையும் வணங்காத தாங்கள் இந்த பேரொளியை ஏன் வணங்குகின்றீர்கள் என்று கேட்டதில் இருந்தே சிவபொருமானுடைய அருள் ஒளியை அறிந்தவர்கள் என்ற குறிப்பினை காட்டி பேரொளி அதனின்றும் மாறு பட்டது எனபதையும் உணர்த்த வைக்கிறார். இந்த நூல் திருத் தொண்டர்களின் பெருமையே பேசுகிற நூல். எனவே துவக்கத்திலேயே ஆண்டவனைவிட அடியவர்கள் உயர்ந்தவர்கள் என்பதை நுணுக்கமாக தெரிவிக்கிறார். மாணவன் கேட்ட கேள்விக்கு ஆசிரியர் இந்த பேரொளி தமிழகத்திலேயே இருந்து வருகின்றது. சிவபெருமானை எந்த நேரமும் இடையறாது சிந்தையில் கோயிலாக கொண்டு இறைவனை எழுந்தருளச் செய்து வழிபட்டு வந்த நம்பியாரூரர் திருகயிலாயம் வருகின்றார். அதுதான் அந்த பேரொளி என்றார்.

மாணவர்கள் தங்கள் குருநாதனான

உபமன்யு முனிவரின் திருவடிகளில் வீழ்நது குருநாதனே அந்த நம்பி யாரூரருடைய வரலாற்றினை தாங்கள் எடுத்துரைத்து எங்களை ஆட்கொள்ள வேண்டும் என்று வேண்டினர். உபமன்யு முனிவரும் அதற்கு இசைந்து அவர்களுக்கு வரலாற்றினை சொல்லத்தொடங்கினார்.

மாணவர்களே நம்பியாரூரர் சிவபெருமானுடைய மிகச் சிறந்த முதன்மை தொண்டர். அன்றாடம் நந்தவனத்தில் மலர் கொய்து சிவபெருமானுக்கு மாலை சூட்டி வணங்கி மகிழக் கூடியவர். அப்போது அவருக்கு இருந்த பெயர் ஆலால சுந்தரர் ஆகும். அன்றாடம் அதிகாலை எழுந்து நீராடி நந்தவனம் சென்று மலர் கொய்து மாலையாக்கி சிவபெருமான் திருவடியில் சாற்றி வணங்குவார். ஒருநாள் அப்படி மலர் கொய்ய நந்த வனம் நோக்கி புறப்பட்டார்ஆலாலசுந்தரர். நந்தவனத்தை நோக்கி புறப்பட்டபோதே சிவபெருமான் அங்கு ஓர்நாடகம் நடத்த முடிவு செய்தார். நாம் எல்லாம் உய்வதற்காக அந்த நாடகத்தை அரங்கேற்ற எண்ணினான் சிவபெருமான். உலகத்திலேயே மிகப் பெரிய தவம் செய்தது நம்முடைய தென்நாடு. இந்த நாடு எண்ணிலாத சிவாயலயங்களை கொண்டது. தனக்கென வாழா தகைமை சான்ற அருளாளர்கள் தோன்றிய நாடு. எப்பற்றும் இல்லாமல் சிவப்பற்றே பெரும்பற்றாக வாழ்ந்த சீலர்கள் வாழ்ந்த நாடு. இந்த நாட்டினுடைய பெருமைக்கு இன்னும் ஒரு பெருமை சேர்க்க எண்ணினான் இறைவன். எத்தனையோ காவியங்களைக் கொண்ட தமிழ் மொழியில் அடியவர் பெருமை கூறும் அமர காவியம் தோன்ற எண்ணினான். சிவபெருமானே என்றாலும் நீபோய் அடியவர் பெருமையை பாடு என்று ஆலால சுந்தரருக்கு கட்டளையிட முடியாது. காரணமின்றி காரியம் நிகழாது. தவறின்றி தண்டனை தர முடியாது. இன்ப லோகத்தில் சிவனடியில் முக்தி நலம் துய்க்கின்ற ஆலால சுந்தரரை காரணம் இன்றி மன்னுலகுக்கு அனுப்ப இயலாது. எனவே தான் சிவபெருமான் அங்கு ஒரு நாடகத்தை நடத்தி ஆலாலசுந்தரரை மண்ணுக்கு அனுப்ப காரணத்தை உருவாக்கினார்.

முன்னே குறிப்பிட்ட நம்பியாரூரர் நந்தவனத்திற்கு மலர் கொய்ய சென்றார். அப்போது அம்பிகையின் பணிப்பெண்க ளான அனிந்திகை கமலினி என்ற இருவரும் எதிரே வந்தனர். சிவபெருமான் நம்மேல் கொண்ட கருணையினால் ஆலாலசுந்தரரில் மனத்தை அவர்கள் பால் செலுத்தச் செய்தார். ஒருவினாடி கணனுங்கண்ணும் கலந்தது. காரிகையர் வனம் காரியர் பால் சென்றது. திடுக்கிட்ட ஆலால சுந்தரர் அடுத்த கணமே வேகமாக நந்தவனத்தில் நுழைந்தார். கமலினி அனிந்திகை இருவரும் பெருமாட்டிக்கு மலர் மாலை சாற்ற சென்றனர். ஆலால சுந்தரரும் பெருமான் சந்நிதி நோக்கி சென்றார். இறைவன் திருமுன் சென்ற வுடனே இறைவன் சுந்தரரே நந்தவனத் தில் நடந்தது என்ன? அந்த காரியையர் (கன்னியர்) பால் உன் மனம் சென்ற தல்லவா? அதனாலே நீ தென் நாட்டிலே தமிழகத்திலே தோன்றி அந்த மங்கையரை மணந்து காதலின்பம் துய்த்து பின் திருக்கயிலை வருவாய் என்று பணித்தார். இது கேட்ட ஆலால சுந்தரர் நடுநடுங்கிப் போனார். தலைக்கு மேல் கைகுவித்து கண்கள் அருவி என நீர் சொரிய பெருமான் திருவடிகளிலே வீழ்நது பெருமானே உன் ஆணையை மறுக்க நான் யார்? உன் திருவடிகளை விட்டு நீங்கிச் செல்கின்ற அடியவன் ஆகிய நான் மண்ணுலகில் தோன்றி மனித இயல்புக்கு ஏற்ப நான் மயங்கிப் போவேன். உன் திருவருள் வழி விலகிச் செல்லலாம். அப்படி நடந்தால் தலைவனே நீ என்னை தடுத்து ஆண்டு அருள் செய்ய வேண்டும் என்று வேண்டினார். அதற்கு சிவபெருமான் ஆலால சுந்தரனே அஞ்ச வேண்டாம். அப்படி மண்ணுலகில் நீ பாதை மாறினால் நம் திருவருள் வழி விலகினால் நாமே வந்து உம்மைத் தடுத்தாட் கொள்ளோம் என்று உறுதிப்படுத்தி தன்

நாடகத்தை வெற்றி கரமாக நடத்தி முடித்தார்.

அன்னை உமாதேவியர்களின் சேடியர்களான கமலினி அணிந்திகை இருவரையும் இறைவன் கமலினியை திருவாரூரிலும், அணிந்தையை திருவொற்றியூரிலும் தோன்றி இருவரும் ஆலால சுந்தரரை மணந்து வாழ்ந்து கயிலைவருவீர்களாக என்று பணித்தார். தமிழகத்திலே தென் ஆற்காடு மாவட்டத்திலே இன்று உள்ள பன்ருட்டியும் அதைச் சார்ந்த பகுதிகளும் பண்டை நாளில் நடுநாடு என வழங்கப்பட்டது. அந்த நடு நாட்டில் ஆதி சைவர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் ஓர் மரபினர். இவர்கள் திருக்கோயில்களில் எழுந்தருளியுள்ள அருள் உருவ திருமேனிகளுக்கு மூன்று பொழுதும் திருமுழுக்காட்டி மலர் சாற்றி வழிபாடு செய்யும் பேறு பெற்ற வர்கள். அப்படிப்பட்ட அருளாளர்கள் வாழும் அழகிய ஊர் திருநாவலூர் என்ற ஊர் ஆகும். அப்போது அந்த நாட்டை நரசிங்க முனையரையர் என்ற மன்னர் ஆண்டு வந்தார். அவர் திருநாவலூரிலே சடையனார் என்ற பெருமகனார் மிகச் சிறந்த சிவபக்தர். அவருக்கு இசைஞானியார் என்பவர் பெருமாட்டியானார்

சடையனாரின் மூதாதையர்கள் வழிவழியாக பல தலை முறைகளாக சிவெபருமானுக்கு அடிமை பூண்டவர்கள். அன்பு கொண்டவர்கள். தங்கள் சித்தத்தை சிவன்பாலே அர்ப்பணித்த சீலர்கள். சடையனாரும் இசைஞானியாரும் ஞாலம் உய்ய நல்ல ஓர் மகவு வேண்டும் என்று பன்னெடுநாள் தவம் செய்தார்கள். அவர்கள் தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் ஆலாலசுந்தரர் அவதாரம் செய்வதற்கு ஏற்ற இடம் இதுவே என தீர்மானித்தார்.

நம் தமிழ் மொழியில் அற்புதமான பல சொற்கள் உண்டு ஒரு பசு மாடு கன்று ஈன்றது என்று சொல்லுவது மரபு. பன்றி குட்டி போட்டதுஎன்றுதான் சொலல் வேண்டும் . மாறிச் சொன்னால் பிழை. பெண் ஒருத்தி மகனைப் பெற்றாள் என்று தான் சொல்ல வேண்டும். பெண் குட்டிபோட்டாள் என்று சொல்லக் கூடாது. அதுபோல் இறைவன் ஆணை தாங்கி மண்ணுலகம் வரும் ஆன்றோர்களை பிறந் தவர்கள என்று சொல்லுவதுபிழை. நாம் எல்லாம் நம் வினையை (பாவத்தை) போக்க இவ்வுலகிற்கு வருகின்றோம். எனவே நம் வீட்டில் குழந்தை பிறந்தது என்று சொல்கின்றோம்.

ஆலால சுந்தரர் நாம் எல்லாம் உய்வதற்காக ஆண்டவன் அருள்தாங்கி மண்ணுலகம் வருகிறார். எனவே அத்தகைய அருளாளர்களை பிறந்தார் என்று சொல்வது பெரும் பிழை. அவதாரம் செய்தார்கள் என்று சொல்லுவது மரபு. அவதாரம் என்ற சொல்லுக்கு மேல் இருந்து கீழே இறங்கி வருதல் என்று பொருள் அதனாலே தான் சேக்கிழார் பெருமான் ஆலால சுந்தரர் திருநாவலூரில் தோன்றியதை " சடையானாருக்கு ஏதமில் கற்பின் வாழ்க்கை மனையிசை ஞானியார்பால் தீத கன்று உலகம் உய்ய திரு அவதாரம் செய்தார். " எனப்பாடினார். அவதாரம் செய்த ஆலால சுந்தரருக்கு நம்பியாரூரர் என்று பெயரிட்டனர். இனி நாம் ஆலால சுந்தரரை மறந்து ஆரூரர் என்றே அழைப்போம். நம்பியாரூரருக்கு பத்து மாதம் அனது காலில் சதங்கை ஒலிக்க காதிலே குதம்பை ஆட பாதையிலே நடைவண்டி ஓட்டி விளையாடினார்.

அப்பொழுது நாடாளும் மன்னரான நரசிங்க முனையரையர் பாதையிலே வந்தார். குழந்தையை பார்த்தார். அதன் அழகிலே மயங்கினார். மயங்கிசிந்தையை பறி கொடுத்தார். இந்த செய்தியைச் சொல்ல வந்த சேக்கிழார் பெருமான் நாடாளுபவர் எப்படி இருக்க வேண்டும் என்பதனை நம் கவனத்திற்கு கொண்டு வருகின்றார். பாதையிலே பவனி வருகின்ற மன்னர் பெருமான் அதே பாதையில் சிறு தேர் உருட்டுகிற பத்து மாத குழந்தைக்கும் இடம் கொடுத்து

இடையூறு இல்லாமல் சென்றதை காட்சிப்படுத்துகிறார். நாடாளுபவர் எவ்வளவு எளிமையாக இருக்க வேண்டும் என்பதனை அறிவுறுத்துகின்றார். இன்று நாடாளுபவர் செல்லும் பாதையில் யார் செல்ல முடியும் தடுத்து நிறுத்தப்படுவது அன்றாடம் காணும் காட்சி அல்லவா? ஆனால் அன்று பாதையிலே குழந்தை விளையாட எந்த விதமான ஆரவாரமின்றி மன்னர் சென்றதை காட்சிப்படுத்துகிற சேக்கிழர் பெருமான் நாடாளுவோர் எப்படி இருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார். பாதையிலே விளையாடிய குழந்தையின் அழகிலே தன்னை பறிகொடுத்தமன்னர் குழந்தையின் பெற்றோர்களான சடையனார் இசை ஞானியார் அவர்களை சந்தித்தார். நாடாளும் மன்னனான எனக்கு மகவு இல்லை. இக்குழந்தையை எனக்கு மகனாக தத்து எடுக்க சம்மதியுங்கள் என வேண்டினார். இப்படி குழந்தையில்லாதவர்கள் வேறு குழந்தையை எடுத்து வளர்ப்பதனை சுவீகாரம் செய்தல் என்று வடமொழியில் கூறுவர். இதனை சேக்கிழார் பெருமான் "அன்பினால் மகன்மை கொண்டார்" என்ற அரிய சொல்லை தமிழ் மொழிக்கு வழங்குகிறார். அந்தணர் குடியில் தோன்றிய ஆரூரர் அரசிளம் குமரனாக வளர்கிறார். ஆண்டுகள் பதினாறு ஆயிற்று. பண்டை நாளில் ஆண்களுக்கு திருமண வயது 16. பெண்களுக்கு 12. என இருந்தது. எனவே ஆரூரருக்கு திருமணம் செய்ய பெற்ற தந்தை சடையனாரும் வளர்த்த தந்தை நரசிங்கமுனையரையரும் முடிவு செய்தார்கள். இங்கேயும் கூட சேக்கிழர் பெருமான் ஒரு செய்தியை சொல்லுகிறார். அரசு இளம் குமரனான ஆரூரருக்கு அரசு வழியில் பெண் பார்க்காமல் அந்தணர் குடியில் பெண் பார்ப்பதாக கூறுகிறார். அதற்கு என்ன காரணம் என்றால் மனிதனுடைய அடிப்படை துலங்குவது தோற்றச் சூழல் தான் முன்னிடம் வரும். வளர்ப்புச் சூழல் மாறிக் கொண்டே இருக்கும், அடிப்படை மாறாது, என்பதையும் குறிப்பிடுகிறார். புத்தூர் என்ற ஊரில் வாழ்ந்த சடங்கன என்ற அந்தணர் இல்லத்தில் தோன்றிய பெண்ணை மணம் பேசி திருமணம் செய்ய உறுதி செய்தனர்.திருமண விழா, எப்படி நடந்தது. அந்தணர் இல்லத் திருமணமா அரசு இல்லத் திருமணமா பெண்ணை அந்தணர் குடியிலே தேர்ந்தெடுத்தவர்கள் மணவிழாவினை எப்படி செய்தார்கள் என்று கூற வந்த சேக்கிழார் " மன்னவர் திருவும் தங்கள் மனதிற் திருவும் பொங்க" என குறித்தார். திருமணம் என்றால் எளிதா? மணப்பந்தல் அமைத்தார்கள். பாலிகை இட்டார்கள் . ஊர் எல்லாம் விழாக் கோலம் பூண்டது. வீதிகள் தோறும் தோரணம். மங்கையர்கள் எல்லாம் தீபம் ஏந்தினார்கள். சடங்குகள் எல்லாம் நடக்க தொடங்கின. மணமகனுக்கு மங்கல நீராட்டினார்கள்.மணவிழா கொள்கின்ற ஆரூரரை " நூல் அசைந்து இலங்கு மார்பன் நுணங்கிய கேள்வி மாலோல் மாலையும் தாரும் பொங்க மஞ்சன சாலை புக்கான்" இன்றைய நாகரீகத்தின் விளைவாக கருதப்படுகின்ற குளியல் அறையை அன்றே சேக்கிழார் மஞ்சன சாலை என்று குறிப்பிட்டார். ஒரு பெரும் கவிஞனுக்கு உள்ள இலக்கணங்களில் ஒன்று ஒரு செய்தியை சொல்லி அதன் தொடர்ச்சியை பல பாடல்கள் கழித்து நிலை நாட்டுவது சிறப்பாகும். இங்கே சேக்கிழார் ஆரூரரை நுணங்கிய கேள்வி மேலோங்கி என்று குறிப்பிடுகின்றார். இதற்கு விளக்கம் காண நாம் வள்ளுவரை அணுக வேண்டும். வள்ளுவன் சொன்னான் யாரிடத்தில் நுணுக்கமான கேள்வி இருக்கிறது என்று காணவேண்டும் .பணிவான பேச்சு இல்லாதவனிடம் நுணுக்கமான கல்வி ஞானம் இராது என்றார் வள்ளுவர். இதோ அந்தக் குறள்

" நுணுங்கிய கேள்வியினர் அல்லால்
வணங்கிய வாயினர் ஆதர் அரிது"

இங்கே ஆரூரரை நுணங்கிய கேள்வி மேலான் என்றார் . வள்ளுவன் வழி ஆருரர் பண்புடைய பேச்சு உடையவர் என்பதனை விளக்க வேண்டும். இதற்கு 72 பாடல்களுக்கு பின்னே சேக்கிழார் மிக அற்புதமாக விளக்குகின்றார்.

அதனைக்காண்போம் ஆரூரர் திருஅதிகை வீரட்டானம் செல்லுகிறார். அந்த ஊர் எல்லையை மிதிக்க அஞ்சுகிறார். ஏன் என்றால் அப்பர் அடிகள் உழவாரப் படை கொண்டு கைத்தொண்டு செய்த திருத்தலம். அதைக் காலால் மிதிக்க எனக்கு தகுதி இல்லை என்று ஊர் எல்லையில் உள்ள சித்தடை மடம் என்ற இடத்தில் தங்கினார். உடன் வந்த அன்பர்களோடு அந்த மடத்திலே படுத்து உறங்கினார். எல்லோரும் நன்கு அயர்ந்து தூங்கினர். இரவு மணி2 இருக்கும். ஒரு வயதான பெரியவர் ஆரூரரின் தலைமீது கால் வைத்தார். உடனே ஆரூரர் அந்த ெரியவரை கடும் சொல் சொல்லவில்லை. " உன்னடி என் சென்னியில்" வைத்தனை என்ன" அப்பெரியவர் "திசையறியா வகை செய்தது என்னுடைய மூப்புக் காண்" என்று சொன்னார். ஆரூரர் இந்தப் பெரியவரை போய் வேறு இடம் சென்று படுக்கச் சொல்லாமல் இவர் எழுந்து வேறு இடத்தில் படுத்தார். இப்போது அந்த பெரியவர் மீண்டும் அந்த ஆரூரர் தலையில் வைத்தார். அதே கேள்வி அதே பதில். விடிய விடிய அதிகாலை 5 மணி வரை இந்த தொடர் நாடகம் நடைபெற்றது. பல முறை உதைத்த பின்னும் ஆரூரர் பெரிய வரை வெகுண்டு பேசாமல் பல் காசலும் என்னை உதைத்தீர் நீர்தான் யார்? என்று கேட்க சிவபெருமான் என்னைத் தெரிய வில்லையா? எனக்கேட்டு மறைந்தார். இப்பொழுது புரிகின்றதா? ஆரூரரின் பணிவான பேச்சுத்தன்மை. அதனால் தான் அங்கே நுணங்கிய கேள்வி மேலோன் என்றார். இங்கே ஆரூரரை தமிழ்நாதன் என்று குறித்தார். இனி நாம் கல்யாணக் கூடத்திற்குச் செல்வோம். மங்கள நீராடிய மணவாளன் மணமகனின் மாப்பிள்ளை அழைப்பு த்தொடங்கியது. மங்கையர் எல்லாம் நிறைகுடம் சுமக்க தூபம் ஏந்தி வர தீபங்கள் ஏற்றி வர பாலிகைகள் கையில் எடுத்து வர ஊர்வலம் புறப் பட்டது. மறையவர்கள் மங்கல கீதம் ஒலிக்க மாலை அணிந்து மாப்பிள்ளைக் கோலத்தோடு ஆரூரர் மணமேடையில் அமர்ந்தார். திருமணசடங்குகள் நடக்கத்தொடங்கின. அப்போது அங்கே ஓர் கிழவேதியர் வந்தார். அந்த கிழவரை பார்த்தவர்கள் சிந்தை மயங்கியது. உள்ளம் உருகியது. இரும்பை ஈர்க்கும் காந்தம் போல் அவர்பால் மனம் சென்றது. அந்த முதியவரை பாாத்தவர்கள் நாம் இதுவரையில் இளமைதான் அழகு என்று இருந்தோம். இப்போது தான் தெரிகிறது இளமை அழகல்ல முதுமையே அழகு என்று பேசினார்களாம். அதனை சேக்கிழார் " மொய்த்து வளர் பேரழகு மூத்த வடிவேயோ அத்தகைய மூப்பு என்னும் அதன் படிவமேயோ " எனக் குறித்தார். இந்த வரிகளிலே ஓர் மாபெரும் தத்துவத்தை கவிஞர் நமக்கு விளக்குகின்றார். வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தால் இயற்கையோடு இணைந்து வாழந்தால் இளமையைவிட முதுமையே பேரழகாக இருக்கும். என்கிறார். உதாரணமாக மாம்பிஞ்சு, மாங்காய், மாங்கனி, அதில் எது அழகு. மாங்கனிதானே அழகு இயற்கையின் சட்டப்படி முதுமைதான் அழகாக இருக்க வேண்டும். நம் வீட்டு பழங்கள் எல்லாம் அழகாகவா இருக்கிறது என்று அங்கலாய்க்கிறீர்களா? நம் வீட்டு பழங்கள் பழுத்தபழம் அல்ல காம குரோத லோப மத மாச்சாரியங்களால் வெம்பிப் போனவை அழகு எங்கே இருக்கும். இது பழமா? இல்லையே. அண்ணல் காந்திரியரின் முதுமை உருவத்தைப் பாருங்கள். அது பழம். அழகு கொஞ்சுகிறது. நாமும் காம குரோ தங்களால் அலைக்கழிக்கப்படாமல் இருந்தால் முதுமையில் பழம் போல் அழகாக இருப்போம் என்றார். வெம்பிய காயா அழகிய கனியா உங்கள் முதுமை எனபதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். அழகாக இருந்த பெரியவர் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கின்ற வகையில் உரக்கக்குரல் எழுப்பினார். "இங்கே கூடியிருக்கின்ற பெரியோர்களே

நான் சொல்லுவதைக்கேளுங்கள் என்று கோபமாகக் கூறினார். ஆனால்அங்கு இருக்கின்ற மற்ற மறையவர்கள் அந்த பெரியவரை வரவேற்கிறார்கள். அவர்கள் எப்படி வரவேற்றார்கள் என்று சொல்ல வந்த சேக்கிழார் ஒரு அற்புதமான வாசகத்தைச் சொல்லுகிறார். தமிழர்கள் இல்லம் தோறும் இருக்க வேணடிய வாசகம் அது. இதோ அந்த வாசகத்தைக் கேளுங்கள்.

" நன்று உமது நல்வரவுநுங்கள் தவம்" என்றார். இதைவிட வரவேற்புச் சொல் வேறு உண்டா? அந்தப்பெரியவர் அவர்களைப்பார்த்து ஐயா பெரியவரே நீங்கள் சொல்ல வேண்டியதை அமைதியாக கூறுங்கள் என்றார். ஆனால் அந்தப்பெரியவரோ ஆரவாரமாக ஆர்ப்பாட்டமாக "முதலில் வேள்வியை நிறுத்துங்கள் என் விவகாரத்தை முடியுங்கள் அதன் பிறகு உங்களின் வேலைகளை செய்யுங்கள் " என்றார். ஒன்றும் புரியாமல் அனைவரும் முழித்தனர். அப்போது அந்த பெரியவர் ஆரூரரை பார்த்து உனக்கும் எனக்கும் உள்ள ஒரு வழக்கினை முடிவு செய்த பிறகு உன் திருமணத்தை நடத்து என்றார். ஆரூரரும் அப்படி உனக்கும் எனக்கும் வழக்கு இருந்தால் அதை முடிக்காமல் நான் திருமணம் செய்யேன். உன்னுடைய வழக்கை சொல் என்றார். ஆனால் அந்தப் பெரியவர் ஆரூரரைவிட்டு விட்டு அங்கு இருக்கின்ற அந்தணர்களைப் பார்த்து இந்த திருநாவலூர் ஆரூரர் என் அடிமை என்றார். இதை கேட்டவுடனே அங்கு இருந்தோர் இந்த கிழவன் என்ன நினைத்துக் கொண்டிருக் கின்றார் என்றனர். அந்த வயதான பெரியவரின் வாதத்தினை பார்த்து ஆரூரர் சிரித்தார். சிரித்த ஆரூரனை பார்த்து அந்தக் காலத்தில் உன் பாட்டன் எழுதிக் கொடுத்த ஓலை என்னிடம் இருக்கின்றது. இதற்கு நீ சிரிப்பது என்ன என்றார். இதனைக் கேட்ட ஆரூரர் சிரிப்பு நீங்கி மற்றவர்களைப்பார்த்து அந்தணர்கள் இன்னொரு அந்தணர்க்கு அடிமை என்று சொல்லுவதை இன்று தான் நீ சொல்ல கேட்கின்றோம். நீ சரியான பைத்தியக்காரன் பித்தன் என்றார். அதற்கு அந்த பெரியவர் நான் பித்தன் ஆனாலும் சரி பைத்தியம் ஆனாலும் சரி பேயன் என்று சொன்னாலும் சரிநீ இன்னும் என்ன சொல்லித் திட்டினாலும் அதுபற்றி எனக்கு கவலையில்லை. உன்னுடைய அறிவு வாதங்களை இங்கே வைக்காதே எனக்கு தொண்டு செய் என்றார். இந்த சம்பவத்தினால் சேக்கிழார் பெருமான் தமிழ் சமுதாயத்திற்கு ஒரு செய்தியை சொல்லுகிறார். " வித்தகம் பேசவேண்டாம் பணி செய்ய வேண்டும்" அறிவு வாதங்களை விட்டு விட்டு தொண்டு செய்வதில் முழுக்கவனம் செலுத்த வேண்டும் என்பது அச்செய்தி ஆகும். இந்தப் பெரியவரின் தோற்றப் பொலிவைக் கண்டால் அந்த பெருமான் மீது அளவிலாத பக்தியை உண்டாக் குகிறது. ஆனால் அவரின் பேச்சுக்கள் கோபத்தை உண்டாக்குகின்றன. என்றா லும் ஆரூரர் அந்த பெரியவரைப்பார்த்து ஏதோ என் பாட்டன் ஓலை இருக்கின்றது என்றாயே? அதை காட்டு பார்க்கலாம் என்றார்.

அதற்கு அந்த பெரியவர் ஓலை பார்க்க உனக்கு என்ன தகுதி இருக்கின்றது. நீ எனனுடைய அடிமை. எனக்கு தொண்டு செய்வது தான் உனது வேலை, என்றார். இதை கேட்ட ஆரூரர் மணவறையில் இருந்து எழுந்து அந்த பெரியவரை நோக்கி சென்றார். அந்தப்பெரியவரோ வேகமாக மணவறையை சுற்றினார். அவரைப்பின் தொடர்ந்த ஆரூரர் அந்த பெரியவரின் கரத்தில் இருந்த ஓலையை வலிய வாங்கி கிழித்து எறிந்தார். அப்போது அந்த வயதான பெரியவரை அங்கிருந்தோர் நோக்கி உலகத்தில் இல்லாத வாக்காக அடிமை என்று சொல்லுகிறீர்களே? நீங்கள் எந்த ஊர் என்றார். அதற்கு அந்த பெரியவர் நான் இருப்பது மிகத் தொலைவு எல்லாம் ஒன்றும் இல்லை. உங்கள் பக்கத்தில் இருக்கிற திருவெண்

ணை நல்லூர் தான் என் ஊர். ஆனால் அதை எல்லாம் கேட்டு என்ன செய்ய போகிறீர்கள். எப்போது என் கையில் இருந்த அடிமைச் சீட்டை வலிய வாங்கி ஆரூரர் கிழித்தாரோ அப்போது அவர் எனக்கு அடிமை என்று ஊர்ஜிதம் ஆகிவிட்டது. பேசாமல் என் பின்னால் வரச் சொல்லுங்கள் என்றார். இதனைக்கேட்டு ஆரூரர் திகைத்து போனார். என்றாலும் நீ சொல்லுகின்ற இந்த தவறான வழக்கை உன் ஊரான திரு வெண்ணை நல்லூரிலே வைத்துக் கொள்ளலாம். என்று சொன்னார். வந்த பெரியவர் முன்னே செல்ல சுந்தரர் அவர் பின்னே செல்ல திருமணத்திற்கு வந்தவர்கள் பின் தொடர திருவெண்ணெய் நல்லூரை நோக்கி சென்றார்கள். அந்த பெரியவர் வேகமாக செல்லுகிறார். அவரைப் பின்தொடர்ந்து ஆரூரர் செல்வது எப்படி இருக்கிறது என்றால் காந்தம் இரும்பை இழுப்பது போலே ஆருரர் அவர் பின்னே சென்றார். இதனை சேக்கிழார் " திருமுக காந்தம் சேர்ந்த வல் இரும்பு இணையுமாம் போல் " என்று குறிப்பிட்டார். இன்றைய நாட்டு நடப்பையும் இங்கு சேக்கிழார் பெருமான் குறிப்பிட்டுள்ளார்.

எந்த சம்பவம் எந்த எல்லையில் நடக்கின்றதோ அந்த எல்லையில் வழக்கை விசாரிப்பது மரபு இன்றைய சட்ட முறையும் கூட.இதை அன்றே குறிபபி டுவது நமக்கு வியப்பை அளிக்கிறது. திருவெண்ணெய் நல்லூரில் அன்று இருந்த நீதி முறையை சேக்கிழார் நமக்கு படம் பிடித்து காட்டுகிறார். ஊரில் உள்ள நடுவர்கள் அவை கூடியது. ஆரூரரும் அவரது சுற்றத்தாரும் அந்த பெரியவரும் நடுவர் அவை முன் நின்றனர். வழக்கை முதலிலே வாதிதான் சொல்லுவது முறை. அந்த வகையில் நீதிபதிகள் பெரியவரைப் பார்த்து ஐயா உங்கள் குறை என்ன? சொல்லுங்கள் என்றனர். அதற்கு அந்த பெரியவர் இந்த ஆரூரன் என் அடிமை. அதற்கான அடிமைப் பத்திரம் நான் வைத்திருந்தேன். அதனை என்னிடமிருந்து வலிய பிடுங்கி கிழித்து தான் அடிமை என்பதை உறுதி செய்து விட்டார். ஆனால் இப்போது எனக்கு அடிமையாக பணி செய்ய மறுக்கின்றார். இது தான் என் வழக்கு என்றார். அடுத்து நடுவர்கள் ஆரூரரை பார்த்து பெரியவர் கூறும் வாக்கிற்கு உங்கள் பதில் என்ன? என்று கேட்டனர். இதற்கு ஆரூரர் கற்றறிந்த பெருமக்களே நான் ஆதி சைவன் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் உலகத்தில் இல்லாத வழக்காக நான் அடிமை என்று சாதித்தால் அது என்ன என்றே எனக்கு புரியவில்லை. இது பெரியமாய ஜாலமாக இருக்கிறது. என்றார். நீதிபதிகள் பெரியவரை பார்த்து ஐயா பெரியவரே இந்த மாநிலத்தில் இல்லாத புதுமை யான வழக்கினை நீங்கள் கொண்டு வந் திருக்கிறீர்கள் ஆனால் அதற்குரிய ஓலைச் சீட்டை ஆரூரர் கிழித்து விட்டதாகவும் சொல்லுகிறீர்கள். அந்த சீட்டில் என்ன இருக்கின்றதுஎன்று யார் அறிவார்கள். எனவே ஆரூரர் அடிமை என்பதனை நீங்கள் தான் நிரூபிக்க வேண்டும் என்றனர். இங்கேயும் சேக்கிழார் பெருமான் இன்றைய சட்ட விதிமுறைகளை எடுத்துசொல்லுகின்றார். நீதித் துறையின் அடிப்படைப் பாங்குகளை எடுத்துக் காட்டுகிறார். ஒரு பொருள் நமக்கு உரிமை என்றால் அந்த பொருள் நம்முடையது என்பதற்கான பத்திரம் வேண்டும். இல்லை யென்றால் அதற்குரிய சாட்சிகள் வேண்டும். அதுவும் இல்லை யென்றால் இன்று நம் பொறுப்பில் அது இருக்க வேண்டும். இது இன்றும் நீதி மன்றங்களில் பின்பற்றப்படுகின்ற நடை முறை. இதனை அன்றே அங்கிருந்த நீதிபதிகள் தெளிவாக சொல்வதாக சேக்கிழார் எடுத்துக் காட்டுகிறார். நீதிபதிகள் பெரியவரை பார்த்து ஆரூரர் உமது அடிமை என்றால் ஒன்று ஆட்சியில் இருக்க வேண்டும். அதாவது நடைமுறையில் இருக்க வேண்டும். அது இல்லை. இரண்டு, பத்திரம் இருக்க வேண்டும் அதுவும் உம்மிடம் இல்லை. மூன்று, சாட்சிகள் வேண்டும். இங்கு சாட்சி சொல்ல யார்

இருக்கிறார்கள். ஊரே உமக்கு எதிராக திரண்டு இருக்கிறது. இந்த நிலையில் ஆரூரன் உமக்கு அடிமை என்பதை நீர்தான் நிரூபிக்க வேண்டும் என்றனர். அதற்கு அந்த பெரியவர் நடுவர்களே இந்த ஆரூரன் இப்படி செய்வான் என்று எனக்கு முன்னமே தெரியும். அதனால் மூல ஓலையை பத்திரமாக மடியில் வைத்துக் கொண்டு உள்ளேன். அவன் கிழித்தது படி( காபி) ஓலை என்றார். அதனை சேக்கிழார் பெருமான் மிக அற்புதமாக எடுத்துக் காட்டுகிறார்கள். அவர் வாக்கையே பார்ப்போமே

"ஆட்சியில் ஆவணத்தில்
அன்றிமற்றயலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று
காட்டுவாய்என்ன " முன்னே
மூட்சியிற் கிழித்த ஓலை
படியோலை மூல ஓலை
மாட்சியிற் காட்ட வைத்தேன்
"என்றனன்மாயை வல்லான்"

பெரியவர் நடுவர்களைப் பார்த்து நீதிபதிகளே நானோ வயதானவன் ஏற்கனவே என்னிடம் இருந்த படி ஓலையை இந்த ஆரூரன் உடல் வலிமையால் வலிய வாங்கி கிழித்து விட்டான். நீங்கள் உரிய பாதுகாப்பு கொடுப்பதானால் மூல ஓலையைக் காட்டுவேன் என்று முறையிட்டார். இதற்கு நடுவர்கள் உமது பத்திரத்திற்கு எந்த தீங்கும் வராமல் நாங்கள் பாதுகாப்பு கொடுக்கிறோம் என்றார்கள்.

அதற்கு பிறகு அந்த பெரியவர் அந்த பழமையான ஓலைச் சுவடியை மெதுவாக எடுத்து சுற்றி இருந்த துணியைப் பிரித்து அவை முன்வைத்தார். இப்படி இருக்கிற பத்திரங்களை பண்டை நாளில் படிப்பதற்கு கரணத்தான் என்கிற நபர்கள் இருந்தார்கள் என்பதனை சேக்கிழார் குறிப்பிடுகிறார். இன்றும் கூட பத்திரம் எழுத படிக்க தனிப்பயிற்சி பெற்றோர் உண்டு என்பது கண்கூடு. நீதிபதிகளிடமிருந்து அந்தப் பத்திரத்தை கரணத்தான் கும்பிட்டு வாங்கி படிக்க லுற்றான்.

" அருமறை நாவலர் ஆதி சைவன்
ஆரூரன் செய்கை
பெருமுன் வெண்ணெய் நல்லூர்ப்
பித்தனுக்கியானும் என்பால்
வருமறை மரபுளோரும் வழித்
தொண்டு செய்தற் கோலை
இருன்மயால் எழுதி நேர்ந்தேம்
இதற்கிவை என் எழுத்து"

அந்த பத்திரம் சொல்வது என்ன வென்றால் வேதம் கற்ற நாவலூரைச் சேர்ந்த ஆதி சைவ மரபைப் சார்ந்த ஆரூரனாகிய நான் எழுதியது என்வென்றால் வெண்ணெய் நல்லூரில் வாழ்கின்ற பித்தனாகிய இவருக்கு நானும் என் வழி வழி வருகின்ற வாரிசுகளும் அடிமையாக தொண்டு செய்ய கடமை பட்டவர்கள். அதற்காகவே இந்த ஓலையை எழுதுகின்றேன். அதற்கு என்னுடைய முழுமையான மன சம்மதத்துடன் மற்றும் தெளிந்த அறிவுடனும் எழுதுகினறேன். இப்படிக்கு ஆரூரன் என்று கையொப்பம் இடப்பட்டு உள்ளது. இதில் இரண்டு மூன்று பேர்கள் சாட்சி கையொப்பம் இட்டு உள்ளனர். அவர்கள் கையெழுத்துதானா என்று நீதிபதிகள் அவர்களை கேட்க அவர்கள் கையெழுத்து எங்களுடையது தான். ஆனால் இப்படி ஒரு பத்திரத்தில் கையெழுத்து போட்ட நினைவு இல்லை என்றனர். அப்போது நீதிபதிகள் ஆரூரரை பார்த்து உன் பாட்டன் எழுதிய இந்த ஓலையை பார்த்து அவர் கையெழுத்தா என்று சரிபார்த்து சொல் என்றனர். உடனே பெரியவர் கையெழுத்தை ஒப்பிட்டுப் பார்க்க இவன் தானா கிடைத்தான். இவனுடைய பாட்டன் கையெழுத்து வேறு எதிலாவது பத்திரங்களில் இருந்தால் அதைக் கொண்டு வந்து ஒப்பிட்டுப் பாருங்கள் அதன்படி நீங்கள் சொல்லுவதை நான்

ஏற்கிறேன் என்றார். உடேன நீதிபதிகள் பத்திரங்கள் வைக்கும் மன்றத்தில் தற்போது முத்திரை பதிவு அலுவலகம் உள்ளது அல்லவா அதுபோல் அன்றும் இருந்துள்ளது. இதற்கு அரன் தரு காப்பு என்ற அழகிய சொல்லையும் சேக்கிழர் பெருமான் அறிமுகப் படுத்துகிறார். அப்படி அந்தக் காப்பத்தில் இருந்த வேறு ஒரு பத்திரத்தை கொண்டு வரச் செய்து ஒப்பிட்டுப் பார்த்தனர். இரண்டுமே ஒன்றாகவே இருப்பதனை உணர்ந்தனர். நீதிபதிகள் தங்கள் தீர்ப்பாக ஆரூரரே இந்த பெரியவருக்கு நீங்கள் அடிமை. இந்த வழக்கில் நீங்கள் தோற்றீர்கள் இனி அவருக்கு தொண்டு செய்வது உம்முடைய கடன். இதுவே எங்கள் தீர்ப்பு என்று கூறினர். அதற்கு ஆரூரர் அது என் தலை விதி என்றால் அதனை யார் மாற்ற முடியும் நான் தான் மறுக்க முடியுமா? என்றார் . கூட்டத்தில் இருந்த மற்றவர்கள் வழக்கில் வென்ற பெரியவரை வணங்கி நீர் காட்டிய ஆவணத்தில் எங்கள் ஊரான திரு வெண்ணெய் நல்லூர் எனக்குறிப்பிட்டுள்ளது இந்த ஊரில் நாங்கள் யாரும் உன்னைப் பார்த்தது இல்லை இது உன் ஊர் என்றால் நீ வாழுகிற வீட்டை காட்டு என்றனர். வழக்கிலே வென்ற அந்தப்பெரியவர் அனைவரையும் பார்த்து என்னை உங்கள் ஒருவருக்கும் தெரியவில்லையா? அப்படியானல் என் பின்னே வாருங்கள் என் வீடுதான் இந்த ஊரிலே பெரிய வீடு அதுவும் உங்களுக்கு தெரியாதா? என்று கூறிக் கொண்டு அந்த ஊரில் உள்ள திருத்தபத்துறை என்ற திருக்கோயிலின் வாயிலில் கால் வைத்தார். அந்த பெரியவர் மாயமாய் மறைந்தார். வந்தவர்கள் எல்லாம் அப்படியே திகைத்து நின்றனர். என்ன இந்த பெரியவர் நம் ஊர் கோயிலுக்கு வந்தார். மறைந்து விட்டார் என்ன? ஆச்சரியம் என்று பலவாறாக பேசினர். அப்போது வானில் காளை வாகனத்தில் தோன்றி ஆரூரருக்கு காட்சி கொடுத்து கயிலைமால் வரையிலே நந்தவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியினை நினை வூட்டினார். நம்முடைய ஆணையினாலே நீர் மண்ணுலகில் பிறந்தீர். நீர் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே நாம் உம்மை தடுத்து ஆட் கொண்டோம்.

" முன்பு நீ நமக்குத் தொண்டன்
முன்னிய வேட்கை கரப்
பின்பு நம் துணை எனலாலே
பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத்
தொடர்வறத் தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் மன்னர் நாம்
தடுத்தாண்டோம்"

என்றார்.

இதனைக் கேட்ட ஆரூரர் நடு நடுங்கிப் போனார். கண்களில் நீர் சொரிய கை தொழுது நின்று பெருமானே உன்னுடைய கருணை என் என்பேன். நான் உனக்கு அடிமை அல்ல அல்ல என்று விடாது கூறியும் , நீ தொடர்ந்து பத்திரம் காட்டிவலிய ஆட்கொண்டாய். உன் கருணையை என் என்பேன். என்றார். இறைவன் ஆரூரனை பார்த்து நீ என்னிடத்தில் வன்மையாக வழக்கிட்டாய். அதனால் இனிமேல் உன் பெயர் வன்தொண்டன் என்றே அமைவதாக. நம்முடைய அன்பிற்கு விருப்பத்திற்கு உரியது அர்ச்சனை. எனவே இந்த தமிழ் மண்ணில் நம்மை செந்தமிழால்பாடு என பணித்தார். ஆரூரர்பால் சிவபெருமான் என்ன சொன்னார் எனபதனை அவர் வாயாலே கேட்போமே

" மற்று நீ வன்மை பேசி வன்
தொண்டன் என்னும் நாமம்
பெற்றவை, நமக்கும் அன்பிற் பெருகிய
சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டே
ஆகும் அதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு

என்றார் தூமறை பாடும் வாயார் .

இறைவன் பாடு என்று பித்தவுடேன பதைபதைத்த ஆரூரர் நாவலர்கோன் உன் புகழை உன் இயல்பை எவ்வாறு என்னால் பாட முடியும் அதற்கான தகுதியும் ஆற்றலும் எனக்கு இல்லை என்று கூறி கதறி அழுதார். நீ தான் ஏ ற்கனவே பித்தன் என்று என்னை பேசினாய் அல்லவா? அதையே முதலாக வைத்து பாடு என்று பணித்தார். ஆரூரர் பெருமான் கருணையினால் " பித்தா பிறை சூடி பெருமானே அருளாள வைத்தாய் பெண்ணாய் தென்பால் வெண்ணெய் நல்லூர்" என்று பாடி பரவினார். நம்பியாரூரர் ஒவ்வொரு தலமாக வழிபட்டுக்கொண்டு தில்லையில் சென்று கூத்த பெருமானை வணங்கி அங்கிருந்து புறப்பட்டு பல தலங்களையும் தரிசித்து ஊர்கள் தோறும் பதிகங்கள் பாடி பரவி மக்களை செந் நெறிபடுத்தி திருவாரூர் சேர்ந்தார். திருவாரூர் பெருமானை வாழ்த்தி வணங்கி பல பதிகங்கள் பாடினார். அனுதினமும் திருக்கோயில் சென்று வழிபட்டு வந்தார். ஏற்கனவே கயிலையில் இருந்த கமலினி திருவாரூரில் பிறந்தார். என்று முன்னரே கூறினோாம் அல்லவா? அந்த அம்மையார் திருவாரூரிலே பரவையார் என்ற பெயருடன் வாழ்ந்து வந்தார்கள். அன்றாடம் திருக் கோயிலுக்கு சென்று பெருமானை வணங்குவது வழக்கம்.

அப்படி ஒரு நாள் பரவையார் கோயிலுக்கு வர ஆரூரர் எதிரே வந்தார். பண்டை வினை கடை கட்ட பரவையாரும் ஆரூரரும் ஒருவரை ஒருவர் கண்டனர். சேக்கிழார் பெருமான் அவர்கள் கண்ட காட்சியை வெகு அற்புதமாக வெளிப்படுத்துகிறார். ஆரூரர் பரவையாரை பெண்ணாக பார்க்காமல் சிவனுருவாக பார்த்தார். பரவையாரோ முருகனே நேரில் வந்ததாக கண்டார். என்று கூறுவர். அன்று இறைவன் திருவாரூரில் உள்ள அடியவர் கனவில் தோன்றி பரவையாருக்கும் ஆரூரருக்கும் திருமணம் செய்யுங்கள் என்று பணித்தார். அதன்படி அடியவர்கள் எல்லாம் கூடி திருமணம் செய்தார்கள்.

பரவையாரும் ஆரூரரும் இல்லற வாழ்க்கையை இனிதே நடாத்தினர். அன்றாடம் திருக்கோயில் செல்லும் ஆரூரர் ஒரு நாள் கோயிலுக்கு உள்ளே நுழைந்தார். கோயிலில் முன்புறம் உள்ள மண்டபத்தில் அடியவர்கள் எல்லாம் அமர்ந்து இருந்தார்கள். அவர்களைபார்த்து பக்தியின் நெகிழ்ச்சியால் இந்த மெய்த்தவ அடியவர்களுக்கு அடியேனாய் ஆவது எப்போது அதற்கான தகுதி எப்போது எனக்கு வரும் என்று எண்ணி நயந்து உருகி திருவாரூர் தியாகேச பெருமான் திருமுன்பு சென்றார். அப்போது இறைவன் அடியவர் பெருமையை எடுத்துரைத்தார். அடியவர் பெருமையை ஆண்டவனே சொன்னால் அது எவ்வளவு அழகாக இருக்கும். அந்த அழகிய பாடலைக்காண்போமே

" பெருமையால் தம்மை ஒப்பார்,
பேணலால் எம்மைப்பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
உளமேல் ஒன்றும் இல்லார்,
அருமையாம் நிலையில் நின்றார்,
அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையுங்கடந்து நின்றார், இவரை
நீ அடையாய் "

என்று இறைவன் அடியவர் பெருமையை எடுத்துச் சொன்னார். அப்பொழுது அடியவர் பெருமையை போற்றி ஆரூரர் பாடிய திருத்தொண்டத்தொகை என்ற பதிகம் தோன்றிற்று. அதை அடித்தளமாக கொண்டு திருத்தொண்டர் வரலாற்றினை உருவாக்கினார் சேக்கிழார் பெருமான்.

# "பெண்ணெனும் பேறு "

வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்

" எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல்
வேறொன் றறியேன் பராபரமே"

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய் , பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியதாய், மூவா இளநலங்காட்டி, முதுமை அழகைக்கூட்டி காலம் இறந்து நிற்கும் ஒப்பற்ற பழம்பெரு சநாதன மதம் இந்து மதம். இந்து மதம் என்ற நூலில் பல்வேறுவகைப்பட்ட பல்வேறு தனித் தன்மை கொண்ட சமயங்கள் மணிகள் போலக் கோக்கப்பட்டிருக்கின்றன. இந்துக்களாகிய நாம் பல்வேறு தத்துவங்களை அநுசரிக்கின்றோம். பல்வேறு தெய்வ வழிபாடுகள் . பல்வேறு சடங்குகள். ஆனாலும் எல்லோரும் ஒட்டு மொத்தமாக இந்துக்களே . உலகில் வேறு எந்த மதத்திலும் காணப்பெறாத புதுமை இது. விரிந்து கொடுத்துத் தன்னை அடைந்தோரைச் காக்கும் கருணையின் நெகிழ்ச்சிதான் இம்மதத்தின் ஆணிவேர்.

" அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே."

என்ற திருமூலரின் ஓங்கிய குரலே இந்து மதத்தின் தாரக மந்திரம்.

இசை நிகழ்வில் , வெவ்வேறு இராகங்கள் வேறு வேறு பாடல்கள். மனோ ரீதியான கற்பனைகள் ஆனால் அத்தனைக்கும் ஓர் அடிப்படை நிர்ணயம் உண்டு. அதுதான் ஆதாரசுருதி . சுருதியிலிருந்து விலகாதவரை இசைக்கு மதிப்பு உண்டு. அதுபோல வேதம் காட்டும் வழியிலிருந்து விலகாதவரை இந்துவிற்கும் பெருமையுண்டு .

நாம் வாழும் வாழ்க்கை வேறு. நமது முன்னோர் வாழ்ந்த வாழ்க்கை முறைவேறு . இன்று நாம் சமயத்துடன் ஒட்டாத வாழ்க்கை வாழ்கின்றோம். ஆனால் சமயம் உள்ளதாகச் சொல்லிக் கொள்கின்றோம். ஆனால் நமது முன்னோர்களோ, வாழ்க்கையைச் சமயமாக்கி , வீரம், காதல், விளையாட்டு என்ற எல்லாவற்றிலும் ஆன்மீகப் புனிதங்களைக் காணும் பக்குவம் பெற்றிருந்தனர். இகம், பரம், என்ற வேற்றுமைகளில் ஓற்றுமையைக் கண்டனர். ஒவ்வொரு வினாடியும் இறை நினைவுடன் கூடிய வாழ்க்கையை வாழ்ந்தனர். வேதகாலப் பெருமக்கள் ஒன்றேயான சக்தியைக் கண்டு ஆனந்தம் கொண்டனர். அதிலே மெய்ப்பொருளை, சத்தியத்தை, ஒழுங்கை உருக்கூட்டினர். பிறப்பிலிருந்து, இறப்புவரை வே தஇசையிலேயே வாழ்ந்து மடிந்தனர். இந்து சமயத்தின் பல்வேறு பகுப்புக்களையும் வேதம் என்ற கொடியால் கட்டி ஒருங்கிணைத்தார்கள்.

வேதத்திற்கு பேதம் தெரியாது. தன்னை உயர்த்திக் கொண்டு, மற்றவர்களைத் தாழ்த்தத் தெரியாது. வாழ்வின் ஜீவனான அறத்தையும் ஒற்றுமையையும் அது வலியுறுத்துகின்றது. இது எல்லாக்காலத்திற்கும், எல்லா மதங்களுக்கும் , எல்லா நாடுகளுக்கும் பொதுவானது. மொழி,மத, இனங்களைக் கடந்து காலங் காலமாக அணுத்துணையும் அசையாது நிற்கும் அதிசய மேல்வரிச் சட்டம்.

**" லோகா சமஸ்தா. சுகினோ பவந்து"**

இதுதான் வேதக் கொள்கை. இந்து மதத்தின் கொள்கை.

இந்து மதத்தில் காணும் மற்றுமொரு விழுமிய கொள்கை பெண்மையின் ஏற்றம். இதுவும் ஏனைய மதங்களில் அதிக சிறப்புறுத்தப் பெறாத செய்தி. அன்னையை தெய்வமாக மதிக்கும் பண்பு............ இல்லை தெய்வத்தையே அன்னையாக மாற்றும் மாண்பு. அதர்வ வேதத்தில் நீ பெண் , நீயே ஆண் ( த்வம் ஸ்திரீ , த்வம் புமான் அஸி) என்று பரம் பொருளையே பெண்ணாகப் போற்றும் வாக்கியங்கள் காணப்படுகின்றன. அருள் மலரும் காலைப் பொழுதை " உஷை" என்ற பெண்ணாகக் கண்டவர்கள், அச்சம் தரும் இரவுப் பொழுதை "ராத்ரீ" என்ற பெண்ணாக்க கண்டு வழிபட்டனர்.

**" ராத்ரீம் ப்ரபத்யே ஜனனீம். ஸர்வபூத நிவேசனீம்!**
**பத்ராம் பகவதீம் க்ருஷ்ணாம் விஸ்வஸ்ய ஜகதோ நிசாம்.!**

காலஸ்வரூபினியான அன்னையை வேத மந்திரம் போற்றுகின்றது. அதுமட்டுமல்ல இவ்வுலகைப் படைத்துக் காத்து, அழிக்கும் முப்பெரும் செயல்களைச் சக்தியுருவில் கண்டார்கள். அண்டாண்ட கோளங்களையும் அடக்கியாளும் பெண்மையை இராஜராஜேஸ்வரியாகக் கண்டு களிகொண்டனர். கல்விக்கும், செல்வத்திற்கும், வீரத்திற்கும் கலைமகளையும் , திருமகளையும் , மலைமகளையும் அதி தெய்வமாக ஆக்கி உவந்தனர். வாழ்வின் எல்லாக் கோணங்களிலும பெண்மைக்குப் பெருமை சேர்த்தனர் நம் முன்னோர். வாழ்வை வளமாக்கும் பாரிய பொறுப்பைப் பூவையரின் பூங்கரங்களிலே ஒப்படைத்தார்கள். ஒரு பெண் இல்லறத்திலே மனைவியாக மட்டுமில்லை. மதிஅமைச்சனாக , நண்பனாக, ஆசானாக, பணியாளனாகப் பல கோணங்களில் பெருமை சேர்க்கின்றாள். கணவன் தவறிழைக்கும் பொழுது இடித்துக்கூறி ஏற்ற முறச் செய்த ஏந்திழையார்களை நாம் அறிவோம்.

**"தீண்டு வீராகில் திருநீலகண்டம்"**

எனச் சிவன் மேல் ஆணையிட்டு , அற்புறு புணர்ச்சியின்மை, அயலறியாமை வாழ்ந்து, பண்பையும் , பதியையும் காத்த திருநீல கண்டரின் மனைவி............

மைவைத்த கண்டன் நெறியன்றி மற்றோர் நெறியறியாத் தவத்திருவாட்டி, தென்னவன் தேவி, மங்கயர்க்கரசி அன்பு ஒன்றையே ஆயுதமாக்கி, தவறிழைத்த கணவனைத் திருத்தி சைவ சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட வீரப் பெருந்திரு............

பிறர்பொருளை வெளவி வளர்ந்த கள்ளத் தொழில் கைதேர்ந்த நீலனை ,

யாருக்கும் பணியாத அஞ்சா நெஞ்சனை , தன் ஆடற்கலையால் வென்று தன்னைப் போலவே மாலவன் அடியார்களிடம் மனம் கொள்ளவைத்து."பீதக ஆடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து " அஷ்டாட்ஷரத்தை உபதேசிக்கும் பேறு பெறச் செய்து, நீலனைத் திருமங்கையாழ்வாராக மாற்றியவள் " குமுதவல்லி" என்ற ஆடற்கலை அரசி.

சிறுவயதில் பெற்றோர்களை இழந்து அன்பிற்காக ஏங்கித் தவித்தவன் இராம்போலா. அந்த அன்பினைத் தன் மனைவியின் வடிவத்திற் கண்டு அவள் மீது ஆறாக்காதல் கொண்டான். ஒருநாள் இராம் போலாவைப் பிரிந்து இரத்தினாவளி பிறந்தகம் செல்ல, அவளின் பிரிவுத் துயர் தாளாது கொட்டும் மழை என்றும் பாராது, வெட்டும் மின்னலென்றும் கருதாது. ஓடோடிவந்து, மலைப்பாம்பை, மரவிழுதாகப் பற்றி, அதன்வழி இறங்கி, வீட்டினுள் வந்து அழகிய தன் மனைவியிடம் தனது ஆறாக்காதலைப்புலப்படுத்துகின்றான். " அழியும் தன் உடல் மேல் வைத்த அன்பை, அழியா அழகனான இராமபிரானிடம் வைத்தால் பிறவியெடுத்த பயன் கிடைக்குமே என்று பரிவாக எடுத்துரைதாள் இரத்தினாவளி. மறுவினாடியே இராம்போலா அழிந்தான். துளசிதாசர் உதயமானார். " இராமசரிதமானசம் " என்ற அமரகாவியம் நமக்குக் கிடைப்பதற்கு அடிகோலியவள் பெண்தான்.

அதுமட்டுமல்ல உயர்ந்த நோக்கங்கள் உலகினில் நிறைவேறத் தியாகத் தீயில் தன்னை ஆகுதியாக்கிக் கொண்ட பெண்களும் உண்டு.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் வாசஸ்பதிமிச்ரர். அனைத்து சாத்திரங் களிலும் கரை கண்டவர். ஆதிசங்கரர் எழுதிய பிரம்ம சூத்திர பாஷ்யத்திற்கு மிக அரிய முறையில் விளக்கம் அருளியிருக்கின்றார். அதற்கு " வாசஸ் பதீயம்" என்று பெயர் அதற்கு உரைவிளக்கம் எழுதும் காலத்தில் தான் அவருக்குத் திருமணம் நிகழ்ந்தது. திருமணம் அவரது எழுதுப்பணியைத் தடை செய்யவில்லை. தங்கு தடையற்ற பிரவாகம் போல் பொங்கிப் பெருகியது. வாசஸ்பதி மிச்ரரின் இளம் மனைவியின் இளமை நலமும் அனலில் மெழுகாகக் கரைந்தது . மிச்ரர் கவனிக்கவிலை. ஆண்டுகள் உருண்டன. அழகிய புத்தகம் உருவாயிற்று. தலை நிமிர்ந்தார் வாசஸ் பதி மிச்ரர். அவர் கண்டது தலை நரைத்துத்தோல் சுருக்க முற்ற மனைவியின் முதுமையை. மிச்ரரின் மனம் உருகியது. தனது மனைவியின் மௌனத்தியாகம் அவரது மனத்தை வாட்டியது. தான் எழுதிய அந்த ஒப்பற்ற நூலுக்கு தனது பத்தினியின் பெயரான" பாமதி" என்ற நாமத்தையே சூட்டி தியாகத்தின் சின்னமாக நிலை நிறுத்தினார்.

தம்பியார் உளதாகத் திலகவதியார் செய்த தியாகம். அம்பொன்மனி நூல் தாங்காது . அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி கால வெள்ளத்துள் தன்னைக் கரைத்துக் கொண்டு திருநாவுக்கரசர் என்னும் அரும் பெரும் ஆணிமுத்தை அளித்தது.

தனக்குக் கிடைக்க இருந்த பொருட் செல்வத்தை விலக்கி தன் கணவரான யாக்ஞவல்லியரிடமிருந்து ஞானச் செல்வத்தைப் பெற நிழல் போல் அவரைத் தொடர்ந்த வேதகால வனிதையான " மைத்ரேயியின் மாண்பும் எண்ண இனிப்பவை.

இப்படிக் கல்வியாலும், ஒழுக்கத்தாலும், தியாகத்தாலும், இந்து மதப் பண்பாட்டைக் காத்த மங்கையர்களின் வரலாறுகள் வற்றாத ஜீவ ஊற்றுக்கள். அதைக் கருத்திற் கொண்டுதான் கவிமணி அவர்கள்.

**" மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல**
**மாதவம் செய்திட வேண்டுமம்மா"**

என்று முழுங்கினார் போலும். ஆம் பெண்மையே ஒரு அரிய தவம் தான்.

# கும்பாபிஷேக தத்துவார்த்தம்

சிவஸ்ரீ ஐ. கைலாச நாதக்குருக்கள்

"மூவாய் பிறவாய் இறவாய் போற்றி முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவேபோற்றி சென்றேறி எங்கும் பரந்தாய் போற்றி
ஆவாய் அடியேனுக்கு எல்லாம் போற்றி அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத்திரளே போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி!

அனாதி மலமுக்த சித்துருவாகிய பரம் பொருள் கற்பனை கடந்த சோதியாயினும், அனாதிமல பெத்தர் களாகிய ஆன்மாக்கள் வணங்கி , போக மோட்ஷங்களையடைய ஆலயத்தில் நிறுவப்படும் சிவலிங்கத் திருவுருவில் கருணையே உருவாகும் படி பிரார்த்தித்து அபிஷேகித்தலே கும்பாபிஷேகமாகும். கும்பாபிஷேகம் என்பது - குட முழுக்கு- - பெருஞ்சாந்தியாகும்.

சுத்த சிவ ஜோதி நிஷ்கள நிருத்த வத்தில் நின்று உண்டான எல்லை கடந்த வட்டவடிவமான பரபிந்துவையுடைய நாதமயமான சிவம் தோன்றி அதில் நின்று எல்லை கடந்த பராசக்தி தோன்றும். அதில் நின்று ஆதிசக்தி தோன்றி உலக வியாபக பேதத்தால் இச்சா சக்தி ஞான சக்தி கிரியாசக்தி தோன்றும். மேலே கூறிய அபரபிந்து வாகிய பராசக்தி முதல் பஞ்ச சக்திகளில் நின்றும் முறையே சிவசாதாக்கியம் அமூர்த்தி சாதாக்கியம் மூர்த்தி சாதாக்கியம் கர்த்துரு சாதாக்கியங்கள் தோன்றும். இவற்றுள் கன்ம சாதாக்கியம் எனபது ஆலயத்தில் தாபிக்கப்பெற்ற லிங்க ஆவுடையாரின் சதாசிவரூபமாம் இச் சதாசிவத்தினின்று மனோன்மணியும், மனோன்மணியினின்று மகேஸ்வரனும், மகேஸ்வரனிலிருந்து மகேஸ்வரியும் மகேஸ்வரியிலிருந்து ஸ்ரீ கண்ட உருத்திரரும் ஸ்ரீ கண்ட உருத்திரரிலிருந்து உமையும் உமையிலிருந்து விஷ்ணுவும், விஷ்ணுவிலிருந்து இலக்குமியும், இலக்குமியிலிருந்து பிரம்மாவும், பிரம்மாவிலிருந்து வாணியும் தோன்றி உலகத்தைக் காரியப்படுத்துகின்றார்கள்.

இங்ஙனம் செயல்படும் பொழுது உயிர்களின் பக்குவ நிலைக்கேற்ப அறிவு இச்சை களையும், தநு, கரண , புவன, போகங்களையும் கொடுப்பர், ஆன்மாக்களாகிய நாம் இத்தநுவாகிய சரீரத்தைக் கொண்டு சிவ சாஸ்திர உணர்ச்சியால் நல்லறிவு தலைப்பட்டு பதி புண்ணியமாகிய கும்பாபிசேகம் முதலிய சிவ தர்மத்தில் பங்கு பற்றி தரிசிக்க வேண்டியது முதற்கடமையாகும். அங்ஙனம் தரிசிக்கும் அன்பர்கள் ஒவ்வொரு கிரியைகளையும் ஊன்றிகவ னித்து உணர்ந்து தரிசித்தல் அதிகப் பயனைத் தரும் எனக்கருதியே இக் கட்டுரையினை எழுத தலைப்படுகின்றேன்.

1. தனபூஜை திரவியத்தை பூசிப்பது புண்ணிய வசத்தால் சம்பாதிக்கப்பெற்ற திரவியத்தை சிவார்ப்பணம் செய்து பின்னர் அதனை மூன்று பாகம் செய்து ஒரு பாகம் ஆலய கட்டிய வேலைக்கும், மற்ற பாகத்தைக் கொண்டு நித்திய பூசை, மாத தந்தோறும் வருகிற நட்சத்திர திதிகளில் செய்கின்ற நைமித்திகச் செலவு , சுவாமிக்கு வேண்டிய திரு ஆபரணம். கிராமம் முத லியன வாங்குவதற்கு மூன்றாவது பாகத் தால் கும்பாபிஷேகச் செலவும் செய்ய வேணடும். இனி கும்பாபிஷேக பாகத் தைப் பதினொரு பாகம் செய்ய வேண்டியது.

| | | |
|---|---|---|
| 1. யாகம் கட்டுதல் முதலானவற்றிற்கு | - | இரண்டு பாகம் |
| 2. அபிஷேக திரவியம் | - | ஒரு பாகம் |
| 3. ஆசார்ய தட்சிணைக்கு | - | இரண்டு பாகம் |
| 4. மூர்த்தியர்கட்கு | - | ஒரு பாகம் |
| 5. வேதம் தேவாரம் ஓத | - | ஒரு பாகம் |
| 6. தானாதிகட்கு | - | ஒரு பாகம் |
| 7. அன்ன தானத்திற்கு | - | ஒரு பாகம் |
| 8. சிற்பி பரிசாரகத்திற்கு | - | ஒரு பாகம் |
| 9. யாக சாமான்களுக்கு | - | ஒரு பாகம் |

பதினொரு உருத்திரர்கள் பூஜித்தல் தன பூஜையாம்.

2. **அனுக்ஞை உத்தரவு** பெறுதல் தனது குரு சர்வ சாதகர், போதகர் முதலானவர்களையும் சிவனையும் வழிபட்டு நல்ல வழிவந்த இந்தத் திரவியம் கும்பாபிஷேகச் செலவிற்கு யோக்யதை உண்டாகும் படியாகவும் சாஸ்திரப்படி செய்ய உத்தரவு தரவேண்டும். என உத்தரவு பெறுதலாம்.

சிவனிடம் உத்தரவு பெறுதலில் இரண்டுவகை உண்டு. ஒன்று சாங்கம் , மற்றையது உபாங்கம். சிவனிடமும் சக்தியிடமும் கேட்டல் சாங்கமாகும் உபாங்கத்தில்

| | | |
|---|---|---|
| கணேசர் | சிவனாரின் | வலக்கண் |
| முருகன் | ,, | இடக்கண் |
| நந்தி | ,, | மூக்கு |
| சண்டிகேஸ்வரர் | ,, | காது |

ஆதலால் இவைகளை நாம் செய்யும் கிரியைக்கு ஏற்றவாறு உணர்ந்து செய்ய வேண்டும். இது உபாங்க அனுக்ஞையாகும்.

3. பிரவேச பலி பிரவேசிக்கச் செல்லுமிடத்தில் உள்ள தேவதைகளை பூசித்து உணவு கொடுத்து எல்லோரையும் நோக்கி கடல் வனம் , மலை முதலிய இடங்களுக்குச் சென்று சுலபமாக இருங்கள் . இவ்விடத்தில் இறைவனை இருத்தவேண்டும். எனக் கூறி இவர்களைத் திருப்திப் படுத்தலாம்.

4. **வாஸ்து சாந்தி** வாஸ்துப் பிரமனை வழிபடல். பூமிக்கு அதிபதியாகிய பிரமனை பூசித்து பூமியின் அசத்பாவமாகிய குற்றங்களை எரித்து பின்னர் பிரமாவின் கந்த தன்மாத்திரையான மூக்கிலிருந்து உண்டானதாகப் பாவித்து அமிர்தத்தால் நனைத்து சுத்தமாக்கிக் கொள்வதே " வாஸ்துசாந்தி" யாம்.

5. **மிருத் சங்கிரகணம்** மண்எடுத்தல்

முன் அமிர்தத்தால் நனைக்கப்பட்ட மண்ணை முளையிடுவதற்காக பூமிதேவியை வணங்கி அவள் வயிற்றினின்று எடுத்தலாம்.

6. **ஆசார்ய பூசை** குருவை வழிபடுதல்.

பிரதான குருவுக்கு சகல உபசாரங்களும் கொடுத்து குருவே நீங்கள் பிரம்மாவாகவும், விஷ்ணுவாகவும் பரப்பிரம்மாவாகவும், இருக்கின்ற படியால் இச் சிவ கைங்கரியத்தைச் செய்து பக்தர்களைச் சிவானுக்கிரஹத்திற்குப் பாத்திரங்கள் ஆக்க வேண்டும் என வழிபடுதலாகும்.

7. **அங்குரார்ப்பணம்** — முளைஇடல்

நெல்முதலிய நவ தானியங்களைப் பாலில் ஊறவிட்டு சந்திரனை வணங்கி உலக க்ஷேமத்தின் பொருட்டுப் பயிர் வளர்த்தலாம்.

**8. ரட்சாபந்தனம்** திருக்காப்பு அணிதல்.

உலக சம்பந்தத்தினால் ஏற்படு கின்ற குற்றங்களை நீக்கிக் கொள்ளவும் எடுத்த காரியத்தை இடையூறின்றி முடிப்பேன் என்று உறுதியுடன் வாகீஸ்வரின் கர்ப்ப நாடியிலுண் டானதாகப் பாவித்து நாகராஜனை பூஜித்துச் செய்வதாகும்.

**9. பூத சுத்தி** பூதங்களை சுத்தி செய்தல்.

பிருதுவி முதல் ஐந்து பூதங்களை யும் இவை சம்பந்தமானஆத்மாவையும் சுத்தப்படுத்துவதாகும்.

ஆன்மாவானது தனது அறிவு மயங்கி மாயையின் வயத்ததாய், மாயை செய்விக்கின்ற வேலைகளை நானே செய்கின்றேன். எனது சொத்து, என்று அகங்கார, மமகார மேலீட்டால் செய் கின்ற, நினைக்கின்ற குற்றங்களை நீக்கி ஆத்மாவை சுத்தப்படுத்துவதாம். இங்ஙனம் சுத்தப்படுத்திய பின் இறைவனை பூசை செய்யவேண்டியது.

இந்த பூத சுத்தியானது ஆத்மாக்கள் அடைகின்றபதப்பிராப்தியினாலும், தீட்ச பேதங்களாலும் ஐந்து வகைப்படும். இதில் குரு மூர்த்தியானவர், சிவப் பிரத்தியங் கராகையாலும், சிவாஸ்ரமிகளாகவும், ஆதிசைவர்களாகவும் இருப்பதால் சிருட்டிக் கிரமம் திதிக்கிரமம் சம்ஹாரக் கிரமம் திரோபவக்கிரமம் அனுக்கிரக கிரமம் என்பனவற்றுள் ஐந்தாவதாகிய அனுக்கிரகக்கிரமம் பூதசுத்தியே செய்தல் வேண்டும்.

" பஞ்சவித சுத்தியினைப்
பண்ணிடுக பாங்காகப்
பஞ்சவித பாசமறுப்பார்
(சைவசமயநெறி)

தனது தேகமானது பிருதுவி முதலிய பஞ்ச பூதங்கள் விதையாகவும், பிரம்ம விஷ்ணுக்களால் முளையுண்டான தாகவும் ராகம் துவேஷம், தர்மம், அதர்மம், மோகங்கள் வேராகவும் வித்தை, அவித்தை அதிபதிகளாய் ரட்சிக்கிறதாகவும், கலை முதலிய தத்ததுவங்கள் சாரமாகவும், தன் மாத்திரைகளான இந்திரியங்கள் கிளைகளாகவும், விஷயம் தளிராகவும் ,பிரபஞ்சம் புஷ்பமாகவும்,

புத்தி வியவசாயிகன் சங்கல்ப்ப பழமாகவும், பழரசத்தைப் புருஷனாகிற பட்சி புசிக்கிறதாகவும், பாவித்து வேர் மேலாகவும், தளிர் கீழாகவும், ஆலமரத் தைப்போல் தியானித்து தலை முதல் பாதம்வரை, ஆகாசம், வாயு, அக்னி, ஜலம் பிருதுவி இவைகள் ஒன்றிலொன்று சேர்ந்து தோன்றும் விதையாகவும் பாவித்து ஜாதி , குலம் , குணம், முதலிய வற்றிற்குக் காரணமான தூல தேகத்தைத் தியானித்து யோனி சேஷத்திரத்தில், பிரமன் சிருஷ்டிப்பவராகவும் விஷ்ணு காக்கின்ற வராகவும் தியானித்து நமது கர்மம் மூலமாகிய கிழங்காகவும், ஆணவம் முளையாகவும் தர்மார்த்தைப் பாவித்து அத்துடன் ராகத் வேஷேமோகம் உபமூல மாகவும் அவித்தை மாயாகர்மத்தில் இருந்ததாகபாலித்து வித்தை பரமெனவும் இந்தப்பரம் பரிபாலிப்பதாகவும் பாவித்து, நடந்தது. நடக்கின்றது. நடக்கப் போகின்றது ஆகிய காலத்தவ விருசஷம் அசையாதிருக்கும் பொருட்டு சராசரமாகப் பாவித்தல் வேண்டும். இனி தன் மேந்திரிந்தியம் ஞானேந்திரியமென்றும் கன்மேந்திரியமென்றும் இரண்டாகப் பிரியும். அதை கொப்புள் கிளைகளாகவும் தியானித்து சப்தம் முதலிய ஐந்தையும் ஐந்துளிராகவும், புத்தி சங்கல்ப பழத்தை பட்சி ரூபமான ஆத்மா புசிக்கிறதாகத் தியானிக்கவேண்டும்.

ஹோம் என்னும் மந்திரத்தை ஐந்து முறை உச்சரித்து ஆலமரத்தை அசைவற்ற தாகப் பாவித்து பின்னர் (ஹீம்) என்னும் மந்திரத்தை மூன்று முறைஉச்சரித்து வலது கால் கட்டைவிரல் முதல் உண்டாகும் காலாக்னியினால் உலர்ந்த பத்திரத்தை தகிக்கப்பட்டதாய் தியானித்து (ஹைம்) என்னும் மந்திரத்தை இரண்டு முறை

உச்சரித்து தகித்த சாம்பலைப் பரந்ததாகத் தியானித்துப் பின்னர் ( ஹளம்) என்னும் மந்திரத்தை ஒரு முறை உச்சரித்து பரந்த சாம்பல்களை சேர்த்து அந்த சாம்பரை சுத்த ஸ்படிகமாகவும், நிர்மலமாகவும், தியானித்து முன்கூறிய ஆகாயத்துள் அடங்கியிருக்கும் சிவாபின்னமான ஆத்மாவை சிவனிடத்தில் சேர்த்து, எல்லா உபாதைகளில் நின்றும் ஓம் ஹாம் சிவாய வௌஷட் என சிகையில் நின்றும் அதோ முகமாக இருக்கும் பத்மத்தில் அமிர்தம் பெருகி வருவதாய் தியானித்து உள்ளும் புறமும் நனைத்து பின் இரு தயகமலத்தில் ஓம் அகார உகார மகாரமும், அதிக ஒளியும் சர்வ வல்லமை முதலிய ஆறு குணங்களோடும், எல்லா வித்தைகளையும் உண்டாக்குகின்றதாகப் பாவித்து இருதய கமல கர்ணிகையின் நடுவில் இந்த ஆத்மா புரியட்ட தேகமுடையதாம் தியானித்து இந்த ஆத்மாவுக்கு உள்ளிருக்கும் பரமாத்ம ஸ்வருபமானது எல்லா ஐஸ்வரியங் களையும் கொடுப்பதாயும், சாந்தரூப மாயும், ஆறு குணங்களால் நிறைந்துள்ளதாயும் உள்ள ஆத்மாவை சிவஸ் வரூபம் செய்து கலைகளைத் தாண்டி, பஞ்சப் பிரமத்தை ஆவாகித்து பிராசாத மந்திரத்தை தேகத்தில் ஆவாகித்து அஸ்திர மந்திரத்தால் திக்கு பந்தனமும் கவசமந்திரத்தால் மும் முறைசுற்றி கலாமயத்தைத் தாண்டி சிவஸ்வரூபத்தை உண்டாக்க வேண்டும் பின் தனது இடைநாடியால் பூரகமும், சுழுமுனா நாடி யால் கும்பகமும் செய்து ஜீவாத்மாவைக் கொணர்ந்து ஜோதி ரூபமாக்கி புருவமத்தியிலிருந்து உண்டான அமிர்தத்தால் தனது தேகத்தை நினைத்து சிவனோடு ஐக்கியம் செய்க. இதன் விளக்கங்கள் சிவவற்றை குருமுகமாய்க் கேட்டுணர வேண்டியது. இது அனுக்கிரக பூத சுத்தியாம்.

அந்தர்யாகம் – உட்பூசை சிவபெரு மானை வழிபட அந்தர் யாகம் மிக அவசியம்.

" அர்ச்சித்தானந்தர் யாகம் புரியாதே
பலத்தை
வர்சித்தானென்றே மதி."
(சைவ சமய நெறி 603)

நமது இருதய கமலமானது வாழைப் பூப்போன்றது. அப்பூவின் அடியிலிருக் கின்ற சுத்தமாயை அர்க்கிய பாத்திர மாகவும் பிந்துவிலிருந்து பெருகுகிற அமிர்தத்தை இதில் நிறைத்து பூசித்து அந்த ஜலத்தை சிரசில் புரோட்சித்து, இருதய கமல நடுவில் உள்ள கர்ணிகையில் சூர்ய சந்திர அக்னி மண்டலங்களை பாவித்து முறையே சதாசிவம், மகேசம், சிவம் இவர்கள் இருப்பதாகவும் , இந்த வாழைப்பூவின் மத்தியிலுள்ள தாமரைப் பூ எட்டு இதழோடு கூடியதாய் தொப்புளுக்கு மேல் எட்டு அங்குலம் தாண்டி அந்தக் கமலம் வைக்கப்பட்டு ள்ளதாய் இந்தத் தாமரைப் பூவில் அடித்தண்டு ஒன்பது துவாரமுடையதாய் நான்கு பக்கங்களிலும் கர்ணிகையோடு கூடியதாய், கர்ணிகைக் கேசங்கள் கட்டைவிரல் இறையின் நீளமுயர முள்ளதாய் இந்தக் கர்ணிக்கையில் சூரிய மண்டலம் , அதன் நடுவில் சந்திர மண்டலமும் இதன் நடுவில் அக்னி மண்டலமும் இருப்பதாய் தியானித்து சூரிய மண்டலத்தில் அனாகத சிவத்தையும், சந்திர மண்டலத்தில் அமனஸ்க சிவத்தையும், அக்னி மண்டலத்தில் சிவபெருமானையும் பாவித்து குண்டலினி சக்தியை ஆசனமாக வைத்து இருதய கமலத்தில் சக்தியாதிசக்திபரியந்தம் பூஜித்து அதற்கு மேல் ஈசானாதி பஞ்சப் பிரமத்தாலும், ஞானமய தேகம் கற்பித்து நேத்திரம் கொடுத்து மூலத்தால் வியாபகம் செய்து இருதயாதி ஆறு அங்கங்களையும் பூஜித்து அஹிம்சாதி அஷ்ட புஷ்பங்களால் அர்க்கிய பாத்திரம் அமிர்தம் அர்க்கிய ஜலம் சஷுப்த சக்தியில் நின்றுபெறுகிற பால் அபிஷேகம், புத்தி குங்கும கர்ப்பூர, கஸ்தூரி, கோரோசனை சந்தனாதிகளால் பூசுதல்.

மனமயமான ஆதார பாத்திரத்தில் பிராணாபான வாயு அக்கினி அகங்கார கர்வம் இவைகள் தூப, தீபமாகவும், பிருதுவியிலிருந்து உண்டான தன் மாத்திரைகள் உபசாரங்களாகவும் , ஜலம் உட்கொள்ளவும். அக்னி கண்ணாடியாகவும், வாயு விசிறியாகவும், ஆகாசம் தோத்திரமாகவும் , பிருதுவி நைவேத்திய மாகவும் பாவித்து பூசிக்கவும். யோகப் பயிற்சி தெரியாதவர்கள் இரதய கமலத்தில் வித்யா பீடத்தில் சிவாசன மூர்த்தி மூலத்தால் பூசித்துத் தியானிக்கலாம் பின்னர் நாவி குண்டத்தில் உள்ள சித் அக்கினியில் ஹோமம் செய்யவும்.

எங்ஙனமெனில் சுத்தமாயை குண்டம். இச்சை, ஞானம், கிரியை மூன்றும் மேகலையாம், மூலாதாரம் நெய்பாத்திரம், அமிர்ததாரையே நெய். குண்டத்தில் சிதக்னியை உண்டாக்கி, துவாத சாந்தத்தில் கொண்டு போய்ச் சேர்த்து அந்த அக்னியை சுழுமுனா நாடி வழியாக நாபி குண்டத்தில் வைத்து மூலமந்திரத்தாலும், பிரசாத மந்திரத்தாலும், நூற்றெட்டு ஹோமம் செய்து சுஷும்னா, நாடி, இடைநாடியாகிய சிருக்கு சிறுவங்களால் நெய்யைப் பூரித்து வௌஷட் என்னும் பதத்தை அந்தமாகவுடைய பிரசாதக மந்திரத்தால் பூர்ணாகுதி செய்ய வேண்டும், இது ஹோமமாகும்.

